
ராகுல் அல்வரிஸ் எழுதிய Free from School புத்தகத்தைப் பல ஆண்டுகளுக்கு முன்பு படித்தபோது எனக்கு சிலிர்ப்பாக இருந்தது. அவனுடைய வயதை ஒத்த மற்றவர்கள் சில மதிகெட்டத் தேர்வுகளில் தேர்ச்சி பெறும்போது, 16 வயதான ராகுல் மட்டும் பாம்புகள், மண்புழுக்கள் மற்றும் பிறவகை உயிர்களைப்பற்றி மேலும் அறியும் முயற்சிக்காக மேற்கொண்ட ஒரு கண்கவர் பயணம் இது. இந்த அழகான புத்தகத்தை நான் இந்தியில் மொழிபெயர்த்தேன். இப்போது இப்புத்தகம் ஆசிரியர் சுஷில் குமார் மூலமாக தமிழில் மொழிபெயர்ப்பு அடைவதும், அதை என் மனதுக்குப் பிரியமான நண்பர்கள் வெளியிடுவதும் எனக்குப் பெரிய நிறைவையும் மகிழ்வையும் தருகிறது. பிதற்றல்கள் ஏதும் இல்லாமல் எளிய, நேரடியான மொழியில் இப்புத்தகம் எழுதப்பட்டுள்ளது. பல பெற்றோர்கள், தங்களுடைய குழந்தைகள் ஆர்வத்துடன் செய்ய விரும்புவதைச் செய்வதற்கான ஒரு வாய்ப்பை அளிப்பதற்கு இப்புத்தகம் ஊக்குவிக்கும் என்று நான் நிச்சயம் நம்புகிறேன்.

பத்மஸ்ரீ. அர்விந்த் குப்தா



தன்னறம் நூல்வெளி • குக்கூ காட்டுப்பள்ளி



தெருக்களே பள்ளிக்கூடம்

ராகுல் அல்வரிஸ்

தமிழில்: சுஷில் குமார்

புத்தகங்கள் எல்லாவற்றையும்விட பூமி நமக்கு நிறையவே கற்றுக்கொடுக்கிறது. ஏனென்றால், நம்மை எதிர்க்கும் திறன் அதற்கு இருக்கிறது. தடையை எதிர்கொள்ளும் போதுதான் மனிதன் தன் முழுத்திறனை அறிகிறான். ஆனால், தடையை வெல்ல அவனுக்குக் கருவி ஒன்று நிச்சயம் அவசியம். ஒரு ரம்பமோ, ஒரு கலப்பையோ அல்லது ஒரு மண்வெட்டியோ அவசியம். உழுதுகொண்டே செல்லும் உழவன் இயற்கையின் சில ரகசியங்களைத் தோண்டி எடுக்கிறான்; அதிலிருந்து வெளிப்படுவது பிரபஞ்சவுண்மை.

அந்த்வான் து செந்த் எக்சுபெரி



தெருக்களே பள்ளிக்கூடம்

ராகுல் அல்வரிஸ்
தமிழில் : சுஷில் குமார்



தன்னறம் நூல்வெளி / குக்கூ காட்டுப்பள்ளி

தெருக்களே பள்ளிக்கூடம்

ராகுல் அல்வரிஸ்

முதல் பதிப்பு : 2020

நூலாக்கம் : கல்ஆல்

அட்டை வடிவமைப்பு :
இரா. தியாகராஜன்

ஓவியங்கள் :
பிரகாஷ், இயல்

வெளியீடு :
தன்னறம் நூல்வெளி,
குக்கூ காட்டுப்பள்ளி,
புளியானூர் கிராமம்,
சிங்காரப்பேட்டை - 635 307
கிருஷ்ணகிரி மாவட்டம்
பேச : 9843870059
thannarame@gmail.com
www.thannaram.in

அச்சாக்கம் :

ஜோதி எண்டர்பிரைசஸ்
சென்னை


நன்கொடை :
ரூ. 200

படையல்

சாளரம் வழியாக வானம் நோக்கும் வகுப்பறை குழந்தை
தானாய் திரும்பும்வரை காத்திருக்கும் கனவுஆசிரியருக்கு...

நன்றியும் ப்ரியமும் ...

குரு எஸ். பழனி, குரு ஆர்.சி. தாணு, எழுத்தாளர் ஜெயமோகன், பகவதி, இஷா பாரதி, செல்வேந்திரன், நரேன், குமார் சண்முகம், எல்வின், அன்பரசு சண்முகம், கிருத்திகா ஸ்ரீனிவாசன், பூபதி ராஜ், தமிழ்தாசன் - துர்கா, ஆதி - குமார், டேவிட் அமலநாதன், நிலா செந்தில், செரின் ஏஞ்சலா, ஆர்.வி. பிரகாஷ், ராம் முரளி, செந்தில் ஜெகன்னாதன் மற்றும் சொல்முகம் குழுமம், விஷ்ணுபுரம் இலக்கிய வட்டம்.



கவர்களில்லா விடுதலைக்கல்வி...

குழந்தைகள் பள்ளிகளில் பயனுள்ள எதையும் கற்றுக்கொள்ளப் போவதில்லை என்று பல பெற்றோர்கள் உள்ளுணர்வாக உணர்கிறார்கள். ஆனால், அவர்கள் அரிதாகவே தங்கள் தைரியத்தைத் திரட்டி குழந்தைகளை பள்ளியியைவிட்டு விலக்கி, குழந்தைகளின் இதயத்திற்கு நெருக்கமான ஒன்றைச் செய்வதற்கு அழைத்துச் செல்கிறார்கள். நோர்மா மற்றும் கிளாட் அல்வரிஸ் ஆகியோர் அப்படியான குறிப்பிடத்தக்க பெற்றோர். அவர்கள் தங்கள் மூன்று மகன்களுக்கும் அதைச் செய்தார்கள். அவர்கள் தங்கள் குழந்தைகளை அவரவர்களின் கனவுகளைத் தொடர அனுமதித்தது மட்டுமின்றி, மிகுந்த ஆர்வத்துடன் அவர்களை ஆதரித்தனர். அதன் விளைவுகள் நம்பமுடியாதவை. ராகுல் அல்வரிஸ் பல புத்தகங்கள் எழுதும் திறன்கொண்ட தனித்துவம் பெற்ற ஒரு இயற்கை ஆர்வலராக மாறினார். மற்ற இருவரும் அவர்கள் தேர்ந்தெடுத்த கணினி மற்றும் இசைத் துறைகளில் சிறந்து விளங்கினர்.

2,000 ஆண்டுகளுக்கு முன்னர் தத்துவமேதை அரிஸ்டாட்டில் 'மனிதர்கள் இயற்கையாகவே ஆர்வம் மிக்கவர்கள்' என்று கூறினார். இதன் அர்த்தம்


மக்கள் தங்கள் வாழ்வின் ஒவ்வொரு கணத்திலும் தங்களுக்குள்ளே கற்றுக்கொண்டே இருக்கிறார்கள். இதேபோல், குழந்தைகள் தங்கள் இயல்பான விருப்பங்களைப் பின்பற்றி அவர்களுக்கு மிகவும் விருப்ப மானதைச் செய்கிறார்கள். குழந்தைகள் தங்கள் விருப்பம் சார்ந்த ஒன்றைத் தேர்ந்தெடுத்தவுடன், அவர்கள் அதை மிகுந்த பொறுப்புணர்வுடனும், இதயப்பூர்வமாகவும் ஆத்மசிரத்தையோடும் செய்கிறார்கள். பள்ளிகளில் அனைத்துக் குழந்தைகளும் தங்களுக்குக் கற்பிக்கப்படும் ஒரே மாதிரியான, சலிப்பூட்டும் பாடத்திட்டத்தை வெறுக்கிறார்கள். ஆனாலும் அவர்கள் சமூக அழுத்தத்தின் காரணமாகவே அதைச் செய்கிறார்கள். கல்வி என்பது விருப்பமற்ற தன்மையிலிருந்து முளைக்கக்கூடாது. கல்விக்கு ஆதாரமே கற்பதில் உள்ள விருப்பம்தான். குழந்தைகள் தங்கள் சொந்த வாழ்க்கைக்குப் பொறுப்பேற்று, அவர்கள் மனதுக்கு விரும்பியதைச் செய்யும்போது, அவர்கள் மிகவும் மகிழ்ச்சியும் நிறைவும் கூடிய வாழ்க்கையை வாழ்கிறார்கள். உங்கள் ஆர்வத்தையோ அல்லது பொழுதுபோக்கையோ பின்தொடர்வதன் மூலம் நீங்கள் ஒரு வாழ்வாதாரத்தை உருவாக்க முடியும் என்றால், நீங்களே இப்பூமியில் மிகவும் மகிழ்ச்சியான நபராக இருப்பீர்கள்.

பெற்றோரின் ஆசைகளையும் கனவுகளையும் நிறைவேற்றுவதற்காக, நுழைவுத் தேர்வு பயிற்சி மையங்களுக்குச் சென்று சில தந்திரங்களைக் கற்றுக் கொள்வதற்கு எல்லா குழந்தைகளும் ஏன் நிர்பந்திக்கப்பட வேண்டும்? அதற்கு பதிலாக அவர்கள் இதயத்திற்கு நெருக்கமானதைச் செய்து சுதந்திரமாக இருக்க அனுமதிக்க வேண்டும். அப்போதுதான் அவர்கள் பயனுள்ளதாகவும், அர்த்தமுள்ளதாகவும் ஒரு செயலைச் செய்யமுடியும். சுவர்கள் இல்லாத விடுதலைக்கல்வியை நோக்கி நம்முடைய குழந்தைகள் செல்வதற்கு, நாமோ அல்லது நமது செயல்களோ ஒருபோதும் தடையாகக் கூடாது.

ராகுல் அல்வரிஸ் எழுதிய *Free from School* புத்தகத்தைப் பல ஆண்டுகளுக்கு முன்பு படித்தபோது எனக்கு சிலிர்ப்பாக இருந்தது. அவனுடைய வயதை ஒத்த மற்றவர்கள் சில மதிகெட்டத் தேர்வில் தேர்ச்சி பெறும்போது, 16 வயதான ராகுல் மட்டும் பாம்புகள், மண்புழுக்கள் மற்றும் பிறவகை உயிர்களைப்பற்றி மேலும் அறியும் முயற்சிக்காக மேற்கொண்ட ஒரு கண்கவர் பயணம் இது. இந்த அழகான புத்தகத்தை நான் இந்தியில் மொழிபெயர்த்தேன். இப்போது இப்புத்தகம் ஆசிரியர் சுஷில்குமார் மூலமாக தமிழில் மொழிபெயர்ப்பு அடைவதும், அதை குக்கூ காட்டுப்பள்ளியின் தன்னறம் பதிப்பகம் வெளியிடுவதும் எனக்குப் பெரிய நிறைவையும் மகிழ்வையும் தருகிறது. பிதற்றல்கள் ஏதும் இல்லாமல் எளிய, நேரடியான மொழியில் இப்புத்தகம் எழுதப்பட்டுள்ளது. பல பெற்றோர்கள் தங்களுடைய குழந்தைகள் ஆர்வத்துடன் செய்ய விரும்புவதைச் செய்வதற்கான ஒருவாய்ப்பை அளிப்பதற்கு இப்புத்தகம் ஊக்குவிக்கும் என்று நான் நிச்சயம் நம்புகிறேன்.

பத்மஸ்ரீ. அர்விந்த் குப்தா

ஜீன் 7, 2020



பறத்தல் அதனதன் சுதந்திரம்...

சூழலியல் சார்ந்து வெவ்வேறு தளங்களில் இயங்கிவந்த நண்பர் 'காரைக்கால் டேவிட்' மூலமாகத்தான், 'மானுட அறிவியலாளர்' அர்விந்த் குப்தா அவர்களின் இணையதளம் (*www.arvindguptatoys.com*) பத்து வருடங்களுக்கு முன்பு எங்களுக்கு முதன்முதலில் அறிமுகமானது. தற்செயலாக அந்த இணைய தளத்தில் சென்றுபார்க்கையில், அதில் பல்லாயிரக்கணக்கான புத்தகங்கள் *pdf* வடிவிலும், குழந்தைகளுக்கான படக்கதை புத்தகங்கள், கல்வி நூல்கள் மற்றும் அறிவியல் சார்ந்து ஏகப்பட்ட காணொளிகளும் அதில் காணக் கிடைத்தன. சமகாலத்தின் மாபெரும் இணையப் பொக்கிஷமாக அது எங்களுக்குத் தோன்றியது. அளப்பரிய உழைப்பைக் கோரியிருக்கும் அருஞ் செயல் அது. எல்லாவகையிலும், அந்த இணையதளம் மாற்றுக்கல்வி மற்றும் மாற்றுவாழ்வியலுக்கான அத்தனை தகவல்களும் உட்பொதிந்த ஒரு பேரறிவுக் களஞ்சியம்!

ஒவ்வொரு புத்தகமாகத் தேடித்தேடித் திரட்டி அவைகளை மென்நூல்களாக மாற்றுவதற்கும், தொடர்ச்சியாக அறிவியல் செய்முறைகளை காணொளிகளாகப் பதிவுசெய்து அதை வலைதளத்தில் பதிவேற்றுவதற்கும் எவ்வளவு உழைப்பு தேவைப்பட்டிருக்கும் என்பதை நினைத்தாலே பெருவியப்பு உருவாகிறது. கிட்டத்தட்ட ஒரு பல்கலைக்கழகம் செய்யவேண்டிய செயற்பணியை, தனிமனிதராக இருந்து செய்திருக்கிறார் அர்விந்த் குப்தா! குக்கூ குழந்தைகள் வெளியின் துவக்ககால செயற்பாடுகளில் ஒன்றாக, அவருடைய இணையத்தில் இருந்து தகவல்களை தரவிறக்கம் செய்து, அவைகளை உரிய வடிவத்தில் குழந்தைகளிடம் கொண்டுசேர்ப்பது உள்ளிட்ட பணிகளைத் தொடர்ந்து செய்துவந்தோம். அப்படியான ஆறேழு மாதப் பயணத்திற்குள்ளாகவே, அர்விந்த் குப்தா அவர்களை நேரில் சந்திக்கிற நல்வாய்ப்பு அமைந்தது.

தோழமை செரின் ஏஞ்சலா மற்றும் சிறுசிறு அறிவியல் கண்டுபிடிப்புகளை குழந்தைகளிடம் கொண்டுசேர்க்கிற 'சிம்பிள் லேப்ஸ்' (*Simple Labs*) நிறுவனர் பிரகாஷ் ஆகியோர்களின் மூலமாக நாங்கள் அர்விந்த் குப்தாவைச் சந்திக்கிற கனவு நிஜத்தில் சாத்தியமானது. குக்கூ நண்பர்கள் சிலர் ஒன்றுகூடி அவரைச் சந்திக்கச் சென்றோம். அர்விந்த் குப்தா அப்பொழுது, தனது மருத்துவச் சிகிச்சைக்காக வேலூர் CMC மருத்துவமனையில் தங்கியிருந்தார். இந்நிலையில் அவரைச் சந்திப்பதா என்கிற கேள்வியைச் சுமந்து, பெரும்தயக்கத்துடன் அவரைச் சந்திக்க மருத்துவ அறைக்குப் போனோம். அம் மருத்துவமனையின் மூன்றாவது மாடியில் அவர் அனுமதிக்கப்பட்டிருந்தார். எங்களைக் கண்டவுடன் முகம் மலர்ந்து வரவேற்று இருக்கைகளில் அமரச்சொன்னார்.

ஐந்தாம் வகுப்பு படித்துக்கொண்டிருந்த சீனுவும் எங்களுடன் வந்திருந்தான். நாங்கள் அழைத்துப்போனதில் அவன் ஒருவன் மட்டுந்தான் சிறுவன். அர்விந்த் குப்தாவின் இணையதளம் அறிமுகமானது முதல், அதிலுள்ள காணொளிகள் மற்றும் செய்முறைப் புத்தகங்களின் அடிப்படையில், குப்பைப் பொருட்களிலிருந்து நிறைய அறிவியல் பொம்மைகளைத் தானே செய்திருந்தான் சீனு. அர்விந்த் குப்தாவை தன்னுடைய மானசீக ஆசானாகவே அவன் ஏற்றிருந்தான்.

மாற்றுக்கல்வி குறித்தும், கல்வியில் உண்டாக வேண்டிய மாற்றங்கள் குறித்தும் தன்னுடைய அனுபவத்திலிருந்து வெவ்வேறு தரவுகளைப்பற்றி பேசிக்கொண்டிருந்த அர்விந்த் குப்தாவிடம், உரையாடலின் ஒருகட்டத்தில் சிறுவன் சீனுவை அறிமுகப்படுத்தினோம். குழந்தமை மாறாத சீனுவும், குப்பைப் பொருட்களைக்கொண்டு தன் கைப்பட செய்துகொண்டு வந்திருந்த அத்தனை பொம்மைகளையும் அவரிடம் காட்டினான். அதன்பின், அர்விந்த் குப்தா எங்கள் எல்லோரையும் மறந்துவிட்டு முழுக்க சீனுவோடு மட்டுமே உரையாட ஆரம்பித்தார். கிட்டத்தட்ட ஒன்றரைமணி நேரத்திற்கும் அதிகமாக அவர்கள் இருவரும் உரையாடினர்.

தன்னுடைய ஒரு நோட்டுப் புத்தகத்தை எடுத்து, சீனுவின் பொம்மைகளைப் பற்றி சிறுசிறு குறிப்புகளை எழுதிவைத்துக்கொண்டார் அர்விந்த் குப்தா. இவர் சில பொம்மைகளை அவனுக்குச் செய்துகாட்ட, அவன் சில பொம்மைகளை இவருக்குச் செய்துகாட்ட என்று நேரம் நீளநீள அந்த மருத்துவ அறையே, குழந்தைகளுக்கான ஒரு ஆய்வுக்கூடம் போல மாறியது. ஒரு குழந்தையும் மேதையும் உரையாடி மகிழ்கையில் என்ன உளஎழுச்சி நிகழுமோ அதை நாங்கள் அருகிருந்து அன்று பெற்றோம். கொஞ்ச நேரத்தில் அவர்கள் இருவருடன் அர்விந்த் குப்தாவின் மனைவியும் இணைந்து கொண்டார்.

அந்த உரையாடலின்போது அர்விந்த் குப்தா பகிர்ந்துகொண்ட சில வார்த்தைகளை எங்களால் என்றென்றைக்கும் மறக்கவியலாது. சொல்லப் போனால், அதற்குப்பின் குக்கூவின் பயணத்திசையே வேறொன்றாகிப் போனது. மாற்றுக்கல்வி, மாற்றுப்பள்ளிக்கூடம் என அந்தக் காலகட்டத்தில் எங்களுக்கிருந்த கனவைப்பற்றி நாங்கள் பேசும்போது பொறுமையாகக் கேட்டுக்கொண்ட அவர் நிதானமாக ''இந்தியா என்பது பரந்துபட்ட பண்பாட்டுக் கலாச்சாரத்தில் வேர்கொண்டுள்ள ஒரு பன்மைத்துவ தேசம். மாற்றுக்கல்வி சார்ந்த எதிர்கால கனவின் முயற்சிகள் ஒருபுறம் நிகழ்ந்தாலும், சமகாலக் கல்விநிலைக்கு நாம் முடிந்தளவு பக்கத்துணையாக நிற்க வேண்டும். எல்லா ஊர்களிலும் குறைந்தபட்சம் ஆயிரம் குழந்தைகள் பயில்கிற அரசுப் பள்ளிகள் இருக்கின்றன. அத்தகைய பள்ளிகளில் ஒரே ஒரு பாடவேளை நம்மைப் போன்றவர்களுக்குக் கிடைத்தால்கூட, அந்தக் குழந்தைகள் உயிர்த்தன்மையுள்ள கல்வியின் உள்ளார்ந்த மகிழ்ச்சியைப் பெறமுடியும்.

அரசுப்பள்ளிக் குழந்தைகளிடம் அந்த வாய்ப்பை உருவாக்க நாம் பணி செய்தாக வேண்டும். ஆகவே, இதனை மனதில்கொண்டு அதற்குத் துணை நிற்கும் கதைகள், புத்தகங்கள், காணொளிகள், கலைவடிவங்கள், மனிதர்கள், தகவல்கள் என அனைத்தையும் ஒன்றிணைத்துச் செயல்படுங்கள். ஆசிரியர்கள், பெற்றோர்கள், கலைப்பயிற்றுனர்கள் ஆகியோருடன் குழந்தைகளின் அகவுலகு சார்ந்த உரையாடலை உருவாக்குங்கள். அதற்கான பரிசோதனை வெளியாக குக்கூ அமைவது நலம்...'' என்றார்.

சென்றிருந்த எல்லோருக்குள்ளும் இனம்புரியாத ஒரு அகத்திறப்பை நிகழ்த்தின அவருடைய வாழ்வனுபவ வார்த்தைகள். அந்த உரையாடலின் இறுதியில் அவர் அடிக்கோடிட்டுச் சொன்ன சில புத்தகங்களில் ஒன்றுதான், ராகுல் அல்வரிஸ் எழுதிய *'Free from school'*. ஆங்கிலத்தில் இருந்த அப்புத்தகத்தை அர்விந்த் குப்தா இந்தியில் மொழிபெயர்த்து வெளியிட்டிருந்தார். ''இப்புத்தகத்தை தமிழில் மொழிபெயர்த்து வெளியிடுங்கள். ஒவ்வொரு பெற்றோருக்கும், ஒவ்வொரு ஆசிரியருக்கும், ஒவ்வொரு மாணவனுக்குமான புத்தகம் இது'' என்றார். மேலும் சிலமணி நேரங்கள் அவருடன் உரையாடி விட்டு, குருவின் அருகாமை தந்த நிறைவுணர்வுடன் அவருக்கு நன்றி சொல்லிவிட்டு அங்கிருந்து கிளம்பினோம். அன்றிலிருந்து கடிதங்கள், தொலைபேசி அழைப்புகள், சிலமுறை சந்திப்புகள் என மேலும் அணுக்கமாகிப் போனார் அர்விந்த் குப்தா. அதன்பின் அர்விந்த் குப்தாவிடமிருந்து சீனுவுக்கு, அவர் கையெழுத்திட்ட சில புத்தகங்களும் கடிதமும் வந்துசேர்ந்தது. சீனுவும் அதற்கு பதில் நன்றிக்கடிதம் அவனாகவே எழுதி அனுப்பினான்.

சில ஆண்டுகள் கழித்து ஒருநாள், சீனுவின் அம்மாவிடமிருந்து ஒரு தொலைபேசி அழைப்பு வந்தது. அவனுடைய வீட்டுக்குப் பக்கத்திலிருந்த ஒரு மரத்தை வெட்டிவிட்டார்கள் என்பதற்காக, இரண்டு நாட்கள் சீனு எதுவுமே சாப்பிடவில்லை என்ற தகவல் அறிந்ததும் அவனுக்கு நிறைய ஆறுதல் சொன்னோம். ஆனால், சீனு தன்னுடைய வருத்தத்தை அத்தோடு நிறுத்திக் கொள்ளவில்லை. வெட்டப்பட்ட அந்த மரத்திடம் சென்று, அங்கு தரையில் சிதறிக்கிடந்த சிறுசிறு குச்சிகளை வைத்து ஒரு பொம்மை செய்து, அதை மரத்தின் அடித்தண்டில் பிரார்த்தனையாக வைத்துவிட்டு, அங்கு கொட்டிக்கிடந்த மரத்தூளை தன்னால் முடிந்தளவு அள்ளிக்கொண்டு வீட்டுக்கு வந்தான்! வருடங்கள் கடந்தன, சீனுவும் வளர்ந்து பெரியவன் ஆனான்.

நான்கைந்து வருடங்களுக்கு முன்பு குக்கூ காட்டுப்பள்ளியின் திறப்பு விழாவுக்கு அழைப்பதற்காக, மீண்டும் அர்விந்த் குப்தாவை நேரில் சந்திக்கச் சென்றோம். இம்முறை அவர் சென்னையிலுள்ள தனது மகள் வீட்டில் இருந்தார். அவரிடம் அழைப்பிதழைக் கொடுத்து, நிறைய நேரம் பேசிய பிறகு நாங்கள் கிளம்பும் நேரத்தில், எங்களுக்குத் தருவதற்காகப் புத்தகம் எடுக்க அவர் தனது அறைக்குள் சென்றார். அப்பொழுது அவருடைய மனைவி எங்களிடம், ''அன்று பொம்மைகள் செய்துகாட்டிய அந்தச் சிறுவன் நலமாக உள்ளானா?'' எனக் கேட்டார். சீனு நலமுடன் இருப்பதாகத் தெரிவித்த விஷ்ணுப்ரியா, ''ஐயா இப்போது மருத்துவச் சிகிச்சை எடுத்துக் கொள்கிறாரா?'' எனக் கேட்டாள்.

அதற்கு அர்விந்த் குப்தாவின் மனைவி, ''இல்லை, இப்போது அவர் மருத்துவம் எடுத்துக்கொள்வதில்லை. எப்பொழுதாவது உடல்நிலை மோசமானால் மட்டுமே மருத்துவமனை போகிறார், தொடர்ந்து செல்வதில்லை'' என்றார். நாங்கள், ''ஏன்? எதற்காக அப்படிச் செய்கிறார்?'' என்று கேட்டபோது, ''அதான்... அந்தச் சிறுவன் ஒரு கடிதம் எழுதியிருந்தானே... 'உங்களுக்காக நான் இந்த மலையிடம் வேண்டிக்கொண்டே இருப்பேன்' என அச்சிறுவன் எழுதியிருந்தான்... மலையைப் பார்த்து ஒரு குழந்தை வைக்கிற பிரார்த்தனையை விடவா இப்பூமியில் மிகச்சிறந்த மருத்துவம் இருக்கப்போகிறது? எனச் சொல்கிறார் அவர்...'' என்றார் அர்விந்த் குப்தாவின் மனைவி. அதைக் கேட்டதும் நாங்கள் பேச்சற்றுப் போனோம். காரணம், அக்கடிதம் சீனு சிறுவனாக இருந்தபோது எழுதியது!

குக்கூ காட்டுப்பள்ளி திறப்புவிழா நாளன்று, சிலமணி நேரங்கள் முன்னதாகவே அர்விந்த் குப்தா வந்துவிட்டார். அப்பொழுது சீனு, குக்கூ நிலத்துக் கிணற்றடியில் கற்களைச் சீரமைத்துக் கொண்டிருந்தான். வேகவேகமாக நாங்கள் சென்று அவனிடம், ''சீனு... அர்விந்த் குப்தா வந்துவிட்டார்... வா'' என அழைத்தோம். அதற்கு அவன் சொன்ன காரணத்தை என்றும் எங்களால் மறக்க முடியாது. அவன், ''அண்ணா... நான் அங்கு வரவில்லை. அவர் என் மாஸ்டர். நான் ஊசித்துளை தீப்பெட்டி கேமிரா செய்து கொண்டுவந்திருக்கிறேன். அதைவைத்து அவரை நான் தூரத்தில் இருந்து ஒரு புகைப்படம் எடுக்க வேண்டும். அவ்வளவுதான் அண்ணா, அதுபோதும்'' என்றான்!

பத்மஸ்ரீ பட்டம், ஐஐடி பல்கலைக்கழக அங்கீகாரம், உலகநாடுகளின் விருதுகள் இவைகளால் போற்றப்படுகிற ஒரு மனிதனின் மனதினை எது அசைக்கிறது என்றால், ஒரு சிறுவனின் சொல் அசைக்கிறது! ஒரு குழந்தையின் ஒட்டுமொத்த வாழ்வையும் எது மாற்றுகிறது என நோக்கினால், அது ஒரு மூத்த ஆசானுடனான ஒற்றைத்தருணம் என்பது புலனாகிறது! இந்த இருப்புள்ளிகளையும் நாங்கள் ஒருசேர நெஞ்சுணர்ந்தது எங்கள் வாழ்வில் நிகழ்ந்த பெருவரம் என்றே தோன்றுகிறது. அத்தகைய நற்தருணங்களை நிகழச்செய்த காலத்தின் கருணையினை தலை நிலந்தொட பணிந்து வணங்குகிறோம்.

ராகுல் அல்வரிஸ் எழுதி, சுஷில்குமார் அவர்கள் தமிழில் மொழி பெயர்த்துள்ள 'தெருக்களே பள்ளிக்கூடம்' என்னும் இப்புத்தகம், குக்கூ காட்டுப்பள்ளியின்

தன்னறம் நூல்வெளி வாயிலாக வெளியீடு கொள்வதில் நாங்கள் நிறைமகிழ்வு அடைகிறோம். கனவொன்று நிஜமாதல்போல இது இக்காலத்தில் சாத்தியப் பட்டிருக்கிறது. பள்ளிக்கு வெளியே திறந்துகிடக்கும் கல்விவெளி எவ்வளவு பரந்துவிரிந்தது என்பதை இப்புத்தகம் நிச்சயம் நம் அனைவருக்கும் எடுத்துக்காட்டும். ஓராண்டு பள்ளிக்கல்வியைத் துறந்து, விடுமுறை எடுத்து, பயணங்களின் வழியாகவும் களப்பணிகள் வழியாகவும் ராகுல் அல்வரிஸ் கற்றுக்கொண்ட வாழ்வனுபவத்தின் எழுத்துவெளிப்பாடே இப்புத்தகம்.

இந்திய இயற்கை வேளாண்மைக் கூட்டமைப்பின் (*Organic Farming Association of India-OFAI*) தலைவராக இருந்தவரும், தேசிய அளவில் சூழலியல் சார்ந்த பெரும் பொறுப்புகளை வகித்த சூழலியலாளருமான 'கிளாட் அல்வாரிஸ்' அவர்களின் மகன்தான் 'ராகுல் அல்வரிஸ்'. பெரும் தொகையளித்து நாம் வளர்க்கிற 'பள்ளிக்கூடம்' என்னும் நிறுவனங்களால் வழங்க முடியாத ஒரு வாழ்வுக்கற்றலை, நம்மால் தெருவில் இறங்கிப் பெறமுடியும் என்பதற்கான நேரடிச்சாட்சியாக தன் மகன் ராகுல் மாறுவதற்கான முழுச்சுதந்திரத்தை அளித்தார் கிளாட் அல்வரிஸ். பெற்றோர் வழங்குகிற சுதந்திரமும், பிள்ளைகள் ஏற்கிற பொறுப்புணர்வும் ஒன்றுகுவியும் புள்ளியில் விடுதலைக்கல்வி மலர்கிறது. வெறும் வாழ்வனுபவ பயணக் குறிப்பு எனச் சுருங்கிவிடாமல், மீன், மண்புழு, சிலந்தி, ஆமை, காளான், பாம்பு, முதலை உள்ளிட்ட பல்வேறு உயிர்களைப்பற்றிய ஆவணத் தொகுப்பாகவும் இப்புத்தகம் முக்கியப்படுகிறது.

புளியானூர் கிராமத்துக் குழந்தைகளுக்கான மாலைநேரத் திண்ணைப் பள்ளியையும், பொன்மணி முன்னெடுக்கும் பெண்களுக்கான தையல் பள்ளியையும், அர்விந்த் குப்தா அவர்கள் குக்கூ காட்டுப்பள்ளி திறப்பு நாளன்றே தனது சேவைக்கரங்களால் திறந்துவைத்தார். அந்த மண்தரையில் அமர்ந்து அவர் பேசிய ஒவ்வொரு சொல்லும் ஒரு குழந்தையின் விடுதலைக்கான கனவுவிதை. அதைத் தொடர்ந்து அவ்வப்போது அந்தக் கிராமத்துக் குழந்தைகள் காடுகள், பறவைகள், வனவுயிர்கள், நீரோடைகள் குறித்துச் சொன்ன எல்லாக் கதைகளும் தகவல்களும் ஒன்றே ஒன்றைத்தான் எங்களுக்குச் சுட்டிக்காட்டின. தெருக்களே மனிதனின் முதற்பள்ளிக்கூடம்!


பள்ளிக்கூடங்களின் வகுப்பறைச் சுவர்களுக்குள்ளும் பாடப் புத்தகங் களுக்குள்ளும் கற்க இயலாத இயற்கையறிவை, குழந்தைகள் சுதந்திர மாகவும் எளிமையாகவும் பெற்றடைவது, விரிந்துபரவும் வீதிகளில் இருந்துதான்! 'விளையாட்டுகளே உயரிய ஆய்வு வடிவங்கள்' என்ற ஐன்ஸ்டீன் சொன்னதை யோசித்துப்பார்க்கையில், வகுப்பறைகளைவிட ஒரு பள்ளிக்கூடத்திற்கு மைதானம் எவ்வளவு முக்கியம் எனத் தெரியவரும்! அவ்வகையில் பார்த்தால், ஒவ்வொரு குழந்தைக்கும் தெருவே முதற்குரு. எழுத்தாளர் கு.அழகிரிசாமி எழுதிய ஒரு சிறுகதையின் ஒற்றைவரி இக்கணம் மனதில் உதிக்கிறது,

"அழுக்குப்படாத படிப்பு படிப்பில சேத்தியா?"

நன்றியுடன்,

சிவராஜ்

குக்கூ காட்டுப்பள்ளி
ஜவ்வாதுமலை அடிவாரம்
ஜூன் 2020




அனுபவக்கல்வியை அடைதல்...

ஒரு 16 வயது பையன் ஒரு புத்தகம் எழுதுவதென்பது வழக்கமான விசயம் இல்லை.பொதுவாக அந்தவயதுப் பையன்களும் பெண்களும் மற்றவர்கள் எழுதுவதைப் படிப்பதில் தங்கள் நேரத்தைச் செலவிட வேண்டும். அந்த வயதில் அவர்களுக்குத் தாங்கள் சொல்வதற்கு சுவாரஸ்யமான அல்லது முக்கியமான விசயங்கள் இருப்பதில்லை என்று கருதப்படுகின்றது. அதையேதான் நமது கல்வி முறையும் உறுதி செய்கின்றது. தொகுக்கப்பட்ட கேள்விகளுக்கான தொகுக்கப்பட்ட விடைகளை கிளிப் பிள்ளை போல் யாரால் சொல்லமுடியுமோ அவர்களுக்கே தேர்வறையில் மிகச்சிறந்த வெகுமதிகள் கிடைக்கின்றன. தங்கள் கற்பனையை உபயோகிக்க அல்லது வித்தியாசமாகப் பதில் அளிக்க முயற்சி செய்பவர்களோ குறைந்த மதிப்பெண்களால் தண்டிக்கப்படுகிறார்கள்.

ராகுல் அல்வரிஸ் ஒரு புத்தகம் எழுதவேண்டும் என்றெல்லாம் நினைக்கவில்லை. அவரது பெற்றோரின் ஊக்கத்தினால், பள்ளிக் கட்டமைப்பிற்கு வெளியே விசயங்களைக் கற்றுக்கொள்ளும் முயற்சிகளை அவர் தன்முனைப்போடு துவங்கினார். அதன் விளைவாகத்தான் *'Free from School'* அவரைத் தேடி வந்தது என்று வேண்டுமானால் சொல்லலாம். அவரது உயர்நிலைப் பள்ளிக்கல்விக்குப் பிறகு, தனது வகுப்புத் தோழர்களைப் போல் அல்லாமல், தனது உள்ளுணர்வைத் தொடர்ந்து சென்று பள்ளிக் கல்வியைவிட்டு விலகி, ஊர்வனவற்றின் மீதான ஆர்வத்தால் புனே பாம்புப் பூங்காவிலும், மாமல்லபுரத்தின் முதலைப் பண்ணையிலும் அவற்றைத் தேடி அறிந்துகொண்டார். இந்தச் செயல் முறையில் அவர் சிலந்திகள், மண்புழுக்கள் மற்றும் ஆமைகளின் வாழ்க்கைச் சுவடுகளையும் கற்றுக்கொண்டார். இருளர் பழங்குடியினரின் சகவாசத்தில் பாம்புகளைப் பிடித்தார். கடும் கோபமான ஊர்வனவற்றிடம் கடியும் வாங்கினார். அதிலிருந்து அவர் இன்னும் சிரிப்போடும் அறிவோடும் வெளிவந்தார். அவரது இளவயது வாழ்க்கையின் கற்றல்கோடு பலமடங்கு உயர்ந்த காலம், அவர் பள்ளியை விட்டு வெளியேயிருந்த ஒருவருட காலம்தான். அதன் கதைதான் *'Free from School'*. தமிழில் இது 'தெருக்களே பள்ளிக்கூடம்' என்னும் பெயரில் மொழிபெயர்க்கப்பட்டு வெளிவருகிறது.

வாழ்க்கை மற்றும் கற்றலின் இன்னொரு பக்கத்தை அனுபவிக்க விரும்பும் தன் வயதை ஒத்த மற்ற பையன்கள் மற்றும் பெண்களை, இந்தியாவின் பழைய கல்விமுறை சார்ந்த, வறண்ட, பள்ளி மற்றும் கல்லூரிச் சூழலிலிருந்து வெளிவர ஊக்கப்படுத்தவே ராகுல் அல்வரிஸ் இதை எழுதினார். அவர் எதையும் இழக்கவில்லை, ஆனால் நிறைய பெற்றுக்கொண்டார். அவரது பெற்றோரும் கூடத்தான். ஏன், இந்தக் கதையை வாசிக்கும்போது நீங்களும்தான்...

உள்ளடக்கம்



மபுசாவில் ஒரு மீன்கடை

என்பள்ளிப்படிப்பை நான் முடித்தபோது எந்தவித வாழ்வனுபவமும் இல்லாதவனாகத்தான் இருந்தேன் என்பதை நீங்கள் புரிந்துகொள்ள வேண்டும். நான் ஒருபோதும் தனியாக எங்கும் பயணித்ததில்லை, ஒருபோதும் ஓர் இரயில் பயணச்சீட்டுகூட வாங்கியதில்லை. ஏனென்றால், என் வயதான பெரும்பாலான குழந்தைகளைப் போல நானும் என் பெற்றோருடனோ அல்லது உறவினருடனோதான் பயணம் செய்திருந்தேன், எல்லா முடிவுகளையும் அவர்களே தான் எடுத்தார்கள். பணத்தை

எப்படிக் கையாளுவது என்கிற அனுபவம்கூட எனக்கு அப்போது இல்லை. (அவ்வப்போது எனக்குக் கிடைக்கும் 50 காசு அல்லது ஒரு ரூபாவைச் செலவுசெய்யும் அளவில்தான் என் அனுபவம் இருந்தது).

அதனால், பரந்த தொலைதூர பயணங்கள் செய்வது எனது குறிக்கோளாக இருந்தபோது, நானாக முதலில் கோவாவிற்குள் சமாளிக்கக் கற்றுக் கொள்வதில் துவங்கவேண்டும் என என் பெற்றோர் சரியாக யோசித்தனர். அது மழைக்காலமாகவும் இருந்ததால், நாடு முழுதும் பயணம் செய்வது இன்னும் அதிக சிரமமாக இருக்கும் என அவர்கள் எடுத்துக்கூறினர்.

அதனால், என் கிராமத்தின் அருகே இருந்த நகரான மபுசாவில் ஒரு மீன் கண்காட்சி மற்றும் விற்பனைக்கூடத்தில் உதவிசெய்ய ஆரம்பித்தேன். என் தந்தையின் கல்லூரித் தோழர்களில் ஒருவரான திரு. அசோக் டி குருஸ் தான் அந்தக் கடையின் முதலாளி. திரு. அசோக்கைப்பற்றி நான் நிறைய சொல்ல வேண்டும். அவர் ஒரு சாதாரண வியாபாரி மட்டுமில்லை, மீன்களைப் பராமரித்தல் அவரது பேரார்வமாக இருந்தது. மீன்களை விற்றுப் பணம் சம்பாதிப்பதைவிட தனது வாடிக்கையாளர்களுடன் மீன்களைப்பற்றிப் பேசிக்கொண்டிருப்பதில்தான் அவருக்கு ஆர்வம் அதிகம். தனது கண்காட்சியக மீன்களை வாங்க எந்த ஒரு வாடிக்கை யாளரையும் அவர் கட்டாயப்படுத்தி நான் ஒருபோதும் பார்த்ததில்லை.

சொல்லப்போனால், நான் வெறும் ஒன்பது வயதுள்ளவனாக, ஐந்தாம் வகுப்பில் இருந்தபோது கண்காட்சியக மீன்களின் அற்புத உலகை எனக்கு அறிமுகம் செய்துவைத்ததே திரு. அசோக் தான். பிறகு, அவரது வழிகாட்டலில், வளர்ப்பதற்கு எளிதான சில மீன் வகைகளான கப்பீஸ், பிளாட்டீஸ் மற்றும் மோலி போன்றவற்றை வளர்த்துப் பரிசோதனை செய்தேன். என்னுடைய பரிசோதனைகளில் வெற்றியடைவது அப்போது எனக்கு மிகமிக உற்சாகமூட்டும் ஒரு விசயமாக இருந்தது. என்னை

ஊக்கப்படுத்துவதற்காக நான் வளர்த்த குட்டி மீன்களை திரு. அசோக் அவர்களே பெருந்தன்மையாக விலைக்கு வாங்கிக்கொண்டார். சிறிது காலத்தில், வளர்ப்பதற்கு இன்னும் கடினமான சியாமீஸ் சண்டையிடும் மீன் மற்றும் நீல குராமீஸ் போன்ற வெவ்வேறு வகையான மீன்களை வளர்க்கும் பரிசோதனைகளைச் செய்யப்போதுமான நம்பிக்கையை வளர்த்துக்கொண்டேன். எல்லாம் திரு. அசோக்கின் நிபுணத்துவத்துடன் கூடிய வழிகாட்டலில்தான் சாத்தியம் ஆனது.

தினசரி காலை 9 மணிக்கு நான் திரு. அசோக்கின் கடைக்குச் சென்றேன், சரியான நேரத்திற்கு அங்கிருக்க வேண்டி என் மிதிவண்டியில் வேகமாகச் செல்வது என் வழக்கம். கொடுக்கப்படும் வேலையைச் செய்துகொண்டு, ஓர் உதவியாளாக மதிய உணவு நேரம்வரை நான் அங்கிருப்பேன்.

திரு. அசோக்கின் கடை மிகப் பெரியதன்று. கோம்ஸ் கட்டாவோ வணிக வளாகத்தின் தரைத் தளத்தில் இரண்டு அறைகளைக்கொண்ட கடை அது. முன்பகுதியில் ஒரு காட்சிக்கூடமும் பின்பகுதியில் ஒரு சரக்குக்கிடங்கும் இருந்தன. பிரதானமாக மும்பையில் இருந்து திரு. அசோக் வாங்கும் பல வகையான மீன்களுடன் கூடிய சுமார் இருபது மீன் தொட்டிகள் அந்தக் காட்சிக்கூடத்தில் காட்சிக்கு வைக்கப்பட்டிருந்தன. பிரதான சந்தைப் பகுதியிலிருந்து திரு. அசோக்கின் கடை தூரமாக அமைந்திருந்ததால், பொது வாடிக்கையாளர்கள் வருவதற்கு அனுகூலமாக இல்லை. இருந்தாலும், திரு.அசோக்கிற்கு வழக்கமாக வரும் வாடிக்கையாளர்கள் இருந்தனர். வழக்கமாக, ஒருநாளில் குறைந்தபட்சம் இருபது முதல் முப்பது வாடிக்கையாளர்கள் வருவார்கள்.

அவரது கடையில் முதல்சில நாட்கள், அந்த மீன் தொட்டிகளைக் கண்காணிப்பது, அழுக்கான தொட்டிகளைச் சுத்தம் செய்வது, இறந்து போன மீன்களை அகற்றுவது, மற்றும் சில சிறிய வேலைகளைச் செய்வது

மட்டுமே எனது பணியாக இருந்தன. மேலும், நான் மீன்களுக்கு உணவூட்டினேன், நோயுற்ற மற்றும் காயம்பட்ட மீன்களை கவனித்துக் கொண்டேன். சில சமயங்களில் வாடிக்கையாளர்களையும் சமாளித்தேன். கொஞ்சம் கொஞ்சமாக, நான் திரு. அசோக்குடன் பல்வேறு இடங்களுக்கு அவரது சுற்றல்களில் இணைந்து செல்லத் தொடங்கினேன்.

மொய்ராவில் ஒரு பெரிய மனிதர் தன் வீட்டில் ஒரு மீன் காட்சியகம் வைக்க விரும்பினார். அவரிடம் ஒரு தொட்டி இருந்தது. இறுதியில் அது எப்படி இருக்க வேண்டும் என்பது குறித்து திட்டவட்டமான பல யோசனைகளையும் அவர் வைத்திருந்தார். இதையெல்லாம் எப்படிச் செய்வது என்பதைப் பார்க்க திரு. அசோக் அழைக்கப்பட்டிருந்தார். அவர் தனது காரை எங்களுக்காக அனுப்பியிருந்தார். அவரது வீட்டில் மீன் தொட்டியை வைக்கவேண்டிய இடம், ஒளி அமைப்புகள், நீர் வடி கட்டிகள், அவர் வைக்க விரும்பும் மீன்களின் வகைகள் மற்றும் எண்ணிக்கை, மற்றும் பராமரிப்பு குறித்து நாங்கள் கலந்தாலோசித்தோம். எல்லாம் சரியாக இருந்தன, அவரது தேவைகள் அனைத்தையும் குறித்துக்கொண்ட திருப்தியோடு நாங்கள் மபுசாவிற்குத் திரும்பினோம். பின்னர், நாங்கள் அவருக்காகத் தயாராக வைத்திருந்த பொருட்களுக்காக அவர் வந்தார்.

மற்றொருமுறை ஒரு வாடிக்கையாளரின் அலுவலகத்திற்கு ஒரு ஜோடி குள்ள குராமி மீன்களை அவரது மீன் தொட்டியில் விடவும், அந்தத் தொட்டிக்கு ஒரு பின்னணிப் படத்தைப் பொருத்தவும் திரு. அசோக்குடன் நான் சென்றிருந்தேன். இந்த மாதிரி சமயங்களில் நான் திரு. அசோக் செய்வதை மிகவும் உன்னிப்பாகக் கவனித்தேன். கூடிய விரைவில் சின்னச்சின்ன சாதாரண பிரச்சினைகள் உள்ள வாடிக்கையாளர்களின் வீடுகளுக்கு திரு. அசோக் என்னை அனுப்ப ஆரம்பித்தார்.

வாடிக்கையாளர்களின் மீன்காட்சித் தொட்டிகளின் நீர்க்குழாய்கள் மற்றும் வடிகட்டிகளைச் சரி செய்தல், தொட்டிகளில் பொம்மைகளைப் பொருத்துதல், மீன்களின் நோய்களைப் பரிசோதித்தல் போன்ற வேலைகளை நான் கவனித்துக்கொண்டேன். மேலும், அதிக எண்ணிக்கையில் மீன்கள் திடீரென இறந்துபோவது போன்ற நெருக்கடி காலங்களிலும், எவரேனும் தன்னுடைய சேகரிப்பில் இன்னும் சில மீன்களைச் சேர்க்க விரும்பினாலும் நான் சென்று கவனித்துக் கொண்டேன். தாமதமான கட்டணங்களை வசூலிக்கவோ, அல்லது மீன் தொட்டிகள் எப்படி இருக்கின்றன என்பதை சாதாரணமாக விசாரிக்கவோ நான் அனுப்பப் பட்டேன். சில சமயங்களில் நாங்கள் மீன் தொட்டிகள் அமைத்துக் கொடுத்த சில இடங்களுக்கு நானாகவே சென்றேன், தங்கள் புது வீட்டில் அந்த மீன்கள் ஆனந்தமாக நீந்தி விளையாடுவதைப் பார்த்து மகிழ்ந்தேன்.

ஒருநாள், எங்களுக்குப் போட்டியான ஒரு கடையில் மீன்கள் மற்றும் மீன் உணவுகளின் விலைகளைத் தெரிந்துகொள்ள என்னை ஒரு உளவாளியாக அனுப்ப என் முதலாளி முடிவு செய்தார். ஒரு சாதாரண வாடிக்கையாளர் போல நடந்துகொள்ள நான் முயற்சி செய்தேன், மிக நிதானமாக அந்தப் போட்டிக்கடையினுள் நான் நடந்துசென்றேன், மெதுவாக மீன்கள் மற்றும் மீன் உணவுகளின் விலைகளை விசாரிக்க ஆரம்பித்தேன். என்ன தேவையோ அதை நான் தெரிந்து கொண்டதும், நான் ஒரு நிஜமான வாடிக்கையாளன் தான் எனக் காட்டிக்கொள்வதற்காகவே மலிவான ஒரு ஜோடி கருப்பு மோலி மீன்களை அவரது கடையிலிருந்து வாங்கினேன். எனக்குக் கிடைத்த தகவலின்படி, அந்தப் போட்டிக்கடையை விடவும் திரு. அசோக்கின் கடையில் ஒப்பீட்டளவில் விலை குறைவு என்பதைக் கண்டோம்.

இந்தக் காலகட்டத்தில், கண்காட்சி மீன்களைப்பற்றிய எனது அறிவை மிகப்பெரிய அளவில் வளர்த்துக்கொண்டேன். முக்கியமாக இது இரண்டு

காரணங்களால் சாத்தியமானது. முதலாவதாக, நாங்கள் சென்ற இடங்களில் கிடைத்த செயல்முறை அனுபவங்களுடன், திரு. அசோக்கின் கடையில் மீன்களை நான் நிறைய காலம் கூர்ந்து கவனத்திருந்தேன். இரண்டாவதாக, எனது உயர்நிலைப்பள்ளித் தேர்வில் நான் உயர்ந்த மதிப்பெண் பெற்றதற்குப் பரிசாக எனது தந்தை எனக்கு வாங்கிக் கொடுத்த மீன்களைப்பற்றிய புத்தகங்களை நான் வாசித்துக் கொண்டே இருந்தேன். அந்தப் புத்தகங்கள் மிக விலை உயர்ந்தவை, ஆனால் விலைக்கேற்ப தரமானவைதான். தத்துவார்த்த அறிவும், செய்முறை அனுபவமும் ஒரே நேரத்தில் கிடைக்கப்பெறும் சூழல் கண்காட்சி மீன்கள் சார்ந்து எனக்கு மிகுந்த நம்பிக்கை கொடுத்தது. திரு. அசோக்கின் கடையில் எனது அனுபவத்தின் ஒரு முக்கியமான சிறப்பு என்னவென்றால் மீன் தொட்டிகளைச் செய்யக் கற்றுக்கொண்டதுதான். வியாபாரம் கொஞ்சம் மந்தமான காலகட்டத்தில் நாங்கள் இருந்ததால் எனக்கு மீன் தொட்டி எப்படிச் செய்வதென கற்றுத்தருவதாகச் சொன்னார் திரு. அசோக். முதலில், ஆறு தொட்டிகளுக்குத் தேவையான கண்ணாடி வாங்குதல், கண்ணாடித் துண்டுகளை தேவையான அளவுகளுக்கேற்ப வெட்டுதல், கீறல் ஏதுமின்றி அந்தத் துண்டுகளைக் கடைக்குக் கொண்டுசேர்த்தல் போன்ற அடிப்படை விசயங்களிலிருந்தே நான் தொடங்கவேண்டியிருந்தது.

முன்னதாக, பல்வேறு தருணங்களில் நான் திரு. அசோக்குடன் அந்தக் கண்ணாடிக் கடைக்குச் சென்றிருந்தேன். அவரது தேவைகளை எடுத்துக்கூறி அவர் கண்ணாடி வாங்கியதை, தவறாக வெட்டப்பட்டால் அந்தத் துண்டை மறுபடி வெட்டச் செய்வதைப் பார்த்திருக்கிறேன். நான் அந்தக் கண்ணாடிக் கடைக்கு சில்லறைக் கொள்முதல்களுக்காக அடிக்கடி அனுப்பப்பட்டதால் அந்த முதலாளியுடன் பழகியதுடன்

வியாபார முறைகளையும் நன்றாக அறிந்துகொண்டேன். கண்ணாடியின் விலையை எப்படி நிர்ணயம் செய்வது என்பதைக்கூட திரு. அசோக் எனக்குக் கற்றுக்கொடுத்திருந்தார். ஆனாலும், திரு. அசோக் என் கையில் கொஞ்சம் பணம் கொடுத்து, என்ன செய்ய வேண்டும் என்பதைக் குறித்து சில பொதுவான குறிப்புகளைக் கொடுத்து, அதை நான் தனியாகவே செய்யவேண்டி வருவது ஒரு புது அனுபவமாகவே இருந்தது. கண்ணாடி வாங்குவதையும், அதை தேவையான அளவில் வெட்டச்செய்து கொண்டு வருவதையும் கூட நான் சமாளித்துவிட்டேன். அதுவரைக்கும் நன்றாகத்தான் போனது. அதன் பின்னர்தான் சிக்கலான பகுதியே! கண்ணாடித் துண்டுகளைக் கடைக்குக் கொண்டுசெல்வது. அதற்காக நான் ஒரு ரிக்ஷா பிடிக்க வேண்டுமா என்று குழம்பினேன், கடை கொஞ்ச தூரத்தில் இருந்தாலும்கூட அதற்கு எவ்வளவு செலவாகும் என்பதை நான் விசாரித்திருக்காததால் கொஞ்சம் தயங்கினேன். அந்தக் கண்ணாடிகளை எடை போட்டுக்கொண்டே, ஒரு முடிவுக்கு வர நான் யோசித்துக் கொண்டிருந்தபோது, அந்தக் கடைக்காரர் அந்தக் கண்ணாடிகளை நானே தூக்கிக்கொண்டு திரு. அசோக்கின் கடைக்குக் கொண்டுபோக முடியும் என்று உறுதியாகக் கூறினார். நானும் அப்படியே செய்தேன்.

தொடக்கத்தில் ஒரு பிரச்சினையும் இல்லை. இருந்தாலும் போகப்போக, எல்லா பக்கங்களிலுமிருந்து வந்த ரிக்ஷாக்கள், டாக்சிகள் மற்றும் மோட்டார் சைக்கிள்களின் ஹாரன் சத்தத்தினூடே திரு. அசோக்கின் கடைக்குச் செல்லும் சாலையில் நான் களைப்போடு நடந்து செல்லச் செல்ல, அந்தப்பெட்டி மேலும் மேலும் கனமானது. இலக்கைச் சென்று அடையும் முன்னாலேயே, நான் சோர்வடைந்துவிட்டதாலும், என் கைகள் வலித்ததாலும், என் புத்திசாலித்தனமான செயல் சரிதானா என்று எனக்குச் சந்தேகம் வந்துவிட்டது. ஆனாலும், அந்தக் கண்ணாடிகளை

மட்டும் நான் கீழேபோடத் துணியவில்லை, ஏனென்றால் அது கண்ணாடி இல்லையா! கடைசியில் நான் கடையை வந்தடைந்தபோது அந்தக் கண்ணாடிகள் உடையாமல் இருந்ததைப் பார்த்து நான் நிம்மதிப் பெருமூச்சு விட்டேன். என் முடிவைக் கேட்டு திரு.அசோக் திடுக்கிட்டுப் போனதுடன், மிகுந்த கோவமடைந்து, வரும் வழியில் எனக்கு ஏதேனும் விபத்து நிகழ்ந்திருந்தால் அதன் விளைவுகள் பயங்கரமாக இருந்திருக்கும், எல்லாவற்றிற்கும் மேல், அவர்தான் எனக்குப் பொறுப்பு என்று கூறிய போதுதான் எனக்கு உரைத்தது. அந்த நாள் நிஜமாகவே நான் ஒரு முக்கியமான பாடத்தைக் கற்றுக்கொண்டேன்.

மீன்காட்சித் தொட்டி செய்யக் கற்றுக்கொள்வது மிக வேடிக்கையானது. முதலில் நாம் தொட்டியின் அளவைத் திட்டமிட வேண்டும். அதற்கு, நாம் தொட்டியின் நீளத்தை முதலில் முடிவுசெய்ய வேண்டும். அதன்பிறகு, அதே விகிதாச்சாரத்தில் தொட்டியின் அகலமும் உயரமும் நிர்ணயிக்கப்பட வேண்டும். சிலிக்கோன் என்னும் ஒருவித பசையால் கண்ணாடிகள் பக்கவாட்டில் ஒட்டப்படுகின்றன. அது கெட்டியானதும் ரப்பர் போல இருக்கும். சிலிக்கோன் தண்ணீரில் கரையாது. கண்ணாடியின் ஓரங்களில் மட்டும் சிலிக்கோனைத் தேய்த்து, ஒட்டிப்பிடிக்கும் நமது விரல்கள் கண்ணாடியின் வேறு எந்தப் பகுதியையும் தொட்டு விடாமல் பார்த்துக் கொள்ளும் திறமைதான் இதில் சூசகமான விசயம். இல்லா விட்டால், கண்ணாடி அழுக்காகத் தோன்றும், ஏனென்றால் சிலிக்கோன் தடயங்கள் விரல்ரேகை போல அந்தக் கண்ணாடியில் நிரந்தரமாகத் தங்கிவிடும். தொட்டியின் உட்புறமாகவும் சிலிக்கோன் தேய்த்து ஒட்டியபின் (இருபக்கப் பாதுகாப்பிற்காக) அது ஒருநாள் முழுதும் காயவைக்கப்படும். அடுத்தநாள், நீர் நிறைத்து அது சோதிக்கப்படும். எல்லாம் சரியாக இருப்பின் தொட்டி விற்பனைக்குத் தயார்! வாடிக்கையாளர்களிடம்

கொண்டுசேர்க்கலாம்!

முதல் தொட்டி செய்வது எப்படி என்பது எனக்குக் கற்றுக்கொடுக்கப் பட்டதும், நான் மற்ற தொட்டிகளைச் செய்வதில் உதவ ஆரம்பித்தேன். ஒருமுறை தவறுதலாக கண்ணாடியை நான் தலைகீழாக ஒட்டியது இப்போது நினைவுக்கு வருகிறது. ''இந்தத் தொட்டியில் ஏதோ சரியில்லாத மாதிரி தோன்றுகிறதே!'' என்றார் திரு. அசோக். என்னுடைய தவறு என்னவென்று அவர் புரிந்துகொண்டதும், அந்தத் தொட்டியிலே என்னைத் தூக்கிப்போடப் போனார்.

மீன் காட்சியகத்தில் மீன்கள் செத்துப்போவதற்கான (வாடிக்கை யாளர்களின் பொதுவான புகார்) காரணத்தைக் கண்டறிவதில் என் திறனைச் சோதிக்கும் முதல் வாய்ப்பு, கலங்குட்டேவில் இருந்த ஹோட்டல் ஆஸ்போர்னின் மேலாளர் அவர்களது விடுதி வளாகத்தில் அமைந்திருந்த மீன் காட்சியகத்தை வந்து சோதிக்குமாறு திரு. அசோக்கைக் கேட்டபோது கிடைத்தது. மீன்கள் செத்துக் கொண்டிருப்பதாக அவர் கூறினார். அந்த விடுதியின் முதலாளி திரு. அசோக்கின் மிக நல்ல வாடிக்கையாளர்களில் ஒருவர், அதனால் திரு. அசோக் அந்தப் பிரச்சினையைத் தீர்த்துவைப்பதில் முனைப்பாக இருந்தார். இருந்தாலும், அன்று அவரால் போக முடியாததாலும், விசயத்தைத் தள்ளிப்போட அவர் விரும்பாததாலும், அவருக்குப் பதிலாக என்னை அனுப்ப அவர் முடிவு செய்தார். அவர் என்னிடம் அந்த விடுதிக்குச் செல்லும் வழியைக்கூறி,மேலாளரின் சந்திப்பு அட்டையையும், மீன்களுக்கான சில மருந்துகளையும், பழுதான ஒரு பழைய நீர்க் குழாய்க்குப் பதிலாகப் பொருத்த வேண்டிய ஒரு நீர்க் குழாயையும் கொடுத்தார், நான் தனியாகவே சென்றேன். அத்தகைய ஒரு முக்கியமான வேலையை என்மீது நம்பிக்கை வைத்து திரு. அசோக் ஒப்படைத்ததை நினைத்து நான் மகிழ்ந்து பெருமைப்பட்டேன்.

மாலையில் நான் அந்த விடுதிக்குக் கிளம்பினேன். எந்தப் பிரச்சினையும் இன்றி அதை நான் கண்டுபிடித்தேன். அழகான புல்வெளிகளும் ஒரு நீச்சல் குளமும் கொண்ட ஒரு பெரிய விடுதி அது. மிகவும் அனுபவம் வாய்ந்த ஒரு மீன் மருத்துவரைப் போலக் காட்டிக்கொண்டு, நிமிர்ந்த நடையோடு அந்த விடுதியின் உள்ளே பெருமிதத்தோடு சென்றேன். சென்று அந்த மேலாளரைச் சந்தித்தேன். அவர் எந்தெந்த மீன்கள் இறந்துவிட்டன என்று கூறினார். நான் நோய்க்கான அறிகுறிகளைத் தேடினேன், எதுவும் கிடைக்கவில்லை. பிரச்சினை ரொம்ப எளிதானது, பொதுவானது என்பதைப் பின்னர் நான் புரிந்துகொண்டேன்: தேவைக்கு அதிகமாக உணவு ஊட்டுவதுதான் அது. மீன்களுக்கு அவற்றின் அளவிற்கு ஏற்ற விகிதத்தில்தான் உணவு தேவைப்படும். ஆனால், மக்கள் அடிக்கடி தேவைக்கு அதிகமான உணவை மீன் தொட்டியில் போடுகின்றனர். கூடுதலான உணவு தண்ணீரைக் கலங்கச்செய்து மாசுபடுத்துவதால் மீன்கள் இறந்துவிடுகின்றன.

நான் தொட்டிகளைச் சுத்தம் செய்தேன், நீர்க்குழாயை மாற்றினேன், வடிகட்டிகளைச் சோதித்தேன், விடுதி ஊழியர்களுக்கு மீன்களுக்கு எப்படி உணவிடுவது என்று காட்டினேன். கூடவே, நான் கொஞ்சம் விற்பனையும் செய்துவிட்டேன். அவர்கள் கையிருப்பில் வைத்துக் கொள்ள கொஞ்சம் மீன்களுக்கான மருந்துகளை விற்று, திரு. அசோக் என்னிடம் கொடுத்திருந்த ரசீதுப் புத்தகத்தில் அவர்களுக்கு ஒரு ரசீது எழுதிக் கொடுத்தேன். என்னுடைய வேலையில் அவர்கள் திருப்தி அடைந்ததாகத் தோன்றியது, எனக்காகத் தேநீர் தயாரித்துக் கொடுத்தார்கள். அதை நான் குடிக்கவில்லை, ஏனென்றால் நான் தேநீர் குடிப்பதில்லை. என்னுடைய வேலை முடிந்ததும், பொறுமையின்றி, சிறிதும் தாமதிக்காமல் திரு. அசோக்கிடம் என்னுடைய அனுபவத்தைக் கூற நான் விரைந்தேன்.

இந்தக் காலகட்டத்தில் நான் கேள்விப்பட்ட, ஆனால் பார்த்திராத பாஞ்சிமில் இருந்த மீன் கடைகளுக்குச் செல்ல ஒரு வாய்ப்பு கிடைத்தது. அதற்கான சந்தர்ப்பம் என்னுடைய 3-கியர் கொண்ட மிதிவண்டி பழுதானபோது அமைந்தது. உதிரி பாகங்களை வாங்க நான் பாஞ்சிமிற்குச் செல்ல வேண்டியிருந்தது. என்னுடைய அம்மா அடிக்கடி அங்கே சென்றதால் அவற்றைப் பாஞ்சிமிலிருந்து வாங்கிவர அவரை இணங்கச் செய்ய நான் முயன்றேன். நானாகவே விசயங்களைச் செய்யக் கற்றுக் கொள்ள வேண்டும் என்று சொல்லி அவர் மறுத்தார். அப்போதுதான், உதிரி பாகங்களை வாங்கவும், மீன் கடைகளுக்குச் செல்லவும், திரு. அசோக்கிற்கு ஒரு சில பொருட்களை வாங்கவும் பாஞ்சிமிற்கு ஒரு முழுநாள் பயணம் மேற்கொள்ளலாம் என நான் யோசித்தேன்.

அடுத்தநாள், நான் என் அம்மாவுடன் பாஞ்சிமிற்குச் சென்றேன், அவர் ஒரு சில முக்கியமான இடங்களைக் காட்டிவிட்டு, என்னை என் போக்கில் விட்டுச் சென்றுவிட்டார். நான் கொஞ்சம் பதற்றமாக இருந்தேன். ஆனால், எப்படியும் சமாளித்து விடலாம் என்பதில் உறுதியாக இருந்தேன். பசியாக இருந்ததால் முதலில் நான் காமத் உணவகத்திற்குச் சாப்பிடச் சென்றேன். வீட்டிற்கு வெளியே என் வயிற்றை நிரப்ப எனக்கு எவ்வளவு செலவானது என்பது என்னைத் திகைக்க வைத்தது! அதன்பிறகு, சிலிக்கோன் கிடைக்கும் ஒரு கடையைத் தேடினேன் (திரு. அசோக் கொடுத்திருந்த பணி). பலமுறை விசாரித்த பிறகு நான் அந்த இடத்தைக் கண்டடைந்தேன். பின்னர் நான் மிதிவண்டிக் கடையைத் தேடினேன், அதைக் கூடிய சீக்கிரம் கண்டுபிடித்துவிட்டேன். ஆனால் எனக்குத் தேவையான பொருள் இருப்பில் இல்லை எனவும் அடுத்த வாரம்தான் கிடைக்கும் எனவும் அறிந்தேன்.

அடுத்து, என் மனதிலிருந்த இரண்டு மீன் கடைகளுக்குச் செல்ல

வேண்டியதுதான்: ''பிஸ்லின்'' மற்றும் ''சம்திங் ஃபிஷி''. பிஸ்லினில் நிறைய மீன்கள் கையிருப்பில் இருந்தன, நிறைய வகை வெளிநாட்டு மீன்களும் இருந்தன. ஆனால், எனக்கு அங்கு விலை மிக அதிகமாக இருப்பதாகத் தோன்றியது. அந்தக் கடையை நடத்தியவர்களுடன் நான் கொஞ்சம் உரையாடினேன் (அது ஒரு குடும்பத்தின் கடை). அவர்கள் பறவைகளையும் விலைக்கு வைத்திருந்தார்கள். கொஞ்ச நேரம் மீன்களைப் பார்த்த பிறகு, பக்கத்திலேயே இருந்த சம்திங் ஃபிஷிக்கு போகலாம் என முடிவு செய்தேன். அங்கு சென்று சம்திங் ஃபிஷியில் மிகக் கொஞ்சம் மீன்களே இருந்ததைப் பார்த்து முதலில் நான் ஏமாற்றம் அடைந்தேன். அடுத்த வாரக் கடைசியில் மீன்கள் வருமென எதிர் பார்ப்பதாகவும், அதனால்தான் பெரும்பாலான தொட்டிகள் காலியாக இருப்பதாகவும் அந்தக் கடை உதவியாளர் என்னிடம் சொன்னார். ஆனால், காட்சித்தொட்டிகளில் மிச்சமிருந்தவற்றைப் பார்த்து நான் ஆச்சரியம் அடைந்தேன். என் வாழ்க்கையில் முதன்முறையாக, என் சொந்தக் கண்களாலேயே, மனிதர்களை உண்ணும் பிரானா மீன்களைப் பார்த்தேன்! ஆனாலும் அந்தப் பிரானாக்கள் மிகவும் பயந்துபோய் பதற்றமாக இருந்தன. குறிப்பிட்டுச் சொன்னால், அவற்றைப் பசியாக வைத்திருக்கும் போதுதான் அவை மூர்க்கமான மாமிச உண்ணிகளாக மாறுகின்றன. சம்திங் ஃபிஷியில் ஒரு ஜோடி 3000 ரூபாய் வரை விற்பனையாகும் ப்ளாக் கோஸ்ட் (கருப்புப் பேய்) என்கிற வெளிநாட்டு மீனும் வைத்திருந்தார்கள்.

மீன்களைப்பற்றி அறிந்துகொண்டதைத் தவிர, திரு. அசோக்கின் கடையில் மற்ற பல முக்கியமான அனுபவங்களையும் பெற்றேன்.

அதற்கு முன் நான் ஒருபோதும் வங்கிக்குச் சென்றதில்லை. ஒருநாள் திரு. அசோக் அவருடைய வங்கிக்குச் சென்று கொஞ்சம் பணம் எடுத்து வர

முடியுமா? என்று சாதாரணமாக என்னிடம் கேட்டார். அதை எப்படிச் செய்வது என்பது எனக்குத் தெரியாது என்பதை நான் அவரிடம் சொல்ல விரும்பவில்லை. பதிலாக, நான் அவரிடம் வங்கிக்குச் செல்லும் வழியைக் கேட்டுவிட்டுக் கிளம்பினேன். எப்படியோ, என்ன செய்வது என்பதை விசாரித்து அறிந்து நான் அந்த வேலையை முடித்துவிட்டேன். அதன்பிறகு பலமுறை பணம் போடுவதற்கும் எடுப்பதற்கும் நான் அந்த வங்கிக்கு அனுப்பப்பட்டேன்.

என் விருப்பப்படி செலவுசெய்ய என்னிடம் ஏராளமான நேரம் இருந்தாலும், என்னுடைய நேரத்தைத் திட்டமிடுவது ஒன்றும் அவ்வளவு எளிதான விசயமாக இருக்கவில்லை. பல நாட்கள் காலையில் தாமதமாக எழுந்து, திரு.அசோக்கின் கடைக்கு என்னுடைய மிதிவண்டியில் நான் விரைந்துகொண்டிருப்பேன், அல்லது அந்த நாளைக்கான என்னுடைய வேலைகளை முடிக்காததால், என் மதிய உணவு வேளையைத் தள்ளிப் போடுவேன். என்னுடைய நாளை முறையாகத் திட்டமிடக் கற்றுக் கொண்டது ஒரு தனி அனுபவமாகவே இருந்தது, நானாகவே விசயங்களைச் சரியாகச் செய்யும்பொழுது என்னைப்பற்றி நானே மிக திருப்தியாக உணர்வேன்.

என் வாழ்வில் முதன்முறையாக நான் தனியாக இருந்ததாலும், முடிவுகள் எடுக்க சுதந்திரம் இருந்ததாலும், என் உருப்படியான யோசனைகளைப் பரிசோதித்துப் பார்க்க முடிந்ததாலும், என்னுடைய ஆர்வங்கள் மற்றும் என் பொழுதுபோக்குகள் குறித்து எனக்கு ஒரு ஆழமான பார்வை உண்டானது.

புத்தகங்கள் வாசிப்பதில் எனக்குப் பேரார்வம் இருப்பதை நான் கண்டறிந்தேன். தினசரி காலை திரு.அசோக்கின் கடைக்குச் செல்லும் வழியில் நான் நூலகத்திற்குச் சென்று என்னுடைய ஓய்வு நேரத்தில்

வாசிப்பதற்காக ஏதேனும் புத்தகத்தை எடுத்துச்செல்வேன். எனக்கு மிகவும் பிடித்த புத்தகம் 'ஹார்டி பாய்ஸ்' தான். திரு. அசோக்கின் கடையில் இருந்த காலத்தில் அந்த முழுத் தொகுப்பையும் நான் முடித்துவிட்டேன். 'டின்டின்' மற்றும் 'ஃபேன்டம்' போன்ற காமிக் புத்தகங்களையும் நான் மிக ரசித்தேன்.

மாலைவேளைகளில், திரு. அசோக்கின் கடை முடிந்ததும், நான் பண்பலை வானொலி இசை நிகழ்ச்சிகளைக் கேட்பேன். மற்ற எந்த பதின்பருவத்தினர் போலவே எனக்கும் வேகமான, சத்தமான இசை பிடித்தது. அதிர்ஷ்டவசமாக, கனடாவிலிருந்து வரும் என் ஆல்விசன் அத்தை கொடுத்த வாக்மேன் மற்றவர்களைத் தொந்தரவு செய்யாமல் நான் இசை கேட்க உதவியது. நான் கிதார் கற்றுக்கொள்ளத் தொடங்கலாம் என நினைத்தேன். ஆனால் வரும் மாதங்களில் நான் கோவாவை விட்டு வெளியே பயணிக்கத் திட்டங்கள் வைத்திருந்ததால் கிதார் வகுப்புகளை உடனே தொடங்குவதற்கு எதிராக என் பெற்றோர் அறிவுறுத்தினர். கடிதம் எழுதுவது எனக்குப் பிடித்தமான விசயங்களில் ஒன்றன்று. இருந்தாலும், என் தேர்வு முடிவுகளுக்காக என்னை வாழ்த்தி எனக்குக் கடிதங்கள் மற்றும் பரிசுகள் அனுப்பிய நபர்களுக்குப் பதில் எழுத நான் கட்டாயப் படுத்தப்பட்டேன். என்னுடைய ஓராண்டு இடைவெளித் திட்டத்தைப் பாராட்டி பல நண்பர்கள் மற்றும் உறவினர்களிடமிருந்து உடனடியாக பதில் கிடைத்ததால் நான் மிக்க மகிழ்ச்சி அடைந்தேன். நாம் மற்றவர்களுக்குக் கடிதம் எழுதும்போதுதான் நமக்கும் கடிதங்கள் வரும் என்பதை நான் புரிந்துகொண்டேன். என்ன இருந்தாலும், இப்போதுகூட நான் கடிதம் எழுதுவதை விரும்புவதில்லை.

கைச்செலவிற்காக கொஞ்சம் பணம் சம்பாதிக்க, ஞாயிற்றுக் கிழமைகளில் சில சில்லறை வேலைகளைச் செய்துவந்தேன். என் அப்பாவின் காரைக்

கழுவுவேன், அவர் அதற்காக ஐந்து ரூபாய் கொடுப்பார். மேலும், நான்தான் வீட்டில் முக்கிய ஏவலாளிப் பையன். மின் கட்டணம் செலுத்துதல், ரேஷன் பொருட்களை வாங்குதல் போன்ற எல்லா வகையான வேலைகளையும் நான் செய்தேன். மொத்தத்தில், திரு. அசோக்கின் கடையில் வேலைசெய்தது எனக்கு ஒரு நல்ல துவக்கமாக அமைந்தது.

களப்பணிக் குறிப்புகள் :

இப்போது ஜூலி ஒரு மீன் தொட்டி வைத்திருக்கிறார்.

ஜூலியட் மற்றும் பீட்டர் டி சூசா ஆகியோர் என் பெற்றோரின் கல்லூரித் தோழர்கள். அவர்கள் கலாங்குட்டேவில் வசிக்கிறார்கள். பீட்டர் ஒரு குற்றவியல் வழக்கறிஞர், ஜூலியட் ஒரு பள்ளி ஆசிரியை. எங்கள் குடும்பங்கள் அவ்வப்போது சேர்ந்து சுற்றுலா செல்வதுண்டு. என் பள்ளி இறுதி ஆண்டில் அத்தகைய ஒரு சுற்றுலாவின்போது, கண்காட்சியக மீன்களின் மீதான என் ஆர்வத்தைக் கண்டுகொண்ட ஜூலியட் சரியான நேரத்தில் அவர்கள் வீட்டில் ஒரு மீன் தொட்டி அமைக்க அவருக்கு உதவ என்னை அழைத்தார்.

அவர்களிடம் ஏற்கெனவே ஒரு மீன் தொட்டி இருந்தது, ஆனால் அதன் அடிப்பகுதிக் கண்ணாடியில் கீறல் விழுந்திருந்தது. ஜூலியட் திரு. அசோக்கிடம் அதைப் பழுதுநீக்கக் கொடுத்திருந்தார். அது திரு. அசோக்கின் கடையில் யாராலும் கண்டுகொள்ளப்படாமல் கிடந்தது. ஜூலியட் அந்தத் தொட்டியைப்பற்றிப் பல தருணங்களில் என்னிடம் நினைவுறுத்தியிருந்தார், ஆனால் அதைப்பற்றி திரு. அசோக்கிடம் ஞாபகப்படுத்துவதைத் தவிர என்னால் எதுவும் செய்ய முடியவில்லை. திரு. அசோக்குடன் வேலைசெய்யத் தொடங்கியபோது ஜூலியட்டிற்கு நான் கொடுத்திருந்த வாக்கைக் காப்பாற்றக் கிடைத்த வாய்ப்பை

உடனடியாக பயன்படுத்தினேன்.

முதல் பிரச்சினை அந்தத் தொட்டியைக் கண்டுபிடிப்பது. திரு.அசோக்கின் கடையின் சரக்கு அறையில் நான் அதைத் தேடத் தொடங்கினேன். மற்ற எல்லா பெரிய தொட்டிகளுக்கும் அடியில் அதைக் கண்டுபிடித்தேன். அது இன்னும் முழுதாக இருந்ததைப் பார்த்து நான் நிம்மதி அடைந்தேன். திரு. அசோக்கும் நானும் அந்த உடைந்த அடிக்கண்ணாடியை அகற்றினோம். அளவெடுத்து கண்ணாடிக் கடையிலிருந்து புதுக்கண்ணாடி வாங்கினோம். தொட்டியைச் சரிசெய்த பின்னர், நான் பீட்டரின் அலுவலகத்திற்குச் சென்று, எப்போது முடியுமோ அப்போது அதையெடுத்து வீட்டிற்குக் கொண்டுசெல்லுமாறு அவரிடம் கூறினேன்.

அடுத்த நாள் மாலையில் பீட்டர் வந்து அதை வீட்டிற்கு எடுத்துச்சென்றார். சில நாட்கள் கழித்து, அதைப் பொருத்திக் கொடுப்பதற்காக நான் அவர்கள் வீட்டிற்கு என் மிதிவண்டியில் சென்றேன். அங்கு சென்றதும் தான் புரிந்தது, கொஞ்சம் சரளைக் கற்களைத்தவிர அந்தத் தொட்டியில் வைப்பதற்கான எந்தப் பொருளுமே ஜூலியட்டிடம் இல்லை, அதுவும் அந்தத் தொட்டியின் அடிப்பகுதியை நிரப்பக்கூட போதுமானதாக இல்லை. தேவையான எல்லா அத்தியாவசியப் பொருட்களையும் நான் அவரிடம் விளக்கிக் கூறினேன். அவர் என் இஷ்டப்படியே அந்தப் பொருட்களையும் தொட்டிக்கான மற்ற அலங்காரப் பொருட்களையும் வாங்கிக்கொள்ள விட்டுவிட்டார். நான் அடுத்தமுறை சென்றபோது, சரளைக்கற்கள் சில கிலோக்கள், ஒரு விசைக்குழாய், நெகிழித் தாவரங்கள், மீன்களுக்கான மருந்துகள், சரளைக் கற்களுக்கு அடியில் வைக்கும் வடிகட்டி, கொஞ்சம் குழாய்கள், சில சீராக்கிகள், T-இணைப்புகள், மற்றும் ஒரு மீன்வலை ஆகியவற்றை எடுத்துச் சென்றேன். அவர் தேர்ந்தெடுப்பதற்காக மீன் தொட்டியினுள் வைக்கும் நான்கு வகையான

பொம்மைகள் மற்றும் இரண்டு சிப்பிகளையும் எடுத்துச்சென்றேன்.

நான் முதலில் சரளைக்கற்களைக் கழுவினேன், பின் அவற்றிற்கு அடியில் இருக்கவேண்டிய வடிகட்டியைப் பொருத்தினேன். அடுத்து நான் சரளைக்கற்களை வடிகட்டியின் மேலாகப் பரப்பினேன், அலங்காரப் பொருட்களையும் சிப்பிகளையும் அதன்மேல் வைத்தேன். பின், காற்று விசைக்குழாயுடன் மற்ற குழாய்கள் மற்றும் வடிகட்டிகளைப் பொருத்தினேன். இத்தனை நேரமும் ஜூலியட்டின் இரு மகள்களான ஏஞ்சலின் மற்றும் மிரியமால் நான் கூர்ந்து கவனிக்கப்பட்டுக் கொண்டிருந்தேன். அவர்கள் இங்கொன்றும் அங்கொன்றுமாக உதவிகளைச் செய்தனர், தங்கள் யோசனைகளையும் சொல்லிக் கொண்டே இருந்தனர். இரண்டு மணி நேரத்திற்குப் பிறகு எல்லாம் தயார் ஆனது. மீன் தொட்டியில் போடுவதற்காக மீன்களும் நீர்த்தாவரங்களும் மட்டுமே மிச்சமிருந்தன. கண்டோலிமில் உள்ள ஒரு மீன் கடையிலிருந்து மீன்களை அவரே வாங்குவதாக ஜூலியட் சொல்லியதால் அந்தத் தொட்டிக்கான மீன்களைத் தேர்வுசெய்வது என்னுடைய வேலையின் பகுதியாக இல்லை! இருந்தாலும், கண்டோலிமில் உயிருள்ள தாவரங்கள் விற்கப்படுகின்றனவா என அவருக்குச் சந்தேகமாக இருந்ததால், பீட்டரிடம் அந்தத் தாவரங்களைக் கொடுத்து அனுப்புமாறு அவர் என்னைக் கேட்டுக்கொண்டார். அவருக்கான ரசீதைப் போட்டு பீட்டரிடம் கொடுக்குமாறும் அவர் என்னிடம் கூறினார். அடுத்த இரண்டு நாட்களுக்குள் இதெல்லாவற்றையும் நான் செய்தேன்.

ஒரு வாரத்திற்குப் பிறகு, என்னுடைய தந்தையிடமிருந்து ஒரு செய்திக்குறிப்பை பீட்டரிடம் கொடுப்பதற்காக நான் பீட்டர் மற்றும் ஜூலியின் வீட்டிற்குச் செல்லவேண்டியிருந்தது. அவர் வாங்கியிருந்த மீன்கள் அவற்றிற்காக நான் செய்துகொடுத்த புதுவீட்டில் எப்படி

இருக்கின்றன என்று பார்க்க நான் ஆர்வமாக இருந்தேன். என்னுடைய தோட்டத்திலிருந்த தொட்டியில் இருந்து ஐந்து ஜோடி கப்பீஸ் மீன்களை ஒரு பரிசாகக் கொண்டுசெல்லலாம் என நான் முடிவுசெய்தேன். ஆனால், நான் எப்படி விட்டுவிட்டு வந்திருந்தேனோ அப்படியே அந்த மீன் தொட்டி இருந்ததைப் பார்த்து நான் எவ்வளவு அதிர்ச்சி அடைந்திருப்பேன் என்பதை நீங்களே கற்பனை செய்து பாருங்கள். அந்த அழகிய தொட்டியில் வாழ்வதற்கு ஒரு மீன்கூட இன்னும் வரவில்லை! நான் கப்பீஸ் கொண்டு வந்திருந்தது சந்தோசம், அந்தத் தொட்டியில் வாழப்போகும் முதல் மீன்களாகிப் போயின அவை. மேலும், நான் அந்தத் தொட்டியில் மின்விளக்கையும் சீராக்கிகளையும் பொருத்தி, தாவரங்களை முறையாக வைத்தேன்.

ஒரு மூலையில் காற்று வடிகட்டி குமிழிகளை வெளியேற்ற, புதிதாக வைக்கப்பட்டிருந்த தாவரங்களுடன் இப்போது முழுமையடைந்திருந்த மீன் தொட்டியையும், மீன்கள் மகிழ்ச்சியாக நீந்துவதையும் பார்த்து நான் ரசித்து நின்றபோது ஜூலியட்டின் குட்டி மகள்கள் என்னைச் சூழ்ந்து கொண்டார்கள். கொஞ்ச நேரத்தில் ஜூலியட்டும் எங்களுடன் சேர்ந்துகொண்டார். அன்புடன் எனக்கு நன்றி சொன்னார், நான் சற்றும் எதிர்பாராத வகையில் என் சட்டைப்பையில் ஒரு 50 ரூபாய் நோட்டைத் திணித்தார். நான் இந்த வேலையைச் செய்யும்போது மிக்க மகிழ்ச்சி அடைந்தேன் எனவும், இதற்காக அவர் எனக்குப் பணம் தரக்கூடாது எனவும் நான் மறுத்துப் பார்த்தேன். ஆனால், நான் அந்தப் பணத்தை வாங்கியே ஆக வேண்டும் என அவர் வற்புறுத்தினார். அதுவே என்னுடைய முதல் சம்பளம் ஆயிற்று!

அதைப்போலவே மற்ற சில குடும்ப நண்பர்களுக்காக நான் மீன் தொட்டிகளை அமைத்துக் கொடுத்தேன். மிகுந்த மகிழ்ச்சி அடைவதையும்

சிறந்த அனுபவத்தைப் பெறுவதையும் தாண்டி, என் கைச்செலவுக்கான பணத்தையும் நான் சம்பாதித்தேன்! மபுசாவில் அவ்டூட் மற்றும் ரேகா முன்ஜ் வீட்டில் அவர்கள் மகளுக்காக நான் அமைத்துக்கொடுத்த ஒரு பெரிய அழகான மீன் தொட்டி இருக்கிறது. பாராவில் வசித்த அல்விதோ மற்றும் செலின் சேன்டியாகோவிடம் ஒரு காலி மீன் தொட்டி இருந்தது. அதை அவர்கள் மீண்டும் பயன்படுத்த விரும்பினார்கள், அவர்களுக்காகவும் நான் மீன்களை ஏற்பாடு செய்துகொடுத்தேன்.

என் பள்ளி (மாண்டே குயிரிமின் செயின்ட் ஆன்டனீஸ்) தலைமை ஆசிரியரின் அலுவலகத்தில் இருந்த பெரிய மீன் தொட்டியையும் என் பள்ளி நாட்களில் நான் பராமரித்திருந்தேன். என் இளைய தம்பி மிலிந்த் மூலமாக அதை நான் தொடர்ந்து கவனித்தேன், என்னைப்போலவே அவனும் ஒரு மீன் ரசிகன்தான்!



கொஞ்சம் விவசாயக்கல்வி

மழைக்காலத்திற்கான என்னுடைய திட்டங்களில் ஒன்று விவசாயத்தில் கொஞ்சம் அனுபவங்களைப் பெற, தொலைதூர வடகிழக்கு மாவட்டமான சட்டாரியின் ஒரு பகுதியான வால்போயின் அருகே ஒரு சிறிய கிராமமான தானெமில் இருந்த 'ரஸ்டிக்' பண்ணைக்குச் செல்வது. ரஸ்டிக் பண்ணை மீது எனக்கு எப்போதும் ஒரு அதீத கவர்ச்சி இருந்தது. ஏனென்றால், என் பெற்றோர் இந்தப் பண்ணையில் வாழ்ந்தபோதுதான் நான் பிறந்தேன், என் மூன்று வயதுவரை நாங்கள் அங்கேதான்

இருந்தோம். அந்தக் காலகட்டத்தைப்பற்றி எனக்கு எதுவும் ஞாபக மில்லை என்றாலும் அந்தப் பண்ணையில் இருந்தபோது எடுக்கப்பட்ட என்னுடைய குழந்தைப்பருவ நாட்களின் பல புகைப்படங்கள் எங்களிடம் இருக்கின்றன. அந்த நாட்களைப்பற்றி என் பெற்றோரும் நிறைய கதைகளைச் சொல்வார்கள். இப்போதும்கூட வருடத்திற்கு ஒருமுறையாவது நாங்கள் அந்த இடத்திற்குச் செல்வதுண்டு. அந்த சமயத்தில் அந்த கிராமத்திலிருந்து அந்தப் பண்ணையில் வேலைசெய்த பல நண்பர்களுடன் இன்னும் தொடர்பு வைத்திருக்கிறோம். கடந்த 16 வருடங்களாக எங்கள் வீட்டுப் பணியாளராக உள்ள ஏசு அந்தப் பகுதியிலிருந்துதான் வருகிறார். 1985ல் ரஸ்டிக் பண்ணை அதன் தற்போதைய முதலாளிகளான ஷ்யாம் மற்றும் உஜ்வலா அச்ரேகர் ஆகியோருக்கு விற்கப்பட்டது. அவர்களுடன் ஒரு மாதம் தங்கியிருந்து நேரடியாக கற்றுக்கொள்ள நான் உத்தேசித்திருந்தேன். துரதிருஷ்டவசமாக சில தனிப்பட்ட சிரமங்களால் அவர்களால் எனக்கான ஏற்பாட்டைச் செய்ய முடியவில்லை. எனது ஓராண்டு கால இடைவெளியில் எனக்கிருந்த மிகச்சில வருத்தங்களில் அதுவும் ஒன்று. இருந்தாலும், மற்ற சில விசயங்கள் சரியாக அமைந்ததால், பாராவில் என் சொந்தக் கிராமத்திலேயே விவசாயத்தின் சில அடிப்படை விசயங்களை என்னால் கற்றுக்கொள்ள முடிந்தது.

எனது பக்கத்து வீட்டுக்காரர்களான கண்டோல்கர்கள் ஒரு விவசாயக் குடும்பத்தினர். மழைக்காலங்களில் அவர்கள் தங்கள் சொந்தப் பயிர் நிலங்களில் விவசாயம் செய்வார்கள். மற்றவர்களுக்காக அவர்கள் உழுது கொடுப்பதும் உண்டு. மூத்த மகனான குருவிடம் இதற்காக ஒரு ஜோடி நல்ல எருமை மாடுகள் இருக்கின்றன. ஒருமுறை எங்கள் வீட்டில் குரு கட்டுமான வேலை செய்துகொண்டிருந்தார். என்னுடைய ஓராண்டு

இடைவெளிபற்றி நான் அவரிடம் பேசிக்கொண்டிருந்த பொழுது, அவருடன் நான் உழுவதற்கு வர விரும்புகிறேனா என சாதாரணமாகக் கேட்டார். அதைக் கேட்டதும் நான் துள்ளிக்குதித்தேன். நான் உடனே சம்மதித்துவிட்டதைப் பார்த்து அவர் கொஞ்சம் ஆச்சரியப்பட்டுப் போனார். அடுத்த நாள் காலை, நான் சீக்கிரமாகவே எழுப்பப்பட்டேன், எங்கள் வீட்டுக்குப் பக்கமாகவே இருந்த வயல்வெளிக்குக் கிளம்பினோம்.

கலப்பை பிடிப்பது ரொம்ப சுலபமாகத் தெரியலாம். ஆனால் என்னை நம்புங்கள், அது அவ்வளவு சுலபமான விசயமில்லை, நிறைய திறமையையும் சக்தியையும் கோருவது அது. கலப்பையை மையத்தில் வைப்பதும் அதே நேரத்தில் விலங்குகளின் குளம்புகளை வெட்டி விடாமல் பார்த்துக்கொள்வதும்தான் தந்திரம். மண்ணில் கலப்பை ரொம்ப ஆழமாகவும் இருக்கக்கூடாது, ரொம்ப ஆழமற்றும் இருக்கக் கூடாது. அதனால், அதன் கைப்பிடியில் நாம் சரியான அளவு அழுத்தம் கொடுக்க வேண்டும். வரப்பின் அருகே வரும்போது கலப்பையை மேலே தூக்குவதற்காகவும், நிலத்தின் முடிவில் எருமைகளைத் திரும்பச் செய்வதற்காகவும் நாம் தொடர்ச்சியாக அவற்றின் மீது ஒரு கண் வைத்துக்கொண்டிருக்க வேண்டும். கடைசியாக (ஆனால் மிக முக்கியமாக) எருமைகளுக்கு உங்களைப் பரிட்சயம் இருக்க வேண்டும், இல்லா விட்டால் அவை உங்கள் கட்டளைகளை ஏற்காது.

அந்த எருமைகளுக்கு குருவை நன்றாகத் தெரியும். ஆனால், நான் ஒரு புதியவன் ஆதலால் குரு என்னைத் தொடர்ந்து ''ஹீரே ஹீரே'' என்று கத்திக்கொண்டிருக்கச் செய்தார், என்னுடைய குரலையாவது அவை அடையாளம் கண்டுகொள்ளத் துவங்கும் என்பதற்காக. அப்படித்தான் அவர்கள் விலங்குகளை நடக்கச் செய்கிறார்கள்.தொடர்ந்து பல நாட்கள் நான் குருவுடன் உழுவதற்குச் சென்றாலும், அவர் என்னைத் தனியாக உழ

ஒருபோதும் அனுமதிக்கவில்லை, ஏனென்றால், இன்னும் சரியான சமநிலையைப் பெறுவது எனக்குக் கடினமாகத்தான் இருந்தது. அது மட்டுமில்லாமல், என்னுடைய அனுபவமின்மையால் எந்த எருமையாவது காயம் அடைந்தால், அதற்கு அவர் குறைந்தபட்சம் 15 நாட்களாவது ஓய்வு கொடுக்கவேண்டி வரும், அது அவரது வருமானத்தைப் பெரிதும் பாதிக்கும்.

உழுத பிறகு, விதைப்பதற்காக நிலம் சமன்படுத்தப்பட வேண்டும். இதுவும் எருமைகளால் தான் செய்யப்படுகிறது. அவை முள்கரண்டி போன்று அமைக்கப்பட்ட ஒரு மரக்கட்டையை நிலத்தின் குறுக்காக இழுத்துச் செல்லும். இதைச் செய்வதற்கு நான் அனுமதிக்கப் பட்டிருந்தேன், அதை முழு மகிழ்ச்சியுடன் செய்தேன். மரக்கட்டைச் சம்மட்டியின் மீது நின்றுகொண்டு எருமைகளை நிலத்தில் அங்குமிங்கும் ஓட்டி, ஒரு இனிய சவாரி செய்வதைப்போல இருந்தது அது.

வயலில் முதலில் விதை தூவுவதையும், பின்னர் உரத்தைத் தூவுவதையும் நான் செய்துபார்த்தேன். சில சமயங்களில், உழுவதற்கு இடைப்பட்ட நேரத்தில் நான் சும்மா இருக்கும்போது கொஞ்சம் களை பிடுங்கவும் செய்தேன். சில நாட்களில், நாங்கள் உழுதுகொண்டிருக்கும்போது கனமழை பெய்யும். மற்ற எல்லா விவசாயிகளோடு மழையில் வேலை செய்வது எனக்கு மிகவும் பிடித்திருந்தது. உழுது முடித்ததும், நிலத்தின் முதலாளி எங்களுக்கு சூடான தேநீரும், ரொட்டியும் அல்லது பாவ் பாஜி கொடுத்து உபசரிப்பார்.

மற்ற வேலையாட்களுடன் அவர்களைப் போலவே சேற்று அழுக்குடன் நான் உட்கார்ந்திருப்பதைப் பார்த்து நாங்கள் உழுத நிலத்தின் முதலாளிகள் எவ்வளவு ஆச்சரியப்பட்டிருப்பார்கள் என்று யோசித்துப்

பார்க்கிறேன். ஏனென்றால், நான் அந்த கிராமத்தைச் சார்ந்தவன் என்பதால், என்னை அவர்களுக்கு நன்றாகத் தெரியும். அங்கு என்னைப் பார்த்த ஒரு பெண் என்னை ஒரு சோம்பேறி வேலைக்கள்ளன் என்று நினைத்தார். அந்த ஞாயிறு காலை நான் எங்கிருந்தேன் என்று என் அம்மாவிடம் சொல்லப்போவதாக அவர் என்னிடம் கூறினார். அன்று நான் தேவாலயத்தில் வழிபாட்டுக் கூட்டத்தில்தான் இருந்திருக்க வேண்டும் என்று அவர் நினைத்திருப்பார்.

வயலில் செய்த வேலை எனக்கு மிகவும் நல்ல அனுபவமாக இருந்தது, நான் நினைத்துப் பார்த்து சந்தோசப்படும் அனுபவம் அது. ஒரு அரை டஜன் நிலங்களை உழுவதற்கு நான் குருவிற்கு உதவினேன். இப்போதுகூட, மழைக்காலம் நெருங்கும்போது நான் பிரியத்துடன் இதமாக அந்த அனுபவத்தை நினைத்துப் பார்க்கிறேன்.



தாவரத் திருவிழாக்கள்

மழைக்காலம் சராசரி கோவாக்காரர்களின் தாவரங்கள் மீதான அதீத ஆர்வத்தை வெளிக்கொண்டு வருகிறது. இந்த உற்சாகம் மற்றும் ஆர்வத்தின் விளைவுதான் தாவரக் கண்காட்சிகளும் தாவரத் திருவிழாக்களும். நான் வாழும் இடத்தின் அருகே சலிகாவ் மற்றும் சியோலிம் என்ற இடங்களில் கிடைத்த அனுபவங்களைக் கூற விரும்புகிறேன். முதல் நிகழ்வில் நான் வெறும் பார்வையாளனாகத்தான் இருந்தேன், இரண்டாவதில் மிகத்தீவிரப் பங்குவகித்தேன்.

ஜுலை ஒன்றாம் தேதி, பொதுவாக மேகமூட்டமாகவும் மந்தமாகவும், ஈரம் நிறைந்தும் இருக்கும் மழைக்காலத்தைப்போல் அல்லாமல், வழக்கத்திற்கு மாறான பிரகாசமான நாளாக இருந்தது. சலிகாவில் நடந்த ஒரு தாவரக் கண்காட்சியைப் பார்க்கப்போக ஆவலாக இருந்தேன் நான். வானிலை வறண்டு இருந்தது நல்லதாகப் போயிற்று, 20 நிமிடங்கள் மிதிவண்டியை மிதித்து அந்த கிராமத்தின் நன்கு அறியப்பட்ட பள்ளியான லூர்து கான்வென்டை அடைந்தேன், அங்குதான் அந்தக் கண்காட்சி நடைபெற்றுக் கொண்டிருந்தது. நான் காலை 10.30 அளவில் போய்ச் சேர்ந்தேன். அந்தக் கண்காட்சி ஏற்கெனவே துவக்கப்பட்டிருந்தது. கண்காட்சி வைக்கப்பட்டிருந்த பிரதான மண்டபத்தினுள் நுழைய முயன்ற மக்கள் கூட்டத்தால் நிரம்பி வழிந்தது அந்த இடம். நானும் அவ்வாறே செய்தேன்.

பிரதான கண்காட்சி மண்டபம் மிகப்பெரியது, மண்டபத்தின் நடுவே தொட்டிகளில் தாவரங்கள் காட்சிக்கு வைக்கப்பட்டிருந்தன. பல தாவரங்கள் விற்பனைக்கு வைக்கப்பட்டிருந்தன. அவை பல்வேறு மக்களால் அங்கே கொண்டுவரப்பட்டிருந்தன, பெரும்பாலான தொட்டிகளில் அவற்றின் முதலாளிகளின் பெயர் இருந்தது. மண்டபத்தின் ஒரு பக்கத்தில் ஒரு மேசை மேல் கள்ளிச்செடிகள் ஒரு குழுவாக வைக்கப்பட்டிருந்தன, மற்றொரு பக்கத்தில் பூ அலங்காரப் போட்டியில் பரிசுபெற்ற காட்சிப் பொருட்கள் வைக்கப்பட்டிருந்தன. வண்ணம் பூசப்பட்ட ஒரு ஸ்கூட்டர் டயரின் உள்ளே செய்யப்பட்டிருந்த பூ அலங்காரத்திற்கு முதல் பரிசு வழங்கப்பட்டிருந்ததை நான் கவனித்தேன். அது நிஜமாகவே ஒரு அசாதாரண யோசனையாக எனக்குத் தோன்றியது. இருப்பதிலேயே மிக கவர்ச்சிகரமான, அசாதாரணமான இரண்டு கள்ளிச்செடிகள் அந்தக்

கண்காட்சியில் இருந்தன. ஒன்று மெல்லிய பச்சை அடிப்பகுதியுடன் வெளிர் சிவப்பில் புடைத்த மேல்பகுதியைக் கொண்டிருந்தது, மற்றொன்று பருத்திப்பஞ்சு போல இருந்தது.

மண்டபத்தில் இருந்த தாவரங்களைத் தவிர, பக்கவாட்டில் இருந்த சில வகுப்பறைகளிலும் தாவரங்களும் மற்ற பொருட்களும் விற்பனைக்காக இடம்பெற்றிருந்தன. அங்கே உணவுத் தாவரங்களான கொத்தமல்லி மற்றும் தென்னங்கன்றுகள், அலங்காரத் தாவரங்களான மணி பிளான்ட், கொடிகள், மற்றும் உட்புற அலங்காரத் தாவரங்கள் ஆகியவை இருந்தன. தெளிக்கும் கருவிகள், கத்தரிக்கோல்கள், பூந்தொட்டிகள், விதைப் பொட்டலங்கள், இயற்கை உரங்கள் உள்ளிட்ட தோட்டக்கருவிகளும் அங்கே இருந்தன.

திரு. பிரான்சிஸ் போர்கேஸ் அவர்கள் 'இயற்கை விவசாயம்' என்ற தலைப்பில் ஒரு உரையாற்றுவார் என 11 மணி அளவில் ஒரு அறிவிப்பு வந்தது. பிரான்சிஸ் போர்கேஸ் ஒரு கல்லூரி விரிவுரையாளர், தாவரங்கள் சார்ந்த அவரது அனுபவம் மற்றும் அறிவுக்காக மேலும் நன்கு அறியப் பட்டவர். அவர் இயற்கை விவசாயம் செய்வதோடு 'அபுர்பாய்' என்றொரு நாற்றுப்பண்ணை வைத்திருக்கிறார். 'வீக்கெண்டர்' என்கிற கோவாவின் செய்தித்தாளில் அவர் ஒரு வாராந்திர பத்தி எழுதிவந்தார். என் தந்தை ஏற்கெனவே அவரைப்பற்றி சொல்லியிருந்தார், எனவே அவர் என்ன பேசப்போகிறார் என்பதைக் கேட்க நான் ஆவலாக இருந்தேன்.

அவரது பேச்சு வேதிப்பொருட்களை (பூச்சிக்கொல்லிகள், உரங்கள்) உபயோகிப்பதன் விளைவுகளைக் குறித்து இருந்தது, அவையெல்லாம் சமீப காலத்தில் உலகில் நடந்தவை எனக் கூறினார். அவர் இயற்கை விவசாயத்திற்கு திரும்புவதற்கான தேவையை வலியுறுத்திப் பேசினார், அதுதான் ஒரே விவேகமான விவசாய முறை என்றார். விவசாயிகளின் நண்பனான மண்புழுக்களின் பங்களிப்பைப் பற்றியும் பேசினார் அவர்.

அதைத் தொடர்ந்து பல கேள்விகள் வந்தன. அவற்றில் பெரும்பாலானவை வீட்டில் தோட்டம் அமைக்கும்போது மக்கள் சந்தித்த பிரச்சினைகள் குறித்து இருந்தன. திரு. போர்கேஸ் அவருடைய பதிலில் அவரே வெற்றிகரமாக முயற்சி செய்திருந்த நடைமுறைத் தீர்வுகளை வழங்கினார். உதாரணமாக, 'பூப்பூத்ததும் ஒரு பப்பாளிச் செடி ஏன் மடிந்து விடுகிறது?' என்கிற கேள்விக்கு, அத்தாவரத்தின் அடிப்பகுதியைச் சுற்றிச் சேகரமாகும் தண்ணீர் அதன் அடித்தண்டை அழுகச் செய்வதால், அதைச்சுற்றி ஒரு வரப்பு கட்ட அறிவுறுத்தினார். இது தொடர்பாக, அவரும் அவர் நண்பர்களும் கண்டுபிடித்த, பப்பாளியைத் தாக்கும் நோய்களைக் கணிசமாகக் குறைக்கும் ஒரு மருந்தைப்பற்றியும் அவர் பேசினார். இதை அவர் 'பப்பாளிக்கான சிகிச்சை' என்ற பெயரில் சந்தைப்படுத்துகிறார். நண்பகல் வாக்கில் அந்த உரை முடிந்தது, நான் வீட்டிற்குக் கிளம்பினேன்.

சியோலிம்

சலிகாவின் தாவரக் கண்காட்சியில் நான் கலந்துகொண்டிருந்ததால், சியோலிமில் நான் கலந்துகொண்ட அடுத்த தாவரத் திருவிழாவில் என்ன எதிர்பார்க்கலாம் என்று எனக்குத் தெரிந்திருந்தது. கோவாவைச் சேர்ந்த பிரபல கார்ட்டூனிஸ்ட்டான அலெக்சிஸ் எனக்கு அழைப்பு விடுத்திருந்ததால், இங்கே நான் தீவிரப் பங்குவகித்தேன், 'க்ரீன் ஹெரிடேஜ்' என்றழைக்கப்பட்ட சியோலிம் தாவரத் திருவிழாவின் பொறுப்பாளர் அவர். அலெக்சிஸ் மற்றும் அவரது நண்பர்களால் சில வருடங்களுக்கு முன்பு க்ரீன் ஹெரிடேஜ் ஆரம்பிக்கப்பட்டது, ஒவ்வொரு வருடமும் மக்கள் அந்த நிகழ்வுக்காக ஆவலோடு காத்திருக்கும் அளவுக்கு அது ஒரு மகத்தான வெற்றி என நிரூபித்திருக்கிறது.

ஆகஸ்ட் 11, 1995 அன்று நான் அதிகாலையிலேயே எழுந்து, சியோலிமுக்கு மிதிவண்டியில் சென்றேன், பாராவின் மலைத்தொடர்களின் குறுக்காக

இருக்கும் ஒரு அழகிய கிராமம் அது. எதிர்பார்த்ததைவிட ரொம்ப முன்னதாகவே நான் அலெக்சிஸின் இடத்தை அடைந்து அவர் வீட்டுவாசலில் உட்கார்ந்திருந்தேன். அலெக்சிஸ் மற்றும் அவரது மனைவி டெக்லா சரியான நேரத்தில் மதிய உணவுக்காக வீட்டிற்கு வந்தார்கள். மதிய உணவிற்குப் பிறகு, நான் அலெக்சிஸின் கைனடிக் ஹோண்டாவின் பின்னால் துள்ளி ஏறினேன். அந்தக் கண்காட்சியில் பங்குபெறும் அனைவரது வீடுகளுக்கும் சென்றோம், அவர்களது கண்காட்சிப் பொருட்களை அடுத்த நாள் நாங்கள் வந்து சேகரித்துக் கொள்ளத் தயாராக வைத்திருக்குமாறு தெரிவித்தோம்.

12ம் தேதி காலை, பாடகர் ஸ்கேட்மேனுடைய ஸ்கேட் சத்தம் மாதிரி இருந்த அலெக்சிஸின் ஜிப்பெரிஷ் சத்தம் கேட்டு நான் எழுந்தேன். அவர், "வாடா! நாம் போகலாம், சீக்கிரம்!" என்று கத்தினார். அவர் என் பெற்றோரின் கல்லூரி நண்பர், எனக்குத் தெரிந்த வேடிக்கையான நபர்களில் அவரும் ஒருவர். அவருடன் சும்மா இருந்தாலே ஒரே சிரிப்புதான்!

அன்று காலையில், எங்கள் பட்டியலில் இருந்த எல்லா நபர்களின் வீடுகளிலும் இருந்து தாவரக் கண்காட்சிப் பொருட்களைச் சேகரிப்பது தான் எங்கள் வேலை. டெம்போ 9.30 மணிக்கு வந்தது. தொட்டிச்செடிகளுக்கு மெத்தைபோல இருக்க நாங்கள் புதர்ச்செடிகளால் டெம்போவின் அடிப்பகுதியை மறைத்தோம். செல்லவேண்டிய வீடுகளின் ஒரு நீண்ட பட்டியல் எங்களிடம் இருந்தது. ஒவ்வொரு முறை நாங்கள் கண்காட்சிக்கான பொருட்களை எடுத்து வைத்தபோதும், பின்னர் தொட்டிகளைச் சரியான வீடுகளுக்குத் திருப்பிக் கொடுப்பதற்காக அவற்றை நாங்கள் எண்களிட்டுக் குறித்துக்கொண்டோம். சில வீடுகளில் கவனமாக இருக்க வேண்டியிருந்தது, இல்லாவிட்டால் அந்த வீட்டார் வைத்திருந்த பெரிய டாபர்மேன்களால் கிழிக்கப்பட்ட கால்சட்டைகளுடன்தான் நாங்கள் வந்திருப்போம்.

டெம்போவில் அதற்குமேல் ஏற்ற முடியாதபோது, தொட்டிகளை இறக்கிவைக்க நாங்கள் கண்காட்சி நடக்கவிருந்த எஸ்.எப்.எக்ஸ் பள்ளிக்குத் திரும்ப வருவோம்,பின் மறுபடியும் கிளம்புவோம். ஒவ்வொரு சுற்றும் புதிய நபர்கள், புதிய வீடுகள், புதிய தோட்டங்களுடன் கூடிய அனுபவமாக அமைந்தது. ஒரு சுற்றில் நாங்கள் பிரபல பாப் பாடகரான ரெமோவின் வீட்டிற்குச் சென்றோம். அவருடைய அம்மா கண்காட்சியில் பங்குகொள்ளவிருந்தார்.

பட்டியலை முடிப்பதற்கு எங்களுக்கு முழுநாள் ஆகிவிட்டது, இறுதியில் நாங்கள் அந்த கிராமத்தைச்சுற்றி மூன்று சுற்றுகள் செய்திருந்தோம். பின்னர், நாங்கள் அந்தப் பள்ளி மண்டபத்தில் இருந்த பெஞ்சுகளில் தொட்டிகளை அடுக்கி வைத்தோம். அடுத்த நாள் காலை துவங்கவிருந்த கண்காட்சியை ஒருங்கமைக்க, பல்வேறு விதங்களில் உதவிக் கொண்டிருந்த பல கிராமத்து சிறுவர்கள் சிறுமிகளுடன் மிகல் ப்ரகான்சா (பழைய கோவாவில் இந்திய விவசாய ஆராய்ச்சிக் கழகத்திற்கு அந்த சமயத்தில் நியமிக்கப்பட்டிருந்த ஒரு அரசாங்க விவசாய அதிகாரி) மற்றும் பிரான்சிஸ் போர்கேஸ் (சலிகாவ் தாவரக் கண்காட்சியில் இயற்கை விவசாயம் பற்றி உரையாற்றிய அதே நபர்) ஆகியோரும் அங்கே இருந்தார்கள். சொல்லப்போனால், நாங்கள் எல்லாவற்றையும் முடித்தபோது ஏற்கெனவே 13ம் தேதி காலை 1 மணி ஆகிவிட்டிருந்தது. மறுபடியும் 9 மணிக்கு நாங்கள் எல்லோரும் திருவிழா துவங்குவதற்கு முந்தைய கடைசிநிமிட வேலைகளை முடிக்க வரவேண்டியிருந்தது. அதற்குமுன் எங்களுக்கு ஒருசில மணிநேரத் தூக்கமே கிடைக்கும்.

அந்த 'க்ரீன் ஹெரிடேஜ்' தாவரத் திருவிழா மூன்று நாட்கள் நீடித்தது. விவசாயத் துறையின் இயக்குனர், திரு.பி.கே.தேசாய் காலை 11 மணிக்கு அதைத் துவக்கிவைத்தார். (கண்காட்சிக் கதவுகளுக்கு இடையில்

வெட்டுவதற்காக வைக்கப்படும் நாடாவிற்குப் பதிலாக ஒரு படரும் கொடி இருந்தது). க்ரீன் ஹெரிடேஜ் பதிப்பித்திருந்த 'பசுமைக் கொடை - III - முழுமையான தோட்டக்கலை' என்கிற புத்தகத்தையும் அவர் வெளியிட்டார். அலங்காரக் காகிதத்திற்குப் பதிலாக அந்தப் புத்தகம் ஒரு பெரிய மணி பிளான்ட் இலையில் மடிக்கப்பட்டிருந்தது. அது ஒரு வித்தியாசமான, ஆனால் மிகப் பொருத்தமான யோசனை என நான் நினைத்தேன். துவக்கவிழா மற்றும் புத்தக வெளியீட்டிற்குப் பிறகு, அந்த அதிகாரி தனது உரையை நிகழ்த்தினார், தொடர்ந்து அலெக்சிஸ் ஒரு வேடிக்கையான உரை நிகழ்த்தினார்.

க்ரீன் ஹெரிடேஜ் நிகழ்ச்சி பல்வேறு அம்சங்களைக் கொண்டது. 1. கண்காட்சி, 2. பல்வேறு துறைகளைப் பற்றிய சொற்பொழிவுகள் மற்றும் உரையாடல்கள், 3. பசுமை உலகு சார்ந்த பல்வேறு வகையான போட்டிகள்.

பிரதான கண்காட்சி மண்டபம் மிகப்பெரியது. மக்கள் சிரமமின்றி எளிதாகச் சுற்றிவரவும் தாவரங்களைப் பார்க்கவும் ஏற்றவிதமாக அடுக்கப்பட்டிருந்த எல்லா வகையான தாவரங்களாலும் நிறைந்திருந்தது. மொத்தமாக அங்கே இருநூறு தொட்டிகள் இருந்திருக்கும். மிளகாய் மற்றும் கத்தரிக்காய் போன்ற காய்கறித் தாவரங்கள் இருந்தன. பூச்செடிகள், கள்ளிச்செடிகள், படரும் கொடிகள், பன்னங்கள் (ஃபெர்ன்ஸ்), ஆலமர மற்றும் அரசமர போன்சாய் மற்றும் பலவும் இருந்தன. எலுமிச்சை மரங்கள், ஆரஞ்சு மரங்கள் மற்றும் சப்போட்டா மரங்கள்கூட அங்கே இருந்தன, எல்லாம் தொட்டிகளில் வளர்க்கப்படுபவை!

மண்டபத்தின் மேடையில், பல்வேறு பள்ளிகளைச் சேர்ந்த மாணவர்களின் போட்டிக் கண்காட்சிப் பொருட்களான காய்கறிகளில் செதுக்கப்பட்ட கைவினைப்பொருட்கள் மற்றும் பல்வேறு பொருட்களைக் கொண்டு

செய்யப்பட்ட பூக்கள் ஆகியவை வைக்கப்பட்டிருந்தன.

மண்டபத்திற்கு வெளியே இரண்டு நடைபாதைகள் இருந்தன. ஒரு நடைபாதையில் அரசாங்க நாற்றுப்பண்ணை வைக்கப்பட்டு வேம்பு, மா, தென்னை, சப்போட்டா, புளி, முந்திரி மற்றும் சில இதர வகை மரங்கள் விற்கப்பட்டன. இன்னொரு நடைபாதை நெடுகிலும் மற்ற பொருள் வகைகள் விற்பனைக்கு வைக்கப்பட்டிருந்தன. ஒரு மேசையில் 'முழுமையான தோட்டக்கலை' மற்றும் சென்ற கண்காட்சிகளில் க்ரீன் ஹெரிடேஜால் வெளியிடப்பட்ட அதன் முந்தைய இரண்டு தொகுதி புத்தகங்களும் இருந்தன. மற்றொரு மேசையில் அழகான தென்னைக் கைவினைப்பொருட்கள் விற்பனைக்கு இருந்தன. அங்கே ஒரு யானைத்தலை, ஒரு மேசை விளக்கு, ஒரு மண்டையோடு ஆகியவை இருந்தன. எல்லாமே தென்னையின் வெவ்வேறு பாகங்களால் செய்யப்பட்டவை! அதற்கடுத்து, 'அதர் இந்தியா' புத்தக நிலையம் நிறைய வகையான சூழலியல் சார்ந்த புத்தகங்களைக் கொண்ட ஒரு கடை போட்டிருந்தார்கள். இவற்றிக்கு அப்பால், புல் வெட்டும் இயந்திரம், கத்தரிக்கோல்கள், தெளிப்பான்கள் மற்றும் பிற உபரி பாகங்கள் போன்ற பல்வேறு வகையான தோட்டக்கருவிகளை விற்பனை செய்த 'கார்டன் க்ளோரி' *(Garden Glory)* கடை இருந்தது. அபுர்பாயில் பல வகையான இயற்கை உரங்களான இலை அச்சு, கரஞ்சி மற்றும் எலும்புத்தூள், இவை தவிர அலங்காரத் தாவரங்கள், பனை வகைகள், மற்றும் கொடிகள் ஆகியவை இருந்தன. ஊறுகாய், பழச்சாறுகள், மற்றும் பப்பாளிச் செடிகளுக்கான மருந்துகள் போன்றவையும் விற்பனைக்கு இருந்தன.

நடைபாதையின் கடைசியில் ஒரு சிற்றுண்டிக் கடை இருந்தது. நாங்கள் தாகமாவோ பசியாகவோ இருந்தபோதெல்லாம் அங்கே சென்று குளிர்பானங்களோ தின்பண்டங்களோ சாப்பிட்டோம். என் பில்லைப்

பற்றி நான் கவலைப்படத் தேவையிருக்கவில்லை. ஏனென்றால், அது க்ரீன் ஹெரிடேஜ் குழுவால் கவனித்துக் கொள்ளப்பட்டது.

சிற்றுண்டிக் கடைக்கு அடுத்ததாக ஒரு மேசை, ஒரு கரும்பலகை, சில சுண்ணாம்புக் கட்டிகள் (சாக் பீஸ்), சில பெஞ்சுகள் ஆகியவை இருந்தன. இங்கேதான் சொற்பொழிவு, மற்றும் உரையாடல் நிகழ்சிகள் நடத்தப் பட்டன. மொத்தமாக க்ரீன் ஹெரிடேஜ் நிகழ்ச்சியில் காய்கறிச் சிற்பக்கலை, பழ ஊறல் (ஜாம்) மற்றும் பழச்சாறுகள், ஒயின் தயாரித்தல், மற்றும் கள்ளிச்செடிகள் ஆகியவற்றைப் பற்றிய நான்கு உரையாடல்கள் நடத்தப்பட்டன.

தன் வீட்டில் கள்ளிச்செடி வளர்த்த ஒரு நபரால் நிகழ்த்தப்பட்ட கள்ளிச்செடிகள் குறித்த சொற்பொழிவில் கலந்துகொள்ள நான் முடிவு செய்தேன். அவருடைய உரை மிகவும் சுவாரஸ்யமாகவும், முழுதும் நடைமுறைத் தகவல்களுடனும், கள்ளிச்செடிகளை எப்படி வளர்க்க வேண்டும் என்பதுகுறித்த எளிதில் கையாளக்கூடிய குறிப்பு களுடனும் இருந்தது. நான் கள்ளிச்செடிகள் வளர்க்க முயற்சி செய்ததில்லை என்றாலும், மிக விளக்கமாகக் குறிப்புகள் எடுத்துக்கொண்டேன், என் அம்மாவிடம் அவற்றைப் பகிர்ந்தேன். நான் சரியாக நினைத்தபடி அவருடைய சிறிய கள்ளிச்செடிக் கற்தோட்டத்தில் அது உதவியாக இருந்ததால் அவர் அந்தத் தகவல்கள் கிடைத்ததில் மகிழ்ச்சியடைந்தார். மேலும், அது எனக்கு நிச்சயமாக ஒரு மிக அறிவார்ந்த உரையாகத் தோன்றியது.

அந்த மூன்று நாட்கள் முழுவதும் பிரதான மண்டபத்தில் இருந்த தாவரங்களைக் கண்காணிப்பது, செடிகளுக்குத் தண்ணீர் ஊற்றுவது, தொட்டிகளையும் மரச்சாமான்களையும் தூக்கிச் செல்வது, க்ரீன் ஹெரிடேஜின் கையேடுகளின் விற்பனையைப் பார்த்துக்கொள்வது மற்றும் இதுபோன்ற சிறிய வேலைகள் எனக்குக் கொடுக்கப்பட்டன.

அலெக்சிஸ் உடன் இருந்ததால், ஒவ்வொரு வேலையும் மிக வேடிக்கையாக இருந்தது.

கடைசிநாளில் பரிசு வழங்கும் விழா இருந்தது. க்ரீன் ஹெரிடேஜ் திருவிழாவில் உதவி செய்ததற்காக ஒரு சிறப்புச்சான்றிதழ் பெறுவதில் நான் மிகுந்த பெருமையும் மகிழ்ச்சியும் அடைந்தேன். கண்காட்சி முடிவுக்கு வந்தபோது, ஒருங்கிணைப்பாளர்கள் அனைவரும் அது மற்றுமொரு வெற்றிகரமான நிகழ்ச்சி என்று உணர்ந்தனர். அதில் பங்குவகித்ததில் நான் மகிழ்ச்சியாக இருந்தேன். ஆனால், எங்கள் கேளிக்கை இன்னும் முடிந்து விடவில்லை. அன்று மாலை நாங்கள் அனைவரும் ஒரு பார்பெக்யு விருந்து உண்டோம், அது அதிகாலை நேரம்வரை நீடித்தது. கண்காட்சித் தொட்டிகளை அவற்றின் சரியான முதலாளிகளிடம் திருப்பிக்கொடுக்கும் கடைசிவேலை மிச்சமிருந்ததால், நாங்கள் கொஞ்ச நேரம்தான் தூங்கினோம். அடுத்த நாள் அதிகாலையில் அந்த வேலையைத் தொடங்கினோம்.

க்ரீன் ஹெரிடேஜில் என்னுடைய வேலையையும் அலெக்சிஸின் வீட்டில் தங்கியிருந்ததையும் நான் மிக நன்றாக அனுபவித்தேன். அதெல்லாம் முடிந்தபோது நான் நிஜமாகவே வருத்தமடைந்தேன். அடுத்த நாள் நான் அலெக்சிஸின் வீட்டில் ஓய்வெடுத்தேன், 18ம் தேதி காலை வீட்டிற்குக் கிளம்பினேன்.

களப்பணிக் குறிப்புகள்:
வீட்டில் கள்ளிச்செடி வளர்த்தல்

கள்ளிச்செடிகள் பாலைவனத்திற்குப் பொருத்தமான தாவரங்கள், நமது தோட்டங்களில் அலங்காரக் கள்ளிச்செடிகளை வளர்க்கும்போது எப்போதும் இந்தக் காரணியை நாம் மனதில் வைத்திருக்க வேண்டும், இது அந்தத் தாவரம் தொடர்ந்து வாழ உதவும். உதாரணமாக, ஒரு

கள்ளிச்செடியின் உடல்மேல் ஒருபோதும் தண்ணீர் தெளிக்கக் கூடாது, ஏனென்றால் அது அழுகத் தொடங்கிவிடும். ஆவியாதல் மூலமாக ஏற்படும் நீர் இழப்பைத் தடுக்கும் ஒரு மெழுகுப்பூச்சால் இது மூடப்பட்டிருப்பதால் இப்படி நடக்கிறது. நாம் கள்ளிச்செடியின் உடல்மேல் நீர் விடும்போது, அந்த மெழுகுப்பூச்சு கழுவப்படுகிறது, செடி அழுகத் தொடங்குகிறது. கள்ளிச்செடிக்கு நீங்கள் விடவேண்டிய நீரின் அளவு பருவகாலத்தையும் அந்த இடத்தின் சீதோஷ்ண நிலையையும் பொருத்தது. கோடைக்காலத்தில் கள்ளிச்செடிக்கு நான்கு நாட்களுக்கு ஒருமுறை நீர் விடவேண்டும், அதேசமயம் மழைக்காலத்தில் பதினைந்து நாட்களுக்கு ஒருமுறை விட்டாலே போதுமானது.

கள்ளிச்செடிகளுக்கு ஒரு நாளைக்கு குறைந்தபட்சம் இரண்டரை மணிநேர சூரிய வெளிச்சம் தேவைப்படும். இருந்தாலும் அவை முழுநாளும் வெயிலில் வைக்கப்படக்கூடாது, ஏனென்றால் அளவுக்கு அதிக பிரகாசமான சூரிய ஒளியில் அவை சுருங்கிப்போகலாம். மற்ற தாவரங்களைப் போல் அல்லாமல் கள்ளிச்செடிகள் பகலில் கார்பன் டை ஆக்சைடையும், இரவில் ஆக்சிஜனையும் வெளியிடும். அதனால்தான் இரவில் காற்றைப் புதுப்பிக்க படுக்கையறைகளில் வைப்பதற்கு ஏற்றத் தாவரங்களாக அவை உள்ளன.

கள்ளிச்செடி செழித்து வளர்ந்து விருத்தியடைய வேண்டுமானால், அது வளர்க்கப்படும் தொட்டியின் அளவு கவனமாகக் கண்காணிக்கப்பட வேண்டும். செடியைவிட தொட்டி எப்போதும் கொஞ்சம் சிறியதாக இருக்க வேண்டும், ஏனென்றால், தொடர்ந்து உயிர்வாழ்வதற்குப் போராட வேண்டியிருக்கும்போதுதான் அது இன்னும் செழித்து வளரும். தொட்டி ரொம்ப விசாலமாக இருந்தால், போராட வேண்டிய சூழ்நிலை இல்லாமலாகிறது, அதனால் கள்ளிச்செடி மடிந்துபோக வாய்ப்புகள்

அதிகம். கள்ளிச்செடிகள் மனிதர்களைப் போன்றவை. துன்பப்படும் போது அவைகள் வளரும். ஒரு கள்ளிச்செடி வளர்ச்சிக்கான எந்த அறிகுறியையும் காட்டவில்லை என்றால், தண்ணீர் விடுவதை நிறுத்திவிடுங்கள். மறுபடியும் செடி வளரத் தொடங்கும்போதுதான் தண்ணீர்விடத் தொடங்க வேண்டும்.

ஒரு கள்ளிச்செடித் தொட்டியின் உள்ளடுக்குகள், கீழ்ப்பகுதியில் உடைந்த செங்கல் துண்டுகளாலும், அதன்மேலே மரக்கரியாலும், அதன் மேல் கரடுமுரடான மண்ணாலும் கூழாங்கற்களாலும் ஆனவை. இலை அச்சுதான் மிகச்சிறந்த உரம் ஆகும்.

கள்ளிச்செடிகளின் ஒட்டுமுறை மிகச்சுலபமானது. ஒட்டு செய்யப்பட வேண்டிய தாவரத்துடன் கள்ளிச்செடியின் ஒரு மிகச்சிறிய துண்டை செல்லோடேப்பைக் கொண்டு ஒட்ட வேண்டும். துண்டு சிறிதாக சிறிதாக ஒட்டுமுறை செய்வது எளிதாகிறது. கள்ளிச்செடிகளை இனப்பெருக்கம் செய்வதற்கு, கள்ளிச்செடியின் ஒரு துண்டை வெட்டி, சில நாட்கள் அதை உலர விட்டு, பின்பு அதை கள்ளிச்செடிகளுக்கான உள்ளடுக்குடைய தொட்டியில் வைக்க வேண்டும். அது தானாகவே வேர்விடும்.

கள்ளிச்செடிகளையும் கள்ளிச்செடிகளைப்போல் தோற்றமளிக்கும் மற்ற செடிகளையும் வேறுபடுத்துவது மிக எளிதானது. எல்லா கள்ளிச் செடிகளிலும் ஒவ்வொரு முள்ளின் அடிப்பகுதியிலும் நுண்ணிய முடிகள் இருக்கும். வியர்வையின் மூலமாக ஏற்படும் நீரிழப்பைத் தடுப்பதற்கு ஏதுவாக அதீத மாற்றம் அடைந்த இலைகளே முட்களாக இருக்கின்றன. எப்போதாவது கள்ளிச்செடியின் முள் குத்திவிட்டால், ஒரு செல்லோ டேப்பை எடுத்து முட்கள் நம் தோலைத் துளைத்துள்ள பகுதியில் அதை ஒட்டிப் பின் உரிக்க வேண்டும். அத்தனை முட்களும் செல்லோடேப்பில் ஒட்டிக்கொண்டு வெளிவந்துவிடும்.



காளான்கள் பற்றிய கல்வி

சியோலிமில் க்ரீன் ஹெரிடேஜ் தாவரத் திருவிழாவில் கலந்து கொண்டது எனக்கு இன்னொரு விதத்தில் அனுகூலமாக இருந்தது. கோவா அரசாங்க விவசாய அதிகாரியான திரு.மிகல் பிரகான்சாவுடன் எனக்கு அறிமுகம் கிடைத்தது. அவர் மூலமாகத்தான் ஆகஸ்டு கடைசி வாரத்தில் பழைய கோவாவின் 'எலா' பண்ணையில் இந்திய விவசாய ஆராய்ச்சிக் கழகத்தால் நடத்தப்படவிருக்கும் காளான்கள் குறித்த இரண்டு நாள் பயிற்சிமுகாம் பற்றி எனக்குத் தெரியவந்தது.

நானே தனியாளாக விசயங்களைக் கையாளும் அனுபவத்தின் தொடக்கமாக அமைந்ததும் இந்த நிகழ்ச்சிதான். இந்தப்பயிற்சி கோவாவிலேயே நடத்தப்பட்டாலும், நான் ஒருபோதும் 'எலா' பண்ணைக்குச் சென்றிருந்ததும் இல்லை, அந்த நிகழ்ச்சியில் இருந்த யாரையும் எனக்குத் தெரிந்திருக்கவும் இல்லை.

பங்கேற்பாளர்களுக்கு வளாகத்திலேயே இலவசத் தங்குமிடம் வழங்கப்படும் என திரு. பிரகான்சா என்னிடம் தெரிவித்திருந்தார். ஆனாலும், அங்கே தங்குவது கட்டாயமில்லை. மாலை நேரத்தில் கோவாவில் போக்குவரத்து அவ்வளவு அதிகமாக இருக்காதென்பதால் பெரும்பாலான நபர்கள் தங்குமிட வசதியைப் பயன்படுத்துவார்கள் என நான் நினைத்தேன். எப்படியிருந்தாலும், எனக்கு வெளியே தங்குவது பிடித்த விசயம், அதனால் இரவில் நான் அந்த வளாகத்திலேயே தங்கலாமா என என் பெற்றோரிடம் கேட்டேன். அவர்கள் சம்மதித்தார்கள். ஆனால், நான் கணித்தது தவறாகிப்போனது, அங்கே தங்கிய ஒரே பங்கேற்பாளன் நான் மட்டுமே!

ஆகஸ்டு 24ம் தேதி காலையில், என் அப்பாவிடம் வழிகேட்டுவிட்டு, என் வீட்டிலிருந்து 22 கி.மீ தொலைவில் இருந்த பழைய கோவாவின் ICAR-க்கு கிளம்பினேன். எந்தக் கஷ்டமும் இல்லாமல் நான் அங்கு சென்று சேர்ந்துவிட்டேன். ICAR எலா பண்ணையினுள் அமைந்திருக்கிறது. வாசலில் நான் ஒரு அனுமதிச்சீட்டை நிரப்பவேண்டியிருந்தது. வலதுபக்கச் சந்தினுள் ICAR அலுவலகம் இருந்தது. சாலையின் இருபுறமும் தென்னை, கொய்யா மற்றும் சப்போட்டா ஆகியவை நடப்பட்டிருந்தன. இன்னும் முன்னால், ஒரு ஆய்வகம் போலத் தெரிந்த ஒரு சிறிய அலுவலகம் இருந்தது, அங்கே பல்வேறு பாதுகாக்கப்பட்ட காளான் மாதிரிகள் இருந்தன. அங்கே இருந்த பொறுப்பாளரிடம் நான்

பயிற்சியைப்பற்றி விசாரித்தேன், அவர் என்னை அங்கிருந்த விவசாயிகள் பயிற்சி மையத்திற்கு அனுப்பிவைத்தார்.

பயிற்சியை நடத்தும் திரு. பிரகான்சா மற்றும் திரு. ஆஸ்கர் இருவரும், சில பங்கேற்பாளர்களும் ஏற்கெனவே அங்கே இருந்தனர். முதலில் எங்களைப் பயிற்சிக்காக பெயர்ப்பதிவு செய்யச் செய்தார்கள், செய்த உடனே நம்பமுடியாத வகையில், அப்பயிற்சியில் கலந்துகொள்வதற்காக எங்கள் ஒவ்வொருவருக்கும் உதவித்தொகையாக 500 ரூபாய் கிடைக்கும் என எங்களிடம் தெரிவிக்கப்பட்டது. அது பங்கேற்பாளர்களுக்கு வழங்கப்படும் ஒருவகையான வெகுமதியாகவும் ஊக்கமாகவும் தோன்றியது. போக்குவரத்து, உணவு மற்றும் பிற செலவுகளைக் கவனித்துக்கொள்வதற்காக பொருட்டு அது வழங்கப்பட்டது.

மற்ற எல்லா பங்கேற்பாளர்களும் என்னைவிட மூத்தவர்களாக இருந்ததை நான் கவனித்தேன் (அங்கே முப்பத்தி மூன்று மற்ற மாணவர்கள் இருந்தனர்). அவர்களில் பெரும்பாலானவர்கள் விவசாயிகள். அதனால், உரை நிகழ்த்திய அனைவரும் பாதி ஆங்கிலத்திலோ அல்லது பாதி கொங்கனியிலோ பேசினார்கள், அல்லது விரிவுரையாளர்கள் ஆங்கிலத்தில் மட்டுமே பேசினால், திரு. ஆஸ்கர் அதை கொங்கனியில் மொழி பெயர்த்தார்.

பொதுவாக விரிவுரைகளையும் செயல்விளக்கங்களையும் கொண்ட அந்த பயிற்சிமுகாம், உயரமான, ஒல்லியான, நீள முடியுடைய திரு. நந்தகுமார் காமத் அவர்களின் உரையுடன் துவங்கியது. அவருடைய முதல் கேள்வி: ''நீங்கள் எதற்காக காளான் பயிர்செய்ய விரும்புகிறீர்கள்? வீட்டுக் காய்கறித் தோட்டத்திற்காகவா? சிறிய அளவிலான உற்பத்திக்காகவா? அல்லது பெரிய அளவிலான ஏற்றுமதிக்காகவா?''. ''உங்கள் குறிக்கோளைப் பொருத்து, வகை மற்றும் அளவை நீங்கள் முடிவு செய்ய முடியும்'' என்று

அவர் கூறினார். அவரது உரை விஷமுள்ள மற்றும் விஷமற்ற பல்வேறு காளான் வகைகளின் புகைப்படங்களை உள்ளடக்கியதாக இருந்தது.

அந்த உரை மிக நீண்டது, ஆனால் மிக சுவாரஸ்யமானது. மதிய உணவு நேரத்தைத்தாண்டி அது முடிந்தது. நான் உட்பட பெரும்பாலான பங்கேற்பாளர்கள் நேராக FTC உணவகத்தில் கிடைத்த சாப்பாட்டிற்காக மகிழ்ச்சியாகச் சென்றோம், ருசியான மீன் குழம்புடன் சாப்பாடு வெறும் 6 ரூபாய்க்கு அங்கே கிடைக்கும்.

இரண்டாவது அமர்வு மதியம் மூன்று மணிக்குத் தொடங்கியது. இந்த அமர்வில் இரண்டு உரையாடல்கள் இருந்தன, முதலாவது ICAR-ன் ஒரு விஞ்ஞானியுடையது. அது காளான்களைத் தாக்கும் நோய்கள் மற்றும் பூச்சிகளைப் பற்றியது. பிரச்சினைக்குரிய விசயங்களாக அவர் பூச்சிகள், பூஞ்சைகள், பாக்டீரியாக்கள், மற்றும் ஒழுங்கற்ற மேலாண்மை ஆகியவற்றைக் குறிப்பிட்டார்.

துரதிருஷ்டவசமாக, அவர் கூறிய பெரும்பாலான தீர்வுகள் லின்டேன், மாலதையன் டைக்ளோரோஸ், காப்பர் சல்பேட், மற்றும் சிட்ரோனெல்லா எண்ணெய் போன்ற பூச்சிக்கொல்லிகளைத் தெளிப்பதைப் பற்றிதான் இருந்தன. சரியாகச் சொல்வதென்றால், நோய்களைக் குறைப்பதற்கான சிறந்த வழியாக ஒழுங்கான மேலாண்மை மற்றும் சுகாதாரத்தை அவர் வலியுறுத்தினார். அதற்குமுன் நாங்கள் யாரும் காளான்களை வளர்த்திருந்ததில்லை. எனவே, விரிவுரையின் முடிவில் பெரிதாக கேள்விகளோ சந்தேகங்களோ எழுப்பப்படவில்லை.

அடுத்ததாக ஒரு பெண்மணியின் உரை இருந்தது, காளான்களின் ஊட்டச்சத்து மதிப்பைப்பற்றி அவர் எங்களுக்கு விளக்கினார். அரைமணி நேரமாக அவர் காளான்களின் குறைந்த கொழுப்பு மற்றும் சர்க்கரை

அளவைப்பற்றியும், எப்படி காளான்கள் எலும்பு மூட்டுகளின் வலி, பற்சிதைவு, மற்றும் ஈறுகளின் இரத்தக்கசிவைத் தடுக்கின்றன என்பதைப் பற்றியும் பேசினார். காளான்களை என்னுடைய பிரதான உணவாகக் கொள்ளவேண்டும் என நானே யோசிக்க ஆரம்பித்துவிட்டேன்.

அன்றைய நாளின் நிகழ்ச்சி மாலை 6 மணிக்கு நிறைவுற்றது. அப்போதுதான்,எல்லோரும் வீட்டிற்குப் போகிறார்கள், நான் மட்டும்தான் அங்கே தங்கும் ஒரே பங்கேற்பாளன் என்பது தெரிந்து நான் அதிர்ச்சியடைந்தேன். இருந்தாலும், யார் தங்க விரும்பினாலும் அதற்குத் தேவையான ஏற்பாடுகள் செய்யப்பட்டிருக்கின்றன என ஒருங்கிணைப் பாளர்கள் என்னிடம் கூறியதால் நான் இரவில் அங்கே தங்குவதென முடிவெடுத்தேன்.

அன்று மாலையையும் அடுத்த நாள் அதிகாலை வேளையையும் வளாகத்தைச் சுற்றிப்பார்ப்பதில் கழித்தேன். ICAR-ல் ஒரு சிறிய நாற்றுப்பண்ணை, ஒரு பூந்தோட்டம், ஒரு சிறிய மீன்குட்டை, முயல்கள் மற்றும் கோழிக்குஞ்சுகள் போன்ற சிறிய விலங்குகளுக்கான குடில்கள், கால்நடை கொட்டகைகள் மற்றும் பரந்த வயல்வெளிகள் இருந்ததை நான் கவனித்தேன். மா, சப்போட்டா மற்றும் தென்னை போன்ற பல வகைப் பழமரங்களைக் கொண்ட ஒரு பழத்தோட்டமும் அங்கே இருந்தது.

இத்தனை பசுமைக்கிடையில், தங்குவதற்கான கட்டிடங்களும் அவற்றிற்கிடையே ஓர் உணவகமும் இருந்தன. அந்த நான்குமாடிக் கட்டிடத்தின் முதல் தளத்தில் ஓர் அறையை நான் எடுத்துக் கொண்டேன். இரண்டு கட்டில்கள், சில பாதுகாப்புப் பெட்டகங்கள் (லாக்கர்), ஒரு மேசை மற்றும் ஒரு கண்ணாடியைக் கொண்ட சிறிய அறை அது. அன்று இரவு அங்கு வேறுயாரும் தங்காததால், என்னுடன் துணையாகத்

தங்குமாறு அங்கிருந்த காவலாளியிடம் (வாட்ச்மேனிடம்) கூறியிருந்தனர். உணவகத்தில் மலிவான நல்ல உணவு வழங்கினர். நான் ஏற்கெனவே மற்றவர்களுடன் மதியம் அங்கு சாப்பிட்டிருந்தேன். இரவு உணவுக்காக அந்தக் காவலாளி எனக்காகக் கொஞ்சம் மீன் குழம்புச் சாப்பாடு தயாரித்தார். அடுத்த நாள் காலை வெறும் மூன்று ரூபாய்க்கு நான் ரொட்டி (பிரெட்) மற்றும் காய்கறிகளைக் காலை உணவாகச் சாப்பிட்டேன். அன்று இரவு, செய்வதற்கு ஏதுமில்லாததால், வளாகத்தின் பின்புறம் இருந்த ஒரு குன்றில் ஏறுவதென முடிவுசெய்தோம், அதன் உச்சியில் ஒரு கோவில் இருந்தது.

இரண்டாம் நாளின் பெரும்பகுதி திரு. ஆஸ்கர் அவர்களால் வழி நடத்தப்பட்டது. திரு. ஆஸ்கரின் பேச்சு பெரும்பாலும் ஒரு செயல் முறைப் பயிற்சியாக இருந்தது. காளான்களை எப்படி வளர்க்க வேண்டும் என்பது குறித்து மிகவும் நடைமுறைப்படுத்தத்தக்க தகவல்களை அவர் கூறினார். ஸ்லைடுகளையும், நேரடி செயல்விளக்கங்களையும் இடையிடையே காட்டினார். நோய்த்தடுப்பு மற்றும் திசு வளர்க்கும் அறை (டிஸ்ஸூ கல்ச்சர்) ஆகியவற்றையும், காளான் தாய்வித்து உருவாக்கப்படும் புற ஊதாக் குழாயையும் அவர் எங்களுக்குக் காட்டினார். விரிவுரை அரங்கு மற்றும் ஆய்வகத்தில் அங்குமிங்குமாக விரைந்து, எப்படி வைக்கோல் கொதிக்க வைக்கப்படுகிறது, எப்படிக் காளான் பைகள் நிரப்பப்படு கின்றன மற்றும் பல விஷயங்களை எங்களுக்குக் காட்டினார். நாங்களும் ஈடுபடும் விதமாக, பைகளை நாங்களே நிரப்ப அனுமதித்தார். அனைத்து பங்கேற்பாளர்களுக்கும் திரு.ஆஸ்கரின் அமர்வு பிடித்திருந்தது, அது இன்னும் கொஞ்ச நேரம்கூட இருந்திருக்கலாம் என்று நினைத்தனர்.

பங்கேற்பாளர்களில் யாருக்கும் வியாபார நோக்கத்திற்காக காளான்களை வளர்ப்பதில் எந்த அனுபவமும் இல்லை. எனவே, உள்ளூர் சந்தைக்காகவும் ஏற்றுமதிக்காகவும் காளான்களை வளர்த்திருந்த இரண்டு நபர்களை

எங்களுடன் பேசுவதற்கு அழைத்திருந்தார் திரு. ஆஸ்கர். கடந்த ஒரு வருடமாக அவர்கள் காளான்களை வளர்த்துக்கொண்டிருந்தார்கள். தேவைக்கேற்ப அவற்றைப் பச்சையாகவோ அல்லது உலரவைத்தோ விற்றுக்கொண்டிருந்தனர். அவர்கள் தங்கள் சொந்த அனுபவத்தின் அடிப்படையில் எங்களுக்கு நடைமுறைத் தகவல்களைத் தந்தனர். ஒவ்வொரு நாளும் அவர்கள் இருநூறு வைக்கோல் பைகளை நிரப்பியதாகக் கூறினர். பூச்சிகள் (முக்கியமாக எலிகள்) மற்றும் நோய்களால் தாங்கள் எதிர்கொண்ட பிரச்சினைகளைப் பற்றியும், காளான்களை விற்கும்போது தொடக்கக் காலத்தில் அவர்கள் சந்தித்த கஷ்டங்களைப் பற்றியும் எங்களிடம் சொன்னார்கள். பயிற்சி முகாம் இறுதியாக விவசாயிகள் பயிற்சிமைய இயக்குனரின் உரையுடன் முடிவடைந்தது. FTC மற்றும் ICAR-8ன் பொதுவான செயல்பாடுகள் குறித்து அவர் எங்களிடம் கூறினார்.

மாணவர்களில் சிலர் தாய்வித்து நிரப்பப்பட்ட பாட்டில்களை வீட்டிற்கு எடுத்துச்சென்றனர். அடுத்த சில மாதங்களுக்கு கோவாவைவிட்டு வெளியே செல்லும் என் பயணத்திட்டங்கள் ஏற்கெனவே துவங்கி விட்டதால், உடனடியாக இந்தச் செயலில் இறங்கும் சூழ்நிலையில் நான் இருக்கமாட்டேன் என்பது எனக்குத் தெரிந்திருந்தது. எனவே, தாய் வித்துகளை நான் எடுக்கவில்லை.

நான் காளான் வளர்க்கும் செயலில் இறங்கவில்லை என்றாலும் நிறைய கற்றுக்கொண்டதோடு, நிறைய நண்பர்களையும் அங்கு பெற்றேன்.

களப்பணிக் குறிப்புகள்:
காளான்களை வளர்ப்பது எப்படி?

பலவகையான சாப்பிடத் தகுந்த காளான்கள் உள்ளன. அவற்றில், சிப்பி

(ஆய்ஸ்டர்) மற்றும் பட்டன் காளான்கள்தான் காளான் பயிரிடுபவர்கள் மற்றும் பொதுமக்களிடையே மிகப் பிரபலமானவை.

குழந்தைகள் உட்பட யார் வேண்டுமானாலும் காளான்களைச் சாப்பிடலாம். ஏனென்றால், அவை எளிதில் ஜீரணமாகும், மற்றும் இரண்டிலிருந்து மூன்றுமணி நேரத்திற்குள் உடலால் இரத்த ஓட்டத்திற்குள் உறிஞ்சப்படும். அவற்றில் இரும்புச்சத்து, வைட்டமின்கள், கால்சியம் மற்றும் புரதச் சத்துகள் உள்ளன. காளான் குறிப்பாக கர்ப்பிணிப் பெண்கள், நீரிழிவு மற்றும் இரத்த அழுத்த நோயாளிகளுக்கு மிகவும் நல்லது. காளான்கள் மருத்துவக்குணங்கள் உடையவை, கொழுப்பு மற்றும் வயிற்றுப் புற்றுநோய் உள்ளிட்ட இதயம், ஈரல் மற்றும் இரத்தம் சம்பந்தப்பட்ட நோய்களைக் குறைப்பவை.

குறைந்த முதலீட்டில் இலாபகரமாக காளான்களை வளர்க்க முடியும். இருந்தாலும், ஒருவர் அதற்கான நுட்பங்களில் தேர்ச்சியடைய வேண்டும், தேவையான எல்லா முறைகளையும் மிகக் கவனமாக பின்பற்ற வேண்டும். காளான் பயிரிடுபவராவதற்கு ஒருவருக்கு நிலம் தேவையில்லை, தனது சொந்த வீட்டில்கூட காளான்களை வளர்க்க முடியும்.

காலநிலை

காளான்களுக்கு 20-32 டிகிரி செல்சியஸ் வெப்பநிலை மற்றும் சுமாராக 35-90% ஈரப்பதம் தேவைப்படும். மேலும், அவற்றிற்குப் போதுமான காற்றோட்டமும், மிதமான வெளிச்சமும், பாதி இருட்டும் தேவைப்படும். அதிக வெளிச்சம் காளான்களை அடர்ந்த நிறமாக்கி விடும்.

அறை வெப்பநிலை 32 டிகிரி செல்சியஸைத் தாண்டினால், அந்த இடத்தைச் சுற்றிலும் ஈரச்சாக்குகளைத் தொங்கவிட்டு அதைக் குறைக்க வேண்டும். ஆனால், பூஞ்சைகள் மற்றும் பாக்டீரியாக்கள் அறையில்

வருவதைத் தவிர்க்க, அந்தச் சாக்குகள் முதலில் சாவ்லான், பார்மலின் அல்லது டெட்டால் உபயோகித்து கிருமிநீக்கம் செய்யப்பட வேண்டும். வெப்பநிலை 20 டிகிரிக்குக் கீழே குறைந்தால், வெப்பமூட்டுவதற்காக ஒரு 200 W பல்பை (ஒரு சிறிய அறைக்கு) ஒளிரவிட வேண்டும்.

தாய்வித்து

காளான்கள் தாய்வித்துகளில் இருந்து வளர்க்கப்படுகின்றன. நல்ல தாய்வித்தின் நிறம் பால் வெள்ளையாக, ஒரு இனிய மணத்தோடு அல்லது மணமற்று இருக்கும். தாய்வித்து கச்சிதமாக, எல்லா பக்கங்களிலும் வெள்ளையாக, பஞ்சுபோல் இருக்க வேண்டும். அது மஞ்சளாக இருந்தால், தாய்வித்து பழையது என்று அர்த்தம். தாய்வித்தில் காணப்படும் வேறெந்த நிறத்திட்டுகளும் தாய்வித்தில் தொற்றுத் தன்மையுள்ள பூஞ்சைகள் இருப்பதைக் குறிக்கும். தாய்வித்துகள் அதிகபட்சம் 18 முதல் 20 நாட்களானவையாக இருக்க வேண்டும்.

தாய்வித்து தயாரிக்க ஒருவருக்கு நல்ல தரமான சோளம், கோதுமை அல்லது பருப்பு தேவை. விதைகள் ஒரே அளவாக, நல்ல தரத்துடன், நோய்கள் மற்றும் பூச்சிகளற்று, உலர்ந்து இருக்க வேண்டும். தானியம் நன்றாக கழுவப்பட வேண்டும், தரமற்ற பழுதான தானியங்கள் நீக்கப்பட வேண்டும், மிச்சமிருப்பவற்றை அரைவேக்காடாவதற்கு ஒருமணி நேரம் கொதிக்க வைக்க வேண்டும். கொதிக்கும்போது கிருமிநீக்கம் செய்ய சாவ்லான் அல்லது பார்மலின் சேர்க்கப்பட வேண்டும். பின்பு கிருமி நீக்கப்பட்ட ஒரு மெல்லிய மஸ்லின் துணியில் தானியம் பரப்பப்பட்டு, அதன்பின் கால்சியம் கார்பனேட்டுடன் கலக்கப்படுகிறது. அது பிறகு பாட்டில்களில் நிரப்பப்பட்டு, உறிஞ்சும் தன்மையற்ற தக்கையினால் இறுக்கமாக மூடிவைக்கப்படுகிறது. பின்பு பாட்டில்கள் ஒரு பிரஷர்

குக்கரில் வைக்கப்படுகின்றன.

நோய்த்தடுப்பு மற்றும் திசு வளர்க்கும் அறை (டிஸ்ஸூ கல்ச்சர்) ஆகியவையும் எங்களுக்குக் காட்டப்பட்டன. இந்த அறை 2.25 மீ உயரமாகவும் 1.25 மீ நீளமாகவும் இருக்க வேண்டும். இரண்டு குழல் விளக்குகள், அதாவது ஒரு புற ஊதாக் குழல்விளக்கும் ஒரு சாதாரணக் குழல்விளக்கும் உபயோகிக்கப்படுகின்றன. ஒரு ஆவி விளக்கும் உபயோகிக்கப்படுகிறது. டிஸ்ஸூ கல்ச்சர் உதவியுடன் ஒருவர் ஒரு பாட்டில் தாய்வித்துகளில் இருந்து ஆறு தலைமுறைகள் வரை உருவாக்க முடியும். ஆறு தலைமுறைகளுக்குப் பிறகு, தாய்வித்துகளின் வீரியம் குறைகிறது, காளான்களின் விளைச்சலும் குறைவாக இருக்கும்.

அடித்தளம்

நெல் வைக்கோல் காளான்கள் வளர்ப்பதற்கான பிரதான அடித்தளமாக உபயோகிக்கப்படுகிறது, அதில் காளான்களின் வளர்ச்சிக்குத் தேவையான செல்லுலோஸ் மற்றும் லிக்னின் ஆகியவை இருக்கின்றன. இருந்தாலும், மேலும் பலவகை அடித்தளங்களும் உபயோகிக்கப்படுகின்றன. உதாரணமாக மரத்தூள், சாக்குகள், வாழை இலைகள், காய்ந்த மாவிலைகள், தென்னை ஓலைகள், கரும்புச்சக்கை, காட்டுப்புல், மற்றும் அரிசி உமி போன்றவை.

அந்த வைக்கோல் கவனமாகத் தேர்ந்தெடுக்கப்பட வேண்டும். அது உடையக்கூடியதாக, மஞ்சள் அல்லது தங்கப்பழுப்பு நிறத்தில்,6 மாதங்களுக்கு மேல் ஆகாததாக இருக்க வேண்டும். அந்த வைக்கோல் பல நாட்களுக்கு வெயிலில் காயவைக்கப்பட வேண்டும், தேவைப்பட்டால் காற்றுப்புகா கொள்கலனில் பாதுகாக்கப்பட்டு, இரண்டு மாதங்களுக்குள் பயன்படுத்தப்பட வேண்டும். வைக்கோல் மற்றும் தாய்வித்தின்

விகிதமானது, ஒரு கிலோ தயார் செய்யப்பட்ட வைக்கோலுக்கு 4 % தாய்வித்து என்கிற அளவில் இருக்க வேண்டும்.

செய்முறை

முதலில் வைக்கோல் துண்டுகள் தயாரிக்கப்பட வேண்டும். வைக்கோல் 3-5 செ.மீ துண்டுகளாக வெட்டப்பட வேண்டும். பின், அது துணிப் பைகளில் நிரப்பப்பட்டு 10 மணி நேரத்திற்குத் தண்ணீரில் ஊற வைக்கப்படவேண்டும் (1 கிலோ வைக்கோலுக்கு 10 லிட்டர் தண்ணீர்). வைக்கோலின் எந்தப் பகுதியும் நீர் மட்டத்திற்கு வெளியே இருக்காதவாறு அது தண்ணீரினுள் மூழ்க வைக்கப்பட வேண்டும்.

அடுத்த நிலை பாஸ்டுரைசேசன். தண்ணீர் 80 முதல் 85 டிகிரி வெப்பநிலைக்கு கொதிக்க வைக்கப்பட வேண்டும். குமிழிகள் தோன்றும் போது துணிப்பைகளால் சூழப்பட்ட ஊறிய வைக்கோல் நீருக்குள் முழுவதுமாக மூழ்க வைக்கப்பட வேண்டும். வைக்கோல் மூழ்கியிருக்கும் போது குமிழிகள் மறைந்து பின் மீண்டும் தோன்றும். குமிழிகள் மீண்டும் தோன்றி முப்பது நிமிடங்களுக்குப் பிறகு வைக்கோல் அகற்றப்பட வேண்டும். அதிலிருந்து தண்ணீரை வடியச்செய்து, அறை வெப்பநிலையில் குளிரவைக்க வேண்டும், பின் ஒரு சுத்தமான தளத்தில் பரப்பி இரண்டு மணி நேரம் உலரவைக்க வேண்டும்.

வைக்கோலின் ஈரப்பதம் 60% க்கு மேல் இருக்கக்கூடாது. ஈரப்பதத்தைக் கணிக்க, நாம் கொஞ்சம் வைக்கோலை நமது விரல்களுக்கிடையில் பிடித்து இறுக்கமாகப் பிழிய வேண்டும். ஒரே ஒரு துளி தண்ணீர் மட்டும் வெளிவந்தால், ஈரப்பதம் சரியாக இருக்கிறதுஎன்று அர்த்தம்.

இப்போது வைக்கோலை நிரப்ப பாலித்தீன் அல்லது பாலிப்ரொப்பிலீன் பைகள் இருக்கவேண்டும். பைகள் 35 X 50 செ.மீ இருக்க வேண்டும், மற்றும்

ஒவ்வொன்றும் 150 கிராம் எடை இருக்கவேண்டும். உபயோகப்படுத்து முன், அவை சாவ்லான், டெட்டால் அல்லது பார்மலின் கொண்டு கழுவப்பட வேண்டும். நான்கு கயிறுகளைச் சேர்த்து ஒரு முனையில் கட்டி அவற்றைப் பையின் அடியில் வைக்கவேண்டும். இப்போது பைகளை நிரப்பலாம். முதலில் 5 செ.மீ அளவிற்கு ஒரு அடுக்காக வைக்கோலை நிரப்பி, அடிப்பகுதியோடு சேர்த்து அதை லேசாக அழுத்த வேண்டும். பின், காளான் தாய்வித்துகள் அதன் மேல் பரப்பப்பட வேண்டும். பின் மற்றொரு 10 செ.மீ வைக்கோல் அடுக்கை உருவாக்கி, அதன் மீது தாய்வித்துகள் பரப்பப்பட வேண்டும், பையின் மேல்பகுதி வரை இப்படித் தொடர்ந்து செய்யவேண்டும். இறுதியாக, அது ஒரு 5 செ.மீ அளவிலான கடைசி வைக்கோல் அடுக்கால் மூடப்பட வேண்டும். பின், நான்கு துண்டு கயிறுகளும், பையும் சேர்த்துக் கட்டப்பட வேண்டும். பைகள் தரையில் வைக்கப்படலாம் அல்லது அறையில் தொங்கவிடப் படலாம். தொங்கவிடுவதால் நாம் பையின் கீழேயிருந்து காளான்களை எடுக்க எளிதாக இருக்கும்.

அடுத்தநாள், ஒரு கிருமி நீக்கப்பட்ட ஊசியைக் கொண்டு ஒவ்வொரு பையிலும் 30லிருந்து 35 துளைகள் போடப்பட வேண்டும். பைகள் இருட்டில், மிகக்குறைந்த காற்றோட்டத்துடன் 15 நாட்கள் வைக்கப்பட வேண்டும். பின்பு பைகள் மற்றொரு அறைக்கு மாற்றப்பட வேண்டும். இங்கே அவற்றிற்கு நான்கு மணி நேரம் மிதமான வெளிச்சமும் குறுக்குக் காற்றோட்டமும் கிடைக்க வேண்டும். ஒன்றரை நாட்களுக்குப் பிறகு, இதன்மீது ஒரு நாளைக்கு மூன்றுமுறை தண்ணீர் தெளிக்கப்பட வேண்டும். மேல்நோக்கிய தூவாலைக் குழாயைக்கொண்டு, தண்ணீர் பைகளின் மீது மழைபோல விழுமாறு செய்யவேண்டும். அதற்கடுத்த நாள், பொட்டுப்போன்ற அளவில் காளான்கள் தோன்றும். இரண்டு

நாட்களுக்குப் பிறகு,முழுதாக வளர்ந்த காளான்கள் தோன்றும். அந்தக் காளான்களை வெளியே பிடுங்கி இழுக்கக்கூடாது. ஏனென்றால், பையின் உட்தளமும் அவற்றோடு பிடுங்கப்பட்டுவிடும். அதற்குப் பதிலாக, அவற்றை அடிப்பகுதியிலிருந்து வெட்டியோ வளைத்து உடைத்தோ எடுக்கவேண்டும். உட்தளம் காய்ந்துபோனால், பையை நீரில் சற்று முக்க வேண்டும், அல்லது நீர் தெளிப்பதைத் தொடரலாம். ஒருவாரம் கழிந்து காளான்களின் இரண்டாம் விளைச்சல் தோன்றும். இந்த செய்முறை தொடர்ந்து நான்குமுறை செய்யப்படலாம். பின், நாம் மறுபடி முதலிலிருந்து தொடங்க வேண்டும். ஏனென்றால், 4 விளைச்சல்களுக்குப் பிறகு, உட்தளம் தொற்றுக்கிருமிகளால் பாதிக்கப்பட்டு நோய்வாய்ப்படத் துவங்கும்.


பூச்சிகளும் நோய்களும்

காளான்கள் பூச்சிகளாலும் நோய்களாலும் எளிதில் தாக்கப்படும், அதனால் உச்சபட்ச கவனிப்பும் நல்ல மேலாண்மையும் அவசியமாகிறது. இரண்டு நன்கறியப்பட்ட காளான் வகைகளில் பட்டன் காளான்கள் எளிதில் நோய் பாதிப்புக்குள்ளாகும், ஆனால் சிப்பிக் காளான்கள் (ஆய்ஸ்டர்) வலிமையானவை.

காளான்களைத் தாக்கும் பூச்சிகள் ஸ்கியாரிட் ஈக்கள், போசிட் ஈக்கள், ஸ்பிரிங் டெய்ல்ஸ் (வெட்டுக்கிளிகளைப் போன்ற சிறிய பூச்சிகள்), சிலந்திகள் ஆகியவை ஆகும். பூச்சிகள் காளான்களைத் தாக்குவதைத் தடுக்க, காளான் பைகளைத் தரையிலிருந்து குறைந்தபட்சம் ஒரு அடி மேலே வைப்பதே சிறந்தவழி. காளான்களை விதைப்பதற்கு முன் அந்த அறையில் கந்தகத்தை எரிக்கலாம். சிட்ரோனெல்லா எண்ணெயைத் தண்ணீருடன் கலந்து பைகளின் மீது தெளிக்கப் பயன்படுத்தலாம். பூச்சிகளின் தாக்குதலைத் தடுக்க, உயர்தர சுகாதாரத்தைத் தொடர்தல்

முற்றிலும் அவசியம்.

பாக்டீரியாக்கள் மற்றும் நூற்புழுக்கள்தான் கவலைப்பட வேண்டிய அடுத்த விசயங்கள். அளவுக்கு அதிகமான ஈரப்பதம் இருந்தால் பாக்டீரியாக்கள் தோன்றும், அவை அழுகிய ஈரப்பகுதிகளாகவும் பழுப்புநிறத் திட்டுகளாகவும் வெளிப்படும். இந்தப் பிரச்சினையைத் தவிர்க்க, ஈரப்பதத்தின் அளவைத் தொடர்ந்து கண்காணித்தலும், தேவையான அளவில் அதைத் தக்கவைத்தலும் மிக முக்கியம். நூற்புழுக்கள் வருவதைத் தவிர்க்க, உட்தளம் அடிக்கடி மாற்றப்பட வேண்டும், அது ஒருபோதும் ஆறு மாதங்களுக்கு மேல் ஆனதாக இருக்கக்கூடாது. வைக்கோல் கவனமாகத் தேர்ந்தெடுக்கப்பட வேண்டும், பயன்படுத்துவதற்கு முன் நன்றாக கிருமிநீக்கம் செய்யப்பட வேண்டும். நோய் தோன்றினால் 100 கிராம் பொட்டாசியம் பெர்மாங்கனேட் அல்லது 20 மி.லி. பார்மலின் பைகளின்மீது தெளிக்கப்பட வேண்டும்.



ஒரு கேரளப் பயணம்

ஆகஸ்டு மாதம் முடிவுக்கு வந்துவிட்டது, கனமழையும் முடிந்து விட்டது. கோவாவைவிட்டு வெளியே பயணத்தைத் துவக்கி, என்னுடைய திட்டத்தில் இருந்த பல இடங்களுக்கும் செல்ல நான் ஆவலாக இருந்தேன். கோவாவிற்கு உள்ளே தனியாக இருக்க நான் மிகவும் பழக்கப்பட்டு விட்டேன் (நான் சந்திக்கும் எவருடனும் குறைந்தபட்சம் அவர்களின் மொழியில் தொடர்புகொள்ள முடியும்). வழி கேட்கவும், எனக்குத் தேவையான உணவை வாங்கவும், சிறிய அளவு பணத்தைக்

கையாளக் கற்றுக்கொள்ளவும் பழகிவிட்டேன். அதனால், கோவாவை விட்டு வெளியேயான பயணத்திற்கு நான் பொறுமையின்றிக் காத்திருந்தேன்.

நான் பயணம் செய்ய நினைத்ததற்கு இன்னொரு காரணம், என் பக்கத்து வீட்டாரும் நண்பர்களும் என்னுடைய பள்ளிப்படிப்பிற்குப் பிறகு நான் என்ன செய்யப் போகிறேன் எனவும், ஏன் கல்லூரியில் சேரவில்லை எனவும் தொடர்ந்து கேட்டுக்கொண்டிருந்ததால் நான் தளர்வடைந்தேன். நான் விரும்பிய விசயங்களை நானாகவே கற்றுக்கொண்டு மகிழ்ச்சியாக இருந்தேன் என்னும் விசயம் எப்படியும் அவர்களுக்குப் புரியவில்லை. எனவே, நான் கேள்விகளால் தொடர்ந்து தொந்தரவு செய்யப்படுவேன். நான் வெளியே சென்றுவிட்டால் நிச்சயமாக இந்த எல்லா கேள்விகளிலிருந்தும் தப்பித்துவிடுவேன் என்று நினைத்தேன்.

தற்செயலாக என் தந்தை கோட்டயத்தில் இயற்கை விவசாயம் பற்றிய ஒரு கருத்தரங்கில் கலந்துகொள்ளவிருந்தார். மேலும், அவர் சில இயற்கை விவசாயப் பண்ணைகளுக்கும் செல்லவிருந்ததால், நானும் கூட செல்வது நல்ல யோசனை என அவர் நினைத்தார். எனவே, நாங்கள் கேரளாவிற்குச் செல்லத் தயாரானோம்.

1995, ஆகஸ்டு 30ம் தேதி அப்பாவும் நானும் கோவாவைவிட்டுக் கிளம்பினோம். பானாஜி பேருந்து நிலையத்திலிருந்து காலை 6 மணிக்கு பேருந்து கிளம்பியது. அதேநாள் மாலை 4 மணிக்கு மங்களூர் சென்று சேர்ந்தது. வழியில் நாங்கள் கார்வார், அங்கோலா, குமட்டா, ஹோனாவர், குண்டாபூர், மற்றும் உடுப்பி ஆகிய இடங்களைக் கடந்து சென்றோம். மங்களூர் எங்கள் மூதாதையரின் பூர்வீக இடம் (மும்பையில் பிறந்து வளர்ந்து திருமணத்திற்குப் பிறகு கோவாவில் வாழ்ந்து வந்தாலும், என்

தந்தை மங்களூரைப் பூர்வீகமாகக் கொண்டவர்). இப்போது, எங்கள் மூதாதையரின் வீடேதும் இல்லாவிட்டாலும், மங்களூர் நகரத்தில் எங்களுக்கு நிறைய சொந்தக்காரர்கள் இருக்கிறார்கள்.

பேருந்து நிலையத்திற்கு அருகிலிருந்த என் பெரிய தாத்தாவின் வீட்டில் நாங்கள் தங்கினோம். மங்களூரின் மையப்பகுதியில் இருந்த ஒரு இரண்டு மாடிக் கட்டிடம் அது. என்னுடைய பெரிய பாட்டி மோனிகா மாக்சி அங்கே ரெக்கி, பேட்ரிக், மற்றும் லேம்பர்ட் என்கிற தனது மூன்று பையன்கள் மற்றும் அவர்களது குடும்பங்களுடன் ஒரு கூட்டுக்குடும்ப அமைப்பில் வாழ்கிறார். ஒரு மிகப் பிரபலமான கொங்கனி எழுத்தாளரான எனது பெரியதாத்தா, திரு.ஜே.எஸ். ஆல்வரிஸ் சில வருடங்களுக்கு முன் இறந்துவிட்டார். நான் என்னுடைய பெரிய பாட்டியையும் அவரது மகன்களையும் அநேகமாக அன்றுதான் முதல்முறை பார்த்தேன்.

அறிமுகங்கள் முடிந்து, நாங்கள் தேநீர் மற்றும் தின்பண்டங்கள் சாப்பிட்ட பின், என் அப்பா அந்த நகரத்தைச் சுற்றிக்காட்டினார். கோட்டயத்தின் கருத்தரங்கு முடிந்ததும் நான் கோவாவிற்குத் தனியே திரும்பி வருவேன் என்பது எனக்குத் தெரிந்திருந்ததால் முக்கியமான இடங்களையும் மற்ற விவரங்களையும் விழிப்போடு கவனித்துக்கொண்டேன், திரும்பிவரும் பயணத்தின்போது நான் தொலைந்துவிடாமல் இருக்க உதவும் அல்லவா! இரயில் நிலையம், மங்களூரின் மையப்பகுதியும் பழைய பேருந்து நிலையம் இருக்கும் இடமுமான ஹம்பன்கட்டா, மற்றும் மோனிகா பாட்டியின் வீட்டிற்குச் செல்லும் வழி ஆகியவற்றைக் கவனமாகக் குறித்துக்கொண்டேன். நாங்கள் திரும்பி வந்தபோது ஒரு அற்புதமான உணவு காத்திருந்தது. எங்கள் பயணத்திற்காக நாங்கள் அதிகாலை 3 மணிக்கு எழுந்திருக்க வேண்டியிருந்ததால், சீக்கிரமாக உறங்கச் சென்றோம்.

எங்கள் இரயில் காலை சரியாக 4.15 மணிக்கு மங்களூரிலிருந்து கிளம்பியது. நாள் முழுதும் பசுமையான கிராமப்புறங்களின் வழியாக நாங்கள் பயணித்தோம். கண்ணூர், கோழிக்கோடு, திரிச்சூர், மற்றும் எர்ணாகுளம் வழியாக எங்கள் இலக்கான கோட்டயத்தை மதியம் 3.45 மணிக்கு அடைந்தோம். எங்களுக்காக ஹோட்டல் ஐஸ்வர்யாவில் அறை ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. நான் புத்துணர்ச்சியூட்டும் ஒரு குளியலை முடித்தேன். பின் வழக்கம்போல நாங்கள் அந்த ஊரைப்பற்றித் தெரிந்து கொள்ள வெளியே கிளம்பினோம், ஆனால் சீக்கிரமாகத் திரும்பி வர நேர்ந்தது. ஏனென்றால் அங்கே மழைபெய்ய ஆரம்பித்துவிட்டது.

அந்தகு கருத்தரங்கு ஹோட்டல் 'க்ரீன் பார்க்'கில் நடந்தது. நாங்கள் காலையில் சீக்கிரமாகவே அந்த இடத்திற்குப் புறப்பட்டோம். நாங்கள் ஏற்கெனவே பங்கேற்பாளர்களாக பதிவு செய்யப்பட்டிருந்தோம், கருத்தரங்கில் உபயோகப்படுத்துவதற்காக எங்கள் ஒவ்வொருவருக்கும் ஒரு துணிப்பையும், ஒரு குறிப்பேடும், மற்றும் ஒரு பேனாவும் கொடுக்கப் பட்டன. அங்கே இயற்கைத் தேநீர் (ஆர்கானிக்), ஊறுகாய்கள் முதல், புத்தகங்கள்,செயல்முறைக் கையேடுகள் வரை பலவிதப் பொருட்களை விற்கும் பல கடைகள் இருந்தன.

கொஞ்ச நேரம்தான் நாங்கள் சுற்றிப்பார்த்தோம், ஏனென்றால் ஏற்கெனவே ஒருங்கிணைப்பாளர்கள் துவக்க நிகழ்ச்சிக்காக வந்து அமருமாறு எல்லோரையும் அழைத்துக்கொண்டிருந்தார்கள். நாள் முழுதும் அங்கே சொற்பொழிவுகள் இருந்தன, பெரும்பாலும் விஞ்ஞானி களின் சொற்பொழிவுகள். அமர்வுகள் மாலைவரை தொடர்ந்தன, இடையில் சைவ மதிய உணவுக்காக ஓர் இடைவேளை இருந்தது. எல்லா சொற்பொழிவுகளிலும் என்னுடைய கவனத்தைக் கவர்ந்த ஒன்று மண்புழுக்களைப் பற்றி டாக்டர். சுல்தான் இஸ்மாயில் அவர்களால்

நிகழ்த்தப்பட்ட சொற்பொழிவுதான். இங்கே டாக்டர். இஸ்மாயிலின் சொற்பொழிவைப்பற்றிய விவரங்களைத் தருவதை நான் தவிர்த்திருக் கிறேன், ஏனென்றால் அவருடன் இணைந்து வேலை செய்ததைப்பற்றி ஒரு முழு அத்தியாயத்தை இந்தப் புத்தகத்தின் பிற்பகுதியில் வைத்திருக் கிறேன்.

அடுத்தநாள் காலையிலும், அதே மாதிரியான நிகழ்ச்சிகள் தொடர்ந்தன. இருந்தாலும், என் தந்தையின் தலைமையில் ஒரு விவசாயியின் அமர்வு இருந்தது. நிறைய விவசாயிகள் இயற்கை விவசாயத்தில் தங்கள் அனுபவங்களைப்பற்றிப் பேசினார்கள். எனக்கு அது மிக சுவாரஸ்யமாக இருந்தது. மதிய உணவிற்குப் பின்பு சிறிது நேரத்தில் என் தந்தையும் நானும் குரு ரிஷி பிரபாகர் (சித்த சமாதி யோக அமைப்பின் நிறுவனர்) மற்றும் திரு.கார்த்திகேயனுடன் (இயற்கை விவசாயம் குறித்த ஒரு மூலப்புத்தகத்திற்காக சில விசயங்களை ஆராய்ச்சி செய்துகொண்டிருந்தவர்) திரு.கே.டி.தாமஸ் என்கிற இயற்கை விவசாயியின் பண்ணையைப் பார்க்கச் சென்றோம். அவர் அவரது இறால் பண்ணை, ரப்பர் தோட்டம், பசுக்கள், மீன்பிடிக் குளங்கள், ஆர்க்கிட்கள், பெரிய மூங்கில் வடிகட்டிக் குளங்கள் போன்ற பலவற்றைக் காட்டினார். அவருடைய பண்ணை மிகப்பெரியது, ஈரமாக இருண்டு இருக்கும் - இரவில் ஒரு காட்டைப் போல!

அடுத்தநாள் காலை நாங்கள் கோழிக்கோட்டிற்கு இரயில் பிடித்தோம். எர்ணாகுளம் மற்றும் திரிச்சூர் வழியாக நாங்கள் சென்றோம். இடையில் ஷோரனூரில் நாங்கள் இரயில் மாறினோம். கோழிக்கோடு இரயில் நிலையத்திலிருந்து நாங்கள் சுல்தான் பத்தேரிக்கு ஒரு பேருந்தில் சென்றோம், அங்கு 'தெ ரிசார்ட்' என்ற ஒரு ஹோட்டலில் அந்த இரவைக் கழித்தோம். வழக்கம்போலவே, நகரம் முழுதும் நடந்து பலமணி நேரங்கள் மகிழ்ச்சியாகக் கழித்தோம்.

அடுத்த நிகழ்ச்சி வயநாட்டில் இருந்தது. இங்கே, இயற்கை விவசாயத்தில் ஆர்வமுள்ள நபர்களின் மற்றொரு கூட்டம் நடைபெற்றது. வயநாடு வனவிலங்குக் காப்பகத்தின் விருந்தினர் இல்லத்தில் நாங்கள் தங்கினோம்.

இங்கே வந்த குழு அவ்வளவு பெரியதில்லை. பொதுவாக அவர்கள் சின்னச்சின்ன தீவிரமான விவாதங்கள் செய்தனர். எனக்கு அந்த அமர்வுகளில் ஆர்வமில்லை, அதனால் நினைத்தபடி சுற்றித்திரிந்தேன். ஆனால் அங்கிருந்த நபர்களுடன் இருந்தது எனக்கு மிகவும் பிடித்திருந்தது, ஏனென்றால் அவர்கள் அனைவரும் மிக அறிவார்ந்தவர்கள், மிகவும் சுறுசுறுப்பானவர்களும்கூட. அவர்களில் ஆரோவில்லின் பெர்னார்ட், கோரா மத்தேன், அஹமதாபாத்தில் இருந்த அவரது மகளான நிதி, மற்றும் ஓம்கார் போன்ற சிலரை நான் என்னுடைய ஓராண்டு இடைவெளித் திட்டத்தில் மீண்டும் சந்திப்பேன்.

காலையும் மாலையும் நாங்கள் அந்தக் காட்டில் நீண்ட நடைக்குச் செல்வோம். முதல் நாளிலேயே நாங்கள் நீலகிரி சிங்கவால் குரங்குகளையும், ஒருவகை சிறு பறவைகளையும், தவளைகளையும், மற்றும் மரங்களையும் பார்த்தோம்.

மாலையில், ஒருங்கிணைப்பாளர்கள் எங்களுக்கு பவானி ஆற்றின் மாசுபடுதலைக் குறித்த இரண்டு திரைப்படங்களைக் காட்டினார்கள். அதற்குப் பிறகு, மிகப் பிரபலமான, ஒரு நல்ல திரைப்படமான *'Animals are Beautiful People'* பார்த்தோம்.

அடுத்த நாள் எங்கள் அதிகாலை நடையின்போது (வயநாட்டில் இரண்டாம் நாள்) நாங்கள் ஒரு புள்ளிமான் கூட்டத்தையும், ஒரு குரைக்கும் மானையும் கண்டோம். நாங்கள் பல விலங்குகளின், குறிப்பாக மான்களுடைய காலடித்தடங்களையும், யானைகளின் காலடித்தடங்கள்

இருந்ததற்கான தடயங்களையும்கூட பார்த்தோம். அந்த அனுபவம் என்னை மிகவும் உற்சாகப்படுத்தியது. அதன் பிறகு யாரெல்லாம் நடப்பதற்கு ஆர்வமுடன் இருக்கிறார்களோ, அவர்களுடன் ஆவலுடன் கிளம்பிவிடுவேன். மூன்றாவது நாள், மேற்குத்தொடர்ச்சி மலைகளைப் பற்றி திரு. சிவானந்த் ஒரு மிக சுவாரஸ்யமான சொற்பொழிவை நிகழ்த்தினார். மேற்குத்தொடர்ச்சி மலைகளைப்பற்றி பல ஸ்லைடுகளை அவர் எங்களுக்குக் காட்டினார். உதாரணமாக, பூச்சியுண்ணும் தாவரங்கள், மலையாடுகள், நீராவி உறைவதால் உருவாகும் ஆறுகள், பத்து வருடங்களுக்கு ஒருமுறை பூக்கும் தாவரங்கள் மற்றும் பல. பள்ளியில் அறிவியலிலும் புவியியலிலும் நான் படித்திருந்த அனைத்தும் இப்போது என் கண்முன்னே எனக்காக உயிருடன் வந்தன.

அன்று மாலை நாங்கள் இரண்டு திரைப்படங்களைப் பார்த்தோம். ஒன்று *'The Whistling Hunters'* (காட்டு நாய்களைப் பற்றியது), மற்றொன்று *'The Lord of the Jungle'* (யானைகளைப் பற்றியது). இரண்டுமே மிக நன்றாக இருந்தன. அடுத்த நாள் காலை மறுபடியும் நாங்கள் ஒரு நடை சென்றோம், பறவைகளை மட்டுமே பார்த்தோம். அந்த நாள் நாங்கள் சுமார் 12 கி.மீ. நடந்தோம். அந்தக் காலைப் பொழுதிற்குப் பிறகு, நிகழ்ச்சியின் கடைசி அமர்வு நடைபெற்றது.

மாலையில், வனத்துறை எங்களுக்காக காட்டின் ஊடாகச் செல்லும் ஒரு சுற்றுலாவை ஏற்பாடு செய்தது. நாங்கள் நீண்டதூரம் நடந்தோம், காட்சிக் கோபுரத்தையும், பின்பு ஒரு மான் மற்றும் ஒரு காட்டுப்பன்றியையும் பார்த்தோம். ஆனால் நாங்கள் சீக்கிரமாகத் திரும்பவேண்டி வந்தது, ஏனென்றால், புலியின் கால்தடங்களை நாங்கள் பார்த்தோம். இரவில் நாங்கள் மேலும் இரண்டு திரைப்படங்களைப் பார்த்தோம், ஒன்று நர்மதா ஆற்றைப்பற்றிய *'A Valley Rises'*, இரண்டாவது *'The Silent Valley'*.

அந்த நிகழ்ச்சி முடிந்ததும் என் தந்தை கொஞ்சம் வேலையாகச் சென்னைக்குச் செல்வதாகத் திட்டமிருந்தது, நான் தனியாக கோவாவிற்குத் திரும்ப வேண்டும். என் தந்தை என்னுடன் பேருந்தில் கோழிக்கோடு வரை வந்தார். இரயில் நிலையத்தில், அவர் எனக்கு மங்களூருக்கு ஒரு சீட்டு வாங்கினார். 4 மணிக்கு வரவேண்டிய இரயிலுக்காகக் காத்திருக்க, 2 மணிவாக்கில் என்னை இரயில் நிலையத்தில் விட்டுச்சென்றார்.

நான் தனியாகப் பயணம் செய்வது அதுவே முதல்முறை, நான் மிகவும் பதற்றமாக இருந்தேன். இரயில் வருவதற்கு இன்னும் இரண்டு மணிநேரம் இருந்தாலும், நான் தூங்கிவிடத் துணியவில்லை. என்னிடம் ஒரு மின்கலத்தில் இயங்கும் வீடியோ கேம் இருந்தது, இரயில் வருவதற்காகக் காத்திருந்த நேரத்தில் அதைவைத்துச் சமாளித்தேன். இரயில் வந்தபோது, மக்கள் தங்கள் பெட்டிகளுக்கு விரைந்து சென்று கொண்டிருந்ததால், அங்கு வழக்கமான கூச்சல் குழப்பமாக இருந்தது. அங்கு ஏதேனும் சிறப்பு இருக்கைகள் இருக்குமா என்று நான் ஒன்றிரண்டு நபர்களிடம் விசாரித்தேன், யாரும் கவனிப்பதாக இல்லை. அதனால் நானே எனக்கொரு நல்ல இடமாகப் பார்த்து உட்கார்ந்துகொண்டேன். கொஞ்ச நேரத்தில் இரயில் புறப்பட்டது.

பயணம் முழுவதும் நான் முழு எச்சரிக்கையாக இருந்தேன். என் பொருட்களின் மீது ஒரு கண் வைத்திருந்தேன் [ஒரு ஹேவர்சேக் (பயணத்திற்கான பெரிய பை), மற்றும் ஒரு தூங்குவதற்கான பை வைத்திருந்தேன், இரண்டுமே புதியவை], பிக்பாக்கெட் மற்றும் திருடர்களைப்பற்றிக் கேள்விப்பட்டிருந்ததால், நான் இரு மடங்கு எச்சரிக்கையாக இருக்க நினைத்தேன். எந்த இரயில் நிலையத்திலும் இரயில் எவ்வளவு நேரம் நிற்கும் என்பது எனக்கு உறுதியாகத் தெரியாததால் நான் இறங்கவில்லை. அதனால், கோழிக்கோடு இரயில்


நிலையத்தில் என் தந்தை எனக்கு வாங்கித் தந்திருந்த பழத்தை உண்டு திருப்தி அடைந்தேன்.

இரயில் மங்களூருக்கு இரவு 9 மணிக்கு வந்துசேர்ந்தது. இரயில் நிலையத்திலிருந்து என் பெரிய பாட்டியின் வீட்டிற்கு நான் ஒரு ரிக்ஷா பிடித்தேன், அதற்கு முப்பது ரூபாய் கொடுத்தேன். அது மிக அதிகப் பணம்தான். ஆனால், இரவு நேரமாக இருந்ததாலும், போகவேண்டிய வழியைப்பற்றி எனக்கு முழுமையாக நம்பிக்கை இல்லாததாலும், ரிக்ஷாக்காரனிடம் நான் விவாதிக்க நினைக்கவில்லை.

என் பெரிய பாட்டியும் குடும்பத்தினரும் என்னைப் பார்த்ததில் மகிழ்ச்சியடைந்தனர், சில நாட்கள் அங்கு தங்குமாறு என்னை வலியுறுத்தினர். ஆனால், என் அம்மா என் வருகைக்காக ஆவலுடன் காத்திருப்பார் என்பதாலும், நான் பொறுப்பில்லாமல் இருக்க விரும்பாததாலும், திட்டமிட்டபடி அடுத்த நாளே கிளம்புவது என முடிவுசெய்தேன்.

காலையில் என் உறவினரான ரெக்கி அவரது ஸ்கூட்டரில் என்னைப் பேருந்து நிலையத்திற்கு அழைத்துச்சென்றார். ஒரு பேருந்து கோவாவிற்குப் புறப்படத் தயாராக இருந்ததைப் பார்த்தோம். நான் துள்ளி ஏறி, காலியாக இருந்த கடைசி இருக்கையை ஒருவழியாகப் பிடித்தேன். பேருந்து பானாஜிக்கு மாலை 5 மணிக்கு வந்தது. அங்கிருந்து, மபுசாவிற்கு நான் உள்ளூர் பேருந்தைப் பிடித்தேன். பேருந்து மபுசா பேருந்து நிலையத்திற்குள் வந்தபோதுதான், நான் எனக்குப் பரிட்சயமான பிரதேசத்தில் இருப்பதாக உணர்ந்தேன். நான் எனக்குப் பரிட்சயமான தெருநாய்களையும், தெருவோரக் கடைகளையும் சுற்றிப்பார்த்து, வெறும் 3 கி.மீ தூரத்தில் இருந்த என் வீட்டிற்குச் செல்ல ஒரு மோட்டார் சைக்கிள் டாக்சியை அழைத்தேன்.

வீட்டை அடைந்ததும், சிரிப்போடு என்னை வரவேற்ற என் அம்மாவை நோக்கி நான் பெருமையாக நடந்துசென்றேன். என் சகோதரர்கள் வந்து என்னைக் குத்தினார்கள், என் நாய் வந்து என்னை நக்கியது. இவை எல்லாமே யானைகள் மற்றும் புலிகளின் கால்தடங்களின் உலகத்தில் இருந்து வெகுதொலைவில் நடந்தன!



உயிருள்ள பாம்புகள்!

புனேவில் இருந்த பாம்புப் பூங்காவின் இயக்குனர், திரு. நீலிம் குமார் கைரேவுடன் தொடர்பு ஏற்படுத்திக் கொள்வதற்கு என் தந்தையின் பல கடிதங்களும், தொலைபேசி அழைப்புகளும் தேவைப்பட்டன. கடைசியில் எனக்கான பச்சைக்கொடி(க்ரீன் சிக்னல்) காட்டப்பட்டது. அந்த இடத்திற்குச் செல்ல நான் தயாரானேன். தேவையான ஏற்பாடுகள் முற்றிலும் சரியாக இல்லாததால், என் தந்தை என்னுடன் புனேவிற்கு வருவதென முடிவுசெய்தார். அக்டோபர் 3ம் தேதி அவர் சென்னையிலிருந்து திரும்பிவந்த உடனே நாங்கள் திட்டமிட்டபடியே புறப்பட்டோம்.

நாங்கள் கோவாவிலிருந்து பேருந்தில் கிளம்பி அடுத்த நாள் அதிகாலை புனே வந்தடைந்தோம். என் பெற்றோரின் மிக நல்ல நண்பர்களில் இருவரான சுஜித் மற்றும் வித்யா பட்வர்தன் புனேவில் வாழ்கிறார்கள். ஒரு வருடம் முன்னால் நான், அம்மா, அப்பா, என் இரண்டு சகோதரர்கள் என என் முழுக்குடும்பமும் அவர்களது இடத்தில் விடுமுறையைக் கழித்திருந்தோம். அப்போதுதான் நான் புனே பாம்புப் பூங்காவை முதன் முறை பார்த்தேன், என்னுடைய ஓராண்டு இடைவெளித்திட்டமும் வேர்விட்டது. (பின்னாளில், நான் நல்ல நட்புடன் இருந்த, அவர்களது மகளான பேனியிடமிருந்து, அவளுடைய அக்கா லாராவும் அவளது தோழியும் பல வருடங்களுக்கு முன்னால் பள்ளிப்படிப்பு முடிந்ததும் ஓர் இடைவெளி எடுத்ததையும், அவர்கள் கிராமப்புறங்களில் சுற்றித்திரிந்து மாற்றுக்கல்வி முறைகளை ஆராய்ந்ததையும் கேள்விப்பட்டு ஆச்சரியப் பட்டேன்.) எனவே, முதலில் நாங்கள் கணேஷ்கிந்த் சாலையில் இருந்த பட்வர்தன் இல்லத்திற்குச் சென்றோம். குளித்து முடித்து, சிறிது ஓய்விற்குப் பின் நாங்கள் பூங்காவிற்குப் புறப்பட்டோம்.

இயக்குனர் திரு. கைரே அங்கு இல்லை, ஆனால் உதவி இயக்குனர் திரு.ராஜன் ஷிர்கேவிற்கு எனது வருகையைப்பற்றித் தெரிந்திருந்தது. அவர் என் தந்தையிடம் திரு. கைரே வந்ததும் என்னுடைய உணவு மற்றும் தங்குமிட வசதிகளை அவர் செய்துகொடுப்பார் என உறுதியளித்தார். அதுவரை, நான் நாள்முழுதும் அந்தப் பூங்காவில் கழிக்கலாம். ஆனால், இரவு தங்குவதற்கு சுஜித்தின் வீட்டிற்குத் திரும்பிச்செல்ல வேண்டியிருக்கும். அதை அப்படியே விடுவதைத்தவிர என் தந்தைக்கு வேறுவழி இல்லை. ஏனென்றால், திரு. கைரே மூன்று நாட்களுக்குப் பிறகுதான் திரும்பி வருவதாக எதிர்பார்க்கப்பட்டார். பிறகு என் தந்தை என்னை அந்தப் பூங்காவில் விட்டுவிட்டு மும்பைக்குக் கிளம்பினார். முதல்சில நாட்களுக்கு நான் சுஜித்தின் வீட்டிலிருந்து சென்றுவந்து கொண்டிருந்தேன்.

சுஜித்தின் வீடு கணேஷ்கிந்தில் இருந்தது, பாம்புப் பூங்காவோ சுமார் 20 கி.மீ தூரத்தில் கட்ராஜில் இருந்தது. முதல்நாள் நான் எப்படித் தொலைந்து போனேன் என்பதை நினைத்துப் பார்க்கிறேன். என் தந்தை காலையில் பேருந்து நிலையத்தைக் காட்டி பேருந்து எண்ணையும் என்னிடம் கொடுத்திருந்தார். மாலையில், ஊழியர்களில் ஒருவர் என்னை பேருந்து நிலையத்தில் கொண்டுவந்து விட்டார். நான் பேருந்திற்காக காத்திருந்தேன், காத்திருந்தேன்... பேருந்து வரவேயில்லை. பக்கத்திலிருந்த மக்களிடம் நான் கேட்டுப்பார்த்தேன், அவர்களுடைய பதில் 'அது வரும்' என்றோ, அல்லது 'அந்தப் பேருந்து சேவையின் எண்ணிக்கை குறைவாக இருக்கலாம்' என்றோதான் இருந்தது.

சிறிது நேரத்தில் மழை பெய்ய ஆரம்பித்தது. அந்தப் பேருந்து நிலையத்தில் பார்வையில் படும்படி எந்த ஒதுங்குமிடமும் இல்லாததால் நான் மழையிலேயே நிற்கவும் நனையவும் வேண்டியிருந்தது. நான் வைத்திருந்த கையேட்டின் கீழே ஒதுங்கி நிற்க முடிந்த அளவு நான் முயற்சி செய்தபோது, மழையைக் கண்டுகொள்ளாத மாதிரி, மழையே இல்லாத மாதிரி என்னைக் கடந்துசென்ற பல குழந்தைகளைப் பார்த்து நான் வியந்தேன். மாலை ஏழுமணி ஆனபோது, நான் முழுதும் நனைந்து விட்டேன். என் பாதங்கள் மரத்துப்போயிருந்தன. நேரம் இருட்டிக் கொண்டும் இருந்தது. பாம்புப் பூங்காவில் என் முதல் நாளிலேயே என்ன ஒரு அனுபவம்!

இருந்தாலும், நான் சாலையைக் கடந்து ஒரு தொலைபேசிக் கடைக்குச் சென்றேன். நான் சுஜித்திற்கு அழைத்துக் கொண்டிருந்தபோது, மின்சாரம் போய்விட்டது. இன்னொரு வழியில் வீட்டிற்கு எப்படி வருவது என எனக்கு விளக்க சுஜித் முயற்சித்துக் கொண்டிருந்தார். நான் என்னுடைய பாதி நனைந்த கையேட்டை எடுத்து ''டெக்கான் ஜிம்கானா'' மற்றும் ''சிம்ப்ளா ஆபீஸ்'' என குறித்துக் கொண்டேன். ஒருவழியாக டெக்கான்

ஜிம்கானாவிற்கு நான் ஒரு பேருந்தைப் பிடித்தேன் (அங்கே செல்லும் பல பேருந்துகள் உள்ளன), சிம்ப்ளா ஆபீஸிலிருந்து நான் ஒரு ரிக்‌ஷா பிடித்து, கொஞ்ச நேரம் வந்த இடத்திற்கே சுற்றிச்சுற்றி வந்து, சுஜித்தின் வீட்டைக் கண்டுபிடித்துவிட்டேன். பேருந்துகளையும் ரிக்‌ஷாக்களையும் நம்பி இருப்பதைவிட என் நம்பகமான மிதிவண்டி என்னிடம் இருந்திருக்கலாம் என அப்பொழுது நான் நினைத்தேன்!

பூங்காவில் முதல் இரண்டு நாட்கள் நான் குறிப்புகள் எடுத்துக்கொண்டும் வேலையாட்களைப் பார்த்துக்கொண்டும் இருந்தேன். வேலையாட்களுடன் நட்பை ஏற்படுத்திக்கொள்ள முயன்றேன், அதன் விளைவாக ஒரு ட்ரிங்கெட் பாம்பைக் கையாள அனுமதிக்கப்பட்டேன். மூன்றாம் நாள் திரு. கைரே திரும்பிவந்தார். உடனடியாக, பூங்காவில் தங்குமிட வசதிகள் இல்லாதிருந்தபோதும், நான் அந்தப் பூங்காவில் தங்குவதற்கு ஏற்பாடு செய்தார். பல மாணவர்கள் அவ்வப்போது அங்கு கொஞ்ச காலத்திற்கு வேலைசெய்ய வருவார்கள். ஆனால், அவர்களது வீடுகள் எல்லாம் புனேவில் இருந்தன, அவர்கள் மாலையில் வீட்டிற்குச் சென்றனர்.

வேலையாட்கள் மத்தியில் திரு. கைரே மிகவும் பிரபலமானவர், எல்லோராலும் அவர் பாசமாக 'அண்ணா' (மராத்தியில் 'பெரிய சகோதரர்') என அழைக்கப்பட்டார். பல வருடங்களுக்கு முன்பு ஒரு 'ரஸ்ஸல்ஸ் வைப்பர்' பாம்பு கடித்ததால் அவர் தன் இடது கையை இழந்தார். எனவே, அவர் எப்போதும் ஒரு கையுறையும் முழுக்கை சட்டையும் அணிவார். இருந்தாலும், ஊர்வனவற்றின் உலகத்தின் மீதான அவரது காதலும், பாம்புகள் மீதான அவரது ஆர்வமும் துளியளவும் குறையவில்லை.

அந்தப் பாம்புப் பூங்கா மிகப்பெரியது, பலவித ஊர்வனவற்றைக் கொண்ட பல பாம்புப் புற்றுகளைக் கொண்டது. மத்தியில் இருப்பது நிர்வாகக்

கட்டிடம், அதுவொரு ஒரு மாடிக் கட்டிடம், தரைத்தளத்தில் ஒரு சிறிய அலுவலகம் உள்ளது, அது வரவேற்புப் பகுதியாகவும் பயன்படுகிறது. மேலும், ராஜநாகம், மலைப்பாம்பு போன்ற கண்காட்சிப் பொருட்களைக் கொண்ட ஒரு அறை, ஒரு சரக்கு அறை மற்றும் கழிப்பிடம் ஆகியன உள்ளன. முதல் தளத்தில் இரண்டு படுக்கைகளைக் கொண்ட ஒரு பெரிய அறை உள்ளது. அங்கேதான் நான் தங்க ஆரம்பித்தேன், எனக்கு இரவுத்துணையாக காவலாளியும்(வாட்ச்மேன்) இருந்தார். அண்ணா அந்த அறையில் ஒரு சிறிய தொலைக்காட்சியைப் பொருத்தினார். மேலும், என் அறைக்கு தொலைபேசி இணைப்பையும் நீட்டிக்கச் செய்தார். நான் அவருடைய இடத்திற்கு சாப்பிடுவதற்கோ அல்லது தங்குவதற்கோ எப்போது வேண்டுமானாலும் வரலாம் எனவும் அவர் என்னிடம் கூறினார். இருந்தாலும், நான் பூங்காவில் இருப்பதையே விரும்பினேன்.

அண்ணா மற்றும் ஷிர்கே தவிர அந்தப் பூங்காவில் சுமார் 8 முதல் 10 ஊழியர்கள் இருந்தனர். அவர்களில் நான் நன்றாகப் பழகியவர்களில் மகேஷ், மிலிந்த், பூஷன் மற்றும் காவலாளியான பாபாவும் அடங்குவர். மாணவர்களில் பலர் இரவுப்பள்ளியில் படித்துக்கொண்டு பகலில் இங்கே வேலை செய்துகொண்டிருந்தனர். ஞாயிறு மற்றும் விடுமுறை தினங்களில் உதவுவதற்கு சில சமயம் இன்னும் கொஞ்சம் மாணவர்கள் வருவதுண்டு. அவர்கள் அனைவரும் புனேவில் வாழ்ந்தனர், இரவில் வீட்டிற்குச் செல்வார்கள். இருந்தாலும், அவ்வப்போது அவர்களில் சிலர் என்னுடன் இரவில் தங்குவார்கள். நாங்கள் தொலைக்காட்சி பார்ப்போம், அல்லது அவர்கள் எனக்குக் கதை சொல்வார்கள். தினமும் மாலையில் இரவு உணவுக்குப் பின்னர், நான் என்னுடைய தினசரி நாட்குறிப்பையும் எழுதினேன். சில சமயங்களில் கொஞ்சம் வாசித்தேன்.

அந்தப் பூங்காவில் என்னுடைய வேலை அங்கிருந்த வேலையாட்களுக்கு அவர்களது வேலையில் உதவுவதுதான். பாம்புகளைப்பற்றி அறிந்து கொள்ள எனக்கு அதுவே வழியாக இருந்தது. எனவே, தினமும் நான் நட்சத்திர ஆமைகளின் குட்டைகளையும், வான்கோழிகளின் கூண்டு களையும், கோழிக் கூண்டுகளையும், பின்னர் சாரைப்பாம்புப் புற்றுகளையும் (*Rat Snake*), தண்ணீர்ப் பாம்புப் புற்றுகளையும் (*Chequered Keelbacks*), உடும்புப் புற்றுகளையும் (*Monitor Lizard*) சுத்தம் செய்வேன். பாம்புகளுக்கு உணவூட்டுவதிலும் நான் உதவினேன், வழக்கமாக அது வாரத்திற்கு ஒருமுறை செய்யப்படும். பெரும்பாலான பாம்புகளுக்குத் தவளைகள் மற்றும் சிறிய எலிகள் உணவாகப் போடப்படுகின்றன. இந்த வெள்ளெலிகள் ஆய்வகங்களிலிருந்து வருகின்றன. அதே நேரத்தில், மலைப்பாம்புகளுக்கு வாரத்திற்கு ஒரு கோழி போடப்படும்.

பாம்புகளைச் சரியாகப் பிடித்திருக்கும் முறையும் கையாளும் முறையும் எனக்குக் கற்பிக்கப்பட்டது. மூன்றாம் நாள், ஒரு ஓநாய்ப் பாம்பு (*Wolf Snake*) என்னைக் கடித்துவிட்டது. இது ஒரு விஷமற்ற பாம்பு என்பதை நீங்கள் புரிந்துகொள்ள வேண்டும், எனது அனுபவத்திற்காக அதை வேண்டுமென்றே என்னைக் கடிக்கவிட்டோம். மேலும் பாம்புக்கடி குறித்த அறியாமை பயத்திலிருந்து என்னை வெளிவரச் செய்ய இது உதவியது. குழந்தைப்பருவத்திலிருந்து நம்முள் ஆழப்பதிந்த நமது பாட்டிகளின் கதைகளின் விளைவாக நம்மில் எல்லோரும் இந்த பயத்தைப் பெற்றிருக்கிறோம்.என் விசயத்தில், எனக்குப் பாம்புகளைப் பிடித்திருந்தாலும் ஆழ்மனத்தில் எஞ்சிய ஒரு பயம் இன்னும் இருக்குமென அண்ணா விளக்கினார். அந்தக்கடி குறிப்பிடும்படியாக வலிக்கவில்லை, நமக்கு உண்டாகும் மற்ற எந்தக் காயத்துக்கும் செய்யும் சிகிச்சைதான் இதற்கும்.

பாம்புப் பூங்காவில் நான் தங்கியிருந்த காலத்தில் பல நேரங்களில் பலவகை விஷமற்ற (ஆனால் கோவமான) பாம்புகளால் நான் கடிக்கப் பட்டேன். மூன்று வாரங்களுக்குப் பிறகு நான் கிளம்பியபோது என்னுடைய கைகளில் குறைந்தபட்சம் 15-20 கடிகள் வாங்கியிருந்தேன். அவற்றில் சில கடிகள் மிகவும் வலித்தன, அதில் ஒன்று மிக மோசமாயிற்று, என் மணிக்கட்டு வீங்கிப்போய் கொஞ்ச நேரத்திற்கு என்னால் என்னுடைய கைக்கடிகாரத்தைக் கட்ட முடியவில்லை. இருந்தாலும், பாம்பு நம்மைக் கடிக்கும்போது நம்மைவிட பாம்புதான் பாதிக்கப்படுகிறது என்பதை நினைத்துப் பார்த்தால் நாம் பெரிதாக வருத்தப்படமாட்டோம் (ஒரு கடியில் அது அதன் பற்களில் சிலவற்றை இழந்துவிடும்). என்ன ஆனாலும், அந்த பாம்புகள் எல்லாமே விஷ மற்றவையாக இருந்ததால் விஷமுறிவு மருந்து உபயோகப்படுத்து வதென்ற கேள்விக்கே இடமில்லை. மேலும், நான் வாங்கிய கடிகளை ரொம்பப் பயப்பட வேண்டிய பாம்புக்கடியாக அல்லாமல் வெறும் காயங்களாகவும் புண்களாகவும் நினைக்கக் கற்றுக்கொண்டேன்.

பாம்புகளைத் தவிர, அந்தப் பூங்காவில் மற்ற பல விலங்குகளும் இருந்தன. சில காப்பாற்றப்பட்டவை, மற்றவை காயத்துடன் கண்டெடுக்கப் பட்டு சிகிச்சைக்காகவும் ஓய்விற்காகவும் அந்தப் பூங்காவிற்குக் கொண்டுவரப்பட்டவை. அந்தப் பூங்காவில் நான் தங்கியிருந்த காலத்தில், ஒரு காட்டுப்பன்றி, ஒரு புனுகுப் பூனை, ஒரு சிறுத்தை, ஒரு வல்லூறு, ஒரு குள்ளநரி, மூன்று கீரிப்பிள்ளைகள், மற்றும் உடைந்த சிறகுகளுடன் இருந்த பல கழுகுகளும் ஆந்தைகளும் இருந்தன. அந்த ஆந்தைகளும் கழுகுகளும் மேல்பகுதி திறந்து வைக்கப்பட்டிருந்த கூண்டுகளில் இருந்தன.

மீண்டும் பறக்க இயலும்போது, அவை விரும்பினால் வெளியே பறந்துசெல்ல முடியும். மேலும், அங்கு பல வகையான அயல்நாட்டுக்

காட்டுக்கோழிகள், கினி எலிகள் (*guinea pigs*), வெள்ளெலிகள், முயல்கள், குரங்குகள் மற்றும் ஒரு ஜோடி வான்கோழிகள் ஆகியன இருந்தன. இவற்றோடு கங்கைப்பகுதியில் காணப்படும் மெல்லிய ஓடு கொண்ட ஆமைகள், நட்சத்திர ஆமைகள் மற்றும் மெலனாக் ஆமைகளும் இருந்தன. இந்த எல்லா விலங்குகளுக்கும் தினமும் உணவு கொடுக்க வேண்டியிருந்தது, அவற்றின் கூண்டுகளைத் தொடர்ந்து சுத்தம் செய்ய வேண்டியிருந்தது.

பாம்புப் பூங்காவில் ஒரு வசதி இருந்தது, அதன்மூலம் புனே நகரத்து மக்கள் எங்கேனும் ஒரு பாம்பைப் பார்த்தால் பூங்காவிற்கு அழைத்துத் தெரிவிக்கலாம். பூங்காவிலிருந்து ஒருவர் அந்த இடத்திற்குச் செல்லும் வழியை விசாரித்து தகவல் தெரிவித்தவருடன் அங்கு போவார், பாம்பைப் பிடிக்க முயற்சிப்பார். மக்கள் தேவையில்லாமல் பாம்புகளைக் கொல்லாமல் இருப்பதை இது உறுதிசெய்கிறது. நான் இந்தமாதிரி இரண்டு சமயங்களில், வந்த அழைப்புகளுக்காக எங்கள் ஆட்களுடன் போய் பாம்பு கிடைக்காமல் திரும்பிவந்தேன். மீட்புக்குழு பயணிக்க வேண்டிய தொலைவு அதிகமாக இருந்தால், அது சென்று சேரும்வரை பாம்பு அதே இடத்திலேயே இருக்க வேண்டிய அவசியமில்லை.

பாம்புப் பூங்காவிற்கு தினமும் ஏராளமான பார்வையாளர்கள் வருகிறார்கள். வழக்கமாக, அவர்களது கேள்விகளுக்கு அறிவுப்பூர்வமாகப் பதில்சொல்லும் ஒருவரை மக்கள் எதிர்நோக்குகிறார்கள். அதைச் செய்வதில் எனக்கு மிகப் பெருமையாக இருந்தது, ''இந்தப் பாம்பின் பெயர் என்ன?'', ''அது என்ன சாப்பிடும்?'', ''இவற்றில் எது ஆண்? எது பெண்?'' போன்ற எல்லா கேள்விகளுக்கும் நான் மகிழ்ச்சியாக பதில் சொல்வேன். மற்ற நேரங்களில், பாம்புகளின் பழக்கவழக்கங்களைக் குறித்த விரிவான, இன்னும் சிக்கலான கேள்விகளுக்குப் பதில்

அளிக்குமாறு அங்கிருந்த ஊழியர்களைத் தொந்தரவு செய்து கொண்டிருப்பேன். அங்கிருந்த வேலையாட்கள் ஒரு தகவல்சுரங்கம் போன்றவர்கள், இந்த அறிவெல்லாம் அவர்களது செய்முறை அனுபவத்திலிருந்து பெற்றதே.

சில இரவுகளில் நாங்கள் தவளை பிடிக்கச் சென்றோம். இரவு உணவுக்குப்பின், 10 கி.மீ தொலைவிலிருந்த ஒரு ஆற்றுக்கு நாங்கள் ஸ்கூட்டர்களில் செல்வோம். அந்தமுறை மிகவும் எளிமையானது. ஆற்றுப்படுக்கையின் ஈரக்கரைகளின் மீது தவளையின் பார்வையை மறைக்க ஒருவர் டார்ச் வெளிச்சத்தை அடித்தார், அது தன் பாதையில் அசைவின்றி நிற்க, அதே நேரத்தில் மற்றொருவர் பின்புறத்திலிருந்து தன் வெறும் கைகளால் அதைப் பிடித்தார். (தவளைகளை உயிருடன் கொண்டுவர வேண்டும், இல்லாவிட்டால் பாம்புகள் அவற்றை உண்ணாது.) தவளைகளைப் பிடிப்பதற்காகும் சிலநொடி நேரம் அவை அசைவற்று நிற்பதால், அவற்றைப் பிடிப்பது எளிதாக இருந்தது. இதில் கடினமான பகுதி என்னவென்றால், பிடித்ததும் அவை நம் பிடியில் இருந்து நழுவிவிடாமல் பார்த்துக்கொள்வதுதான். ஏனென்றால், தவளைகள் மிகவும் ஈரமானவை, வழுக்கும் தன்மையுடையவை. இரண்டு மூன்று மணி நேரத்திற்குப் பிறகு, எங்கள் பைகளில் 25 முதல் 30 தவளைகளுடன் நாங்கள் திரும்பிவருவோம்.

சில ஏழைமக்கள் பாம்புப் பூங்காவின் ஊழியர்களுக்காக உணவு தயாரித்த ஒரு சிறு குடிலில்தான் நான் சாப்பிடுவது வழக்கம். அந்தச் சாப்பாட்டில் பிரபலமான ஒன்று 'ஷேம்பில்' என்றழைக்கப்பட்ட காய்கறிகளால் ஆன, எண்ணெய் மிதக்கும் ஒரு உணவு. அது ரொட்டியுடன் (பிரட்) பரிமாறப்படும், அடர்சிவப்பு நிறமானது, மிகவும் காரமானது. இந்த ருசிமிக்க உணவை சில நாட்கள் சாப்பிட்ட பிறகு, எனக்கு வயிறு கொஞ்சம் சரியில்லாமல்

ஆனது. அன்று நான் ஏழுமுறை கழிப்பறைக்குச் செல்லவேண்டி வந்தது. அத்தோடு ஷேம்பிலின் கதை முடிந்தது. சப்பாத்தி, பருப்பு மற்றும் மலிவான க்ரீம் ரோல்களுடன் நிறுத்திக்கொள்வது என நான் முடிவுசெய்தேன்.

பாம்புப் பூங்காவின் குளியலறை மிகவும் அசுத்தமாகக் காட்சியளித்தது, வழக்கமாக நான் குளிப்பதைத் தவிர்த்தேன். என்னுடைய நீளமான முடியை ஈரமாக்கி குளித்திருந்ததைப் போல பாசாங்கு செய்வேன். பாம்புப் பூங்காவின் ஊழியர்களுக்கு இது தெரியவந்ததும், அவர்கள் என்னைக் குளிப்பாட்ட முடிவுசெய்தனர். ஒருநாள் அவர்கள் என்னைப் பிடித்து, என் ஆடைகளை எல்லாம் கழற்றி, என்னைக் குளியலறைக்கு இழுத்துச்சென்றனர். டிடர்ஜென்ட் மற்றும் கொஞ்சம் ஹார்பிக்கை உபயோகித்து ஒரு டாய்லெட் பிரஷ்ஷால் என்னைத் தேய்த்துக் குளிப்பாட்டினர்!

இருட்டிற்கும், இருட்டில் கேட்கும் எல்லா சத்தங்களுக்கும் நான் பயப்படுவேன் என்பது இந்த நண்பர்களுக்கு எப்படியோ தெரியவந்தது. எனவே, அவர்கள் எனக்குப் பேய்க்கதைகளைச் சொல்லிக்கொண்டே இருந்தார்கள், என் பயத்தையும் மீறி அவற்றைக் கேட்க எனக்குப் பிடித்திருந்தது. இறுதியாக, கடைசிநாள் இரவில் அந்த உண்மையான பேயை நான் சந்திக்கவும் செய்தேன். அது இப்படித்தான் நடந்தது. காவலாளியுடன், நாங்கள் மூன்றுபேர் தொலைக்காட்சி பார்த்துக் கொண்டிருந்தபோது, பையன்களில் ஒருவனான பூஷண் ஒரு தொலைபேசி அழைப்பிற்காகப் போகவேண்டும் என்றான். அதற்குக் கொஞ்சநேரம் கழித்து, விளக்குகள் அணைந்தன, பூனையின் மியாவ் சத்தம்போல ஒரு சத்தம் கேட்டது. காவலாளியான பாபா அதைக் கண்டுகொண்டதாகத் தெரியவில்லை, ஆனால் நானும் மற்றொரு

பையனான போப்பீயும் பயந்துவிட்டோம். அடுத்து, சன்னலில் ஒரு வெளிச்சம் தெரிந்தது, கதவு அடிக்க ஆரம்பித்தது. ஒரு குரல் (மராத்தியில்) கத்தியது, ''சன்னலை மூடு''. ஒன்றன்பின் ஒன்றாக எல்லாவிதமான விசித்திர விசயங்களும் நடந்துகொண்டிருந்தன. சன்னலுக்கு வெளியே எலும்புகளுடன் ஒரு மண்டையோடு காற்றில் மிதந்துகொண்டிருந்தது. நாங்கள் எச்சரிக்கையோடு வெளியேசென்று அங்கே யாராவது இருக்கிறார்களா என பார்த்தபோது, யாரையும் காணவில்லை.

நாங்கள் அறைக்குத் திரும்பியபோது, என்னுடைய படுக்கை தூக்கி வீசப்பட்டு என்னுடைய உடைகளும் அந்த முழு அறையும் அலங்கோலமாகக் கிடந்தன. கதவு நிலை அதிர்ந்தது, சன்னல்கள் சத்தமிட்டன, நான் காவலாளியின் கைகளை இறுக்கமாகப் பற்றிக் கொண்டேன். ஒருவன் சிலுவைக் குறியிட்டால் பேய் போய்விடும் என்று நான் கேட்டிருந்தது நினைவுக்கு வந்தது, நான் அவ்வாறே செய்தேன். ஆனால் அது வேலை செய்யவில்லை. அந்தப் பேய்க்கு விதிமுறைகள் தெரியவில்லை என்பது தெளிவாகத் தெரிந்தது. திடீரென, எங்களுக்கு பூஷணிடமிருந்து அழைப்பு வந்தது, அவன் திரும்பி வந்து கொண்டிருப்பதாகக் கூறினான். விசித்திரமாக, பூஷண் வந்ததும் அந்த பேய் மறைந்து போய்விட்டது. அதன்பிறகு அந்தப் பேயிடமிருந்து எந்தச் சத்தமும் கேட்கவில்லை. அடுத்தநாள், அந்த இரவுநேர விருந்தாளியைப் பற்றி நான் அண்ணாவிடமும் மற்றவர் களிடமும் சொன்னபோது, அனைவரும் விழுந்து விழுந்து சிரித்தனர்.

பூங்காவில் நான் தங்கியிருந்தபோது, மலைப்பாம்பைத் தவிர பெரும்பாலும் எல்லா விஷமற்ற பாம்புகளையும் எப்படிக் கையாளுவது என்பதை நான் கற்றுக்கொண்டேன். மேலும் நான் உடும்புகளைப் பிடிக்கவும், கெக்கோ பல்லிகளைப் பிடிக்கவும், மண்புழுக்களை உண்ணவும் கற்றுக்கொண்டேன். மண்புழுக்களை உண்ணுவது என்

உணவுத்திட்டத்தின் ஒரு பகுதியோ, அல்லது இந்தப் பயிற்சியின் பகுதியோ அல்ல. பையன்களில் ஒருவன் மண்புழுவைச் சாப்பிட முடியுமா என சவால் விட்டபோது திரு. ஷிர்கே ஒரு மண்புழுவைத் தன் வாயில் தூக்கிப் போட்டதைப் பார்த்தபிறகு, நான் அதை முயன்றுபார்க்க நினைத்தேன். முதல்முறை வாந்தி வருவதைப்போல இருந்தாலும் நான் ஒரு துண்டை வாயில் போட்டேன். இரண்டாவது முறை ஒன்றும் பிரச்சினை இல்லை, மண்புழுக்கள் பச்சை வெள்ளரிக்காய் போல முறுமுறுப்பாக இருந்தன. நமக்குத் தோன்றுவதைப்போல கொழ கொழவென்றும் பிசிபிசுப்பாகவும் இல்லை.

பூங்காவில் என்னுடைய கடைசி நாளன்று, நான் ஒரு நல்லபாம்பைக் கையாள அனுமதிக்கப்பட்டேன். அந்த நல்லபாம்பின் கழுத்தின் கீழே ஒரு குச்சியை வைத்து, பின் அதன் வாலைப்பிடித்து அதைத் தூக்கினேன். அதை நான் 2-3 முறை செய்துபார்த்தேன், அதன் பின்னர் அந்த நல்லபாம்பு அதன் பெட்டியில் போடப்பட்டது. நான் மிக உற்சாகமாகவும் மகிழ்ச்சியாகவும் இருந்தேன். பாம்புப் பூங்காவில் நான் தங்கிய காலத்திற்கு ஒரு சரியான முடிவாக இது அமைந்தது.

இதை நான் எழுதும்போது பாம்புகளுடனான என்னுடைய முந்தைய மற்ற அனுபவங்களை நினைத்துப் பார்க்கிறேன். என் அம்மா கூறும்ஒரு கதை இது. நான் பிறந்து சில மாதங்களே ஆன குழந்தையாக இருந்த போது, வால்போயில் எங்கள் வீட்டில் ஒரு மதியநேரம் என் தொட்டிலில் நான் உறங்கிக் கொண்டிருந்தபோது, அவருக்கு 'தொப்' என்று ஒரு மெல்லிய சத்தம் கேட்டிருக்கிறது. அவர் மிகவும் பயந்துபோனார், அங்கே ஒரு மெல்லிய நீலநிற பாம்பைப் பார்த்தாராம். அது மேற்கூரையிலிருந்து விழுந்திருக்க வேண்டும், தொட்டிலைச் சுற்றிலும் அது ஊர்ந்து கொண்டிருந்திருக்கிறது. கிராமப்புறங்களில் பாம்புகள் வருவது ஒன்றும்

வழக்கத்திற்கு மாறான விசயமல்ல, ரஸ்டிக் பண்ணையும் அதில் ஒரு விதிவிலக்கல்ல. அம்மா பயந்துவிட்டதாகவும், ஆனால் நான் நன்றாக உறங்கிக்கொண்டிருந்ததால் சத்தம்போடாமல் இருந்ததாகவும் கூறினார். அந்தத் தொட்டில் ஒரு கொசுவலையால் மூடப்பட்டிருந்தது, அதன் வெளியேதான் அந்த பாம்பு விழுந்து ஊர்ந்திருக்கிறது. ஒரு நிமிடத்திற்குள் அது நாற்காலிகளில் ஏறி சன்னல் வழியாக வெளியேறிவிட்டது. நான் பாதுகாப்பாகத்தான் இருக்கிறேன் என்பதை உறுதி செய்துகொள்ள அவர் என்னருகே ஓடி வந்திருக்கிறார். நான் பாதுகாப்பாகத்தான் இருந்தேன். அவர் விவரித்ததிலிருந்து அது ஒரு பச்சைப் பாம்பாகத்தான் இருக்கும் என எனக்கு இப்போது தெரிகிறது. அது ஒரு மெல்லிய, முற்றிலும் தீங்கற்ற பாம்பு.

அம்மா சொன்னார், இன்னொரு முறை நான் நடைபயின்ற பருவத்தில், எங்கள் பண்ணையில் சில பழைய அட்டைப்பெட்டிகளை வைத்து நான் விளையாடிக் கொண்டிருந்தபோது, அவற்றில் ஒன்றிலிருந்து ஒரு பாம்பு வெளிவந்திருக்கிறது. என் பெற்றோர் ஆச்சரியப்படும் விதமாக, அச்சூழ்நிலையில் பொதுவாக குழந்தைகள் என்ன செய்யும் என நாம் எதிர்பார்ப்பதைப்போல பயத்தில் அழாமல், நான் உடனடியாக என்னால் முடிந்த அளவு வேகமாக என் கைகளாலும் மூட்டுகளாலும் அதை நோக்கித் தவழ்ந்துசென்று எட்டி அதைப்பிடிக்க முயன்றிருக்கிறேன்.

அம்மா சொல்வதுபோல நிஜமாகவே நான் குழந்தைப்பருவத்தில் வழக்கத்திற்கு மாறாக வலிந்துசென்று பாம்புகளுடன் நட்பாக இருந்தேன் என்று தோன்றுகிறது. நான் நாய்களுக்குப் பயப்படுவேன், ஏனென்றால் அவற்றிற்குப் பற்கள் உள்ளன, அவற்றால் கடிக்க முடியும். ஆனால், பாம்புகளுக்கு அப்படி இருப்பதாகத் தெரியவில்லை, அந்தக் காரணத்தினால்தானோ என்னவோ அவைகள் என் சிறந்த நண்பர்களாக இருந்தன.

களப்பணிக் குறிப்புகள் :
பாம்புகள்

உலகில் சுமாராக 2500 பாம்பினங்கள் உள்ளன. இவற்றில் சுமார் 15% மட்டுமே விஷமுள்ளவை. விஷமுள்ள பாம்பினங்களில் அதிகபட்ச எண்ணிக்கையிலானவை ஆஸ்திரேலியாவில் உள்ளன (90% பாம்புகள் விஷமுள்ளவை).

இந்தியாவில் 238 பாம்பினங்கள் காணப்படுகின்றன. இவற்றில் 72 விஷமுள்ளவை. ஆனால், ஒருசில மட்டுமே அபாயமான, மரணத்தை விளைவிக்கக்கூடிய அளவில் கடிப்பன. உதாரணமாக, பிட் வைப்பர்கள் *(Pit Viper)* விஷமுள்ளவை, ஆனால் அரிதாகத்தான் மனிதர்களுக்கு மரணத்தை ஏற்படுத்துகின்றன. விஷமுள்ள நான்கு பெரிய பாம்புகள் 1. நல்லபாம்பு, 2. கட்டுவிரியன், 3. ரஸ்ஸல்'ஸ் வைப்பர் 4. புல் விரியன் *(Saw - scaled Viper)*. இவற்றில் அதிகபட்ச விஷமுள்ளவை கட்டுவிரியன் பாம்புகள் தான். நல்ல பாம்பின் விஷத்தை விட இதன் விஷம் நான்கு மடங்கு அதிக நச்சுத்தன்மை வாய்ந்தது.

அனைத்து கடல் பாம்புகளும் விஷமுள்ளவை. உலகிலேயே அதிகபட்ச விஷமான பாம்புகளில் சில கடல்பாம்புகளும் அடங்கும், இவை நல்லபாம்பின் விஷத்தைவிட 5 மடங்கு அதிக விஷமுள்ளவை. ஆனால், கடல்பாம்புகள் கடுமையாகத் தூண்டப்பட்டால் மட்டுமே கடிக்கும், அவை தண்ணீரில் நீந்துபவர்களை ஒருபோதும் தாக்குவதாகத் தெரியவில்லை.

பாம்புகள் குளிர்க்குருதி உள்ளவை, அவற்றின் பார்வைத்திறன் மிகக் குறைவாக வளர்ச்சியடைந்தவை, அவற்றிற்குக் கண்ணிமைகள் கிடையாது. அவை செவிடானவை, அவற்றால் அதிர்வுகளுக்கு மட்டுமே எதிர்வினையாற்ற முடியும். அவை தமது பிளந்த நாக்கால் சுவை, மணம்

மற்றும் தொடு உணர்வை அறிகின்றன. இப்புலன்கள் மிக நன்கு வளர்ச்சியடைந்தவை, இரைகளையும் எதிரிகளையும் உயிருள்ளவையா அல்லது இறந்தவையா என வேறுபடுத்திப் பார்க்க பாம்புகளுக்கு இவை உதவுகின்றன.

சில விஷமுள்ள பாம்புகள் தங்கள் இரைகளுக்குள் விஷத்தை உட்செலுத்துகின்றன, பின் இரையை விட்டுவிட்டு, தன் கொல்லும் வேலையை விஷம் முடித்ததும் நாக்கால் இரையை விழுங்குகின்றன. பாம்பின் விஷம் செரிக்கும் தன்மையுள்ள நொதிகளைக் கொண்டது, அவை உட்பகுதியில் இரையைச் செரிக்க ஆரம்பிக்கின்றன.

பாம்புகள் முழுமையாக வளரும்வரை மிக வேகமாக வளர்கின்றன, பின் அவற்றின் இறப்புவரை தொடர்ந்து மிக மெதுவாக வளர்கின்றன. அவை வளரும்போது, அவற்றின் தோல் இன்னும் வேகமாக வளரும். பின்பு புதிய தோல் அடிப்பகுதியில் தோன்றியதும் அவை பழைய தோலை உரிக்கின்றன. பாம்புகள் அவற்றின் மூக்குப்பகுதியில் பழைய தோலைப்பிரித்து பின் அதிலிருந்து ஊர்ந்து வெளிவருகின்றன. தோலுரிக்கும் காலத்தில் பாம்புகள் உணவு உட்கொள்வதை நிறுத்து கின்றன. ஆனால், அவை கொடூரமாகின்றன.

ஒரு விஷப்பாம்பின் கடி மனிதர்களின் நரம்பு மண்டலத்தை *(neurotoxic)* அல்லது இரத்தக் குழாய்களைப் *(hemotoxic)* பாதிக்கும். பாம்புக்கடிக்கு ஒரே மருந்து பாம்பிலிருந்து தயாரிக்கும் விஷமுறிவு மருந்துதான். இது பாம்பின் விஷத்தை மிகச்சிறு அளவுகளில் (மரணத்தை விளைவிக்கும் அளவில் பத்தில் ஒரு மடங்கு) ஒரு குதிரைக்குள் செலுத்தி, பின் கொஞ்சம் கொஞ்சமாக அந்த அளவை அதிகப்படுத்தி, அந்தக் குதிரையைப் பாம்பின் விஷத்திற்கு எதிர்ப்புசக்தி மிக்கதாக மாற்றித் தயாரிக்கப்


படுகிறது. பின், குதிரையின் இரத்தம் உறிஞ்சி எடுக்கப்பட்டு, உறைய வைக்கப்பட்டு அதிலிருந்து 'பிறபொருள் எதிரி'களைப் (*Antibodies*) பிரித்தெடுத்தபின் பதப்படுத்தப்படுகிறது, பின் பொடியாக்கப்படுகிறது. நமக்குத்தெரிந்த விஷமுறிவு மருந்து இதுதான்.

பாம்பு கடித்தால், பின்வரும் முதலுதவி நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். நோயாளி பீதி அடைவதைத் தவிர்த்து, தைரியமாக இருக்கச் செய்ய வேண்டும். கடி விஷமுடையதா அல்லது விஷமற்றதா என்பதை அறிய காயம் சோதிக்கப்பட வேண்டும். விஷக்கடியானால் இரண்டு நச்சுப்பல் குறிகள் காணப்படும், விஷமற்ற கடியானால் பல பற்தடங்கள் காணப்படும்.

கடி விஷமுள்ளதானால், நோயாளியை முதலில் அசைவற்று இருக்கச் செய்ய வேண்டும். மதுவோ (*alcohol*), தேநீரோ, காப்பியோ, மற்ற ஊக்கிகளோ, அல்லது வலி நிவாரணிகளோகூட கொடுக்கக் கூடாது.

காயத்தைக் கழுவவோ, வெட்டவோ அல்லது விஷத்தைத் துடைக்கவோ கூடாது, ஏனென்றால் அதனால் இரத்த இழப்போ, நோய்த்தொற்றோ ஏற்படலாம். காயத்திற்குச் சிறிது மேலே ஒரு பட்டையால் (*tourniquet*) இறுக்கமாகக் கட்டலாம், அதனுள் ஒரு விரல் போகும் அளவிற்குக் கட்ட வேண்டும். பக்கத்தில் இருக்கும் மருத்துவமனைக்கு நோயாளியை முடிந்த அளவு சீக்கிரமாகக் கொண்டுசெல்ல வேண்டும். விஷமுறிவு மருந்து கொடுக்கப்படும்வரை அந்தப் பட்டையை அப்படியே விட்டுவிட வேண்டும். ஆனால், அது ஒவ்வொரு *90* நொடிகளுக்கும் ஒருமுறை *10* நொடிகளுக்குத் தளர்த்தப்பட வேண்டும், ஆறுமணி நேரத்திற்கு மேலாக அது உபயோகப் படுத்தப்படக் கூடாது. மருத்துவமனையில் விஷமுறிவு மருந்து கொடுக்கப்படும், அது விஷத்தின் தாக்கத்தை விரைவாகக் குறைக்கும்.

பாம்புகளைத் தவிர்க்க பின்வரும் முன்னெச்சரிக்கைகளை எடுக்க வேண்டும். வீட்டைச் சுற்றியுள்ள குப்பை அகற்றப்பட வேண்டும். எலி வளைகள் மூடப்பட வேண்டும், வீட்டிலும் சுற்றியுள்ள இடங்களிலும் எலிகள் இனப்பெருக்கம் செய்யாமல் தடுக்க வேண்டும். வீட்டைத் தொடும் நீண்ட மரக்கிளைகளும், தாழ்வாரத்திலும் சன்னல் சாளரத்திலும் படரும் கொடிகளும் வெட்டப்பட வேண்டும். காட்டுப்பகுதியில் நடக்கும்போது நல்ல மூடுகாலணிகளை (*boots*) உபயோகப்படுத்த வேண்டும். எதிர்புறம் தெரியாதபோது தட்டுப்படும் எந்தப் பொருளின் மீதும் மிதிப்பதைத் தவிர்க்க வேண்டும், இரவில் வீட்டைவிட்டு வெளியே செல்லும்போது ஒரு டார்ச்சை உபயோகிக்க வேண்டும்.



விடுமுறைக்குள் ஒரு விடுமுறை

புனே பாம்புப் பூங்காவில் நான் மூன்று வாரம்தான் தங்குவதாக இருந்தது. ஆனால், அந்த அனுபவம் எனக்கு மிக மகிழ்ச்சிகரமாக அமைந்ததால் வீட்டிற்குத் திரும்பிச்செல்ல மனசே வரவில்லை. என்னுடைய அதிருஷ்டம், தீபாவளி விடுமுறையை ராஜஸ்தானில் கழிக்கலாம் என என் குடும்பத்தினர் முடிவுசெய்திருந்தனர். வட இந்தியாவிற்குச் செல்லும் இரயிலைப் பிடிக்க மும்பைக்குச் செல்ல வேண்டியிருந்ததால், புனேவிலிருந்து நான் நேராக மும்பைக்கு

வந்துவிடுகிறேன் என்றும், அங்கு கிர்காமில் என் தாத்தா பாட்டியின் வீட்டில் அவர்களைச் சந்திக்கிறேன் எனவும் என் பெற்றோரிடம் நான் தெரிவித்தேன். இதனால் எனக்கு பாம்புப் பூங்காவில் இருக்க இன்னும் சில கூடுதல் நாட்கள் கிடைத்தன. அதோடு என்னுடைய வழியை நானே கண்டுகொள்ளும் மற்றொரு அனுபவமும் கிடைத்தது, ஆனால் இந்தமுறை பெரிய நகரமான மும்பையில்.

சுஜித் எனக்கு மும்பைக்கு ஒரு பேருந்துச்சீட்டு வாங்கித் தந்ததோடு பேருந்து நிலையத்தில் கொண்டுவந்து விட்டார். தாதரில் இறங்கியதும் கிர்காமிற்கு எப்படிச் செல்வது என்பது குறித்து விரிவான குறிப்புகளை என் தந்தையிடமிருந்தும், ஒருவேளை தொலைந்துபோய்விட்டால் என்ன செய்யவேண்டும் என்பது குறித்த பாதுகாப்புக் குறிப்புகளை பதற்றமாக இருந்த என் அம்மாவிடமும் முன்னராக தொலைபேசியில் கேட்டிருந்தேன். என் மாமா மற்றும் அவரது குடும்பத்தினரும், அவர்களது மருமகனிடமிருந்து ஏதேனும் பிரச்சனைக்காக ஒரு தொலைபேசி அழைப்பு வரலாம் என எச்சரிக்கப்பட்டிருந்தனர் என்று எனக்குப் பின்னால் தெரியவந்தது. ஆனால் அது நடக்கவில்லை. ஏனென்றால், என் வழியை நானே கண்டு கொள்வதில் நான் உறுதியாக இருந்தேன், அவ்வாறு செய்வதில் வெற்றியும் அடைந்தேன்.

பேருந்து புனேவிலிருந்து காலை 10 மணிக்கு கிளம்பி மதியம் 2 மணிக்குப் பிறகு மும்பையை அடைந்தது. நான் ஒரு டாக்சி பிடித்து ஓட்டுனரிடம் முகவரியைக் கொடுத்து, எனக்குப் பரிட்சயமில்லாத தெருக்களில் அந்த டாக்சி வேகமாகச் செல்வதை கவனமாகப் பார்த்துக் கொண்டிருந்தேன். அந்த ஓட்டுனர் என்னை இறக்கிவிட்ட இடத்தை என்னால் அடையாளம் காண முடியவேயில்லை. ஆனால் நான் அக்கம்பக்கத்தில் விசாரித்து, சுமார் 20 நிமிடமாக சுற்றியலைந்து, தற்செயலாக, எனக்குப் பரிட்சயமான

என் அப்பாவழி தாத்தா பாட்டியின் வீடான 47/C கோட்டாச்சிவாடியின் வாசற்படியில் போய் நின்றேன்.என் சித்தப்பாவும் சித்தியும் என்னை எதிர்பார்த்து இருந்தார்கள், எனக்குப் பிடித்த சகோதரர்களான லுகானோ மற்றும் ரிக்கார்டோவும் கூட! ஒருமணி நேரம் கழித்து, நான் பாதுகாப்பாக வந்துவிட்டேனா எனத் தெரிந்துகொள்ள ஆவலுடன் கோவாவிலிருந்து என் பெற்றோரின் அழைப்பு வந்தது. அந்தச் சமயத்தில், நான் ஏற்கெனவே என் அரைக்கால் சட்டைக்கு மாறி என் சகோதரர்களுடன் தொலைக் காட்சியில் ஒரு திரைப்படம் பார்த்துக்கொண்டிருந்தேன்.

அடுத்த சில வாரங்கள் கண்டிப்பாக என் ஓராண்டு இடைவெளித் திட்டத்தின் ஒருபகுதியாக இல்லை. தவளைகளையும், பாம்புகளையும் மற்றும் மீன்களையும் எங்கோ தொலைவில் விட்டுவிட்டு, என் குடும்பத்துடன் இருந்த ஒரு விடுமுறைக் காலமாக அது ஆகிவிட்டது. எங்கள் விடுமுறையில் அஹமதாபாத்திற்கு ஒரு சிறு பயணமும் இருந்தது, அங்கு நாங்கள் கோரா மற்றும் சூ மத்தேனுடன் தங்கினோம். வயநாட்டில் நடந்த இயற்கை விவசாயிகளின் கூட்டத்தில் நான் கோரா மற்றும் அவரது மகளான நிதியை சில மாதங்களுக்கு முன் சந்தித்திருந்தேன்.

அஹமதாபாத்தில் ஒரு பாம்புப் பூங்கா இருந்ததைக் கேள்விப்பட்டு, என்னுடைய ஆர்வத்தை திருப்திப்படுத்த மாத்திரம் நாங்கள் அங்கு செல்லவேண்டி வந்தது. அந்தப் பூங்காவில் நாங்கள் மலைப்பாம்புகள், ரஸ்ஸல்'ஸ் வைப்பர்கள், கட்டுவிரியன்கள், தண்ணீர்ப் பாம்புகள் (Chequered Keelbacks), போ வகைப் பாம்புகள், சாரைப் பாம்புகள் மற்றும் ஒரு ராஜநாகம் ஆகியவற்றைப் பார்த்தோம். ஆனால் எல்லாமே கண்ணாடிப் பெட்டிகளில்! அந்தப் பூங்காவில் நட்சத்திர ஆமைகள், உடும்புகள், வாத்துகள் மற்றும் பலவகை கூஸ் (*goose*) வாத்துகள், குரங்குகள் மற்றும் இதர சிறு விலங்குகளும் இருந்தன. அங்கு ஒரு சிறு

மீன் காட்சியகமும் இருந்தது, அது மிக மோசமாக பராமரிக்கப்பட்டிருந்தது. அந்த முழு நிறுவனமும் தரம் குறையக் காரணம் நிதிக் குறைபாட்டாலா அல்லது ஆர்வக் குறைபாட்டாலா என எனக்குத் தெரியவில்லை!

அஹமதாபாத்திலிருந்து இரயிலில் நாங்கள் ஜெய்ப்பூருக்குச் சென்றோம், அங்கே அடுத்த எட்டு நாட்களை நாங்கள் ஸ்ரீலதா மற்றும் மகேந்திர சௌத்ரியின் வீட்டில் கழித்தோம். ஜெய்ப்பூரிலேயே இடமிருந்தும் நாங்கள் இரண்டு நாட்கள் ஜெய்ப்பூரின் புறநகர்ப் பகுதியிலிருந்த ஒரு நிஜமான கோட்டைக்குச் சென்று அங்கு தங்கினோம். அதுதான் நான் ஒரு கோட்டைக்குச் செல்லும் முதல் முறை. கோட்டையின் உயரமான பகுதியின் குளிர்ச்சியான தங்கும் அறைகளில் இருந்த அனுபவம் மிக அருமையாக இருந்தது.

அவற்றில் சில பெரியன, சில சிறியன, சில தாழ்வாரங்கள் மிகக் குறுகியவை, உயரம் குறைந்தவை. அவற்றினூடாக நடந்துசெல்ல ஒருவர் தன் தலையைக் குனிந்து செல்லவேண்டியிருந்தது. நாங்கள் அங்கு சென்றிருந்த நேரம் தற்செயலாக பிரபலமான சூரிய கிரகண நாளாக இருந்தது. நகரமெங்கும் அதைப்பற்றித்தான் பேசினார்கள், ஆனால் கிரகணத்தைப் பார்த்து நான் ஏமாற்றமடைந்தேன். ஏனென்றால், அது இயல்புநிலைக்குத் திரும்புமுன் கொஞ்ச நேரம்தான் இருண்டிருந்தது. தொலைக்காட்சி அனுபவம் இன்னும் மிக நன்றாக இருந்ததாகப் பின்னர் என் நண்பர்கள் கூறினார்கள்.

ஜெய்ப்பூரில் பெரும்பாலும் தினமும் நாங்கள் ஊர் சுற்றிப்பார்க்கச் சென்றோம். கோட்டைகளுக்கும், அரண்மனைகளுக்கும், கடைத்தெருக் களுக்கும் சென்றோம். மண்பாண்டங்களில் சுவையான குல்பியும் பேல்பூரியும், வாயில் நீரை வரவழைக்கும் தந்தூரி சிக்கனும் சாப்பிட்டோம். பின், உதய்ப்பூருக்குச் சென்றோம். பிரபலமான ஏரியில் படகுப்பயணம் சென்றோம், இன்னும் சில அரண்மனைகளைப் பார்த்தோம். பின்பு


கந்தளியில் இருந்த ஸ்ரீலதா மற்றும் மகேந்திராவின் இரண்டாவது வீட்டிற்குச் சென்றோம். அங்கே, வீட்டிற்குப் பின்னால் இருந்த ஆற்றில் நீந்தினோம், அந்த கிராமத்துச் சிறுவர்களுடன் மீன் பிடித்தோம்.

அந்த விடுமுறை ரத்லம் ரயில் நிலையத்திற்குச் சென்ற மூன்று மணிநேரப் பேருந்துப் பயணத்துடன் முடிவுக்கு வந்தது. அங்கிருந்து என் சகோதரர்களும் நானும் அம்மாவுடன் மும்பைக்குத் திரும்பி வந்தோம், என் தந்தை டெல்லிக்குச் சென்றார். இந்தமுறை நாங்கள் மாஹிமில் என் அம்மாவழி தாத்தா பாட்டியின் இடத்தில் தங்கினோம். மிக உற்சாகமான 86 வயது என் தாத்தா, மிக சுறுசுறுப்பான ஒரு மனிதர், அங்கே எங்களை வரவேற்க இருந்தார். அன்று அவரது பிறந்தநாள்! அவர் எங்கள் அனைவரையும் இரவு உணவுக்கு அவர் வீட்டிலிருந்து சிறிது தூரத்தில் உள்ள ஒரு சைனீஸ் உணவகத்திற்கு அழைத்துச்செல்ல முடிவுசெய்தார்.

என் நினைவுக்கு வருகிறது, நாங்கள் அனைவரும் ஆடையணிந்து, செல்லத் தயாரானோம். அப்போது, என் அம்மா நாங்கள் அந்த உணவகத்திற்கு எப்படிப் போவது என தாத்தாவிடம் கேட்டார். அதற்கு அவர் சொன்னார்: ''நீயும் பையன்களும் ஒரு டாக்சி பிடித்துச் செல்லுங்கள். ஆனால், நான் நடந்துதான் வருவேன், நான் நடக்கவே விரும்புவேன்''. நான் மிகவும் ஆச்சரியப்பட்டேன். பின், தாத்தா சுறுசுறுப்பாக முன்னால் செல்ல, நாங்கள் எல்லோருமே அந்த உணவகத்திற்கு நடந்துசெல்வதாக முடிவுசெய்தோம். பின், மகிழ்ச்சியான ஒரு பிறந்தநாள் விருந்தை உண்டு கழித்தோம்.

அதன்பிறகு சீக்கிரமாகவே என் அம்மாவும் என் இரண்டு இளைய சகோதரர்களான சமீர் மற்றும் மிலிந்தும் கோவாவிற்குத் திரும்பினர். ஆனால், நான் தாத்தாவுடன் மும்பையில் இன்னும் சில நாட்கள் தங்கினேன். ஏனென்றால், நான் அங்கிருந்து நேராக சென்னைக்குச்

செல்லவேண்டியிருந்தது. அங்கே அடுத்த இரண்டரை மாதங்கள் சிலந்திகள், மண்புழுக்கள், மற்றும் எனக்கு எப்போதும் மிகப்பிடித்த முதலைகள் மற்றும் பாம்புகளின் இனிமையான சகவாசத்தில் கழிப்பேன்.



மண்புழுக்கள்

நவம்பர் 6-ம் தேதி தாதர் இரயில் நிலையத்திலிருந்து மாலை 7 மணிக்கு கிளம்ப இருந்த சென்னை எக்ஸ்பிரஸ்ஸில், இரயில்களைப் பற்றி மிக நன்றாகத் தெரிந்த என் மாமா ஆலனால் நான் ஏற்றிவிடப்பட்டேன். அவர் தன் வாழ்நாளில் வேலைசெய்த காலம் முழுதும் இரயில்வேயில் தான் வேலை செய்தார். தாதர் இரயில் நிலையம் மிகவும் கூட்டம் மிக்க, ஒரு பரபரப்பான இடமாக இருந்ததாலும், நானும் தனியாக விசாரித்து அங்கு செல்ல நம்பிக்கையோடு இல்லாமலிருந்ததாலும், என்

அம்மா மாமாவிடம் நான் மும்பையிலிருந்து புறப்படுவதைக் கவனித்துக் கொள்ளுமாறு கேட்டுக்கொண்டிருந்தார். முன்னதாக என் தாத்தா, நான் பயணச்சீட்டை எடுத்திருக்கிறேனா, போதுமான பணம் வைத்திருக்கிறேனா, சாப்பிடச் சிறிது நொறுக்குத்தீனி வைத்திருக்கிறேனா மற்றும் நீண்ட பயணத்திற்குத் தேவையான அளவு தண்ணீரைக் குப்பியில் நிரப்பியிருக்கிறேனா என சரிபார்த்தபின் என்னை ஒரு காரில் இரயில் நிலையத்திற்கு அழைத்து வந்திருந்தார்.

நான் ஒரு இரவும் அடுத்தநாள் முழுதும் இரயிலில் கழிக்க வேண்டியிருந்தது, அந்த இரயில் 7-ம் தேதி இரவு 8.30 வாக்கில் சென்னை சென்றடையும். கடந்த சில மாதங்களில் இரயிலில் ஒரு சில பயணங்களை நான் செய்திருந்ததால், இந்தப் பயணத்தில் கவலையின்றி இருந்தேன், இருந்தாலும் நான் பயணம் முழுவதும் தொடர்ந்து என் பொருட்களின்மீது ஒரு கண்வைத்துக் கவனமாக இருந்தேன்.

மும்பையிலிருந்து சென்ற இரயில் பயணம் முழுதுமே சுவாரஸ்யமற்றதாகத்தான் இருந்தது. நான் ஒரு சன்னல் இருக்கையில் இருந்தேன், இரவில் கீழ்பகுதி படுக்கையில் உறங்கினேன். என்னைச் சுற்றிலும் இருந்தவர்கள் ஊர்விட்டு ஊர்சென்று வேலை செய்பவர்கள், அவர்களுக்கு ஹிந்தியும் பேசத் தெரியவில்லை, ஆங்கிலமும் பேசத் தெரியவில்லை. அவர்கள் தங்கள் சொந்த விசயங்களைக் கவனிப்பதிலேயே மும்முரமாக இருந்தார்கள். அந்தப் பயணத்தில் நான் அவர்களுடனோ வேறு யாருடனோ பேசவில்லை. ஆனால், நாங்கள் கடந்துசென்ற வழியில் இருந்த கிராமப்புறங்களையும், ஒவ்வொரு இரயில் நிலையத்திலும் ஏற்பட்ட சலசலப்பையும் பார்ப்பதில் எனக்கு நானே திருப்தி அடைந்தேன். சலிப்பாக இருந்தபோது உறங்கி விட்டேன். என்னிடம் பணமாக சுமார் 500 ரூபாய் இருந்தது, அதில் கொஞ்சம் என்னுடைய

ஜீன்ஸின் வெவ்வேறு பாக்கெட்களில் கவனமாகச் சொருகி வைக்கப்பட்டிருந்தன. மிச்சமிருந்தது என்னுடைய ஹேவர்சேக்கின் (பயணத்திற்கான பெரிய பை) பல அறைகளில் வைக்கப்பட்டிருந்தது. நான் தூங்கும்போது, அந்த ஹேவர்சேக் தான் என்னுடைய தலையணையாக இருந்தது. மேலும், நான் ஒரு தண்ணீர்க் குப்பியும், கொஞ்சம் தின்பண்டங்களும் கொஞ்சம் பழங்களும் வைத்திருந்தேன், அவற்றைத் தான் நான் பயணத்தின்போது சாப்பிட்டேன்.

இரயில் மூன்றுமணி நேரம் தாமதமாகச் சென்றது, அது சென்னை சென்ட்ரல் இரயில் நிலையத்தை அடைந்தபோது மணி இரவு 11.30க்கு மேலேயே ஆகிவிட்டது. என் பெற்றோரின் நீண்டகால நண்பரான கே.மனோகரன் என்னை இரயில் நிலையத்தில் சந்திப்பதாக இருந்தது. மனோ மாமாவும் சாகு அத்தையும், அவர்கள் இருவரும் நல்ல உடல் நலத்துடன் இல்லாதபோதும்கூட, நான் சென்னையில் இருக்கும் நாட்களில் என்னை கவனித்துக்கொள்வதாக விருப்பத்துடன் ஏற்றுக் கொண்டிருந்தார்கள். மனோ மாமா சரியாக எங்கே காத்துக் கொண்டிருப்பார் எனத் தெரியாமல் நான் நுழைவாயிலை நோக்கி அவர் இருக்கிறாரா என கவனமாகப் பார்த்துக்கொண்டே நடந்தேன். ஆனால், நான் அவரைப் பார்த்தபோது அவரை அடையாளம் கண்டுகொள்ள முடியவில்லை. ஏனென்றால், அவரை நான் கடைசியாகப் பார்த்தபோது இருந்ததைவிட இப்போது அவரது முடி அதிக அளவு வெள்ளையாக இருந்தது. இருந்தாலும், நான் சுமந்துகொண்டிருந்த பிரகாசமான மஞ்சள்நிற ஹேவர்சேக்கை வைத்து அவர் என்னை அடையாளம் கண்டுகொண்டார். அவர் என்னை ஒரு ரிக்ஷாவில் வீட்டிற்கு அழைத்துச்சென்றார். அங்கு நான் கொஞ்சம் சாப்பிட்டுவிட்டு நேராகத் தூங்கச் சென்றுவிட்டேன். மனோ மாமா அடுத்தநாள் என்னை ஓய்வெடுக்குமாறு அறிவுறுத்தினார்,

நானும் அப்படியே செய்தேன். தொலைக்காட்சி நிகழ்ச்சிகளைப் பார்த்தேன், புகைப்படத் தொகுப்புகளைப் (*Albums*) பார்த்தேன், என்னுடைய ஓராண்டு இடைவெளித் திட்டத்தின் இதுவரையிலான நாட்களைப் பற்றியும் சென்னையில் என் திட்டங்களைப்பற்றியும் அவர்களுடன் பேசினேன்.

அடுத்தநாள் அதிகாலையில் மனோ மாமாவும் நானும் புதுக் கல்லூரிக்கு (நியூ காலேஜ்) கிளம்பினோம், அங்குதான் டாக்டர். சுல்தான் இஸ்மாயிலின் மண்புழுக் கல்விநிறுவனம் இருந்தது. அங்குதான் நான் அடுத்த இரண்டுவார காலத்தையும் மண்புழுக்களைப்பற்றியும் வெர்மிகல்ச்சர் (உரத்திற்காக மண்புழு வளர்த்தல்) பற்றியும் கற்றுக் கொள்வதில் கழிப்பேன். சொல்லப்போனால், எனக்குப் புனேவிலிருந்த டாக்டர். பாவல்கரின் நிறுவனத்திலோ சென்னையில் இருந்த டாக்டர். இஸ்மாயிலின் நிறுவனத்திலோ கற்றுக்கொள்ளத் தேர்ந்தெடுக்கும் வாய்ப்பு இருந்தது. ஆனால், நான் சென்னையைத் தேர்வு செய்தேன். ஏனென்றால், கோட்டயத்தில் நடைபெற்ற இயற்கை விவசாயிகளின் மாநாட்டில் டாக்டர். இஸ்மாயில் பேசியதைக் கேட்டிருந்தேன், அவரது பேச்சு எனக்கு மிகவும் பிடித்திருந்தது. மற்றொரு காரணம் நான் மாமல்லபுரத்திலிருந்த முதலைப் பண்ணைக்குச் செல்லத் துடித்துக் கொண்டிருந்ததுதான். மேலும், முதலைப் பண்ணைக்கு அருகில் இருந்த சென்னையில் இருப்பது டாக்டர். பாவல்கர் வேலைசெய்யும் தொலை தூரத்தில் இருந்த புனேவில் இருப்பதைவிட மிகச் சிறந்தது.

இதய நோயாளியாக இருப்பதால் மனோ மாமா வழக்கமாகப் பேருந்துகளில் பயணிக்காவிட்டாலும், புதுக் கல்லூரிக்கு நான் வழி தெரிந்துகொள்வேன் என்பதற்காக அவர் வேண்டுமென்றே அன்று காலை என்னைப் பேருந்தில் அழைத்துச்சென்றார். செல்லும் வழியில், நான் என்னுடைய

வழியைத் தெரிந்துகொள்வதற்காக அவர் பல்வேறு அடையாளங்களை எனக்குக் குறிப்பிட்டுக் காட்டினார். நகரத்தில் பயணம் செய்வது எப்படி என்பது குறித்துப் பல பொதுவான ஆலோசனைகளை வழங்கினார். நான் வேகமாகவும் ஆழ்ந்தும் கற்றுக்கொள்ள வேண்டியிருந்தது. ஏனென்றால், தமிழ் பேசாத எனக்கு இந்த நகரத்தில் மொழிதான் முக்கியமான பிரச்சினையாக இருக்கும்.

கல்லூரியில் நாங்கள் டாக்டர். இஸ்மாயில் அவர்களைச் சந்தித்தோம், அவர் எங்களை கல்லூரி வளாகத்தினூடாக மண்புழு தயாரிக்கும் குழிகள் (*Vermi-pits*) இருந்த நிலத்திற்கு அழைத்துச் சென்றார். நாங்கள் அங்கு இயற்கை எரிவாயுத் தொழிற்கூடத்தையும், குப்பை சேகரிக்கும் குழிகளையும், வளர்ப்புக் கூடைகளையும் (*Culture Crates*), தற்போது உபயோகிக்கத் தயாராக இருந்த இயற்கை உரத்தையும் பார்த்தோம். நான் அங்கு என் வேலையைத் துவங்க மிக ஆவலாக இருந்தேன். அடுத்த நாளே நான் என் வேலையை ஆரம்பிக்கலாம் என "சார்" (எல்லோரும் அவரை அழைப்பது போல) கூறியபோது நான் மிக்க மகிழ்ச்சியடைந்தேன்.

ஞாயிறு தவிர, மற்ற எல்லா நாட்களிலும், அடுத்த 15 நாட்களுக்கு நான் ஒரே அட்டவணையைக் கடைபிடித்தேன். அது: காலை 6 மணிவாக்கில் எழுந்திருப்பது; சூடான இட்லி, சாம்பார், தோசை, வடை அல்லது என்ன சமைக்கப்பட்டிருந்ததோ அதை காலை உணவாகச் சாப்பிடுவது; சாகு அத்தை எனக்காகத் தயாரித்த மதிய உணவை ஒரு ஹாட் பேக்கில் எடுத்துக்கொள்வது; காலை 7 மணிக்கு அசோக் பில்லரில் இருந்து பனகலுக்கு பேருந்தைப் பிடிப்பது; அங்கேபோய் பேருந்து மாறி புதுக் கல்லூரிக்குச் செல்லும் பேருந்தில் ஏறுவது; பொதுவாக நான் காலை சுமார் 8.30 மணிவாக்கில் கல்லூரியைச் சென்றடைவேன்; மதியம் சுமார் 3.30 அல்லது 4 மணி வரை கல்லூரியில் இருப்பேன்; அதன்பின் அதே பயணம்

தலைகீழாகும். நான் இந்த நேரங்களில் எனது பயணத்தை அமைத்துக் கொண்டது, போகும்போதும் வரும்போதும் அலுவலக நேரப் பயண நெரிசலைத் தவிர்க்க உதவியது.என் தந்தை பேராசிரியர். இஸ்மாயிலிடம் எனக்கு செய்முறை அனுபவங்கள் கொடுக்கப்பட வேண்டும் எனக் கூறியிருந்தார். அதனால் என்னுடைய பயிற்சித்திட்டம் புத்தக வாசிப்பு, குறிப்பெடுத்தல், மற்றவர்களைக் கவனித்து அவர்களுக்கு உதவுதல், அதன் பின் இறுதியாக மண்புழுக் குழிகளை (*Vermi-pits*) நானே உருவாக்குதல் எனப் பலவற்றின் கலவையை உள்ளடக்கியதாக இருந்தது.

முதல் இரண்டு நாட்களின்போது நான் மண்புழுக்களைப்பற்றியும் அவை வாழும் உலகைப்பற்றியும் டாக்டர். இஸ்மாயில் அவர்களால் பரிந்துரைக்கப் பட்ட புத்தகங்களிலிருந்து என்னால் முடிந்த அளவு வாசித்தேன். பின்னர் நான் மண்புழுக்களின் பல வகைகளையும், அவற்றின் இயக்கம், நிறம் மற்றும் பிற பண்புகளையும் கவனிக்க ஆரம்பித்தேன். மேலும், நான் மண்ணின் பல வகைகளைப் பற்றியும், அவற்றின் இழையமைப்பு மற்றும் இயல்பைப்பற்றியும் கற்றுக்கொண்டேன். டல்க்ரென் புனலை உபயோகித்து மண்மாதிரிகளை எப்படிச் சேகரிப்பது என்றும் கற்பிக்கப்பட்டேன்.

டாக்டர். இஸ்மாயிலின் கீழ் பலவகையான ஆராய்ச்சிகளைச் செய்து கொண்டிருந்த 8 முதல் 10 மாணவர்கள் அங்கிருந்தனர், முன்னர் பிரதான நூலகமாக இருந்த ஒரு பெரிய அறையில் நாங்கள் அனைவரும் பணிபுரிந்தோம். ஒவ்வொருவருக்கும் வேலைசெய்ய ஒரு தனி மேசை இருந்தது, நான் வந்தபோது எனக்கென ஒரு மேசையும் நாற்காலியும் கொடுக்கப்பட்டன. அந்தப் பெரிய அறையின் ஓர் ஓரத்தில் மண்புழு சார்ந்த புத்தகங்களைக் கொண்ட ஒரு சிறிய நூலகமும் இருந்தது, அதனால் எனக்கு வாசிக்கத் தேவைப்பட்ட புத்தகங்களைக் கண்டுபிடிப்பது ஓர் எளிய விசயமாக இருந்தது.

பிரதானமான மண்புழுப் படுக்கைகள் (*Vermi-beds*), உரக்குழிகள் (*Compost-pits*) போன்றன தரைத் தளத்தில் இருந்தன. கூடைகளில் வைக்கப் பட்டிருந்த சில மண்புழுப் படுக்கைகள் வாசிக்கும் அறைக்கு வெளியே இருந்த குறுகலான தாழ்வாரத்தில் அடுக்கிவைக்கப்பட்டிருந்தன.நாங்கள் எங்கள் மதிய உணவை உட்கொள்ளக்கூடுவதும் அங்குதான். வழக்கமாக, எனக்கு அந்தந்த நாள் வழங்கப்பட்டிருக்கும் வேலையைப்பற்றி மாணவர் களில் யாரேனும் ஒருவர் சுருக்கமாக வழிகாட்டுவார், அதன்பிறகு நானாகவே சமாளித்துவிடுவேன்.

அந்த நிறுவனத்தில் நான் இருந்த இரண்டு வாரங்களில் மண்ணின் நுண்துளைத்தன்மை (*porosity*), ஈரப்பதம் மற்றும் இழையமைப்பு ஆகியவற்றை நிர்ணயித்தல் உட்பட மண்புழுக்களுக்கான சூழல்குறித்து நிறைய கற்றுக்கொண்டேன். மண்ணில் இருந்த மற்ற பல உயிரினங்களையும் நான் கவனித்தேன், ஒரு கூட்டு நுண்ணோக்கியின் (*Compound Microscope*) உதவியுடன் நுண்ணிய- கணுக்காலிகளை (மைக்ரோ ஆர்த்தோபோட்ஸ்) புகைப்படம் எடுத்தேன். பயிற்சியின் முடிவில், நான் செய்முறையாக ஒரு மண்புழுப் படுக்கையை உருவாக்கினேன், அனுபவத்திற்காக ஒரு சில மண்புழுக்களையும் கரப்பான்பூச்சிகளையும் சாப்பிடக்கூட செய்தேன்.

சென்னையில் நான் தங்கியிருந்த காலம் சாகசங்கள் இல்லாமல் ஒன்றும் இல்லை. எனக்கு ஞாபகம் வருகிறது, என்னுடைய இரண்டாம் நாள், நான் ஒரு பேருந்தில் ஏறி காலியாக இருந்த ஓர் இருக்கைக்கு விரைந்தேன். கோவாவில் பேருந்தில் நடத்துனர் நம்மிடம் வந்து சீட்டு கொடுப்பார். ஆனால், சென்னையில் நாம் நடத்துனரிடம் (பேருந்தின் கடைசியில் உட்கார்ந்து இருப்பார்) சென்று சீட்டு வாங்க வேண்டும், இந்த வழக்கம் எனக்கு முற்றிலும் தெரியாது. எனவே, நடத்துனர் வருவார் என நான் காத்திருக்க, இரண்டு பரிசோதகர்கள் என்னருகே வந்து சீட்டு

வாங்காததற்காக என்னைப் பிடித்தனர். அவர்களில் ஒருவர் என்னை ஒரு பிரவாகம் போன்ற தமிழில் கடுமையாகத் திட்டத் தொடங்கினார். பல செய்கைகள் மற்றும் கை அசைவுகளுக்குப் பிறகு, எனக்குத் தமிழ் தெரியாதெனவும், நான் கோவாவைச் சார்ந்தவன் எனவும், சென்னையில் பேருந்தில் பயணிப்பது அதுதான் முதல்முறை எனவும் நான் விளக்கினேன். அவர் எனக்கு 25 ரூபாய் அபராதம் விதித்தார். அதிருஷ்டவசமாக, என்னிடம் போதுமான அளவு பணம் இருந்தது, அபராதத்தைக் கட்டினேன். ஆனால், நான் பேருந்திலிருந்து இறங்கியதும், என் காலி பணப்பையும் (*purse*) பிக்-பாக்கெட் அடிக்கப்பட்டிருந்தது தெரிந்தது.

மற்றொருமுறை நான் ஒரு பேருந்தின் கடைசிப்படியில் நின்றேன். கூட்டமான பேருந்துகளில் வாசலில் தொங்கிக்கொண்டே பலர் பயணிப்பதைப் பார்த்திருந்ததால், இதுவும் பரவாயில்லை என நான் நினைத்தேன். இருந்தாலும், இந்தப் பேருந்து வேகமெடுக்கத் துவங்கியதும், நான் பிடித்துத் தொங்கிக் கொண்டிருப்பது மிகவும் கடினமாக இருப்பதை உணர்ந்தேன். ஏனென்றால், பல நபர்களின் எடை என்மீது அழுத்தத் தொடங்கியது. வெளியே நீட்டிக்கொண்டிருந்த என்னுடைய கைகளால் நான்தான் அவர்கள் அனைவரையும் பிடித்து வைத்திருப்பதுபோல் உணர்ந்தேன், நிஜத்தில் நான் கதவுக்கு வெளியே தொங்கிக் கொண்டிருந்தேன். இனி ஒருபோதும் படிக்கட்டில் பயணம் செய்யக் கூடாதென நான் முடிவுசெய்தேன், ஒருவேளை என்னால் அப்படிச் செய்யாமலிருக்க முடிந்தால்!

நான் பலமுறை தொலைந்தும் போனேன். வழி தெரிந்துகொள்ள உதவிக்காக நான் ஒருபோதும் தொலைபேசியில் அழைக்கமாட்டேன், வீட்டை அடைவதற்கு உதவும் அடையாளமான இடங்கள் வரும்வரை, இந்தப்பக்கமும் அந்தப்பக்கமும் நடந்தும், வழிப்போக்கர்களிடம்

விசாரித்தும் நானாகவே பிரயத்தனப்படுவேன். அடிக்கடி நான் இறங்க வேண்டிய இடத்திற்குப் பல நிறுத்தங்கள் முன்னதாகவோ அல்லது பல நிறுத்தங்கள் கழிந்தோ பேருந்திலிருந்து இறங்கியிருக்கிறேன். அப்படி ஒருசமயம், அடுத்த நிறுத்தம் மிகதூரத்தில் இருந்ததால், ஒரு போக்குவரத்து விளக்கின் அருகே அந்தப் பேருந்து மெதுவாகச் சென்ற போது நான் அதிலிருந்து வெளியே குதித்துவிட்டேன். பின், திரும்பி நடப்பதற்கு சுமார் 30 நிமிடங்கள் ஆயின.

மனோ மாமாவும் சாகு அத்தையும் என்னை மிக நன்றாக வரவேற்றிருந்தாலும், இப்போது திரும்பிப் பார்க்கும்போது அவர்கள் வீட்டில் நான் தங்கியிருந்தபோது அவர்களுக்குப் பெரிய தலைவலியைத் தான் கொடுத்திருப்பேன் என நினைக்கிறேன். நான் கவனக்குறைவாக, எதையும் திட்டமிடாமல் இருப்பதும், நான் முற்றிலும் மகிழ்ந்து அனுபவித்த, எதையும் சாதாரணமாக எடுத்துக்கொள்ளும் என் வாழ்க்கை முறையும்தான் அதற்குக் காரணம். தொடர்ந்து குளிக்காமல் இருப்பதற் காகவோ, அப்படியே குளிக்க முடிவுசெய்தாலும் குளியலறையிலேயே நீண்டநேரம் இருப்பதற்காகவோ, அழுக்கடைந்த துணிகளைத் துவைப்பதற்குப் பதிலாக அவற்றையே அணிவதற்காகவோ மனோ மாமா தொடர்ந்து என்னை திட்டிக்கொண்டிருப்பார்.

சாகு அத்தை நன்றாக சமைப்பார், எனக்கு அவர் சமைத்த உணவுகளை மிகவும் பிடிக்கும். ஆனால், இரவு உணவுக்கு சைவ உணவு இருப்பதைக் காட்டிலும் கோழியோ அல்லது மீனோ இருந்தால் நான் இன்னும் அதிகமாக சாப்பிடுவதை அவரும் மனோ மாமாவும் கவனிப்பார்கள். சாதாரண உணவு இருந்தால் மட்டும் எனக்குப் பசி எப்படிக் குறைந்து போகிறது என்பதைக் குறித்து எனக்கு மறுபடியும் ஒரு சொற்பொழிவு கிடைக்கும். மேலும், நான் ஒரு மிக ஒழுங்கீனமான ஆள்தான்,

கல்லூரியிலிருந்து திரும்பி வந்ததும் சோஃபாவில் அலங்கோலமாக விழுந்து கிடப்பேன், தொலைக்காட்சி பார்க்கும்போது சேனல்களை மாற்றிக்கொண்டே இருப்பேன். இதெல்லாம் அவர்கள் இருவருக்கும் மிகவும் எரிச்சலூட்டுவதாகத்தான் இருந்திருக்கும். இருந்தாலும், அவர்கள் எனக்கு சாப்பாடு போடுவதில் மட்டுமல்லாமல், அவர்களுடைய வேலையையெல்லாம் விட்டுவிட்டு மண்புழுக் கல்விநிறுவனத்திலும், சிலந்திகளுக்கான நிறுவனத்திலும், பின்னர் முதலைப் பண்ணையிலும் நான் கற்றுக்கொள்வதற்கான ஏற்பாடுகளைச் செய்வதிலும் என்னை மிக நன்றாக கவனித்துக்கொண்டார்கள், அதற்காக நான் மிகவும் நன்றியுடன் இருக்கிறேன். அவர்கள் இந்தப் புத்தகத்தை வாசிக்கும்போது நான் அவர்களுக்குக் கொடுத்த எல்லா தொந்தரவுகளுக்காகவும் என்னை மன்னிப்பார்கள் என நம்புகிறேன்.

நாட்குறிப்பில் இருந்து எடுக்கப்பட்ட பகுதி : மண்புழுக்கள்

நவம்பர் 10 : சார் எனக்கு மண்புழுக்களைக் குறித்த ஒரு புத்தகத்தை வாசிக்கக் கொடுத்தார், பின் ஜெகன் என்னை விவசாய நிலத்திற்கு அழைத்துச்சென்றான். அங்கு, மண்புழுக்களைத் தவிர பல உயிரினங்களைப் பார்க்க முடிந்தது. ஓர் இடத்திலிருந்து நாங்கள் ஒரு மண்மாதிரியை எடுத்தோம், பின் ஆய்வகத்திற்குத் திரும்பிச் சென்று, அந்த மண் மாதிரியை டல்க்ரென் புனலில் போட்டோம். பின், நான் சென்று மண்புழுத் தொழில்நுட்பக் குழியில் இருந்து இன்னும் மூன்று மண் மாதிரிகளைக் கொண்டுவந்தேன். பின், நாங்கள் அவற்றை மூன்று வெவ்வேறு டல்க்ரென் புனல்களில் போட்டோம். அதற்குள் மதிய உணவு வேளையாகி விட்டது, நாங்கள் அனைவரும் ஒன்றாகச் சாப்பிட்டோம். உணவுக்குப் பின், மண்மாதிரிகளை நான் எடை போட்டேன், டல்க்ரென் புனல்களுக்கு

அடியில் இருந்த கண்ணாடிக் குவளையில் உள்ள உயிரினங்களைக் காண முடிந்தது. மதியம் 3.30 மணிக்கு நான் வீட்டிற்குக் கிளம்பினேன்.

நவம்பர் 11: காலையில் என்னிடம் இரண்டு வகை மண்புழுக்கள் கொடுக்கப்பட்டன. லேம்பிட்டோ மௌரிஷி மற்றும் பெரியோனிக்ஸ் எக்ஸ்கவேடஸ், அவற்றைக் கவனிக்குமாறு சொல்லப்பட்டேன். அந்தக் காலைப்பொழுது முழுதும் நான் அதையே செய்து கழித்தேன். மதிய உணவிற்குப் பிறகு, நான் கவனித்தவற்றை எழுதி வைத்துக்கொண்டேன். மாலையில் நாங்கள் கல்லூரியின் விளையாட்டு மைதானத்திற்கும் கல்லூரி விடுதிக்கு அருகே இருந்த பகுதிக்கும் சில விசயங்களைக் கவனிக்கச் சென்றோம். நாங்கள் ஒவ்வொன்றும் 25செ.மீX25செ.மீX25 செ.மீ அளவில் இரண்டு குழிகளை அந்த மைதானத்திலும், அதே அளவில் இன்னொன்றை விடுதியின் அருகிலும் தோண்டினோம். நாங்கள் கண்டறிந்த மண்புழுக்களின் வகைகள் மற்றும் எண்ணிக்கை, அவை க்ளிட்டெல்லேட்டுகளா இல்லையா என்பது உள்ளிட்ட பல விசயங்களைக் கூர்ந்து கவனித்தோம். மேலும், மண், வளிமண்டல வெப்பநிலை மற்றும் ஒப்பு ஈரப்பதம் தொடர்பாகவும் பல விசயங்களைக் கவனித்தோம். ஈரப்பதத்தை அளவிட மண்மாதிரிகளையும் எடுத்தோம்.

நவம்பர் 12 : வழக்கம்போல புதுக் கல்லூரிக்குக் கிளம்பினேன். சாருக்கு வைரஸ் காய்ச்சல் அதிகமாக இருந்ததால் அவர் இன்று வரவில்லை என சொன்னார்கள். நேற்று ஒரு ஆராய்ச்சி மாணவர் இறந்துவிட்டார், அதனால் இன்று ஒரு இரங்கல் கூட்டம் நடைபெற்றது. அதன்பிறகு, அன்று விடுமுறை என அறிவிக்கப்பட்டதால் எல்லோரும் கிளம்பி விட்டனர். நான் முற்பகல் 10.30 மணியளவில் வீட்டிற்கு வந்தேன். குளித்துவிட்டு கொஞ்சம் சாப்பிட்டேன். பின் நான் சிறிது நேரம் தொலைக்காட்சி பார்த்துவிட்டு, என் நாட்குறிப்பை எழுதினேன். இரவில்

மனோ மாமாவும் சாகு அத்தையும் சில விருந்தினர்களை அழைத்திருந்தனர். கோழிக்கறியும் சமைத்திருந்தனர், நான் அதை மிக மகிழ்ச்சியாகச் சாப்பிட்டேன்.

நவம்பர் 14 : இன்றைக்கும் சார் வரவில்லை. நாங்கள் சனிக்கிழமை சேகரித்திருந்த மண்மாதிரிகளின் ஈரப்பதத்தைக் கண்டுபிடிக்க ஜெகன் உதவியோடு அகச்சிவப்பு ஈரப்பதச் சமநிலைக் கருவியை (*Infrared Moisture Balance*) நான் உபயோகித்தேன். ஒரு மாதிரியை நாங்கள் செய்து முடித்த போது, மின்னழுத்தம் ஏறி இறங்கியது, எனவே அதற்குப் பதிலாக நாங்கள் டல்க்ரென் புனலை உபயோகித்தோம். பின் ஜெகன் என்னை வயலிலிருந்தும் விடுதியின் அருகிலிருந்த பகுதியிலிருந்தும் மண்மாதிரிகளைச் சேகரித்துவர அனுப்பினார். அந்த மண்மாதிரிகளை நாங்கள் டல்க்ரென் புனலில் இட்டு, கூட்டு நுண்ணோக்கியின் கீழே இருந்த கண்ணாடிக் குவளையில் விழுந்த கணுக்காலிகளை (ஆர்த்தோபோட்) கூர்ந்து நோக்கினோம். நாங்கள் சில பாதுகாக்கப்பட்ட நுண்ணிய-கணுக்காலி மாதிரிகளையும் பார்த்தோம்.

நவம்பர் 15 : 100 கிராம் மண்மாதிரிகளைத் தூளாக்கி, ஒவ்வொரு மண் மாதிரியையும் 5 சல்லடைகளின் வழியாக சல்லடை செய்தோம். பின், ஒவ்வொரு சல்லடையிலும் இருந்த மண்ணை எடையிட்டுக் குறித்துக்கொண்டேன்.

நவம்பர் 16 : காலையில் மண்ணை சல்லடை செய்தேன். மாலையில், மண்ணின் தண்ணீரைத் தக்கவைக்கும் திறன் மற்றும் நுண்துளைத் தன்மையை கண்டுபிடிக்க கீன்ஸ் கப்களை (*Keens cups*) உபயோகித்தேன்.

நவம்பர் 18 : இன்று காலை சார் வந்தார். நான் நூலகத்தில் கொஞ்சநேரம் சில புத்தகங்களை வாசித்தேன். பின், கொஞ்சம் மண்ணை சல்லடையில்

சலித்தேன். பின்பு புன்சென் அடுப்பில் கொஞ்சம் மண்ணை எரித்தேன். மதியத்திற்குப் பிறகு, "ஜூனியர் ஷைலாக்" என்ற மிக நகைச்சுவையான திரைப்படத்தைப் பார்த்தேன்.

நவம்பர் 19 : என்னுடைய அறிக்கை வரைவைத் தயாரிக்க ஆரம்பித்தேன். மாலையில் பாபுவுடன் என்னுடைய அறிக்கைக்காகப் புகைப்படங்கள் எடுப்பதற்கு ஒரு புகைப்படச்சுருள் வாங்கச் சென்றேன்.

நவம்பர் 20 : இரண்டாவது மண்மாதிரியை எரித்தேன். அதன்பிறகு, புகைப்படக் கருவி பொருத்தப்பட்ட ஒரு கூட்டு நுண்ணோக்கியின் உதவியுடன் நுண்ணிய-கணுக்காலிகளை நானும், ஜெகனும், சாரும் புகைப்படம் எடுத்தோம். மதிய உணவிற்குப் பிறகு, மாணவர்களில் ஒருவர் நடத்திய ஒரு கருத்தரங்கில் கலந்துகொண்டேன்.

நவம்பர் 21 : காலையில் ஒரு பெரியோனிக்ஸ் எக்ஸ்கவேடஸ் மண்புழுவைச் சாப்பிட்டேன். பின் வெவ்வேறு மண்வகைகளின் தண்ணீரைத் தக்கவைத்துக்கொள்ளும் திறனைக் கண்டுபிடிக்க சில மண்மாதிரிகளை எடை போட்டேன், எரிக்கப்பட்ட மண்ணின் எடை பார்த்தேன். வெவ்வேறு மண்மாதிரிகளின் மண் இழையமைப்பை எப்படிக் கணித்துக் கண்டுபிடிப்பது என்பதையும் கற்றுக்கொண்டேன். என் அறிக்கையை எழுதுவதைத் தொடர்ந்தேன்.

நவம்பர் 22 : உட்கார்ந்து என் அறிக்கையின் கடைசிப்பகுதிகளை எழுதினேன். பின், அதை சித்ராவிடம் கொடுத்தேன், அவர் அதைத் திருத்தினார். அவர் முடித்ததும், அதை சாரிடம் கொடுத்தார், அவரும் சில திருத்தங்களைச் செய்தார்.

நவம்பர் 23 : நான் வாங்கியிருந்த புதிய கையேட்டில் என் அறிக்கையின் இறுதிவரைவை எழுதினேன். பின், நானும் ஜெகனும் நாங்கள் முன்னதாக

எடுத்திருந்த புகைப்படங்களை கையேட்டின் பல இடங்களில் ஒட்டினோம். பின்பு, சார் நானாகவே ஒரு மண்புழுப் படுக்கையை உருவாக்க வேண்டியிருக்கும் என்றார். அவர் என்னிடம் ஒரு வாளியைக் கொடுத்தார், நான் அதில் ஒரு மண்புழுப் படுக்கையை உருவாக்கினேன். நான் அதைச் சரியாகச் செய்திருந்தேனா என சார் சோதித்தார்.

நவம்பர் 24 : என் கையேட்டில் செய்யவேண்டி மிச்சமிருந்த சில வரைபடங்களை வரைந்தேன். பின், சாரிடம் அதை இறுதி ஒப்புதலுக்காகக் கொடுத்தேன். அவர் என்னை ஒவ்வொரு புகைப்படத்தையும் பற்றி ஒருசில வரிகள் எழுதச்செய்தார். சுமார் ஒரு வாரம் கழித்துவந்து நான் அதை வாங்கிக்கொள்ள வேண்டும் என்று அவர் கூறினார். அதன்பிறகு, நான் எல்லோரிடமும் விடைபெற்றுக்கொண்டு சுமார் 4.30 மணிக்கு வீட்டிற்குக் கிளம்பினேன்.

10 நாட்களுக்குப் பிறகு...

டிசம்பர் 5 : இன்று விடுமுறை, நான் புதுக் கல்லூரியிலிருந்து எனது அறிக்கைக் கையேட்டை வாங்கச் சென்றேன், சாரிடம் அவருடைய கையொப்பத்திற்காக நான் அதைக் கொடுத்திருந்தேன். என் எல்லா நண்பர்களையும் அங்கு சந்தித்தேன். என்னுடைய அறிக்கைக் கையேட்டில் அவர்கள் அனைவரும் தங்கள் கருத்துகளை எழுதினர், பின் அது முத்திரையிடப்பட்டது. நான் அந்த நிறுவனத்தில் முடித்திருந்த மண்புழுப் பயிற்சிக்காக சார் எனக்கொரு சான்றிதழ் கொடுத்தார். பின், சித்ரா அவரது ஃபியட் காரில் என்னைப் பனகல் பார்க் பேருந்து நிறுத்தத்தின் அருகே கொண்டுவந்துவிட்டார்.

மண்புழு வளர்ப்பு குறித்த களப்பணிக் குறிப்புகள் :
குப்பையைத் தங்கமாக மாற்றுதல்

மண்புழு உரமும் மண்புழு வடிநீரும் தற்போது மிகப் பிரபலமாக ஆகிவிட்ட, மண்புழுவிலிருந்து கிடைக்கும் இரு பொருட்கள் ஆகும். சமையலறைக் கழிவுகள் மற்றும் இறந்த தாவரப்பகுதிகளை உள்ளடக்கிய குப்பையினாலான சாதாரண இயற்கைக் கழிவுப்பொருட்கள் உபயோகிக்கப் பட்டு, அவை மண்புழுக்களின் உதவியோடு உரமாக மாற்றப்படுகின்றன.

மண்புழுக்கள்

மூன்று வகையான மண்புழுக்கள் உள்ளன. முதலாவது, எபிகீயல் அல்லது மேற்பரப்பில் வாழும் மண்புழு (பெரியோனிக்ஸ் எக்ஸ்கவேடஸ்), இது மண்ணின் மேல் அடுக்கில் காணப்படும் இயற்கைக் குப்பைகளை மட்டுமே உண்ணும். இரண்டாவது அனீசிக் மண்புழுக்கள்(லேம்பிட்டோ மௌரிஷி), இவை மண்ணின் மேல் அடுக்குகளில் காணப்படும், இலைக்கழிவுகளையும் குப்பைகளையும் உண்டு வாழும். மூன்றாவது வகை மண்ணின் உள்ளே ஆழமான பகுதிகளில் காணப்படும், இவை எண்டோஜீயிக் மண்புழுக்கள் (ஆக்டோகேட்டோனா த்ரைரெட்டோனிஸ்) என அழைக்கப்படுகின்றன.

மண்புழு வளர்ப்பிற்கு பரிந்துரைக்கப்படும் மிகப் பொருத்தமான மண்புழுக்கள் எபிஜீயிக் மற்றும் அனீசிக் மண்புழுக்கள் ஆகும். பெரியோனிக்ஸ் எக்ஸ்கவேடஸ் ஊதாச் சிவப்பு நிறத்தில் கடினமாக இருக்கும். இரண்டு முனைகளுக்கு அருகிலும் பெரியோனிக்ஸ் எக்ஸ்கவேடஸ் கிட்டத்தட்ட கருப்பு நிறத்தில் இருக்கும். அது சிறியதாகவும் ஒல்லியாகவும் இருக்கும்(சுமாராக 10 செ.மீ. நீளம்), லேம்பிட்டோ மௌரிஷியுடன் ஒப்பிடும்போது மிக சுறுசுறுப்பானது. அது லேம்பிட்டோ மௌரிஷியைவிட வேகமாக இனப்பெருக்கமும் செய்யும்.லேம்பிட்டோ மௌரிஷி சாம்பல் வெள்ளை நிறத்தில், பளபளப்பாக இருக்கும். பெரியோனிக்ஸ் எக்ஸ்கவேடஸுடன்

ஒப்பிடும்போது தடிமனாகவும் நீளமாகவும் (16 செ.மீ) இருக்கும்.

மண்புழுக்கள் குளிர்ந்த வெப்பநிலை, ஈரமான மண், ஈரப்பதம், ஒப்பீட்டளவில் குறைந்த வெப்பம் மற்றும் மிகக் கரடுமுரடாகவும் இல்லாத மிகப் பொடியாகவும் இல்லாத மண் ஆகியவற்றை விரும்பு கின்றன. மண்புழுக்களை மண்புழு வளர்ப்பிற்கு உபயோகப்படுத்த ஏற்ற சூழ்நிலைகள் இவை என்பதை மனதில் வைக்க வேண்டும். மண்புழுக்கள் தோலின் மூலம் சுவாசிப்பதால், அவற்றின் தோல் உலர்ந்துபோனாலோ, கோழையின் அளவு குறைந்தாலோ அவை அழிந்து விடுகின்றன. எனவே, மண்புழுக்களை மண்புழு உரப்பெட்டிகளில் உயிருடன் வைத்திருக்க, மண்புழுப் படுக்கை ஈரமாக இருப்பதை உறுதிசெய்வதில் கவனமாக இருக்க வேண்டும். இருந்தாலும், மண்புழுக்கள் நீர் தேங்கியுள்ள மண்ணை விரும்புவதில்லை. சொல்லப் போனால், மண்புழுக்கள் நீரில் நீண்ட நேரம் வைக்கப்பட்டால், அவற்றின் கழிவிலிருந்து வெளிவரும் அம்மோனியாவின் செறிவு நீரின் நச்சுத் தன்மையை அதிகரித்து, அதை மண்புழுக்கள் வாழத் தகாததாக மாற்றுகிறது. மேலும், மண்புழுக்களால் கொஞ்சம்கூட உப்பையோ உப்புநீரையோ பொறுத்துக்கொள்ள முடியாது.

மண்புழுக்கள் இருபாலின உயிரிகள் (ஹெர்மாஃப்ரோடைட்ஸ்) ஆகும். அவற்றின் வகையைப் பொருத்து, அவற்றின் ஆயுட்காலம் 6 மாதத்திலிருந்து ஒரு வருடம்வரை இருக்கும். முழுதாக வளர்ந்த மண்புழுக்கள் இனச்சேர்க்கைக்குப் பிறகு அவற்றின் க்ளிட்டெல்லத்தை (ஒரு சிறிய பட்டை போன்ற தோலின் அதீத வளர்ச்சி) உதிர்க்கின்றன, கூட்டையும் உருவாக்குகின்றன. அது அடைகாத்து குஞ்சுபொரிக்க சுமார் 14 நாட்கள் ஆகின்றன. இளம் பருவத்திலிருந்து க்ளிட்டெல்லேட் நிலைக்கு (முழுதாக வளர்ந்த அல்லது இனப்பெருக்க நிலை) வருவதற்கு

15லிருந்து 18 நாட்கள் ஆகும். இப்படியாக, மண்புழுக்களால் தங்கள் ஆயுட்காலத்தில் பலமடங்கு வளர முடியும், இது அவற்றை இன்னும் அதிக அளவு குப்பையை பதப்படுத்தத்தக்கவையாக ஆக்குகின்றது.

மண்புழு உரம்

ஒரு குழியையோ, ஒரு சிறிய பிளாஸ்டிக் அல்லது மரக்கூடையையோ, இல்லை ஒரு வாளியையோ கூட இயற்கைப் பொருட்களிலிருந்து மண்புழு உரம் தயாரிக்கப் பயன்படுத்த முடியும். பின்வருமாறு செய்ய வேண்டிய அவசியமில்லை. இருந்தாலும், இரண்டு கூடைகள் ஒரே நேரத்தில் உபயோகப்படுத்தப்படலாம். ஒன்று, புதுக்குப்பைக்காக பயன்படுத்தப்படும். அதே நேரத்தில், மற்றொன்றில் இருக்கும் குப்பை அழுகவிடப்படலாம்.

முதலில் 6லிருந்து 8 துளைகள் போடப்பட வேண்டும் (ஒவ்வொரு முனையிலும் ஒவ்வொன்றும், கூடையின் நடுப்பகுதியில் நான்கும்). ஒரு பானை அல்லது வாளிக்கு சுமார் 3-5 துளைகள் தேவைப்படும். முதலில் கூடை அல்லது குழியில் முதல் அடுக்காக கூழாங்கற்கள் அல்லது உடைந்த செங்கற்களால் ஒரு அங்குல(*inch*) அளவிற்கு நிரப்ப வேண்டும். அடுத்து, அரை அங்குலம் முதல் ஒரு அங்குலம் அளவிற்கு மணலைப் பரப்பி அடுத்த அடுக்கை உருவாக்க வேண்டும். அதன் மேல், ஐந்து முதல் ஆறு அங்குல அளவிற்கு மண்ணைப் பரப்ப வேண்டும். பின், லேம்பிட்டோ மௌரிஷி அல்லது பெரியோனிக்ஸ் எக்ஸ்கவேடஸ் மண்புழுக்களைப் போட வேண்டும். பின், அந்த மண்ணைத் தண்ணீரால் நனைக்க வேண்டும். சிறிதளவு மாட்டுச்சாணியையும் (நைட்ரஜன்), கொஞ்சம் வைக்கோலையும் (கார்பன்) அதன்மேல் பரப்ப வேண்டும். பிறகு குழியிலிருக்கும் பொருட்களை அப்படியே 20-30 நாட்களுக்கு விட்டுவிட வேண்டும். இது மண்புழுப் படுக்கை என அழைக்கப்படுகிறது.

மாட்டுச்சாணியும் வைக்கோலும் மண்புழுக்களை பலமடங்கு வளரச் செய்யும். இப்போது, மண்புழு உரக்கூடை அல்லது குழி இயற்கைக் குப்பைகளைப் பதப்படுத்து வதற்குத் தயாராக இருக்கும்.

மண்புழுப் படுக்கையின்மீது மொத்த இயற்கைக் கழிவுகளும் சமமாகப் பரப்பப்பட வேண்டும். ஒரேயடியாக அதிக அளவு குப்பையைக் கொட்டுவதற்குப் பதிலாக முடிந்த வரை சிறுசிறு அளவுகளில் தொடர்ந்து போட வேண்டும். குப்பையை உடனடியாக மண்புழு பதப்படுத்த ஆரம்பிக்கும். பெட்டியில் அவ்வப்போது தண்ணீர் தெளிக்க வேண்டும், இதனால் மண்புழுப் படுக்கை ஈரமாகவே இருக்கும். அந்தப் பெட்டி இயற்கைக் கழிவுகளால் நிரம்பியதும், அதனைச் சிறிது மண்ணால் மூடி, இடையூறின்றி அழுகவிட வேண்டும். குழியில் தண்ணீர் தெளித்தலை மட்டும் தொடர வேண்டும். அது முழுவதும் அழுகியதும் (சுமார் 45 நாட்கள்), சுமார் 3லிருந்து 5 நாட்களுக்குத் தண்ணீர் தெளிப்பதை நிறுத்த வேண்டும். இது மண்புழுக்களை பெட்டியின் அடிப்பகுதிக்கு இடம் பெயரச் செய்யும், மேல்பகுதி மண்ணுடன் ஒப்பிடும்போது அங்கே ஈரம் அதிகமாக இருக்கும். பின், இயற்கைக் கழிவாக இருந்து இப்போது உரமாக மாற்றப்பட்டிருக்கும் மண்ணின் 'மேல் அடுக்கு' மண்புழுப் படுக்கைக்கு இடையூறில்லாமல் அகற்றப்பட வேண்டும். இந்த இயற்கை உரத்தைத் தாவரங்களுக்குப் பயன்படுத்தலாம்.

மண்புழு வடிநீர்

மண்புழு வடிநீர் தயாரிக்க ஒரு அண்டாவையோ, பீப்பாயையோ அல்லது வாளியையோ உபயோகப்படுத்தலாம். அந்த அண்டா அல்லது வாளி தரையிலிருந்து கொஞ்சம் மேலாக முட்டுக்கொடுத்து வைக்கப்பட வேண்டும். அதன் அடியில் ஒரு துளையிடப்பட வேண்டும். இந்தத் துளையின் வழியாக ஒரு குழாயைச் செருகி அதன் வெளிப்புற முனையில்

ஒரு தண்ணீர்க் குழாயை இணைக்க வேண்டும்.

அந்த அண்டாவின் அடிப்பகுதி சரளைக்கல் அடுக்கால் நிரப்பப்பட வேண்டும் (சுமார் 6-8 அங்குலங்கள்). அதன்மேல், மணலால் ஆன ஒரு அடுக்கும் (6-8 அங்குலங்கள்), அதன்பின் மண்ணால் ஆன ஒரு அடுக்கும் (6-8 அங்குலங்கள்) பரப்பப்பட வேண்டும். பின் மண்புழுக்களைப் போட்டு, மண்ணைச் சிறிது நனைக்க வேண்டும். பின், சிறிது மாட்டுச் சாணியையும் வைக்கோலையும் கலந்து அதன்மேல் தூவ வேண்டும். இதை சில நாட்களுக்கு அப்படியே விட்டுவிட வேண்டும்.

மண்புழு வடிநீர் தேவைப்படும்போதெல்லாம், ஒரு நீர்த்தெளிப்பானைப் பயன்படுத்தி தண்ணீர் தெளிக்கப்பட வேண்டும் அல்லது கொஞ்சம் கொஞ்சமாக அதன் மேலாக ஊற்றப்பட வேண்டும் (150 லிட்டர் அண்டாவிற்கு 5 லிட்டர் தண்ணீர்). மண்புழுக்களால் ஏற்படுத்தப்படும் துளைகளின் வழியாக இந்தத் தண்ணீர் செல்லும், கரிமச்செறிவு மிகுந்த மண் திரவ உரமாக மாறும், பாத்திரத்தின் அடிப்பகுதியில் இதைச் சேகரிக்கலாம். வைக்கோலும் மாட்டுச்சாணியும் மண்புழுக்களால் சாப்பிடப்படுவதால், அவற்றைப் படிப்படியாக மாற்றவேண்டும்.


முடிவு

ஒரு மண்புழு உரக்குழியில் நடப்பதைப்போன்ற அதே முறையில்தான் இயற்கையிலும் குப்பையானது அழுகவைக்கப்படுகிறது. தரையில் விழும் குப்பை (இலைப் பகுதிகள், குச்சிகள், மரப்பட்டைகள், மரக்கட்டைகள், பூக்கள், பழங்கள், மற்றும் இதர தாவரங்கள், விலங்குகளின் பகுதிகள் ஆகியவற்றை உள்ளடக்கியது) தொடர்ந்து பனியாலோ மழையாலோ நனைக்கப்படுகிறது. பின், நுண்ணியிரிகள், பூஞ்சைகள் மற்றும் நுண்ணிய-கணுக்காலிகளின் உதவியோடு அழுகுதல்

ஆரம்பிக்கிறது.

நுண்ணிய-கணுக்காலிகள் இரண்டு வகைப்படும், நுண்ணியிரிகள் மற்றும் பூஞ்சைகளால் தாக்கப்படும் குப்பையை உண்டு வாழும் டெட்ரிடைவோர்ஸ், மற்றும் டெட்ரிடைவோர்ஸை உண்டு வாழும் ப்ரிடேட்டர்கள். அழுகாத குப்பை, இறந்த நுண்ணுயிரிகள் மற்றும் நுண்ணிய -கணுக்காலிகள், அவற்றின் கழிவுகள் மற்றும் அவற்றிலிருந்து சுரக்கும் பொருட்கள் ஆகியன கலந்து ஹ்யுமஸை (இலை தழை மட்கிய மண்) உருவாக்குகின்றன. இந்த ஹ்யுமஸ் ஒரு சிக்கலான வடிவத்தில் இருக்கிறது, அதனால் தாவரங்களின் பயன்பாட்டுக்குக் கிடைப்பதில்லை. இங்கேதான், மண்புழுக்கள் முக்கியப்பங்கு வகிக்கின்றன. மண்ணில் இருக்கும் மண்புழுக்கள் ஹ்யுமஸை சாப்பிடுகின்றன. விளைவாக, இந்த மண்புழுக்களால் வெளியேற்றப்படும் கழிவுகள் (வெர்மிகேஸ்ட்) சத்துக்கள் மிகுந்து இருக்கின்றன, இவை தாவரங்களின் வளர்ச்சிக்குத் தயாராக இருக்கும் ஒரு வடிவத்தில் இருக்கின்றன. பதிலுக்கு, தாவரங்கள் மடியும்போதோ, இலைகளை உதிர்க்கும்போதோ அவைகள் குப்பை உருவாக்கத்தில் பங்குகொள்கின்றன, இக்குப்பை நுண்ணுயிரிகளுக்கும் பூஞ்சைகளுக்கும் உணவாகின்றது. இப்படியாக, இயற்கையின் சுழற்சி முழுமையடைகிறது.

மண்புழுக்களால் நிஜமாகவே குப்பையைத் தங்கமாக மாற்றமுடிவதால், அவை அற்புதமான உயிரினங்கள் என்பதை நிரூபித்துவிட்டன.



சிலந்திகள்

மண்புழு வளர்த்தலில் எனது பயிற்சிக்காலம் முடிந்ததும், டாக்டர். கே. விஜயலக்ஷ்மி அவர்களுடன் எனக்கு மற்றொரு இரண்டு வார பயிற்சிக்காலம் கிடைத்தது, என் அப்பா அவரை இந்தியாவின் 'சிலந்திப் பெண்மணி' என்று அழைப்பார். டாக்டர். விஜயலக்ஷ்மி கரப்பான் பூச்சிகளைக் கட்டுப்படுத்துவதற்கான ஓர் உயிரியல் ஆயுதமாக சிலந்திகள் வளர்ப்பதைப்பற்றி ஆராய்ச்சி செய்து வருகிறார். அவருடைய பணியிடம் முழுதும் குப்பிகளில் பலவகையான சிலந்திகள் அவருடைய கண்காணிப்பின்

கீழ் வளர்க்கப்படுகின்றன. சிலந்திகளின் நிபுணரான அவர் அந்தத் துறையைப் பற்றிய ஒரு பிரபலமான புத்தகத்தின் ஆசிரியரும் ஆவார்.

சொல்லப்போனால், முதலைப் பண்ணைக்குச் செல்லும் எனது திட்டத்திற்கான முன்தயாரிப்புகள் அனைத்தும் தயார் என என் பெற்றோர் அழைத்துத் தெரிவிப்பார்கள் என நான் ஆவலுடன் காத்திருந்தேன். ஆனால், என் தந்தை அழைத்து முதலைப் பண்ணையில் நான் தங்குவதற்கான இறுதிக்கட்ட ஏற்பாடுகளைச் செய்துகொண்டிருப்பதாகவும், இடையில் இருக்கும் சுமார் 10 நாட்களை நான் டாக்டர். விஜயலக்ஷ்மி அவர்களிடமிருந்து சிலந்திகளைப்பற்றியும், அந்த சிலந்திகளை அவர் வழக்கத்திற்கு மாறாக எப்படிப் பயன்படுத்த நினைக்கிறார் என்பதைக் குறித்தும் முடிந்த அளவு கற்றுக்கொள்ளலாம் என்றார். நான் உடனடியாகச் சம்மதித்தேன்.

டாக்டர். விஜயலக்ஷ்மியும் அவரது கணவரும் இந்திய அறிதல் முறைகளைச் சார்ந்த ஒரு நிறுவனத்தில் (*Centre for Indian Knowledge Systems*) வேலை செய்கின்றனர். CIKS ஓர் ஒருமாடிக் கட்டிடத்தில் அமைந்திருந்தது, டாக்டர். விஜயலக்ஷ்மியின் அலுவலகம் தரைத்தளத்தில் இருந்தது. அவர் இங்கே பூச்சிக்கொல்லிகளாகப் பயன்படும் பல்வேறு தாவரங்களைப் பற்றி ஆராய்கிறார். அவரது வேலையின் இந்த அம்சத்தைப் பற்றி எனக்கு அக்கறை இல்லவே இல்லை.

அந்தக் கட்டிடத்தின் கிடங்கில்தான் சிலந்திகளுக்கான அறை இருந்தது, அது பல்வேறு வளர்ச்சி நிலைகளில் இருந்த பல்வேறுவகை சிலந்திகளைக் கொண்ட குப்பிகளால் நிரம்பிய ஓர் ஆய்வகம் மாதிரி இருந்தது. நான் அங்கிருந்த சமயத்தில், 500க்கும் மேற்பட்ட ஒளி ஊடுருவும் பிளாஸ்டிக் குப்பிகள் இருந்திருக்கும், ஒவ்வொன்றும் முறையாகப் பெயரிடப்பட்டு, ஒன்றை அடுத்து ஒன்றாக இருந்தன, அனைத்திலும் சிலந்திகள்! காற்றிற்காக

ஒவ்வொரு குப்பியிலும் அதன் மூடியில் சிறிய துளைகள் இருந்தன. உணவு போடுவதற்காக மூடியில் இன்னொரு துளை இருந்தது, அந்தத் துளை பஞ்சினால் அடைக்கப் பட்டிருந்தது. அனைத்து சிலந்திகளும் அவற்றின் வளர்ச்சி, தோலுரித்தல், இணைசேர்தல் மற்றும் குஞ்சு பொரித்தல் உள்ளிட்ட செயல்பாடுகளும் டாக்டர். விஜயலக்ஷ்மி அவர்களால் கண்காணிக்கப்பட்டன. அவருக்கு செல்வன் என்றொரு உதவியாளர் இருந்தார். அவர் ஆவணப்படுத்துதல், ஒரு குறிப்புப் புத்தகத்தில் குறிப்பெடுப்பது உள்ளிட்ட வேலைகளைக் கவனித்துக் கொண்டார்.

டாக்டர். விஜயலக்ஷ்மியுடன் நான் பணிபுரிந்த இரண்டு வார காலத்தில், நான் இந்தச் சூழ்நிலையில் எளிதாகவே பொருந்திப்போனேன். டாக்டர். விஜயலக்ஷ்மி கொடுத்த சிலந்திகள் பற்றிய புத்தகங்களை வாசித்தேன், வெவ்வேறு சிலந்திகளை கண்டுபிடிக்கக் கற்றுக்கொண்டேன். அதே நேரத்தில், அந்தக் கிடங்கில் வசித்த மிகப்பெரிய சிலந்திகளின் கூட்டத்தைப் பராமரிப்பதற்குத் தேவைப்பட்ட எல்லா வேலைகளிலும் செல்வனுக்கு உதவினேன்.

டாக்டர். விஜயலக்ஷ்மி வைத்திருந்த சிலந்திகள் வேட்டைக்கார சிலந்திகள் (*Giant Crab Spider*) என அழைக்கப்படுகின்றன. இந்த சிலந்திகள் வலை பின்னுவதில்லை. இவை கரப்பான்பூச்சிகளை மட்டுமே உண்டு வாழும். இந்த சிலந்திகள் அவற்றின் இரையான கரப்பான்பூச்சிகளைவிட கொஞ்சம் சிறியதாக இருந்தன. நான் குஞ்சுகளைப் பிரித்தல், அவற்றிற்கு உணவூட்டுதல், தோலுரித்தலை கவனித்துக்கொள்ளுதல், அவற்றிற்கு உணவூட்ட பூச்சிகளைப் பிடித்தல் போன்ற வேலைகளைச் செய்வதுண்டு. நான் இங்கு நிறைய புத்தகங்களை வாசித்தேன், சில சமயங்களில் தோட்டத்தில் சிலந்திகளைப் பிடித்து அவற்றின் வகையைக் கண்டு பிடித்து, அவற்றைப்பற்றிக் கற்றுக்கொண்டேன்.

அந்தக் கிடங்கில் வசித்த உயிரினங்களில் சிலந்திகள் மட்டுமல்ல, கரப்பான்பூச்சிகளும் இருந்தன. அவை வாளிகளில் வளர்க்கப்பட்டன, நடுவில் தடித்த அட்டையைச் சுருட்டி வைத்து, வாளியில் உடைந்த பிஸ்கட்டுகள் போடப்பட்டிருக்கும். இந்த கரப்பான்பூச்சிகள் வாரத்திற்கு ஒருமுறை வேட்டைக்கார சிலந்திகளுக்கு உணவாகப் போடப்பட்டன.

சிறிய சிலந்திகளுக்குப் பூச்சிகள் உணவாகக் கிடைக்கும், நாங்கள் அவற்றை தினமும் தோட்டத்திலிருந்து பிடித்தோம். சிலந்திகளுக்கு உணவாகப் பூச்சிகளை உயிரோடு போட வேண்டும், அதனால் நாங்கள் பூச்சிகளைப் பிடிக்க ஒளி ஊடுருவும் குப்பிகளைப் பொறிகளாகப் பயன்படுத்தினோம். பிடித்ததும் அவற்றைக் கவனமாக சிலந்திகளின் குப்பிகளில் போட்டுவிடுவோம். சில நேரங்களில் சிலந்தி உடனடியாகப் பூச்சியைப் பிடித்து உண்ணும். மற்ற நேரங்களில், சிலந்தி உண்ணத் தயாராகும்வரை அந்தப் பூச்சி சில நாட்களாக அந்தக் குப்பியில் சலசலத்துச் சுற்றித்திரியும்.

டாக்டர். விஜயலக்ஷ்மி ஒரு குறிப்பிட்ட வகை பூச்சிகளை நுண்ணிய வலையால் மூடப்பட்ட ஒரு சிறிய கூண்டில் வளர்த்தார், அதன் மையத்தில் இனப்பெருக்கத்திற்கான ஊடகமாக ஒரு சிறிய கிண்ணத்தில் பால் வைக்கப்பட்டிருக்கும்.

குஞ்சு சிலந்திகளும் தனித்தனிக் குப்பிகளில் வைக்கப்பட்டிருந்தன. பூச்சிகளின் லார்வாக்களையோ, அல்லது மைதாவோ ரவையோ கெட்டுப் போகத் துவங்கும்போது வரும் லார்வாக்களையோ அவை உண்ணும்.

இந்த எல்லா பரிசோதனைகளின் நோக்கமும் கரப்பான்பூச்சிகளைக் கட்டுப்படுத்தும் பூச்சிக்கொல்லிகளாக எந்தவகைச் சிலந்திகள் பயன்படும் என்பதைக் கண்டுபிடிப்பதே. சிலந்திகளின் வளர்ச்சி, துன்பம் தாங்கும்

வலிமை, உணவுப் பழக்கங்கள், இனப்பெருக்கம் போன்ற விசயங்கள் எந்தவகைச் சிலந்திகள் கரப்பான்பூச்சிகளைக் கொன்று தின்னும் உயிரிகளாக வளர்க்கப்படலாம் என்பதை நிர்ணயிக்கும் முக்கியக் காரணிகளாக இருக்கின்றன.

சிலந்திகள் சார்ந்த வேலையைத்தவிர, செல்வனிடமிருந்து நான் தமிழ் கற்றுக்கொள்ளவும் முயன்றேன். ஆனால், அவர் என்னிடமிருந்து ஆங்கிலம் கற்றுக்கொள்வதில் குறியாக இருந்தார். அதனால் நாங்கள் இருவருமே ஒரு புதிய மொழியைக் கற்றுக் கொள்வதில் தோற்றுப் போனோம், கடைசியில் ஒரு கலவையான (காக்டெயில்) தமிங்கிலிஷ் பேசத்தான் முடிந்தது.

நாட்குறிப்பேட்டிலிருந்து எடுக்கப்பட்ட பகுதி :
சிலந்திகள்

நவம்பர் 26 : இன்று காலை 7 மணிக்கு நானும் மனோ மாமாவும் டாக்டர்.விஜயலக்ஷ்மியின் அலுவலகத்திற்குக் கிளம்பினோம். மனோ மாமாவும் மேடமும் பேசிக்கொண்டிருந்தபோது நான் சில புத்தகங்களை வாசித்தேன். பின், மேடம் அவரது சிலந்திகளின் சேகரிப்பை எங்களுக்குக் காட்டினார். அவர் என்னை செல்வனிடம் அறிமுகப்படுத்தியும் வைத்தார். நாங்கள் கிளம்பும் முன், அவர் எனக்கு வீட்டிற்கு எடுத்துப்போய் வாசிக்கச் சில புத்தகங்களைக் கொடுத்தார்.

நவம்பர் 27 : செல்வன் எப்படிக் குஞ்சு சிலந்திகளை அவற்றின் அம்மாவிடமிருந்து பிரித்தெடுத்து ஒவ்வொன்றையும் தனித்தனிக் குப்பிகளில் வைத்தார் என்பதைப் பார்த்தேன். அங்கு சுமார் 110 குஞ்சுகள் இருந்தன. பின்பு சுமார் 200 பெரிய குஞ்சு சிலந்திகளுக்கு நாங்கள் உணவூட்டினோம். அவற்றின் தோலுரித்தலை எப்படிச் சோதிப்பது

என்பதை செல்வன் எனக்குக் காட்டினார்.

நவம்பர் 28 : இன்று நானாகவே குஞ்சு சிலந்திகளுக்கு உணவூட்டினேன். பின், பெரியவற்றை ஒரு பெட்டியிலிருந்து இன்னொரு பெட்டிக்கு மாற்றி அவற்றிற்கு உணவிட்டேன்.

நவம்பர் 29 : இன்று குஞ்சு சிலந்திகளுக்கு உணவிடுவதை மட்டுமே செய்தேன். மேடம் உடல்நிலை சரியில்லாததால் அலுவலகத்திற்கு வரவில்லை, அவருக்குப் பதிலாக அவரது கணவர் டாக்டர். பாலசுப்ரமணியன் எங்களைக் கண்காணிக்க வந்தார். மதியத்திற்குப் பிறகு சிலந்திகளைப்பற்றிச் சில புத்தகங்களை வாசித்தேன். சீக்கிரமாகவே வீட்டிற்குக் கிளம்பிவிட்டேன். ஏனென்றால், மனோ மாமாவும் சாகு அத்தையும் சில நாட்களுக்கு வெளியூர் செல்வதால், நான் அவர்களது உறவினரான சந்தோஷ்குமாரின் வீட்டில் தங்கவேண்டும். அவர்கள் மாலை 7.30க்கு கிளம்பினார்கள். நான் அவர்களது பக்கத்து வீட்டில் சந்தோஷ் என்னைவந்து அழைத்துச் செல்வதற்காகக் காத்திருந்தேன். அவர் இரவு 9 மணிக்கு வந்தார்.

நவம்பர் 30 : ஞாயிற்றுக் கிழமை ஆதலால் நான் தாமதமாக எழுந்து, இட்லியும், தோசையும் சாம்பாரும் காலை உணவாகச் சாப்பிட்டேன். கடந்த இரண்டு நாட்களுக்கான எனது நாட் குறிப்புகளை எழுதினேன், அதன்பின் கொஞ்சம் தொலைக்காட்சி பார்த்தேன். மாலையில் சந்தோஷ் என்னைப் பேருந்து நிலையத்திற்கு அழைத்துச்சென்று, அடுத்த நாள் காலையில் CIKS செல்வதற்கு நான் செல்ல வேண்டிய வழியை விளக்கிக் கூறினார்.

டிசம்பர் 1 : மேடம் இன்று அலுவலகத்திற்கு வந்தார். அந்த அலுவலக வளாகத்தில் இருந்த சிலந்திகளை எப்படிச் சேகரிப்பது என்பதைக்

காட்டினார். சிலந்திகளைப்பற்றி வாசிக்க இன்னும் சில தொகுப்புகளையும் எனக்குக் கொடுத்தார், சிலந்திகளைப்பற்றிய எனது கட்டுரையைத் தயாரிக்கத் துவங்குமாறு கூறினார். வழக்கம்போல, கொஞ்ச நேரம் சிலந்திகளுக்கு உணவூட்டிய பிறகு, நான் தனியாகவே வெளியே சென்று சிலவகை சிலந்திகளைச் சேகரித்தேன். மேடம் அவற்றையும், ஏற்கெனவே அவர்கள் பிடித்து வைத்திருந்த இன்னும் சில சிலந்தி வகைகளையும் அடையாளம் கண்டுபிடிக்க உதவினார். மதியத்திற்குப் பிறகு, முதிர்ந்த சிலந்திகளில் சிலவற்றிற்கு உணவூட்டுவதற்காகப் பூச்சிகளைப் பிடித்தேன்.

டிசம்பர் 2 : இன்று நான் வெவ்வேறுவகை சிலந்திகளை அடையாளம் கண்டுபிடிப்பதை மட்டுமே செய்தேன். வீட்டில் வாசிப்பதற்காக சில தொகுப்புகளை எடுத்துக்கொண்டேன், அதனால் சீக்கிரமாகவே கிளம்பி விட்டேன். நான் எடுத்துச்சென்ற புத்தகங்களை மிக மும்முரமாக பார்த்துக் கொண்டிருந்ததால், இறங்கவேண்டிய பேருந்து நிலையத்தை நான் கவனிக்கவில்லை, அதிக தூரத்திற்குச் சென்றுவிட்டேன். திரும்பி சுமார் அரைமணி நேரம் நடக்கவேண்டியிருந்தது. மக்களிடம் வழிகேட்டு இறுதியில் எனது பேருந்து நிறுத்தத்தை வந்தடைந்தேன்.

டிசம்பர் 3 : உடல் நலமில்லாததால் இன்று CIKSக்குச் செல்லவில்லை. வீட்டிற்கு எடுத்து வந்திருந்த புத்தகங்களை வாசித்தேன். எனது எழுத்தறிக்கையைத் தயாரிக்க ஆரம்பித்தேன்.

டிசம்பர் 4 : இன்று வழக்கம்போல சிலந்திகளுக்கு உணவூட்டினேன். அதன்பின் சுமார் 70 பூச்சிகளைப் பிடித்து அவற்றை வளர்ந்த சிலந்தி களுக்கு உணவாகப் போட்டேன். இரண்டு சிலந்திகளை இணை சேர்வதற்காக விட்டு, அதைப் பற்றிக் குறிப்பெடுத்துக் கொண்டேன். மாலையில் எனது அறிக்கையை எழுதுவதைத் தொடர்ந்தேன்.

டிசம்பர் 5 : மண்புழு வளர்ப்பு குறித்த எனது அறிக்கையை வாங்க புதுக் கல்லூரிக்குச் சென்றேன்.

டிசம்பர் 6 : முதலில் குஞ்சு சிலந்திகளுக்கு உணவூட்டினேன். பின், பூச்சிகளைப் பிடித்தேன். ஒரு பெண் சிலந்தியின் முட்டைகள் அப்போது தான் பொரித்திருந்தன, அதனால் செல்வனும் நானும் அந்தக் குஞ்சுகளைப் பிரித்து தனித்தனிக் குப்பிகளில் விட்டோம்.

டிசம்பர் 7 : இன்று முதலில் எனது அறிக்கையை எழுதினேன். பிறகு, அதை மேடமிடம் திருத்தக் கொடுத்தேன். அவர் அதை முடித்ததும், இறுதி வரைவை எழுத ஆரம்பித்தேன். மாலைக்குள் அறிக்கையை எழுதி முடித்துவிட்டேன், இறுதி ஒப்புதலுக்காக அதை மேடமிடம் கொடுத்து விட்டு வந்தேன்.

டிசம்பர் 8 : எனக்கு வயிறு சரியில்லாததால், CIKSக்கு தாமதமாகச் சென்றேன். கையெழுத்திடப் பட்ட எனது இறுதி அறிக்கை கிடைத்தது, மேடம் எனக்கொரு சான்றிதழும் கொடுத்தார்கள். இன்னும் உடல்நிலை சரியாகாததால் மாலையில் கொஞ்சம் சீக்கிரமாகக் கிளம்பினேன். அடுத்த நாள் முதலைப் பண்ணைக்குச் செல்வதாகத் திட்டமிட்டேன்.

களப்பணிக் குறிப்புகள் :

சிலந்திகள்

இப்போதெல்லாம் நம்மில் பலர் பேய்கான் அல்லது மற்ற செயற்கை நச்சுப்பொருட்களைப் பயன்படுத்தி கரப்பான்பூச்சிகளையும் மற்ற பூச்சிகளையும் கட்டுப்படுத்துகிறோம். ஆனால், இது என்ன செய்யும் தெரியுமா? கரப்பான்களையும் மற்ற பூச்சிகளையும் அத்தகைய நச்சுப்பொருட்களுக்கு எதிர்ப்புத்தன்மை உடையனவாகவோ அல்லது அவற்றைத் தடுக்கும் சக்தியுடையனவாகவோ மாற்றும். அதற்கும்

மேலாக, செயற்கை இரசாயனங்கள் தீங்கு விளைவிக்கக் கூடியன, அவை சுற்றுச்சூழலை மாசுபடுத்துகின்றன. பூச்சிகளைக் கட்டுப்படுத்த ஓர் உயிரியல் முறை இருந்திருந்தால் எவ்வளவு நன்றாக இருக்கும். அதற்காகத்தான் சிலந்திகள் இருக்கின்றன!

சிலந்தி ஒரு பூச்சி இல்லை. பூச்சிகள் பொதுவாக தலை, மார்பு (*thorax*) மற்றும் அடிவயிறு (*abdomen*) ஆகியவற்றால் ஆனவை; அவை கூட்டுக்கண்கள் உடையவை; ஆறு கால்கள் கொண்டவை; பொதுவாக, அவற்றின் வாழ்க்கையின் குறிப்பிட்ட பருவத்தில் அவற்றிற்குச் சிறகுகள் வளர்கின்றன; அவை உணர் கொம்புகள் அல்லது ஆன்டெனாக்களைக் கொண்டிருக்கின்றன; பூச்சிகள் முட்டையிட்டுக் குஞ்சு பொரிக்கின்றன, அக்குஞ்சுகள் தங்கள் பெற்றோரிலிருந்து வித்தியாசமாக இருக்கின்றன. பொதுவாக இக்குஞ்சுகள் உருமாற்றத்தின் (*metamorphosis*) வழியாக வளர்கின்றன.

ஆனால், சிலந்திகள் கணுக்காலிகள் ஆகும். அவை தலையோடு சேர்ந்த மார்புப்பகுதியும் (*cephalothorax*), அதனோடு இணைந்த அடிவயிறும் (*abdomen*) கொண்டவை; வாழ்க்கையின் எந்தப் பருவத்திலும் அவற்றிற்குச் சிறகுகள் வளர்வதில்லை; அவை எட்டு கால்கள் கொண்டவை; சாதாரண பூச்சிகளுக்கு இருக்கும் ஆன்டெனாக்களுக்குப் பதிலாக இவற்றிற்கு கொடுக்குகள் (*pedipalps*) இருக்கின்றன; பொதுவாக சிலந்திகளுக்கு எட்டு சாதாரண கண்கள் உள்ளன, சில வகைகள் ஆறு கண்கள் கொண்டவை, உதாரணமாக, உமிழும் சிலந்திகள் (*Spitting Spider*); வகைகளைப் பொறுத்து சிலந்திகளின் கண்பார்வை நன்றாக வளர்ந்தோ அல்லது குறைவளர்ச்சியுடனோ இருக்கலாம்; குகை சிலந்திகள் (*Cave Spiders*) போன்ற சிலவகை சிலந்திகள் முழுதும் குருடானவை; சிலந்திகளின் வகைகளைப் பொருத்து அவற்றின் ஆயுட்காலம் ஒருசில மாதங்களில்

இருந்து பத்து ஆண்டுகளுக்கும் மேல்வரை இருக்கும் (உதாரணம் : மைகலோமார்ஃப்ஸ் - *mygalomorphs*).

பெரும்பாலும் எல்லா சிலந்திகளிலும் அவற்றின் உடலின் முதல் இரண்டு இணைப்புகள் பின்னாளில் விஷச்சுரப்பிகள் கொண்ட நச்சுப்பற்களாக மாறுகின்றன. ஆனால், ஒருசில மட்டும்தான் மனிதத் தோலைத் துளைக்கப் போதுமான அளவு பெரியதாகவும் வலிமையுடையதாகவும் உடைய நச்சுப்பற்களைக் கொண்டிருக்கின்றன. இவற்றில் பெரும் பாலானவை மனிதர்களுக்கு தீவிர சேதத்தை ஏற்படுத்துவதில்லை, சுமார் நான்கு அல்லது ஐந்து வகை சிலந்திகளால் மனிதர்களைக் கொல்ல முடியும்.

உதாரணமாக, தென் அமெரிக்காவில் காணப்படும் கருப்பு விதவை சிலந்திகள்தான் (*The Black Widow Spider*) இருக்கிற எல்லா சிலந்திகளிலும் அதிக விஷமுள்ளவை. ஒரு மனிதனைக் கொல்லப் போதுமான வலிமையுடைய விஷமுள்ள இந்த வகையைச் சார்ந்த பெண் சிலந்திகள், இணைசேர்ந்த பிறகு ஆண் சிலந்திகளையே கொன்று தின்று விடுகின்றன. அதனால்தான் 'கருப்பு விதவை சிலந்தி' என்ற பெயர்பெற்றன. இவை பளபளக்கும் கருப்பு நிறத்தில் இருக்கும், அடிவயிற்றின் வெண்டரிக்கிள் பக்கத்தில் சிவப்புநிற காலமானி (*Hour Glass*) குறியும் இருக்கும். அதிருஷ்டவசமாக, மனிதர்களைத் தீவிரமாகப் பாதிக்கும் சிலந்திகள் எதும் இந்தியாவில் இல்லை.

உலகில் சுமாராக 30,000 வகை சிலந்திகள் உள்ளன. அவற்றையெல்லாம் அடுக்கிவைத்தால் எவரெஸ்ட் சிகரத்தின் உயரத்தில் சுமார் 23,000 அடி அளவிற்கு இருக்கும், அதே அளவு நீர்மட்டத்திற்கு அடியிலும் இருக்கும்.

பெரும்பாலும் எல்லா சிலந்திகளும் மாமிச உண்ணிகள்தான். அவை பூச்சிகள், சிறு பறவைகள், பாலூட்டிகள் மற்றும் விஷமுள்ள பாம்புகள்,

மற்ற சிலந்திகள் உள்ளிட்ட ஊர்வன போன்றவற்றை உண்ணும். அவற்றை இச்சிலந்திகள் தங்கள் விஷத்தால் முதலில் அடக்குகின்றன. அவை தங்கள் இரையினுள் மிகக்கொடூரமான விஷத்தை உட்செலுத்து கின்றன. அவற்றிற்குப் பற்களில்லாததால், இரையின் உடலிலிருந்து திரவங்களை உறிஞ்சி எடுக்கின்றன. நீண்ட வலிமையான தாடைகளைக் கொண்ட பெரிய சிலந்திகள் இரையின் ஒரு பகுதியையோ, அல்லது முழுமையாகவோ கூட உண்டுவிடும். சிலந்திகளின் வகைகள், அளவு மற்றும் வயது இவற்றைப்பொருத்து அவற்றால் ஒரு சில வாரங்களில் இருந்து மூன்று மாதங்கள்வரை உணவின்றி வாழமுடியும். அவை தங்கள் உணவிலிருந்து திரவத்தை எடுத்துக்கொள்கின்றன,எனவே அவற்றிற்குத் தண்ணீர் தேவையில்லை.

பல சிலந்திகள் தங்கள் இரையைப் பிடிக்க நூலாம்படையைப் (வலை) பின்னுகின்றன. சிலந்திகளுக்குத் தங்கள் இரையைப் பிடிக்க மற்ற வழிகளும் இருக்கின்றன. சில சிலந்திகள் இரையின்மீது ஒட்டிப்பிடிக்கும் ஒரு நூலாம்படையை உமிழ்கின்றன. மற்றசில கதவு போன்ற அமைப்புடைய மூடுவளைகளில் வாழ்கின்றன. பசியெடுக்கும்போது அவை வெளிவந்து, அந்த வளை இருப்பது தெரியாமல் உலவும் பூச்சிகளைப் பிடிக்கின்றன. ஒருவகை சிலந்தி தனது பட்டுப்போன்ற நூலின் ஒரு முனையில் ஒட்டிப்பிடிக்கும் ஒரு துளியை இட்டு, அந்நூலைத் தன் முதல் மூன்று ஜோடி கால்களால் பிடித்துக்கொள்ளும். ஏதேனும் பூச்சி கடந்து சென்றால், அதன்மீது அந்தச் சிலந்தி தன் நூலை வீசி அதை அப்படியே இழுத்துவிடும்.

சில சிலந்திகள் பூக்களில் இருக்கும். அவை தேன் சேகரிக்க வரும் பூச்சிகளைப் பிடிக்கின்றன. மற்றும் சில ஒரு சிறிய நூலாம்படையைப் பின்னி, அதைத்தன் முதல் சில ஜோடி இணைப்புகளால் (கால்களால்)

பிடித்து அவற்றிற்குக் கீழே செல்லும் பூச்சிகளின் மேல் வீசுகின்றன. வேறுசில சிலந்திகள் மற்ற சிலந்திகளை உண்டு வாழ்கின்றன, இவை கொள்ளைக்கார சிலந்திகள் (*Pirate Spiders*) எனப்படுகின்றன. ஒருசில சிலந்திகள் மற்ற சிலந்திகளின் நூலாம்படையில் வாழ்கின்றன, தங்களுக்கு விருந்தளிப்பவர்களால் உண்ணப்பட முடியாத அளவிற்கு அவை மிகவும் சிறியதாக இருக்கின்றன. அவை அந்த நூலாம்படையில் சிக்கும் சிறிய இரைகளைச் சாப்பிடுகின்றன, அதனால் நூலாம்படையைச் சுத்தமாக வைத்திருக்கின்றன.

சிலந்திகள் ஆச்சரியமான தற்காப்பு நுட்பங்களையும் கொண்டிருக்கின்றன. சில சிலந்திகள் பறவைகளின் எச்சம்போல உருமாறி ஏமாற்றுகின்றன. வேறுசில, உலர்ந்த மஞ்சள் அல்லது அழுகும் கருப்புநிற இலை அல்லது குச்சிபோல உருமாறி ஏமாற்றுகின்றன. இன்னும் சில, எறும்புகளைப் போல தோற்றமளிக்கின்றன, அதனால் பொதுவாக பறவைகள், ஊர்வன மற்றும் மற்ற பூச்சிகள் இவற்றை விட்டுவிடுகின்றன. சிலவற்றால், அவற்றைச் சுற்றியுள்ள இடத்துக்குப் பொருத்தமாக ஓரளவிற்கு நிறம் மற்றும் வடிவத்தை மாற்றக்கூட முடியும். சில வகைகள் தங்கள் நூலாம் படையில் கோணல் மாணலாக வெள்ளைநிற நூலைப் பின்னுகின்றன, இவை பறவைகளுக்குத் தெரிவதால், அவை நூலாம் படையின் ஊடாகப் பறந்துசென்று அவற்றைச் சேதப்படுத்துவதைத் தவிர்க்கின்றன.

ஆண் சிலந்தி பெண் சிலந்தியை விடச் சிறியது, அதனால் தன் இணையால் உண்ணப்பட வாய்ப்பு அதிகம். அதனால், ஆண் சிலந்தி பல தந்திரங்களை யோசித்துத் தன் இணையால் தான் விழுங்கப் படுவதைத் தடுக்கிறது. இன்னும் சில வகைகளில், ஆண் சிலந்தியானது நூலாம்படையின் இழைகளை ஒரு சிறப்புக்குறியீடாக தட்டியோ இடித்தோ தான் ஒரு இரையோ எதிரியோ அல்ல, மாறாக ஒரு பாலியல் துணைதான் என

அறிவிக்கின்றன.

சில சிலந்திகள் தம் இணைகளுக்கு 'பட்டு இழையால்' சுற்றப்பட்ட சாறுநிறைந்த பூச்சியை ஒரு பரிசாக வழங்குகின்றன. ஆனால் இணை சேர்ந்த பிறகு அது மீண்டும் திரும்ப எடுக்கப்பட்டு மற்றொரு பெண் சிலந்திக்குக் கொடுக்கப்படும். சில சமயங்களில், ஆண் சிலந்தி பெண் சிலந்திக்கு ஒரு பூச்சியின் வெற்று உடற்கூட்டைக்கூட பரிசாக வழங்கும். சில சமயங்களில், இணைசேர்வதற்கு முன் ஆண் சிலந்தி பெண் சிலந்தியை அசைவின்றி இருக்கச்செய்ய, பட்டுநூலால் தளர்வாகக் கட்டுகின்றது. சிலவகை ஆண் சிலந்திகள் பெண் சிலந்தியின் நூலாம் படையின் அருகில் அது ஒரு இரையைப் பிடிக்கும் வரையில், வாரக்கணக்கில் பொறுமையாகக் காத்திருக்கும். பின்பு அது இரையை உண்ணுவதில் மும்முரமாக இருக்கும்போது அதனோடு இணைசேரும். சில சமயங்களில், ஆண் சில்ந்தி பெண் சிலந்தியோடு ஒப்பிடும்போது மிகவும் சிறியதாக இருக்கும். அதனால் இணைசேரும்போது பெண் சிலந்திக்கு ஆண் சிலந்தி இருப்பது தெரிவதே இல்லை. இதனால் ஆண் சிலந்திக்குப் பாதுகாப்பு கிடைக்கிறது.

பெரும்பாலான சிலந்திகள் இயற்கையில் தனிமையானவை. ஒவ்வொன்றும் அதன் தனி நூலாம்படையைப் பின்னுகின்றது. ஒரு சிலந்தி தவறுதலாக மற்றொரு சிலந்தியின் நூலாம் படையில் விழுந்தால், அவற்றில் பெரிய சிலந்தி சிறிய சிலந்தியை உண்டுவிடும். இருந்தாலும், ஒன்றுசேர்ந்து ஒரே நூலாம்படையில் வாழும் சில சிலந்திகளும் உள்ளன, இவை சமூகச் சிலந்திகள் (*Social Spiders*) எனப்படும். சில சமயங்களில், ஒரே நூலாம்படையில் நூற்றுக்கணக்கான அல்லது ஆயிரக்கணக்கான பெரிய மற்றும் குஞ்சு சிலந்திகள்கூட வாழும். ஒரேயொரு இரை பிடிக்கப்பட்டால்கூட (ஒரு சிறிய பூச்சி போன்றவை), எல்லா சிலந்திகளும்

அந்த உணவைப் பகிர்ந்து உண்ணும்.

சிலந்திகள் மிக விரைவாக இனப்பெருக்கமடையும். இணைசேர்ந்த பிறகு, ஒரு முட்டைப்பை உருவாக்கப்படுகிறது, உள்ளுக்குள்ளேயே கருவுற்ற முட்டைகள் இந்த முட்டைப் பையினுள் இருக்கும். இந்தப் பையை பெண் சிலந்திகள் அவற்றின் நச்சுப்பற்கள் மற்றும் கொடுக்கு களால் சுமக்கின்றன. சிலந்திகளின் வகைகளைப் பொருத்து கருவுறுதல் உள்ளுக்குள்ளேயோ வெளியேயோ நடக்கலாம். 15 முதல் 20 நாட்களுக்குள் 80% முட்டைகள் குஞ்சு பொரிக்கின்றன. (முட்டை களிலிருந்து சிலந்திக் குஞ்சுகள் வெளிவருகின்றன. புதிதாகப் பிறந்த சிலந்திகள் தங்கள் பெற்றோரைப்போலவே இருக்கின்றன, ஆனால் அளவில் சிறியவை. குஞ்சுகள் தோலுரித்து வளர்கின்றன).

ஒருவாரம் முதல் பத்து நாட்கள் இடைவெளிக்குப் பிறகு, ஒரு புதிய முட்டைப் பையில் அடுத்த முட்டைத்தொகுதி இடப்படுகிறது. சேமித்து வைக்கப்பட்ட விந்தணுக்களின் உதவியோடு அவை கருவுருகின்றன. இந்தப் பெண் சிலந்தி இன்னொரு ஆணுடன் இணைசேரும் முன் இதேபோல மூன்றிலிருந்து நான்குமுறை செய்யமுடியும். ஆனால், ஒவ்வொரு தொகுதி முட்டையிடுவது முடிந்ததும், வாய்ப்பிருந்தால் பெண் சிலந்தி ஓர் ஆண் சிலந்தியுடன் இணைசேரத் தயாராகத்தான் இருக்கும்.

பூச்சிகளை இயற்கையாக கட்டுப்படுத்தும் 'உயிரியல்-கட்டுப் பாட்டாளர்களில்' தாங்களும் மிகச்சிறந்தவர்கள் என்பதை சிலந்திகள் நிரூபித்துவிட்டன. முற்காலத்திலும், இப்போதும், ஏன் உலகிலிருந்து இறுதியாக மனித இனம் அழிந்த பிறகும்கூட, சிலந்திகள் பூச்சிகளைப் பிடிக்கப் பொறி வைத்துக்கொண்டுதான் இருக்கும் என்பதை நம்மில் மிகச்சிலரே உணர்கிறோம்!

சிலந்திகளை வளர்ப்பது எப்படி?

சிலந்திகள் தன்னின உண்ணிகளின் பண்புகளைப் பெற்றிருக்கின்றன. உதாரணமாக, இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட சிலந்திகள் ஒரு பெட்டியில் வைக்கப்பட்டால், அவை ஒன்றையொன்று உண்டு வாழும். அதனால், பிறப்பிலிருந்து அவை தனித்தனிப் பெட்டிகளில் பிரித்து வைக்கப்பட வேண்டும்.

ஒளி ஊடுருவும் பிளாஸ்டிக் பெட்டிகளை (ஒவ்வொரு வகைக்கும் ஏற்ற அளவில்) சிலந்திகள் வளர்க்கப் பயன்படுத்தலாம். அந்தப் பெட்டியின் மூடியில் குண்டூசி அளவிலான ஒருசில துளைகள் காற்றோட்டத் துளைகளாக இடப்பட வேண்டும். இரையை உள்ளே போடுவதற்காக ஒரு பெரிய துளை இடப்பட வேண்டும். அது ஒரு துண்டு பஞ்சினால் மூடப்பட வேண்டும்.

குஞ்சு சிலந்திகளானது, சிலந்தி வளர்ப்பு உணவுகளான த்ரைபோலியம், ட்ரோசோஃபிலியா (பழப்பூச்சி), பழ ஈக்கள், வீட்டு ஈக்களின் லார்வாக்கள் ஆகியவற்றை உண்ணும். அவை தொடர்ந்து வளரும்போது, வீட்டு ஈக்களையும், அதன்பின் கரப்பான்பூச்சிகளையும் உண்ணும்.

உணவு மிச்சங்களையும், உரிக்கப்பட்ட தோலையும் அப்புறப்படுத்துவது மிக அவசியம். இரண்டு பெட்டிகள் உபயோகப்படுத்தப்பட வேண்டும். உபயோகப்படுத்தப்பட்ட பெட்டிகள் ஒவ்வொரு வாரமும் சோப்பாலும் தண்ணீராலும் கழுவப்பட வேண்டும். பிறகு வெயிலில் உலர வைக்கப்பட வேண்டும்.

எறும்புகளைத் தவிர்ப்பதற்காக சிலந்திப் பெட்டிகள் வைக்கப்படும் நிலையின் கால்கள் தண்ணீர் அல்லது எண்ணெய் உள்ள கிண்ணங்களில்

வைக்கப்பட வேண்டும். இணைசேர விடுவதற்கு முன் வளர்ந்த சிலந்திகளுக்கு நன்றாக உணவூட்ட வேண்டும். சிலந்திகள் மிதமான அறை வெப்பநிலையைத் தாங்கும்.

உணவு தயாரித்தல்

1. பால் பொடியையும், ஒரு நடுத்தர அளவிலான பஞ்சுத் துண்டையும் தண்ணீரில் கலக்க வேண்டும். தினமும் ஒரு தேக்கரண்டி அளவு பால் பொடி சேர்க்கப்பட வேண்டும்.


2. ட்ரோசோஃபிலியா லார்வா வளர்த்தல் : கால் கப் கோதுமை மாவையும், இரண்டு நடுத்தர அளவு வெல்லத் துண்டுகளையும் இரண்டு கப் தண்ணீரில் கொதிக்க வைக்க வேண்டும்.

வீட்டு ஈக்களையும், ட்ரோசோஃபிலியாவையும் ஒரு மர அல்லது உலோகச் சட்டமிடப்பட்ட பெட்டியில் வளர்க்கலாம். ஒரு நுண்ணிய வலையால் அப்பெட்டி மூடப்பட்டிருக்க வேண்டும். மேற்கண்ட கலவையை சிறு கிண்ணங்களில் இட்டு இந்தப் பெட்டியினுள் வைக்க வேண்டும். வளர்ந்த வீட்டு ஈக்களையும் ட்ரோசோஃபிலியாவையும் பிடித்து அப்பெட்டியினுள் போட்டு, அவைகள் முட்டையிடுவதற்காக விட்டுவிட வேண்டும்.

3. த்ரைபோலியம் லார்வா : வளர்ந்த 'த்ரைபோலியம்' ரவை மற்றும் மைதாவில் காணப்படும். காற்றோட்டத் துளையுடன் கூடிய ஒரு வாளியை வைத்து, அதில் ரவை அல்லது மைதாவைப் போட்டு, தினமும் அதில் சிறிது தண்ணீரைத் தெளிக்க வேண்டும். தேவைப்படும் போதெல்லாம் ஒரு சல்லடையை வைத்து லார்வாக்களை அரித்து எடுக்கவேண்டும்.

4. கரப்பான்பூச்சிகள் : பல பெரிய காற்றோட்டத் துளைகளுடன் கூடிய ஒரு

பெரிய வாளி தேவைப்படும், அது ஒரு நுண்ணிய வலையால் மூடப்பட வேண்டும். கரப்பான்பூச்சிகள் ஏறுவதற்காக ஒரு சில காகிதச்சுருள்கள் அந்த வாளியினுள் செங்குத்தாக வைக்கப்பட வேண்டும்.



Crocodile Dundee

(1986ல் வெளிவந்த ஒரு ஆஸ்திரேலிய திரைப்படம்)

எனது ஓராண்டு இடைவெளித் திட்டத்தில் நான் மிக ஆவலாகக் காத்திருந்த மாதம் டிசம்பர்தான். மாமல்லபுரத்தில் இருந்த முதலைப் பண்ணைக்குச் செல்வதற்காக நீண்டநாள் நான் காத்திருந்த பயணத்திற்கான எல்லா ஏற்பாடுகளும் செய்யப்பட்டுவிட்டன. சுமார் மூன்று மாதங்களுக்கு முன்னர், என் தந்தை தற்போது முதலைப் பண்ணையை நடத்தும் பிரபல பாம்பு மனிதரான திரு. ரோமுலஸ் விட்டேகர் அவர்களிடம் நான் கொஞ்ச காலம் அங்கே இருக்க முடியுமா எனக்கேட்டு கடிதம் எழுதியிருந்தார்.

அநேகமாக, திரு.ரோம் அதிகமாகப் பயணம் செய்பவராதலால் பதில் ஏதும் வந்திருக்காது. ஆனால், விலங்குகளுக்காகத் தங்கள் வாழ்வை அர்ப்பணிப்பவர்களுக்கு கடிதங்களுக்குப் பதில் எழுதுவதற்கெல்லாம் நேரமிருப்பதில்லை என்பது எனக்குப் பின்னால் தான் தெரியவந்தது.

சொல்லப்போனால், ஸ்ரீலதா சுவாமிநாதன் (இவருடன் நாங்கள் ஜெய்ப்பூரில் தங்கினோம்) தனது சகோதரி மாமல்லபுரத்தில் வசிப்பதாகவும் அவர் எனக்கு உதவுவார் எனவும் என் தந்தையிடம் கூறியபோது, என்னுடைய பயணம் சரிப்பட்டு வராது என நினைத்து நான் விரக்தியடைய ஆரம்பித்திருந்தேன். முன்னும் பின்னும் பல தொலைபேசி அழைப்பு களுக்குப் பிறகு, எல்லாம் ஏற்பாடாயின. நான் போகலாம் எனத் தெரிவித்து மனோ மாமா வீட்டிற்கு என் தந்தையிடமிருந்து தொலைபேசி அழைப்பு வந்தபோது நான் பெருமகிழ்ச்சி அடைந்தேன்.

டிசம்பர் 9ம் தேதி மனோ மாமாவின் சகோதரரின் மகனான பாபு முதலைப் பண்ணைக்கு என்னைப் பேருந்தில் அழைத்துச்சென்றான். மிகச்சிறந்த ஒருமாத காலத்தை நான் அங்கு கழித்தேன், கிட்டத்தட்ட காட்டில் வாழ்வதைப்போன்ற ஓர் அனுபவம் அது. கிறிஸ்துமஸிற்கு நான் திரும்பிப் போகவேண்டியிருந்தாலும், என்னை விட்டுவிடுமாறு நான் வேண்டினேன். அதற்கு என் பெற்றோர் சம்மதித்தபோது நான் ஏழாவது சொர்க்கத்தில் இருப்பதுபோல உணர்ந்தேன். நான் அங்கிருந்த நாட்களை மிகவும் மகிழ்ச்சியாக கழித்தேன், அதனால் மார்ச் மாதத்தில் திரும்பவும் முதலைப் பண்ணைக்கு வந்தேன் (சில நாட்களுக்கு), அது முதலைகளின் இனப் பெருக்கக் காலமாக இருந்ததும் ஒரு காரணம்.

அந்த முதலைப் பண்ணை சென்னையிலிருந்து 37கி.மீ. தொலைவில் உள்ள மாமல்லபுரத்தில் இருக்கிறது. அது ஒரு பெரிய இடம், அதன் பின்னாலேயே கடற்கரையும் இருக்கிறது.

அந்த முதலைப் பண்ணை ஆயிரக்கணக்கான முதலைகளின் வசிப்பிடமாக உள்ளது. அவை பல்வேறு அளவுகளில் உள்ள பள்ளங்களில் வாழ்கின்றன, இப்பள்ளங்களைச் சுற்றிலும் சாய்வான சுவர்கள் இருக்கின்றன, இதனால் பள்ளத்தின் நடுவில் தண்ணீர் தேங்கமுடியும், இதனால் அச்சாய்வுச் சுவர்களின் மேல்பகுதியில் முதலைகள் சூரியக்குளியல் செய்யமுடியும். பெரிய முதலைகள் சிலவற்றுக்கு தனிப்பள்ளங்கள் உள்ளன. மேலும், பொதுவாக மற்ற வகைகளிலிருந்து இந்தவகை பெரிய முதலைகள் தனியாக வைக்கப்படுகின்றன, அதிலும் ஆண் மற்றும் பெண் முதலைகள் ஒன்றிலிருந்து ஒன்று பிரித்துவைக்கப்படுகின்றன. பல பகுதிகளாகப் பிரிக்கப்பட்ட ஒரு வேலியிடப்பட்ட இடத்தில் முதலைக்குட்டிகள் வளர்க்கப்படுகின்றன.

முதலைகளைத் தவிர அந்த முதலைப் பண்ணையில் பாம்புகளுக்கும் ஒரு முக்கிய இடம் உண்டு, ஏனென்றால், பாம்புகள்தான் அவ்விடத்தின் இயக்குனர் ரோமுலஸ் விட்டேகரின் முதல்காதல் போன்றவை, அவர் இன்னும் 'பாம்பு மனிதர்' என்றுதான் அறியப்படுகிறார், பல வருடங்களுக்கு முன் சென்னை பாம்புப் பூங்காவை நிறுவியவர் அவரே. அந்த முதலைப் பண்ணையில் பாம்புகளுக்கான ஒரு பெரிய பள்ளம் இருக்கிறது, அதில் பலவகைப் பாம்புகள் பாதுகாக்கப்படுகின்றன. இங்கே, இருளர்களால் பாம்புகளில் இருந்து பாம்பு விஷம் பிரித்தெடுக்கப்படுகிறது. வாடிக்கையாளர்கள் பாம்புப் பகுதிக்குச் செல்ல தனிக்கட்டணம் உண்டு. விஷப் பாம்புகள் ஓர் அறையில் பானைகளில் வைக்கப்பட்டிருக்கும், ராஜ நாகங்களுக்குப் பிரத்தியேகமான தனி அறைகள்தான்!

முதலைப் பண்ணையில் பலவகை ஆமைகளுக்கான வேலியிடப்பட்ட இடங்களும் பள்ளங்களும் உள்ளன, மீன்களுக்கான பெரிய கண்காட்சி மாடங்களும் உள்ளன.

அந்த வளாகத்தின் ஒரு மூலையில் நூலகம் இருக்கிறது, அங்கே இந்த உயிரினங்களைப்பற்றிய புத்தகங்களும் பத்திரிக்கைகளும் நன்கு அடுக்கப்பட்டிருக்கும். அதனை அடுத்து இருப்பது ஆராய்ச்சியாளர்கள் மற்றும் விருந்தினர்களுக்கான குடியிருப்பு விடுதிகள் (நான் அங்கே இருந்தபோது பெரும்பாலும் வெளிநாட்டுக்காரர்கள் இருந்தனர்). அவர்கள் முதலைப் பண்ணைக்கு அவ்வப்போது வந்து தங்குபவர்கள். அந்த குடியிருப்பு விடுதிகள் எளிமையாக, ஆனால் வசதியாக இருக்கும். ஒவ்வொரு அறையிலும் ஒரு கட்டிலும், மேசை நாற்காலியும், அறையின் உள்ளேயே கழிப்பறை மற்றும் குளியலறையும் இருக்கும். நான் அங்கிருந்த நாட்களில் அந்த அறைகளில் ஒன்றில்தான் இருந்தேன்.

பாம்புக் குழிகள் இருக்கும் இடத்திற்கு அருகில் ஒரு தனிப்பகுதியில் இருளர் குடும்பங்கள் வசிக்கின்றன. நிரந்தர பணியாளர்களான இயக்குனர், துணை இயக்குனர், மற்றும் சிலருக்கு முதலைப் பண்ணையின் பல்வேறு இடங்களில் தனித்தனி வீடுகள் இருக்கின்றன.

நான் அங்கே தங்கியிருந்த நாட்களில் அந்த முதலைப் பண்ணையில் இருந்த பல நபர்களுடன், குறிப்பாக எல்லோராலும் 'ரோம்' என அழைக்கப்படும் ஆறடி உயர இயக்குனர் ரோமுலஸ் விட்டேகர், அவரது மனைவி ஜாய் விட்டேகர், அவர்களது மகன்களான சமீர் மற்றும் நிகில், கேரளாவைச் சார்ந்த துணை இயக்குனர் ஹேரி ஆன்ட்ரூஸ், அவரது மனைவி ரோமைன், அவர்களது மகன் தாரக், பெங்களூரைச் சார்ந்த பாம்பு பிடிப்பவரான ஜெர்ரி மற்றும் பலருடன் நல்ல நட்பை ஏற்படுத்திக் கொண்டேன்.

முதலைப் பண்ணையில் எனது நாட்களெல்லாம் மிகவும் உற்சாகமாக இருந்தன, நான் நிறைய கற்றுக்கொண்டேன். முதல் சில நாட்களுக்கு, எனக்கு முதல்வேலை கொடுக்கப்பட்டது, தொற்றுநோய்க்குள்ளான ஒரு

2அடி நீள ஆமையைக் கவனித்துக்கொள்வதுதான் அது. அதன் கால்களுக்கு நான் மருந்து போட்டுவிடுவேன், பின்பு அதற்குக் கட்டுப் போடுவேன். அடுத்த நாள், மீண்டும் மருந்து போடுவதற்கு முன், தண்ணீரில் அந்த ஆமைக்கு நான் முட்டைக்கோசை உணவாக ஊட்ட வேண்டும்.

ஆமைகளைத்தவிர, பெரிய பல்லிகளையும் கவனிக்க ஆரம்பித்தேன், அதாவது உடும்புகள் மற்றும் பச்சை இகுவானா பல்லிகள். நான் பார்த்துக்கொண்ட பச்சை இகுவானா மிகப்பெரியது, ஒரு சராசரி டேஷண்ட் *(Dachshund)* நாய் அளவிற்குப் பெரியது. அதன் வால் அதன் உடலைப்போல இரண்டிலிருந்து மூன்றுமடங்கு அளவிருக்கும், சில சமயம் இன்னும் பெரியதாக! தலையிலிருந்து வால்வரை அது சுமார் இரண்டரை மீட்டர் நீளம் இருக்கும். மிகக் கூர்மையான நகங்களும் முட்களுடன் கூடிய தலை மற்றும் முதுகுப்பகுதியும் கொண்டிருந்தாலும், நீண்ட நாட்களாக அது அங்கேயே இருந்திருந்ததனால் மிக நன்றாகப் பழகியது. சில சமயங்களில், நான் சிறப்பு விருந்தினர்களை சுற்றிக்காட்ட அழைத்துச்செல்லும்போது, மணற்துகள் காகிதம் *(Sandpaper)* போன்று சொரசொரப்பான அதன் தோலை அவர்கள் தொட்டுப் பார்ப்பதற்காக அதனை வெளியே எடுப்பேன். அந்த இகுவானாவிற்கு என் வயதாகிறது என துணை இயக்குனர் ஹேரி சொன்னபோது நான் ஆச்சரியப்பட்டேன்.

சில சமயங்களில் நான் உடும்புகளையும் கவனித்துக்கொண்டேன். அவை மிக வலிமையாக இருந்தன, கூர்மையான நகங்களைக் கொண்டிருந்தன, மிக மோசமாகக் கடிக்கவும் செய்யும். அவற்றைப் பிடிக்க நான் ஒவ்வொருமுறை பள்ளத்தில் இறங்கும்போதும் அவை வேகமாகத் தண்ணீருக்குள் சென்றுவிடும். சீக்கிரமாகவே நான் தேவையான அளவு வேகமாக செயல்படக் கற்றுக்கொண்டேன், பின் அவை தண்ணீரை அடைவதற்குள் என்னால் பிடிக்க முடிந்தது. அவை ஒரு மூலையில்

மாட்டிக்கொண்டால் வாலைச் சுழற்றியடித்து கழுத்தைத் தூக்கிப் பயங்கரமாக 'உஸ்' என்று சத்தமிடும். ஒருசில உடும்புகள் ஓடிப்போய் மரத்தில் ஏறிவிடும், நம்மால் ஒன்றும் செய்யமுடியாது! அவை பார்ப்பதற்குப் பயங்கரமாக இருந்தாலும் தண்ணீரில் வைத்து அவற்றைப்பிடிப்பது சுலபமானது என்பதை நான் விரைவில் கண்டுபிடித்தேன்.

அந்த முதலைப் பண்ணை முழுவதும் பள்ளங்களால் ஆனது. அந்தப் பள்ளங்கள் ஒவ்வொன்றும் பல்வேறு அளவுகளில் உள்ள வேலியிடப் பட்ட பகுதிகளாகும். அவற்றில் இருக்கும் ஊர்வன வற்றின் எண்ணிக்கை, அளவு மற்றும் வகையைப் பொருத்து அவை அமைக்கப்பட்டிருக்கும். அந்த ஊர்வன நீந்துவதற்காகவும் தண்ணீர் குடிப்பதற்காகவும் ஒவ்வொரு பள்ளத்திலும் நீர் நிறைந்த ஒரு குட்டை இருக்கும். முதலைகளுக்கான பள்ளங்களில் பெரும்பாலானவை வெற்று நிலங்களாக இருக்கும், ஆனால் உடும்புகளின் பள்ளங்கள் பொதுவாக மரங்கள் நிறைந்து காணப்படும், உடும்புகள் அம்மரங்களின் உச்சாணிக் கொப்புகளுக்குக் கூட ஏறிவிடும். உடும்புகள் மற்ற மரங்களில் ஏறியோ அல்லது உயரமான கிளைகளிலிருந்து துள்ளியோ வெளியே சென்றுவிடாமல் இருக்கும் வகையில், கிளைகளின் நுனிகள் பள்ளங்களின் எல்லைக்குள்ளாக இருக்கும்படி வைக்கப்படும்.

உடும்புகளுக்கான குட்டைகள் கிட்டத்தட்ட இடுப்பளவு ஆழத்துடன் இருண்டு மங்கிய நீருடன் இருக்கும். உடும்பின் தலையோ, காலோ அல்லது உடலோ கையில் தட்டுப்படும் வரை நீருக்குள் நாம் துலாவ வேண்டும் (அவை நீரில் கடிப்பதற்கான வாய்ப்பு குறைவு). பின், நான் அதன் வாலைப் பிடிக்கும்வரை நீரில் துலாவி, மெதுவாக அதை நீரின் மேற்பரப்பிற்குத் தூக்கி அதன் கழுத்தை நீருக்கடியிலேயே பிடிப்பேன்.

என் கை விரல்களால் சுற்றிப்பிடிக்க முடியாத அளவிற்கு அவற்றின் கழுத்து மிகப்பெரியது. நிலத்திலோ, வாலைப்பிடித்து அவற்றைப் பிடிப்பது இன்னும் எளிதானது. ஆனால் கடி வாங்குவதிலிருந்து தப்பிக்க, விரைந்து அவற்றின் கழுத்தைப்பிடிக்க வேண்டியிருக்கும்.

ஒருமுறை, முதலைப் பண்ணையின் பணியாட்கள் சில உடும்புகளை மரங்களிலிருந்து பிடித்துக் கீழே கொண்டுவர வேண்டியிருந்தது. அவர்கள் ஒரு நீளமான குச்சியை எடுத்து, கிட்டத்தட்ட இரண்டு மாடி கட்டிட அளவு உயரத்திலிருந்து அவற்றைத் தள்ளிவிட்டனர். அவை தரையில் விழுந்தன, ஆனால் அவற்றிற்கு எந்த சேதமும் ஆகவில்லை, அவைகள் அங்குமிங்கும் ஓடுவதைத் தொடர்ந்தன. ஒருநாள் ஜெர்ரி, ''பாடி பில்டர்'' என அழைக்கப்படும் நிகிலிடம் ஒரு வளையிலிருந்து பாதியளவு வெளியே தெரிந்த ஓர் உடும்பை இழுக்குமாறு சவால்விட்டது எனக்கு ஞாபகம் வருகிறது. முதலில் அவன் அந்த உடும்பின் வால் துண்டாக வந்துவிடும் என்று நினைத்தான். ஆனால், தன் முழுபலத்தையும் உபயோகித்து இழுத்தாலும், அவனது தசை பலமாக அதிர்ந்ததே தவிர அந்த உடும்பை ஒரு அங்குலம்கூட அசைக்க முடியவில்லை.

காலை வேளைகளில், நான் முதலைகளின் பள்ளங்களைச் சுத்தம் செய்வதில் பணியாளர்களுக்கு உதவினேன், அந்த வேலை எனக்கு மிகவும் பிடித்திருந்தது. பெரிய குச்சிகளுடன் நாங்கள் பள்ளங்களில் குதித்து எல்லா முதலைகளையும் தண்ணீருக்குள் விரட்டிவிடுவோம். பின் முதலைகளின் கழிவுகளையும், நிறைய எலும்புகள் உள்ளிட்ட அவற்றின் உணவு மிச்சங்களையும் சுத்தப்படுத்துவோம். இந்த வேலையைச் செய்யும் முன்பு வழக்கமாக முதலில் ஒரு ஆண் பணியாளர் முதலைகளை நீருக்குள் விரட்டி விடுவார். பின்பு மீதமிருக்கும் 3 அல்லது 4 பெண்கள் துடைப்பங்கள், கூடைகள் மற்றும் மண்வெட்டிகளைக்

கொண்டு சுத்தப்படுத்த உதவிசெய்வார்கள். அவ்வப்போது, ஒரு முதலை நம்மை அதன் பள்ளத்தில் இருந்து வெளியே அனுப்பும் முடிவோடு இருக்கும். நாம் அதனை எவ்வளவு வலிமையாக அதன் மூக்கில் அடித்தாலும் அது நம்மை சுற்றிச்சுற்றித் துரத்தும். இறுதியில் ஒருவழியாக நம் வழிக்கு வந்து (அப்படி நாமே சொல்லிக்கொள்ள வேண்டியதுதான்), தண்ணீரைப் பெரிதாகச் சிதறடித்து நீருக்குள் பாயும், அல்லது சில சமயங்களில் மிக நளினமாக நீருக்குள் சறுக்கிச் சென்று தனது நண்பர்களுடன் சேர்ந்துகொள்ளும். சில சமயங்களில் கிட்டத்தட்ட ஆயிரம் நண்பர்கள்கூட இருக்கலாம்! (நான் அங்கிருந்தபோது அந்த முதலைப் பண்ணையில் சுமார் ஏழாயிரம் முதலைகள் இருந்தன.)

சில சமயங்களில் முதலைகளை ஓரிடத்திலிருந்து இன்னோர் இடத்திற்கு மாற்றுவது உள்ளிட்ட செயல்பாடுகளில் நானும் பங்குபெற வாய்ப்பு அமைந்தது. அதுவே ஒரு பெரிய சாகசம் போலத்தான் இருந்தது!

ஒருநாள் ரோமும் ஹேரியும் அந்த முதலைப் பண்ணையின் மிகப்பெரிய முதலையான 'கேரியலை' ஒரு பள்ளத்திலிருந்து இன்னொன்றிற்கு மாற்ற முடிவுசெய்தனர். ஏனென்றால், சென்ற இனப் பெருக்கக் காலத்தில் அது இன்னொரு ஆண் முதலையுடன் சண்டையிட்டதில் அதன் மேல்தாடை உடைந்திருந்தது.

வழக்கமாக ஒரு முதலையைப் பிடிக்க முயலும்போது ஒரு சிறிய நங்கூரம் போன்ற ஒன்றை வீச வேண்டும், முதலை அந்த நங்கூரத்தில் சிக்கும்போது அதை இழுக்க முயற்சிக்க வேண்டும். அது வெளியே வந்ததும், சுமார் 10-15 பேர் வேகமாகத் துள்ளி அதன்மேல் உட்கார்ந்துவிடுவார்கள். (முதலை மீண்டும் நீருக்குள் சென்றுவிடாமல் தடுக்க அதுதான் ஒரே வழி!). கடினமான ரப்பர் பேண்டுகளால் அதன் வாய் கட்டப்பட்டதும், முதலை உருட்டப்பட்டு ஒரு ஏணியின் மீது கிடத்தப்படும். அதன்பின்

ஏணியோடு அதைக்கட்டி, அதை இடம் மாற்றவேண்டிய பள்ளத்திற்குத் தூக்கிக்கொண்டு செல்வார்கள். சராசரியாக வளர்ந்த ஒரு முதலை சுமார் 250 கிலோ மற்றும் இரண்டிலிருந்து மூன்று மீட்டர் நீளம் இருக்கும். அதைத் தூக்க 15-20 பேர் வேண்டும்.

முதலையை மீண்டும் குட்டையில் விட்டதும், கயிறுகளும் ரப்பர் பேண்டுகளும் அகற்றப்படும். அந்தப் பள்ளத்திலிருந்து கடைசியாக வெளிவரவேண்டிய துரதிருஷ்டசாலியோ அல்லது மாவீரனோ (அது நாம் பார்க்கும் விதத்தைப் பொருத்தது!) தன் உயிரைக் காப்பாற்றிக்கொள்ள குட்டையின் விளிம்பைத்தாண்டி பாதுகாப்பான உலர்நிலப்பகுதிக்கு ஓடுவான்.

ஆண் முதலையான கேரியலை நாங்கள் ஒரு மக்கர் (*Mugger*) வகை பெண் முதலையின் பள்ளத்திற்கு மாற்றிக்கொண்டிருந்தபோது, ஹேரி நகைச்சுவையாக "என்ன நினைக்கிறீர்கள்? நமக்கு ஒரு கேம்மர் கிடைக்குமா என்ன?" (கேரியல் மற்றும் மக்கர் பெயர்களை இணைத்து) என்று கத்தினார். பொதுவாக முதலைகள் தங்கள் வகையைச்சார்ந்த முதலைகளுடன்தான் இணைசேரும், ஒரு கேரியலும் ஒரு மக்கரும் சேருவதற்கு வாய்ப்பே இல்லை. சொல்லப்போனால், அந்த ஆண் முதலைக்குச் சிறிதுகாலம் ஓய்வு கொடுக்கவும், மற்ற ஆண்களுடன் சண்டையிடுவதிலிருந்து அதை மீட்கவும்தான் அதை இங்கே மாற்றிக் கொண்டிருந்தோம்.

இன்னொரு சமயம், 'ஜாவ்ஸ் III' (Jaws III) என்ற முதலைக்கு ஒரு பெண்துணை தேவைப்பட்டதால் எங்களுக்கு ஒரு வேலை வந்தது. ஜாவ்ஸ் III தான் இந்தியாவில் பிடிபட்ட உப்புநீர் முதலைகளில் மிகப்பெரியது. அது சுமார் 16 அடி நீளமிருக்கும், நீளத்தில் உலகில் 3ஆவது

அல்லது 4ஆவது பெரியது அது. அதனால், *'The Great White Man-eating Shark'* என்ற படத்தின் இரண்டாம் பாகமான Jaws II தயாரிக்கப்பட்டதும், இந்த முதலைப் பண்ணை தங்கள் மிகப்பெரிய முதலைக்குப் பொருத்தமாக 'Jaws III' என்று பெயரிட்டது.

ஜாவ்ஸ் III தனியாகவே இருக்கும், அதன் பள்ளத்தில் விழும் மற்ற முதலை உள்ளிட்ட எதையும் கொன்றுவிடும். அதனால், அது ஒரு தனிமையான, ஆனால் கம்பீரமான வாழ்க்கை வாழ்ந்தது. நாங்கள் சுத்தம் செய்வதற்காக எப்போது அதன் பள்ளத்தில் குதித்தாலும், நீரில் இருந்தால்கூட அது எங்களைத் தாக்கப் பாய்ந்துவரும். நாங்கள் எல்லோரும் சேர்ந்து அதற்குக் கொடுத்ததைவிட அதுதான் எங்களுக்கு அதிகமாகப் பயிற்சிகளைக் கொடுப்பதாகத் தோன்றியது. இருந்தாலும், பத்து வருடங்களுக்குப் பிறகு, கடைசியாக அதற்கு ஒரு துணை கண்டுபிடிக்க வேண்டிய நேரம் வந்துவிட்டதாக அந்த முதலைப் பண்ணையைச் சார்ந்தவர்கள் நினைத்தனர். ஒன்றிற்கு மேற்பட்ட சமயங்களில், எதிர்க்குழியில் ஒரு பெண் முதலை இருப்பதை உணர்ந்து சுவற்றில் அது தன் தலையைக் கடுமையாக இடித்ததால் அது இணைசேரத் தயாராகிவிட்டது என நாங்கள் தெரிந்துகொண்டோம்.

நாங்கள் பிடித்த முதல் பெண் முதலையைச் சோதித்துப் பார்க்கலாமா என நான் கேட்டபோது அவர்கள் அதைப் பள்ளத்தில் போடவிருந்தார்கள். (முதலைகளை இணைசேர்ப்பது எப்படி என்று நான் அப்போதுதான் கற்றிருந்தேன்). நான் அந்த முதலையின் உடலினுள் கையை நுழைத்துத் தொட்டுப் பார்த்தேன், ஓர் ஆண் இனப்பெருக்க உறுப்பு (ஹெமிபீனிஸ்) இருப்பதாகத் தோன்றியது! "இது ஓர் ஆண்!," என்று நான் கத்தினேன். "இருக்க முடியாது, நான் சோதித்துப் பார்க்கிறேன்" என்றார் ஜெர்ரி. சில நொடிகளுக்குப் பிறகு ஒத்துக்கொள்ளும் விதமாக ஜெர்ரி தலையாட்டினார்,

"ஆமாம் ரோம், இது ஒரு ஆண்தான்!"

"ராகுல், சாம்பியன் செக்ஸர் (*Champion Sexer*)," என்று கத்தினார் ஹேரி.

ஒரு முதலையின் வெளித்தோற்றத்தை வைத்து அது ஆணா பெண்ணா எனச்சொல்ல முடியாது. அதனால், முதலைப் பண்ணையில் முதலைகள் ஒரு குறிப்பிட்ட நீளம் வளர்ந்ததும், அவற்றின் பாலினம் கண்டுபிடிக்கப் பட்டு அவற்றின் செதில்களில் குறிக்கப்படும். ஆனால் சில சமயங்களில் சிறிய முதலைகளின் பாலினத்தைக் கண்டுபிடிக்கும்போது பணியாட்கள் தவறு செய்வதுண்டு. ஜாவ்ஸிற்கு நாங்கள் முதல்முறை பெண் பார்த்தபோது, ஒருவேளை இப்படித்தான் தவறு நடந்திருக்கும். ஒருவேளை அந்த முதலையை நாங்கள் ஜாவ்ஸின் குழியில் போட்டிருந்தால் அது என்ன பாடுபட்டிருக்கும் என்பதை நினைத்துப்பார்க்கக்கூட முடியவில்லை. ஒரு சில நிமிடங்களிலேயே அது துண்டு துண்டாக வெட்டப்பட்ட இறைச்சியாக மாறியிருக்கும்.

அந்த சம்பவத்திற்குப் பிறகு, நாங்கள் பிடித்த, ஒவ்வொரு பெண்ணாகக் கருதப்பட்ட முதலையையும் உடல்ரீதியாகப் பரிசோதித்தோம். எந்தத் தவறும் நிகழ்ந்துவிடாமல் இருக்க ஒன்றிற்கு இரண்டுமுறை உறுதி செய்துகொண்டோம். பெண்ணாகக் குறிப்பிடப்பட்டிருந்த பெரும் பாலானவை நிஜத்தில் ஆண்களாகத்தான் இருந்தன! அதற்குள், முதலை களில் பெரும்பாலானவை குட்டையின் ஆழமான பகுதிக்குச் சென்று விட்டன, ஒரு பெண் முதலையைத் தேர்ந்தெடுப்பதற்கு அங்கே ஒரு முதலைகூட இல்லை! பெண் முதலைகளைத் தண்ணீரைவிட்டு நிலத்திற்கு விரட்டலாம் என ரோம் யோசனை சொன்னார், ஆனால் அது ஒன்றும் சுலபமான விசயம் இல்லை. அதனால், அவர் இன்னொரு யோசனை சொன்னார்.

நாங்கள் சில இரும்புக் கதவுகளை எடுத்து ஒரு தடித்த வலையை வைத்து அவற்றை ஒன்றாகச் சேர்த்துக் கட்டினோம். பிறகு அந்த வலையை எங்கள் முன்னால் பிடித்துக்கொண்டு அந்தப் பச்சைநிறத் தண்ணீரில் இறங்கி சிரமப்பட்டு நடந்தோம். இது, நீரின் ஆழ்பகுதியில் இருந்து முதலைகளை நிலத்திற்குத் திரும்படத் தள்ளுவதற்கு உதவும். ஆனால், மிகச்சிறந்த திட்டங்கள்கூட தாறுமாறாகப் போகலாம், நாங்கள் நினைத்தபடி யில்லாமல் தலைகீழாக நடக்கத்தொடங்கியது. தரையிலிருந்த முதலைகள் நீருக்குள் வர ஆரம்பித்தன, அவை நாங்கள் வெளியே விரட்டிக் கொண்டிருந்த முதலைகளுடன் வந்து மோதின. அதன்பிறகு, தண்ணீரில் ஒரே குழப்பம்தான், எல்லா முதலைகளும் சேர்ந்து தண்ணீரைக் கலங்கடிக்க ஆரம்பித்தன. ஒரு முதலை என் பக்கத்திலிருந்தவரின் கையை கிட்டத்தட்ட கடித்தேவிட்டது. நான் இறுக்கப் பற்றியிருந்த இரும்பு வலையின் ஊடாக முதலைகளை என் காலருகில் உணர முடிந்தது. கடைசியில், ஒருவழியாக எங்கள் ஆபத்தான வேலையை நாங்கள் செய்துமுடித்தோம். போதுமான அளவு முதலைகளை நாங்கள் நிலத்திற்கு விரட்டிய பிறகுதான் ஜாவ்ஸிற்கு ஒரு பெண் முதலையை எங்களால் தேர்ந்தெடுக்க முடிந்தது.

அத்தனை வருடங்களுக்குப் பிறகு ஒரு துணையைப் பார்த்தபோது ஜாவ்ஸ் எவ்வளவு ஆச்சரியப்பட்டிருக்கும் என்று நினைத்துப் பாருங்கள்! நீளத்திலும் அகலத்திலும் அந்தப் பெண் முதலை ஜாவ்ஸின் அளவில் சரியாகப் பாதிதான் இருந்தது. ஜாவ்ஸ் உணர்ச்சிவசப்பட்ட நிலையில் இருந்ததாலோ அல்லது ஆண் முதலைகளின் இயல்பான முரட்டுத் தனத்தாலோ என்னவோ அது அந்த துரதிருஷ்டமான பெண் முதலையைப் பிடித்துத் தன் பெரிய தாடைகளுக்குள் இறுக்கி கடுமையாகத் தாக்கியது. அந்தப் பாவப்பட்ட உயிரினம் எந்த நொடியும் இறந்துவிடும் என்று

எதிர்பார்த்த தாரக், "முதலை பார்பெக்யூ (**Barbecue**) ருசியாக இருக்கும்!" என்றான். அதிருஷ்டவசமாகவோ துரதிருஷ்டவச மாகவோ அவனுடைய ஆசை நிறைவேறவில்லை. சில இரத்தக் காயங்கள் இருந்தாலும் அந்தப் பெண் முதலை பிழைத்துக்கொண்டது. அதற்குப்பிறகு விவேகமான எந்த உயிரினமும் செய்வதுபோல அந்தப் பெண் முதலை தண்ணீரிலிருந்து தூரத்திலேயே இருந்தது, ஜாவ்ஸைப் பார்த்தால் ஏதோ பிளேக் நோயைப் பார்த்ததுபோல ஓடியது.

கொஞ்ச காலத்திற்குப் பிறகு, நான் முதலைப் பண்ணைக்கு இரண்டாம் முறை சென்றபோது, முதலைகளின் இனப்பெருக்கக் காலமாக இருந்தது, தினமும் ஒருசில முதலைக் கூடுகளைத் தூர்வார வேண்டியிருந்தது. ஒவ்வொரு கூடும் ஒரு நடுத்தர அளவு கூடையின் அளவு இடத்தைப் பிடிக்கும். ஒவ்வொரு முட்டையும் அளவில் ஒரு கோழி முட்டையைப் போல குறைந்தது மூன்றுமடங்கு இருக்கும். பொதுவாக ஒரு கூட்டில் உள்ள முட்டைகளின் எண்ணிக்கை 30லிருந்து 35 வரை இருக்கும். சுமார் 2 மீலிருந்து 3.5 மீ நீளமிருக்கும் பெண் முதலைகளில் ஒவ்வொன்றும் தன் கூட்டை மிகத்தீவிரமாகப் பாதுகாக்கும். பள்ளத்தைச் சுத்தம் செய்வதற்காக நாங்கள் அவற்றைத் தண்ணீருக்குள் விரட்ட முயலும்போது அவை நகர மறுக்கும்.

இப்போது அந்த முதலைப் பண்ணையில் மக்கர் வகை முதலைகளின் அதிகப்படியான எண்ணிக்கை ஒரு பிரச்சினையாக உள்ளது. ஒரு காரணம், அவை காட்டைக் காட்டிலும் முதலைப் பண்ணையில் கிட்டத்தட்ட இரண்டு மடங்கு இனப்பெருக்கம் செய்கின்றன. மேலும், அவற்றின் பிழைத்திருக்கும் விகிதம் அதிகமாக இருப்பதும் ஒரு காரணம். காட்டில் இருக்கும் 30-35 முட்டைகளில் பல முட்டைகள் மற்ற வேட்டையாடும் மிருகங்களால் அழிக்கப்படுவதால் அதிகபட்சமாக

ஒன்றோ இரண்டோதான் பிழைக்கும். ஆனால் இங்கே, செயற்கை அடைகாத்தல், சிறப்பான வேலியிடப்பட்ட பகுதிகள் போன்ற வசதிகளின் காரணமாக அவை அதிக எண்ணிக்கையில் பிழைத்துக் கொள்ளும். அதனால், முதலைப் பண்ணை இந்தவகை முதலைகளின் ஒட்டுமொத்த இனப்பெருக்கத்தையும் நிறுத்திவிட்டது. எனவே, எங்கள் காலை உணவிற்குத் தெவிட்டத்தெவிட்ட முதலை முட்டைகள் கிடைத்தன. நாங்கள் அந்த உப்பான முட்டைகளைக் கலக்கி, சாஸுடன் சேர்த்து அவற்றைச் சாப்பிடுவோம். அதைவிட அதிக எண்ணிக்கையில் முட்டைகள் உடும்புகளின் காலை உணவிற்காகப் பச்சையாகவே அனுப்பிவைக்கப்படும்.

நான் சில சமயம் இருளர்களுடன் சேர்ந்து பாம்பு வேட்டைக்குச் சென்றேன். இருளர்கள் பாம்பு பிடிப்பதில் வல்லுநர்களான ஒரு பழங்குடியினர். முன்னாட்களில் அவர்கள் பாம்புகளின் தோல் சார்ந்த தொழிலுக்காக பாம்புகளைப் பிடித்தனர். அது தடைசெய்யப்பட்ட பின், அவர்கள் வியாபாரத்திலிருந்து வெளிவந்து வாழ்க்கையை நடத்தவே கஷ்டப்பட்டனர். ஏனென்றால், அவர்களுக்குச் சொந்தமாக நிலம் இல்லை, அவர்களுக்கு நிலத்தில் பயிர்செய்யவும் தெரியாது, வேறு எந்த வர்த்தகம் செய்யவும் தெரியாது. முதலைப் பண்ணை திறக்கப்பட்டதும் அவர்கள் சிறந்து விளங்கிய வியாபாரத்திற்கே திரும்பிவந்தனர். ஆனால், இந்தமுறை பாம்பு விஷத்தைப் பிரித்தெடுக்கும் தொழிலின்மூலம் மக்களையும் பாம்புகளையும் காப்பாற்றும் வாய்ப்பு அவர்களுக்குக் கிடைத்திருக்கிறது.

ஒரு கடப்பாரையையும் ஒரு சில துணிப்பைகளையும் மட்டும் தூக்கிக்கொண்டு, அவர்கள் கிளம்பி விடுவார்கள். பாம்பு இருக்கும் அறிகுறிகள் தென்படும் ஒவ்வொரு புதரிலும் தேடிப்பார்ப்பார்கள், எந்தவொரு குழியையும் தோண்டுவார்கள். அவர்களின் கடப்பாரை மூன்று விதங்களில் பயன்பட்டது, 1. வளைகளுக்குள் ஒளியைப் பிரகாசிக்கச் செய்ய, 2. குழி தோண்ட மற்றும் 3. பாம்புகளைக் கையாள. கருத்த, குள்ளமான, சுருள்முடி கொண்ட அந்தப் பாம்பு வேட்டையர் களுடனான எனது பயணங்களில் நாங்கள் வரியுள்ள தண்ணீர்ப் பாம்புகளையும், சாரைப்பாம்புகளையும், கருந்தேள்களையும் பிடித்தோம்.

இருளர்கள் பாம்புகளைத்தவிர எலிகளையும் பிடித்தனர். வயல்களையும் பயிர்களையும் அழிக்கும் இந்த எலிகள் வரப்புகளுக்குள் தங்கள் வளைகளை உருவாக்குகின்றன. இருளர்கள் எலிகளைப் பிடித்ததும், அவை சேமித்து வைத்திருக்கும் அரிசியை எடுத்து சமைத்து, வயல் எலி இறைச்சியுடன் சாப்பிடுவார்கள். எங்களது இந்தப் பிரயாணங்கள் நீண்டதாகவும், வெக்கையாகவும், சோர்வளிப்ப தாகவும் இருந்தாலும் கூட எனக்கு அவை மகிழ்ச்சியானவையாகவே இருந்தன.

பாம்புகளைக் கையாளுவதைப் பற்றியும் இருளர்கள் எனக்கு நிறையக் கற்றுக்கொடுத்தனர். இந்தியாவின் நான்கு வகை விசப்பாம்புகளைக் கையாள நான் கற்றுக்கொண்டேன், (நான்கு பெரியவர்கள்(*the 'Big Four'*): நல்ல பாம்பு, விரியன், ரஸ்ஸல்'ஸ் வைப்பர், சுருட்டை விரியன் (*Saw - scaledvipers*)). மேலும், பச்சை விரியன் மற்றும் மலைப்பாம்புகளையும் கூட!

பாம்புகள், பாம்புகளுக்கான அறையில் (சாதாரண படுக்கை அறையைப் போன்றதுதான்) வைக்கப்பட்ட மண் பானைகளில் பாதுகாக்கப்பட்டன. வெளியே, ஓர் அறிவிப்புப்பலகை காணப்படும்: *'Danger: Snakes Loose'* (ஆபத்து : பாம்புகள் உலவும் பகுதி). அத்துமீறி நுழைபவர்களைத் தடுக்கவே இவ்வாறு செய்யப்பட்டது. ஆனால், சொல்லப்போனால், கண்காணிப்புடன்தான் பாம்புகள் உலவ விடப்படுகின்றன. அந்த அறைக்குள் எறும்புகள் நுழையாமல் தடுக்க அறையின் வெளியே ஒரு

சிறிய கால்வாய் இருந்தது. (சொன்னால் நம்பமாட்டீர்கள்: எறும்புகள் ஒரு பாம்பை வெறும் எலும்புக்கூடாக மாற்றிவிடும்). அறையின் வெளியே கொஞ்சம் இடமிருக்கும், அங்கிருந்து சுமார் 1லிருந்து 2 மீட்டருக்கு அப்பால் சுமார் 1 மீட்டர் உயரத்திற்கு ஒரு வழவழப்பான சுவர் இருக்கும். நான் பாம்புகளை அவற்றின் பானைகளிலிருந்து எடுத்து அந்தக் கால்வாயில் அவற்றை நீரருந்த விட்டுவிட்டு, அதன்பின் பானைகளைச் சுத்தம் செய்வேன். இந்தப் பயிற்சியின்போது, பாம்புகளைக் கையாளும் எனது திறமையை வளர்த்துக்கொள்ள கிடைக்கும் ஒவ்வொரு வாய்ப்பையும் பயன்படுத்திக்கொள்வேன். பொதுவாக, ஒரு கையால் பாம்பின் வாலைப்பிடித்து, மற்றொரு கையால் பாம்புகளுக்கான கொக்கியை (முனையில் இரும்புக் கொக்கியுடன் கூடிய ஒரு நீண்ட குச்சி) உபயோகித்து பாம்பைக் கட்டுப்படுத்த வேண்டும்.

''கடி வாங்கினாயா?''... முதலைப் பண்ணையில் நான் கழித்த விடுமுறையைப்பற்றி யாரிடம் சொன்னாலும் அவர்கள் கேட்கும் முதல் கேள்வி இதுதான். நிஜமாகவே நான் கடி வாங்கியிருப்பேனா? ஆமாம், நிறையமுறை, பெரும்பாலும் தற்செயலாகத்தான். ஆனால், சில சமயங்களில் வேண்டுமென்றே நான் கடி வாங்கியிருக்கிறேன். ஒருமுறை ஒரு சாரைப்பாம்பு என்னை மூக்கில் கடித்தது ஞாபகம் வருகிறது. ரோம் அதைப் பார்த்துவிடாமல் தடுக்க முயற்சித்தேன், ஆனால் என் சட்டையில் இருந்த இரத்தத்தைப்பார்த்து அவர் கூடிய சீக்கிரமே கண்டுபிடித்து விட்டார். சாரைப்பாம்பு கடித்தால் பெரிதாக வலிக்காது, ஆனால் ஓர் உடைந்த தண்ணீர்க்குழாய் போல இரத்தம் வரும். ''கவலைப்படாதே ராகுல், இன்னும் ஒரு அரைமணி நேரத்திற்கு இந்த விஷம் ஒன்றும் செய்யாது!'' என்று உற்சாகமாகச் சொன்னார் ரோம். (சாரைப்பாம்புகள் விசமற்றவை.)

இன்னொரு முறை, நான் ஒரு முதலைக் குட்டியுடன் புகைப்படம் எடுத்துக் கொண்டிருந்தபோது அது திரும்பி என்னைக் கடித்துவிட்டது. ரொம்ப மோசமான கடி அது. ஒரு அறுவை இயந்திரத்தை வைத்து உங்கள் கையை அறுத்தால் எப்படி இருக்கும் என கற்பனை செய்துபாருங்கள். ஆனால், என்னை ஒரு முதலை கடித்து விட்டதென நான் மிக மகிழ்ச்சியாக, பதற்றமின்றி இருந்தேன்.

பின்னர் ஒரு முறை முட்டாள்தனமாக, ஜெர்ரி தனது குழி வைப்பர் பாம்பிற்கு உணவாகப் போடப் பிடித்து வைத்திருந்த ஒரு சுவர்ப் பல்லியிடம் வேண்டுமென்றே கடிவாங்கினேன். இன்னும் என் கையில் இருக்கும் அந்தத் தழும்பு புனேயில் நான் ஒரு தண்ணீர்ப் பாம்பிடம் வாங்கிய கடியையும் ஞாபகப்படுத்தும். (என்னுடைய கைக்கடிகாரத்தை சில நாட்களுக்கு நான் அணிய முடியாத அளவிற்கு அந்தக் கடி மிக மோசமாக இருந்தது).

முதலைப் பண்ணையில் எனது கடைசி நாளன்று அங்கிருந்து ஒரு நினைவுப் பரிசாக நான் எடுத்துச்செல்லவிருந்த 'சிவப்புக்காது ஆமை' என்னை மிக மோசமாகக் கடித்தது. என் சதையைக்கூட என்னால் பார்க்க முடிந்தது, சில நாட்களுக்கு என் கையைப் பயன்படுத்தவே முடியவில்லை.

இப்போது என்வாழ்வை திரும்பிப் பார்க்கும்போது, சிலர் பரிசுக் கோப்பைகளை சேர்த்துவைப்பதைப் போலத்தான் நான் கடிகளை சேர்த்துவைத்துக் கொண்டிருந்திருக்கிறேன் என நினைக்கிறேன். இந்தச் செயல்கள் பார்ப்பதற்கு முட்டாள்தனமாகத் தோன்றினாலும், ஒருவேளை அப்படியே கூட இருக்கலாம் (சில கடிகள் மிக மோசமாக வலித்தன), அந்தக் கடிகளின் விளைவாக ஒரு நல்ல விசயமும் நடந்தது. இப்போது அந்தமாதிரி கடிகளைக் குறித்து எனக்கு எந்தவித உள்ளார்ந்த பயமும்

இல்லை. ஊர்வனவற்றைக் கையாளும்போது நான் மிக கவனமாக இருக்கிறேன், எனக்குக் கற்றுத்தரப்பட்ட எல்லா முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளையும் எடுக்கிறேன். அப்படியே கடி வாங்கினாலும் நான் ஒன்றும் பயந்துவிடமாட்டேன், அதைக் குணப்படுத்த என்ன வழிகளைப் பின்பற்ற வேண்டும் என்பதும் எனக்குத் தெரியும்.

எனது செய்முறைக் கல்வியைத்தவிர, அந்த முதலைப் பண்ணையில் ஒரு மிகப்பெரிய நூலகமும் இருந்தது. அங்கு நான் முதலைகள், பாம்புகள், உடும்புகள், ஆமைகள் மற்றும் அவை சார்ந்த ஆராய்ச்சிகள் குறித்த புத்தகங்களை வாசிப்பேன். அன்றைய நாளில் நான் கற்றுக்கொண்ட அல்லது பார்த்த விசயத்தைப்பற்றிய தகவல்களை நான் எப்போதுமே மிகுந்த விருப்பத்துடன் தேடுவேன். இதில் சிறப்பான ஒரு விசயம் என்னவென்றால், இந்தத் தகவல்களையெல்லாம் எந்தவொரு தேர்வுக்காகவும் நான் மனப்பாடம் செய்ய வேண்டியிருக்கவில்லை, இருந்தாலும் நான் வாசித்த எந்தவொரு விசயமும் என் தலையைவிட்டுப் போகவில்லை!

எல்லாவற்றுக்கும் மேலாக, அங்கே எப்போதும் கேளிக்கைக்கு நேரமிருந்தது. சிலசமயம், நான் ஹேரியின் வீட்டிற்குச் செல்வேன், அங்கு நானும் தாரக்கும் இசை அல்லது பதிவுசெய்யப்பட்ட பாடல்களைப் போட்டுக் கேட்போம். மற்ற நேரங்களில், நான் ரோமின் வீட்டில் திரைப்படம் பார்ப்பேன். வயல் எலிகள், தவளைகளின் கால்கள், ஃபிரான்க்ஃபர்ட்டர்ஸ் (மாட்டுக்கறியும், பன்றிக்கறியும் சேர்த்து செய்த உருளையான உணவு), கிளி மீன், கோழி மற்றும் மாட்டிறைச்சி போன்றவற்றின் பார்பெக்யு செய்து சாப்பிடவும், இறுதியாக சாக்கலேட் கேக் சாப்பிடவும் எனக்கு நேரம் கிடைத்தது. பின்புறமிருந்த கடற்கரையில் பகல் நேரங்களில் நீச்சலடிக்கலாம், இரவுகளில் நண்டுகளைப் பிடிக்கலாம்.

நான் அங்கிருந்த காலத்தில் நடந்த மிக சுவாரஸ்யமான நிகழ்சிகளில் ஒன்று முதலைப் பண்ணையின் ராஜ நாகங்களைப் படம்பிடிக்க நேஷனல் ஜியோகிராபிக் பத்திரிக்கையின் திரைப்படக்குழு வந்திருந்ததுதான். அந்த வேலைக்காக உதவிக்கு இருந்த பலரில் நானும் ஒருவன், ஃப்ளாஷ் விளக்குகளைப் பிடிப்பது, காட்சிகளை அமைத்துக் கொடுப்பதில் உதவுவது, தவளைகளைப் பிடிப்பது, படம் பிடிப்பதற்குள் எண்ணற்ற முறை மீண்டும் மீண்டும் தப்பித்துப்போகும் தவளைகளை மீண்டும் பிடித்துவருவது போன்ற பல வழிகளில் நான் உதவினேன்.

ஒரு மந்தமான மதிய வேளையில், தாரக் என்னை முடிவெட்டிக்கொள்ளச் சொன்னான். அப்போது என் முடி நிஜமாகவே மிக நீளமாக இருந்தது. என்னுடைய ஓராண்டு இடைவெளித் திட்டத்தின் தொடக்கத்திலிருந்து முடிவெட்ட நான் கத்திரிக்கோலைத் தொடவேயில்லை. அதனால், என் முடி இப்போது கிட்டத்தட்ட தோள்பட்டை அளவு நீளமிருந்தது. அவன் முடிவெட்டுவதில் தனக்கு ஒன்றரை மாத அனுபவம் இருப்பதாகச் சொன்னான். எனக்கு அவன் நவீன பாணியில் இலவசமாக முடிவெட்டிவிடுவதாக அறிவுறுத்தினான். நான் என் முடி எப்படி இருக்க வேண்டும் என்பதை மிகமிக விளக்கமாக தாரக்கிடம் கூறினேன். அவனும் கவனமாகக் கேட்டுக்கொண்டான், இடையிடையே சில யோசனைகளையும் சொன்னான். பின்பு, கத்திரிக்கோலை எடுத்து வேலையை ஆரம்பித்தான், இங்கும் அங்குமாக வெட்டினான், சவரம் செய்தான். எல்லாம் முடிந்தது என்றுசொல்லி ஒரு கண்ணாடியை என் முன்னால் வைத்தான், நான் பார்த்தது அடையாளம் தெரியாத ஒரு மகுலை! சவரம் செய்யப்பட்ட பகுதிகளின் இடையே முக்கோணங்களுடன் கூடிய ஒரு முடி அலங்காரம்! முன்பகுதியில் ஒரு நீண்ட முடிக்கற்றை வேறு! எந்த ராக் ஸ்டாரையும் (*Rock Star*) விட நான் பைத்தியக்காரத்

தனத்துடன் தோன்றினேன். அப்போதுதான், தாரக்கிற்கு முடிவெட்டுவதைப் பற்றி 'அஆஇ' கூடத் தெரியாது என்பது எனக்குப் புரிந்தது. அவனுக்கு ஏதோ கொஞ்சம் தெரிந்திருந்த முடி அலங்காரங்களையெல்லாம் என் தலையில் பரிசோதித்துப் பார்த்து மகிழ்ந்திருக்கிறான்.

எப்படியிருந்தாலும், 'மொட்டைத் தலை' தோற்றத்தை முயற்சித்துப் பார்க்க இதுதான் நல்ல சமயம் என நான் முடிவுசெய்தேன். ஒரு நல்ல நாவிதரிடம் சென்று நான் முழுமையாக மொட்டை அடித்துக் கொண்டேன். நிஜமாகவே அது ஏதோ விடுதலை அடைந்தமாதிரி இருந்தது. அந்த சமயத்தில், முதலைப் பண்ணையில் இருந்த ஊர்வனவற்றுடன் நான் பல புகைப்படங்களை எடுத்தேன். நான் அங்கிருந்த நாட்களின் ஞாபகமாகவும், எனது புதிய தோற்றத்தை அடுத்த சந்ததியினருக்காகப் பதிவு செய்வதற்காகவும்தான்!

முதலைப் பண்ணையை விட்டுக் கிளம்பவேண்டிய நேரம் வந்ததும் நான் நிஜமாகவே மிக வருத்தப்பட்டேன். சீக்கிரமே திரும்பி வருவேன் என நான் எல்லோரிடமும் உறுதியளித்தேன். நினைவுப்பரிசாக ஒரு சிவப்புக்காது ஆமையையும் (என்னிடம் இன்னும் இருக்கிறது), சில ஆமை முட்டைகளையும் நான் எடுத்துவந்தேன்.

இரவு முழுவதும் ஒரு பேருந்தில் பயணித்து நான் பெங்களூருக்குச் சென்றேன். என் காலடியில் ஒரு பெட்டியில் அந்த ஆமை இருந்தது, அது சுவாசிப்பதற்காக பெட்டியில் ஒரு சிறிய இடைவெளி விட்டிருந்தேன். திடீரென, அந்த ஆமை வெளியேறி பேருந்தின் கதவைநோக்கிச் சென்று கொண்டிருந்ததைப் பார்த்தேன். தூங்கிக்கொண்டிருந்த பயணிகளில் எவரும் கவனிக்காத வகையில் விரைந்துசென்று அதைப் பிடித்துத் திரும்ப பெட்டிக்குள் போட்டேன். ஓர் அன்புக்குரிய வயதான பாட்டி மட்டும் பார்த்துவிட்டார்! அவர் சிரித்துக்கொண்டே கேட்டார்,

''தண்ணீர்க் குப்பியைக் கீழே போட்டுவிட்டாயா, தம்பி?''

களப்பணிக் குறிப்புகள்:

முதலைகள்

மனிதனுக்கு முன்பு பல மில்லியன் ஆண்டுகளாக வாழ்ந்துவருபவை. ஆனால் இன்று அழிவைச் சந்தித்துக்கொண்டிருப்பவை... அவற்றைப் பற்றிய பல புராணக்கதைகள்... ஆனால் அவற்றின் இயல்பைப்பற்றித் தெரிந்தது மிகச்சில விசயங்கள் மட்டுமே. இவற்றில் பல ஆபத்தானவையாக கருதப்படுகின்றன, ஒன்றுகூட உபயோகமுள்ளதாகக் கருதப்படவில்லை. யார் இந்த உயிரினங்கள்? அவைதான் முதலைகள், அலிகேட்டர்கள் மற்றும் பல்லிகள்.

உலகில் 21 வகை முதலைகளும் அலிகேட்டர்களும் உள்ளன. இந்தியாவில் காணப்படும் மூன்று வகை முதலைகள்:

1. காரியல் - இவை மீன் உண்ணும் முதலைகள், 2. மக்கர், 3. உப்புநீர் முதலைகள்.

உலகிலுள்ள முதலைகளிலேயே மிகப்பெரியதும் ஆபத்தானதும் உப்புநீர் முதலைதான், இதனால் 25 அடி வரைக்கும் வளரமுடியும். கடலில் நீண்ட காலம் வாழ முடிந்த ஒரே முதலை இனம் இதுதான். ஆப்பிரிக்காவின் நைல் முதலை இன்னுமொரு கொடியவகை ஆகும். அழிந்துபோன இன்னும் மூன்று முதலை வகைகளின் ஃபாஸில்களும் (Fossils) இந்தியாவில் கண்டுபிடிக்கப்பட்டிருக்கின்றன.

இந்த குளிர்க்குருதி விலங்குகள் பல மில்லியன் ஆண்டுகளுக்கு முன்பே டைனோசர்களுடன் பரிணாமம் அடைந்து வந்திருக்கின்றன. பாம்புகள் அல்லது ஊர்வனவற்றைவிட இவை பறவைகளுடன்தான் நெருக்கமான

தொடர்புடையவை. குளிர்க்குருதி உயிரினங்களாக இருப்பதால், நிழற்பாங்கான, சூரிய ஒளிமிக்க இடங்களையோ அல்லது தண்ணீரில் பல அடுக்குகளையோ தேர்ந்தெடுப்பதின் மூலம் இவை தங்கள் உடலின் வெப்பநிலையைக் கட்டுப்படுத்துகின்றன. இவை அடிக்கடி தங்கள் தாடையைத் திறந்துவைத்துக் கிடக்கும், அநேகமாக, உடலைக் குளிர்விக்கச் செய்ய இது உதவலாம்.

அவற்றின் கண்கள், மூக்கு மற்றும் காதுகளானது, தலை மற்றும் மூக்கின் முன்பகுதியுடன் நேர்க்கோட்டில் அமைந்திருக்கின்றன. அவற்றிற்கு நல்ல கண்பார்வையும் நல்ல வாசனை உணர்வும் உண்டு, அவற்றால் நன்றாகக் கேட்கவும் முடியும். அவற்றின் வால் மிக உறுதியானது, அது அவை நீந்துவதற்கு உதவுகிறது. அவற்றின் வளர்சிதைமாற்ற விகிதம் மிகக் குறைவாக இருப்பதால், சில நாட்களுக்கு ஒருமுறை வேட்டையாடினால் போதுமானது. அவற்றால் தமது வளர்சிதைமாற்ற விகிதத்தைக் குறைத்து நீண்ட காலத்திற்குத் தண்ணீரின் அடியில் இருக்க முடியும். அலிகேட்டர் முதலைகளால் 6 மணிநேரம் வரை நீருக்கடியில் இருக்க முடியும். அவை தேவையற்ற அசைவெதுவும் செய்வதில்லை, ஆனால் தேவைப்பட்டால் நிலத்தில்கூட அவற்றால் மிக வேகமாக நகர முடியும். சிறிய உப்புநீர் முதலைகளால் சிறிய தூரங்களை மணிக்கு 48 கி.மீ வேகத்தில் பாய்ந்து கடக்க முடியும்.

முதலைகள் பெரிய மற்றும் சிறிய ஆறுகள், ஏரிகள், சதுப்புநிலங்களில் காணப்படுகின்றன. அவை உப்புநீரிலும் நன்னீரிலும் வாழும். ஒரு முதலைக்குட்டி பிறக்கும்போது அது 1 அடியில் நான்கில் மூன்று பங்கு நீளம்தான் (25 - 30 செ.மீ) இருக்கும். ஒருசில வருடங்களில் அது பெரிய முதலையாக வளர்ச்சியடைகிறது. முதிர்ச்சியடைவது வயதைப்பொருத்து இல்லாமல் அளவைப்பொருத்து இருக்கிறது. பொதுவாக பெண்

முதலைகளைவிட ஆண் முதலைகள் மெதுவாக முதிர்ச்சியடை கின்றன.

காட்டில், ஒரு பெண் முதலை முதிர்ச்சியடைய 5-7 வருடங்கள் ஆகும், ஆனால் ஆண் முதலைகளுக்கு 9-11 வருடங்களாகும். காரியல் முதலைகள் முதிர்ச்சியடைய இன்னும் அதிக காலம் எடுக்கும், பெண் முதலைகளுக்கு சுமார் 8-10 வருடங்கள், ஆண் முதலைகளுக்கு 12 வருடங்கள் ஆகும். சென்னை முதலைப் பண்ணை போன்ற பாதுகாப்பகங்களில் பெண் முதலைகள் நான்கு வருடங்களிலும், ஆண் முதலைகள் ஐந்து வருடங்களிலும் முதிர்ச்சியடைகின்றன.

மக்கர் வகை முதலைகளின் சராசரி முதிர்ச்சி அளவு ஆண் முதலைகளில் 2 மீட்டராகவும், பெண் முதலைகளில் 1.6 மீட்டராகவும் உள்ளது. காரியல் மற்றும் உப்புநீர் ஆண் முதலைகள் மூன்றரை மீட்டரிலும், பெண் முதலைகள் மூன்று மீட்டரிலும் முதிர்ச்சியடைகின்றன.

மக்கர் முதலைகள் பிப்ரவரி மற்றும் ஏப்ரல் மாதங்களுக்கிடையில் இனப்பெருக்கம் செய்கின்றன. உப்புநீர் முதலைகள் ஏப்ரலிலும், காரியல் முதலைகள் மார்ச் கடைசி வாரத்திலிருந்து ஏப்ரல் இரண்டாவது மாதத்திற்குள்ளும் இனப்பெருக்கம் செய்கின்றன.

இனப்பெருக்கமானது சுற்றுச்சூழல் நிலைமைகளைப் பொருத்தது. இனப்பெருக்கக் காலத்தில் ஆண் முதலைகள் பல பெண் முதலைகளுடன் சேர்ந்திருக்கும் உரிமைக்காக அடிக்கடி சண்டையிடுகின்றன. இணை சேரும்போது ஒவ்வொரு ஜோடியும் குமிழிகளை வெளியிடும், மூக்குகளை உரசிக்கொள்ளும், மூக்கின் நுனியை உயர்த்தும், அவ்வப்போது நீரில் மூழ்கும், வெளிவரும். இணை சேரும்போது வெவ்வேறுவகை முதலைகள் வெவ்வேறு செய்கைகளை வெளிப்படுத்துகின்றன. உதாரணமாக, காரியல் முதலைகள் பெரும்பாலும் ஒரு உரத்த சலசலப்பான

சத்தத்தை எழுப்பி ஒன்றோடொன்று இணை சேரும். இணைசேர்தல் நீருக்கடியில் நிகழும், அப்போது பெண் முதலையின் மேல்பகுதியில் ஆண் முதலை இருக்கும்.

முதலைகளின் சராசரி கர்ப்பக்காலம் 35-60 நாட்களுக்குள் இருக்கும். மக்கர் வகையின் கர்ப்பக்காலம் 35-40 நாட்கள், காரியல் மற்றும் உப்புநீர் முதலைகளுக்கு 40-65 நாட்கள் இருக்கும். முட்டைகள் அடைகாக்கும் வெப்பநிலை மற்றும் சுற்றுச்சூழலின் ஈரப்பத அளவு ஆகியவை கருவின் பாலினத்தைத் தீர்மானிப்பதில் செல்வாக்கு செலுத்தும்.

முட்டைகளை அடைகாக்க முதலைகள் சுமார் 30 செ.மீ. ஆழத்திற்குக் குழி தோண்டும், அல்லது இலைகளைக் குவித்து வைத்து கூடுகளை உருவாக்கும். அவை சிலசமயம் வெப்பநிலையைக் கட்டுப்படுத்த இந்தக் கூடுகளின் மீது தண்ணீரைச் சிதறடிக்கும். மக்கர் முதலைகளில், 28 டிகிரி C முதல் 31 டிகிரி C இடையேயான நிலையான வெப்பநிலையில் பெண் முதலைகள் பிரத்தியேகமாக உருவாக்கப் படுகின்றன. 32.5 டிகிரி C வெப்பநிலையில் மட்டுமே ஆண் முதலைகள் உருவாக்கப்படுகின்றன. 31.5-லிருந்து 33 டிகிரி இவெப்பநிலையில் மாறுபடும் விகிதங்களில் ஆண், பெண் முதலைகள் உருவாக்கப்படுகின்றன.

பெண் முதலை கூட்டைப் பாதுகாக்கும். குஞ்சு பொரிக்கும்போது, குட்டி முதலை கரகரப்பான ஒலியெழுப்ப ஆரம்பிக்கும், இதனால் தாய் முதலை (சில சமயம் தந்தையும்கூட) கூட்டைத் தோண்டித் திறக்கும். பின்பு அது சில முட்டைகளைத் தன் பற்களால் உடைத்து குட்டிகள் வெளிவர உதவும், பின் அவைகளைத் தன் வாயில் வைத்து தண்ணீருக்குக் கொண்டு செல்லும். குட்டிகள் சுமார் 5-7 மாதங்கள் ஆகும்வரை முதிர்ந்த முதலைகள் அவற்றைப் பாதுகாப்பதைத் தொடரும்.

இயற்கையின் சுற்றுச்சூழல் அமைப்பில் முதலைகளால் பல பயன்கள் உள்ளன. இறந்துபோன விலங்குகளின் பிணங்களை உண்பதன் மூலம் அவை சுற்றுச்சூழலைச் சுத்தமாக வைத்திருக்க உதவுகின்றன, இல்லாவிட்டால் அந்தப் பிணங்கள் அழுகித்தான் போகும். நோய் வாய்ப்பட்ட, காயமுற்ற அல்லது வலிமை குறைந்த உயிரினங்களை முதலைகள் இரையாகப் பிடிப்பதன் மூலம் வலிமையான உயிரினங்கள் மட்டுமே வாழ வழிசெய்கின்றன. இதனால் ஆரோக்கியமான விலங்குகளின் தொகையைத் தக்கவைக்கின்றன. மேலும், அவற்றிற்கு இரையாகும் உயிரினங்களின் மரபணுத்தரத்தையும் மேம்படுத்துகின்றன.

முதலைகளால் தோண்டப்பட்ட சேற்றுக்குழிகளும் சுரங்கங்களும் வறண்ட காலங்களில் மற்ற விலங்குகளுக்கும், ஆமைகளுக்கும் மற்றும் மீன்களுக்கும் முக்கியத் தேவையான தண்ணீரை அளிக்கின்றன. பல விலங்குகள் உணவிற்காக முதலைகளைச் சார்ந்து உள்ளன. உதாரணமாக, சேக்ரெட் இபிஸ் (*Sacred Ibis*) பறவைகள் மற்றும் உடும்புகள் நைல் முதலைகளின் முட்டைகளை உண்கின்றன. முதலைகள் அபூர்வமான நோய் எதிர்ப்புசக்தி உடையவை, அதனால் மருத்துவ ஆராய்ச்சியில் அவற்றால் பெரும் பயன்கள் கிடைக்கலாம்.



கற்பிக்கக் கற்றுக்கொள்ளுதல்

ஜனவரி மாதம் எனக்கு புதிய அனுபவங்களைக் கொண்டுவந்தது, அது முழுக்க முழுக்க ஹார்ட்மேன் டி சூசா அவர்களால்தான் நடந்தது. நான் பெங்களூர் வழியாக கோவாவிற்குத் திரும்ப வேண்டியிருந்தது. பெங்களூரில் வாழும் ஹார்ட்மேன் மற்றும் உஜ்வலா ஆகியோர் எங்களுக்கு நெருங்கிய நண்பர்களாக இருந்ததால், என்னுடைய ஓராண்டு இடைவெளித் திட்டத்தில் எப்போதாவது எனக்குத் தங்குவதற்கு இடம் தேவைப்பட்டால், இடமளித்து கவனித்துக்கொள்ள விரும்புவதாகத்

தெரிவித்திருந்தனர். அதனால், என் வீட்டிற்குத் திரும்பும் முன், நான் அவர்கள் வீட்டில் சில நாட்கள் தங்க வேண்டும் என என் பெற்றோர் அறிவுறுத்தினர். நான் அவர்கள் வீட்டில் தங்கி, விருப்பப்பட்டால் பெங்களூரைச் சுற்றிப்பார்த்துவிட்டு, திரும்பிப்போகத் தயாரானதும் என் பெற்றோரிடம் தகவல் தெரிவிக்க வேண்டும். இதுதான் அப்போதைக்கான பொதுவான திட்டமாக இருந்தது.

நான் ஜனவரி 7ம் தேதி மதியம் 1.40 மணியளவில் பெங்களூர் சென்று சேர்ந்தேன். பிங் (ஹார்ட்மேனை நாங்கள் எல்லோரும் அப்படித்தான் கூப்பிடுவோம்) என்னைக் கூட்டிச் செல்வதற்காக பேருந்து நிலையத்தில் அவரது காருடன் காத்திருந்தார். நாங்கள் காரில் அவரது வீட்டிற்குச் சென்றோம், அவரது எல்லா கேள்விகளுக்கும் நான் வளவளவென பதில் சொல்லிக் கொண்டிருந்தேன். வீட்டில் உஜ்வலா, மற்றும் அவர்களது குழந்தைகளான ஜூரி (*Zuri*) மற்றும் அவளது தம்பி சயீர் (*Zaeer*) ஆகியோர் இருந்தனர். அந்தச் சமயத்தில் அங்கே பிங்குடன் இந்தியக் கலை நிறுவனத்தில் (*India Foundation for the Arts*) வேலைசெய்யும் திருமதி. கலை அவர்களும் தங்கியிருந்தார்.

நல்லதொரு உணவை சாப்பிட்டுவிட்டு, சிறிது ஓய்வெடுத்த பின், பிங் எனது ஆர்வத்துடன் (அதாவது, வனவிலங்குகள்) தொடர்புடைய தனக்குத் தெரிந்த நிறுவனங்கள் மற்றும் நபர்களைப்பற்றிக் கூறுவதாகவும், நான் பெங்களூரில் இருக்கும் சமயத்தை அவர்களைச் சந்திப்பதில் பயன்படுத்த வேண்டும் என்றும் கூறினார். நான் அவரது யோசனையை ஏற்றுக் கொண்டேன். ஆனால், அவர் கூறிய நபர்களை நான் சந்திக்கும்போது அவர்கள் நான் சந்திக்கவேண்டிய அவர்களுக்குத் தெரிந்த பிற நபர்களைப்பற்றிக் கூறுவார்கள். அந்தத் தகவல்களை நான் வந்து பிங்கிடம் சொன்னால், நான் அவர்களையும் சந்திக்கவேண்டும் என அவர்

வலியுறுத்துவார் என்பது எனக்கு அப்போது தெரியவில்லை. அதனால், நான் சில நாட்களை வனவிலங்குகள் தொடர்பான பல்வேறு நபர்களைச் சந்திப்பதிலும், அவர்களுக்குக் கடிதம் எழுதுவதிலும் செலவிட்டேன்.

பிங் வேலைவாங்குவதில் மிகக் கடுமையானவர், என்னை அவ்வளவு எளிதில் விட்டுவிட மாட்டார். நான் சந்திக்கவேண்டிய நபர்கள் அந்தச் சமயத்தில் ஊரில் இல்லாமலிருந்தாலோ, அவர் கூறிய நபர்கள் பெங்களூரைச் சார்ந்தவர்களாக இல்லாமலிருந்தாலோ, அவர்களுக்கு நான் கடிதம் எழுதவேண்டியிருந்தது. இதன் விளைவாக நான் எண்ணற்ற கடிதங்களை எழுதினேன். இந்த நடவடிக்கையின் பொதுவான நோக்கம் என்னவென்றால், எதிர்காலத்தில் ஒருவேளை வனவிலங்குகள் சார்ந்த ஒரு தொழில்செய்ய நான் முடிவுசெய்தால், எனக்கு என்னென்ன வாய்ப்புகள் இருக்கும் என்று தெரிந்துகொள்வதுதான். இந்த நபர்கள் ஏன் சுற்றுச்சூழல் மற்றும் வனவிலங்குகள் சார்ந்த படிப்புகளைத் தேர்ந்தெடுத்தார்கள் என்பதையும், அதை எப்படிச்செய்தார்கள் என்பதையும், அவர்கள் தேர்ந்தெடுத்தத் துறையில் மகிழ்ச்சியாக இருந்தார்களா என்பதையும் தெரிந்துகொள்ள நான் முயல வேண்டும் எனவும் பிங் யோசனை சொன்னார்.

நான் சந்திக்க வேண்டியிருந்த நபர்களிடம் கொடுப்பதற்காக, என்னை அறிமுகப்படுத்தும் ஒரு பரிந்துரைக் கடிதத்தைப் பல நகல்கள் செய்து கொடுத்தார் பிங். வனவிலங்குகளைப்பற்றி ஆய்வு செய்வதற்காக நான் ஓராண்டு இடைவெளி எடுத்திருப்பதையும், கடந்த எட்டு மாதங்கள் அதுசார்ந்து நான் செயல்பட்டதையும் விளக்கி, சம்பந்தப்பட்ட அந்த நபருடன் நான் ஒரு சிறிய நேர்காணல் செய்யவிரும்புவதாகவும் அவரால் கையெழுத்திடப்பட்ட அக்கடிதம் கூறியது. அந்த நேர்காணல்களில் எனக்கு உதவ நான் சிறு வினாப்பட்டியல்களையும் தயாரித்தேன்.

பெரும்பாலும், பிங் முன்னதாகவே அந்த நபரைத் தொலைபேசியில் அழைத்து எனக்காக முன்னேற்பாடுகள் செய்வார். சில சமயங்களில் அவரே என்னை அந்த இடங்களுக்கு அழைத்தும் செல்வார், மற்ற நேரங்களில் நான் ஒரு ரிக்‌ஷாவில் சென்றேன்.

நான் சந்தித்த முதல்நபர் ஓய்வுபெற்ற, காடுகளின் முதன்மை பாதுகாப்புத் தலைவரான (*Principal Chief Conservator of Forests*), திரு. டி. பரமேஸ்வரப்பா ஆவார். நான் திரு. பரமேஸ்வரப்பா அவர்களின் வீட்டை நண்பகல் 11.45க்குச் சென்றடைந்தேன். அவருடனான எனது சந்திப்பு மதியம் 12.30க்கு ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. இருந்தாலும், திரு.பரமேஸ்வரப்பா வெளியே சென்றிருந்தார், அவர் மதியம் 1.30 வரை வீட்டிற்குத் திரும்பவில்லை. அதனால், நான் அவரது அலுவலகத்தில் உட்கார்ந்து ஒருசில புத்தகங்களைப் பார்த்துக்கொண்டிருந்தேன். அவர் திரும்பி வந்ததும் நாங்கள் உரையாட ஆரம்பித்தோம். முதலில் எனது ஓராண்டு இடைவெளித் திட்டம்பற்றியும், எதிர்காலத்தில் நான் என்ன செய்ய விரும்பினேன் என்பதைப்பற்றியும் பேசினோம்.

ஒருவர் இளங்கலைப்பட்டம் முடித்ததும் இந்தியக் குடியியல் பணிகள் கழகம் (*Union Public Service Commission*) நடத்தும் ஒரு போட்டித் தேர்வை எழுதவேண்டும் என்று கூறினார். தேர்ச்சியடைந்த மாணவர்கள் பயிற்சியளிக்கப்பட்டு, அதன் பின்காடுகளில் பணியமர்த்தப் படுவார்கள். பள்ளிப்படிப்பு முடித்ததும் ஹெப்பால் அல்லது தார்வாடில் இருந்த வேளாண் அறிவியல் பல்கலைக்கழகத்தில் வனவியல் சார்ந்த ஒரு நான்கு வருட பட்டப்படிப்பில் சேரமுடியும். வனவிலங்குகள் குறித்த ஆராய்ச்சி நிறுவனத்தில் குறுகியகால பட்டயப்படிப்புகள் இருக்கலாம், ஆனால் பட்டப்படிப்பிற்குப் பிறகு சேரத்தக்க நீண்டகால படிப்புகளும் இருக்கின்றன என்றார்.

நான் அவரிடம் சில கேள்விகள் கேட்டேன், அவருடனான நேர்காணலைச் சுருக்கமாகச் சொல்கிறேன் :

ராகுல்: பன்னார்கட்டா வனவிலங்குக் காப்பகத்தில் காட்டிலாகா அதிகாரி நமக்குத் தனிப்பட்ட முறையில் ஒரு சுற்றுலா ஏற்பாடுசெய்து வழிகாட்ட சாத்தியம் உள்ளதா?

பரமேஸ்வரப்பா: அது சாத்தியமில்லை. பார்வையாளர்களுக்கு வழக்கமான சவாரிகள் (*Safaris*) மட்டுமே உள்ளன. ஆனால், நீ விரும்பினால் துணை வனப்பாதுகாவலரான திரு. வெங்கடேஷ் அவர்களைச் சந்தித்து எனது பரிந்துரைக் கடிதத்தைக் கொடுக்கலாம்.

ராகுல் : காப்பகத்தின் நிலைமை எப்படியிருக்கிறது?

பரமேஸ்வரப்பா : இது ஒரு அரசாங்க முயற்சி, நீ நினைப்பதைப்போல இந்தமாதிரியான எல்லா செயல்பாடுகளிலும் நல்ல மற்றும் மோசமான விசயங்கள் கலந்தே இருக்கும்.

ராகுல் : வனவிலங்குகள் சார்ந்த வழக்கத்திற்கு மாறான தொழிற்பயிற்சிப் படிப்புகள் ஏதேனும் உள்ளனவா?

பரமேஸ்வரப்பா: இந்தியாவில் தனியாரால் நடத்தப்படும் காப்பகங்களோ மிருகக்காட்சி சாலைகளோ இல்லை. அதனால், காடுகள் மற்றும் வனவிலங்குகள் சார்ந்த எந்தத் தொழிலும் அரசாங்கம் மூலமே சாத்தியம். இதனால், வழக்கத்திற்கு மாறான, அரிதான தொழிற்பயிற்சிப் படிப்புகளை நடத்துவது கிட்டத்தட்ட சாத்தியமேயில்லை.

ராகுல் : பன்னார்கட்டா பூங்காவில் வேலை செய்பவர்களின் கடமைகள் என்னென்ன?

பரமேஸ்வரப்பா : அவர்களது ஒரே கடமை விலங்குகளை நன்றாகப் பார்த்துக்கொள்வது மட்டுந்தான், அதாவது அவற்றிற்கு நன்றாக உணவிட்டு, சுற்றியுள்ள இடங்களைச் சுத்தமாக வைத்திருப்பது. அவர்கள் விலங்குகளைப்பற்றிப் படிப்பதோ, ஆராய்ச்சி செய்வதோ இல்லை.

ராகுல் : நீங்கள் இந்த 'காடுகளின் முதன்மைப் பாதுகாப்புத் தலைவர்' பதவியை எப்படிப் பெற்றீர்கள்? உங்கள் கல்விப் பின்புலம் என்ன?

பரமேஸ்வரப்பா: உன்னைப்போலவே, நானும் படிக்க வேண்டியிருந்தது. நான் ஒரு தேர்வெழுதி, அதில் வன அதிகாரியாக வேலை கிடைத்தது. பிறகு, நான் இரண்டு வருடங்கள் அமெரிக்க ஐக்கிய நாடுகளுக்குச் சென்றேன், திரும்பிவந்ததும் காடுகளின் முதன்மைப் பாதுகாவலராகப் பணியமர்த்தப் பட்டேன்.

ராகுல் : பாம்புகளின் விஷத்தைப் பிரித்தெடுக்க ஒரு பாம்புப் பூங்கா அமைப்பது சாத்தியமா?

பரமேஸ்வரப்பா : அது நிச்சயமாக சாத்தியம்தான். ஆனால், ஒருவர் காட்டிலிருந்து பாம்புகளைப் பிடித்து வைப்பதற்கு உரிமம்/அனுமதி பெற விண்ணப்பிக்க வேண்டும். புனே பாம்புப் பூங்கா அதிகாரிகளுக்கு அதற்கான வழிகள் தெரியும். நீ அவர்களுக்குக் கடிதம் எழுதினால் அவர்கள் உனக்கு எல்லா தகவல்களையும் கொடுப்பார்கள்.

திரு.பரமேஸ்வரப்பா நல்ல நட்பாகப் பழகுபவராகவும், உதவிசெய்யும் மனப்பான்மை உள்ளவராகவும் இருந்தார். நான் கிளம்பும் முன், இந்திரா காந்தி ஆராய்ச்சி நிறுவனத்திற்கும், டேராடூனில் இருந்த இந்திய வனவிலங்கு ஆராய்ச்சி நிறுவனத்திற்கும் ஏற்கெனவே நான் அனுப்பியிருந்த கடிதங்களின் நகல்களைக் காண்பித்தேன்.

எனது இரண்டாவது சந்திப்பு திரு. அருண் கோடங்கருடன் இருந்தது, சம்வத் (*Samvad*) என்ற அமைப்பை நடத்தும் முக்கிய நபர்களில் ஒருவர். அந்த அமைப்பு SMILE (*Student Mobilization Initiative for Learning* - கற்றலுக்காக மாணவர்களைத் திரட்டும் முயற்சி) என்ற நிகழ்ச்சியை பெங்களூரில் நடத்துகிறது. எனது சந்திப்பிற்கான நேரம் நண்பகல் 12 மணியாக இருந்தாலும் நான் அந்த அலுவலகத்தை காலை 10.30க்கே சென்றடைந்துவிட்டேன். எனது பரிந்துரைக் கடிதத்தை நான் அவரிடம் காட்டினேன். சிறிது நேரத்தில், அவர் என்னுடன் உரையாட வந்தமர்ந்தார்.

திரு. கோடங்கர் பெங்களூரில் நடைபெறும் SMILE நிகழ்சிகளைப்பற்றிக் கூறினார். சம்வத்தில் சனிக்கிழமை மதியங்களில் ஒரு திட்டமிடப்படாத கூடுகை (*Open House*) நடைபெறும். அவர்கள் திரைப்படம் பார்ப்பார்கள், விவாதம் செய்வார்கள். சுற்றுலா, வரதட்சிணை, குழந்தைகளை துஷ்பிரயோகம் செய்தல் (*Child Abuse*), மீனவ மக்களின் துயரங்கள் போன்ற மாணவர்களுக்குப் பிடித்த தலைப்புகளைப்பற்றியோ அல்லது திருமணம், காதல், கல்வி அல்லது பெற்றோர் போன்ற தலைப்புகளைப் பற்றியோ உரையாடுவார்கள்.

இந்த மாணவர்கள் தலித்துகள், பழங்குடியினர், பெண்கள், ஆதரவற்ற குழந்தைகள், மீனவ மக்கள் ஆகியோருடன் வேலைசெய்யும் அமைப்பு களுக்குச் செல்வதும் உண்டு. சுற்றுச்சூழல் பாதுகாப்பு குறித்தும் கற்றுக்கொள்ளலாம். விடுமுறையின்போது மாணவர்களால் தொலைதூர இடங்களுக்குச் சென்று தங்க முடியாவிட்டால், அவர்கள் பிரச்சாரம் சார்ந்த பயிற்சிகளைத் தேர்வுசெய்ய அறிவுறுத்தப்படுகிறார்கள், அல்லது உள்ளூர் பிரச்சினைகளான குழந்தைத் தொழிலாளர்கள், சுற்றுச்சூழல் சீரழிவு, கட்டிடத் தொழிலாளர்களின் உரிமைகள் போன்றவற்றைப் பற்றிய ஆய்வுகளை அவர்கள் மேற்கொள்ளலாம்.

இத்தகைய திறன்வெளிப்பாட்டுப் பயிற்சிமுகாம்களில் கலந்துகொண்ட மாணவர்களால் வெளியிடப்படும் செய்தி மடல் தான் 'சோதனே' - அப்படியென்றால் 'தேடல்' என்று பொருள். அதில் மாணவர்கள் தங்கள் பயிற்சிமுகாம் அனுபவங்களைப்பற்றியோ அல்லது பொதுவான சமூகப் பிரச்சினைகளைப்பற்றியோ எழுதுவார்கள். ஒருவர் கட்டுரைகள், கவிதைகள், கார்ட்டூன்கள், மற்றும் கதைகளைக் கன்னடத்திலோ ஆங்கிலத்திலோ எழுதிக்கொடுத்து இதில் பங்களிக்கலாம். இந்த அமைப்பைப்பற்றி திரு. கோடங்கர் சொல்லிய எல்லா விசயங்களையும் நான் மிகுந்த ஆர்வத்துடன் கேட்டேன்.

பிறகு, நான் நேராக செயின்ட் ஜோசப் கல்லூரிக்குச் சென்றேன். பிங் சொல்லிய தகவலின்படி, அங்கு கல்லூரி மாணவர்களுக்காகப் பல சுற்றுச்சூழல் சார்ந்த படிப்புகள் நடத்தப்பட்டுக் கொண்டிருந்தன. நான் அந்தக் கல்லூரி அலுவலகத்தில் ஒரு பணியாளரைச் சந்தித்தேன். நான் வேண்டிக்கேட்ட தகவல்களை அவர் கூறினார். பட்டப்படிப்பிற்குப் பிறகு ஒருவர் தேர்ந்தெடுக்கக்கூடிய பல்வேறு படிப்புகளின் பட்டியல் அடங்கிய துண்டுப்பிரசுரத்தையும் கொடுத்தார்.

இரண்டு நாட்களுக்குப் பிறகு, காலை 11 மணிக்கு நான் டாக்டர்.ஹரிஷ் கோயங்கரை அவரது வீட்டில் சந்திக்கச் சென்றேன். அவரும் அவரது மனைவியும் (அவர் ஒரு ஜெர்மானியர்) மிகவும் நன்றாகப் பழகினார்கள். வண்ணத்துப்பூச்சிகளில் நிபுணரான திரு. கோயங்கருடன் நான் ரொம்ப நேரம் பேசிக்கழித்தேன்.

வண்ணத்துப்பூச்சிகள் பூச்சியினத்தைச் சார்ந்தவை, பூச்சிகளைவிட அவை தாவரங்களுடன்தான் நெருக்கமான தொடர்புடையவை என அவரிடமிருந்து நான் தெரிந்துகொண்டேன். ஒருபகுதியில் உள்ள வண்ணத்துப்பூச்சி வகைகளின் எண்ணிக்கையைப் பொருத்து, ஒரு

வண்ணத்துப்பூச்சி சேகரிப்பவரால் அந்தப்பகுதியில் உள்ள தாவரங்களின் வகைகளின் எண்ணிக்கையையும் கண்டுபிடிக்க முடியும். ஏனென்றால், வண்ணத்துப்பூச்சியின் ஒவ்வொரு வகையும் ஒரு குறிப்பிட்ட தாவரத்தையோ/தாவர வகையையோதான் பயன்படுத்தும். உதாரணமாக, கோவாவில் சுமார் 250 வகை வண்ணத்துப்பூச்சிகள் உள்ளன, இதிலிருந்து கோவாவில் சுமார் 900 முதல் 1000 வகை தாவரங்கள் இருக்கின்றன என்று புரிந்துகொள்ளலாம். ஒரு தாவரவியல் நிபுணருக்குக்கூட இந்தத் தகவலைக்கொடுப்பது சிரமமான காரியமாக இருக்கும். ஒரு குறிப்பிட்ட பகுதியின் தாவர வகைகளைப்பற்றித் தகவல் தெரிந்திருக்க விரும்பும் ஒரு தாவரவியலாளருக்கு உதவும் மிகச்சிறந்த கருவிகளாக வண்ணத்துப் பூச்சிகள் இருக்கின்றன.

தாய் வண்ணத்துப்பூச்சிகளால் இலைகளின் வெவ்வேறு பகுதிகளில் முட்டைகள் இடப்படுகின்றன, மற்ற உயிரினங்கள் இந்த முட்டைகளை சாப்பிடுவதைத் தவிர்க்கவே அவை இப்படிச் செய்கின்றன. இரண்டு முதல் மூன்று நாட்களுக்குள் அவை குஞ்சு பொரிக்கின்றன. லார்வா, கூட்டுப்புழுவாக (*Pupa*) ஆவதற்கு முன் பலமுறை (சராசரியாக ஐந்து முறை) தோலுரிக்கின்றது. கூட்டுப்புழு நிலையின்போது அது ஏதும் சாப்பிடுவதில்லை. சில நாட்களுக்குப் பிறகு அதுவொரு முழு வண்ணத்துப் பூச்சியாக வெளிவருகின்றது. அது, சுமார் 10 நிமிடங்கள் வெயிலில் தனது சிறகுகள் உலரும்வரை காத்திருக்கும், பின் படபடத்துப் பறந்துபோகும். ஒரு முதிர்ந்த வண்ணத்துப்பூச்சி உருவாகுவதற்கான முழுசெயல் முறையும் முடிவதற்கு ஐந்து வாரங்களில் இருந்து இரண்டு மாதங்கள் வரை ஆகலாம். அதன்பின், அந்த வண்ணத்துப்பூச்சி சுமார் இரண்டு வாரம் உயிர்வாழும், முதல் சில நாட்களுக்குள் அது 'ஒரு தொகுதி' முட்டைகளை மட்டுமே இடும்.

அந்துப்பூச்சிகள் (*Moths*) பட்டுநூலைப் பின்னும். வண்ணத்துப்பூச்சிகள் பட்டுநூலைப் பின்னுவதில்லை. உலகில் சுமார் 10,000 வகை அந்துப்பூச்சி வகைகள் உள்ளன, இது வண்ணத்துப் பூச்சிகளின் வகைகளைவிட மிக அதிகம். சில வண்ணத்துப்பூச்சிகளும் அந்துப்பூச்சிகளும் விஷமுள்ளவை. உதாரணமாக, க்ரிம்சன் ரோஸ் வகை, இவை கோவாவில்கூட காணப்படுகின்றன. இவை சிறகுகள் மற்றும் சிவப்புநிற உடல்கொண்ட ஒரு வண்ணத்துப்பூச்சி வகை. மேலும், அவற்றின் சிறகுகளில் சிவப்புப் புள்ளிகளும் உடலில் கருப்புப் புள்ளிகளும் இருக்கும். இருப்பதிலேயே மிகச்சிறிய வண்ணத்துப்பூச்சிகள் ஒரு சில சென்டிமீட்டர் அளவு இருக்கும், மிகப்பெரிய வண்ணத்துப்பூச்சிகளில் ஒருவகை நம் இரண்டு உள்ளங்கைகளைச் சேர்த்துவைத்த அளவில் இருக்கும்.

சந்திப்பின் முடிவில், திரு. கோயங்கர் வண்ணத்துப்பூச்சிகளைப்பற்றிய சில புத்தகங்களையும், அந்தத் துறைசார்ந்து அவர் எழுதியிருக்கும் சில கட்டுரைகளையும் காட்டினார். மதியம் 1.30 அளவில் நான் அவரிடமிருந்து விடைபெற்றுக்கொண்டு, MES கல்லூரிக்குச் சென்றேன், அன்று மதியமே அங்கு டாக்டர். லீலா அவர்களை நான் சந்திக்க ஏற்பாடு செய்யப் பட்டிருந்தது. அங்கு பாதுகாக்கப்பட்ட டால்பின் வால்களையும், கொம்பன் சுறா (*Hammer Headed Sharks*) மாதிரிகளையும் பார்த்தேன்.

பெங்களூரில் நான் தங்கியிருந்த நாட்கள் மிக விஷேசமாக அமைந்ததற்கு பிங் எனக்காக ஏற்பாடு செய்திருந்த டைம்ஸ் ஆப் இந்தியா நிகழ்ச்சியும் காரணமாக அமைந்தது. பெங்களூரில் டைம்ஸ் ஆப் இந்தியா பத்திரிக்கையில் 'கல்விச் சிறப்பிதழ்' (*Newspaper in Education*) என்ற சிறப்புப்பகுதி இருந்தது. NIEயின் திட்டங்களில் ஒன்று பள்ளிகளில் பல்வேறு தலைப்புகளில் பயிற்சிமுகாம்களை நடத்துதல் ஆகும். நான் ஜனவரி 20ம் தேதி எம்.ஜி. சாலையில் இருந்த டைம்ஸ் அலுவலகத்திற்குச் சென்றேன்,

அங்கிருந்த பொறுப்பாளரிடம் கடந்த ஒருவருட காலமாக நான் என்ன செய்துகொண்டிருந்தேன் என்பதைக்குறித்துக் கொஞ்ச நேரம் பேசினேன். பிறகு, அடுத்த இரண்டு நாட்களுக்கு சில பள்ளிகளில் சில பயிற்சி முகாம்களை என்னால் நடத்தமுடியுமா என்று கேட்டார்கள். அந்த வேலையை எவ்வளவு நன்றாக என்னால் செய்யமுடியும் என்பது எனக்கு நிச்சயமாகத் தெரிந்திருக்காவிட்டாலும், நான் அதற்குச் சம்மதித்தேன். ஏனென்றால், எனது ஓராண்டு இடைவெளித் திட்டத்தில் நான் கற்றுக் கொண்ட ஒரு விசயம் என்னவென்றால்,எப்போதும் எந்தவொரு புதுவிசயத்தையும் நாம் முயற்சித்துப்பார்க்க வேண்டும். ஏனென்றால், நமக்குத் தோன்றுவதைப்போல அந்த விசயங்களொன்றும் எப்போதும் அவ்வளவு கடினமானவையாக இருப்பதில்லை. எனவே, நான் அதற்கு ஒப்புக்கொண்டேன்.

எனது முதல் பயிற்சிமுகாம் ஜனவரி 22ம் தேதி நடந்தது. NIEயின் ஒரு ஒருங்கிணைப்பாளர் என்னைக் கூட்டிச்செல்ல வந்தார், நாங்கள் ஸ்ரீவாணி கல்வி மையத்திற்குச் சென்றோம். அங்கு எட்டாம் வகுப்பு மாணவர்களுடன் நான் உரையாடுவதாகத் திட்டம். நான் சுமார் 35 நிமிடங்கள் பேச வேண்டும் எனவும், ஒரு 10 நிமிடங்கள் கேள்வி களுக்காகவும் கலந்துரையாடலுக்காகவும் இருக்கும் எனவும் என்னிடம் சொல்லியிருந்தார்கள்.

முதலில் நான் சிறிது பதற்றமாக இருந்தேன். ஆனால் நான் பேசப்பேச மாணவர்கள் மிக கவனமாகக் கேட்டுக்கொண்டிருப்பதைப் பார்த்தேன், பின்பு என்னால் இயல்பாகப் பேச முடிந்தது. இத்தகைய அமர்வுகள் முடிந்ததும் என்னை வீட்டிலோ அல்லது ஹார்ட்மேனின் அலுவலகத்திலோ, எது பக்கமோ அங்கே கொண்டுவந்து விடுவார்கள். முதல்சில பள்ளி நிகழ்ச்சிகள் நன்றாக நடந்ததும் அந்த நிகழ்ச்சியின் முறைமைகள்

எனக்குப் பழக்கமாகிவிட்டன. அதனால், இந்த வகுப்புகளின்போது நான் மகிழ்ச்சியாக இருப்பதை உணர்ந்தேன். ஒவ்வொரு பயிற்சிமுகாமிற்காகவும் எனக்கு நூறு ரூபாய் மற்றும் எனது பயணச்செலவுகளைக் கொடுப்பார்கள் என்று தெரியவந்தபோது நான் இன்னும் மகிழ்ச்சியடைந்தேன்.

எனது உரையில், முதலில் எனது ஓராண்டு இடைவெளித் திட்டத்தைப் பற்றி மாணவர்களிடம் கூறுவேன். அந்த யோசனை எப்படி வந்தது, நான் சென்றிருந்த பல்வேறு இடங்கள், நான் செய்திருந்த பல்வேறு விசயங்கள் ஆகியவற்றைப்பற்றியும் கூறுவேன். அதன்பிறகு, மண்புழு வளர்த்தல் மற்றும் பாம்புகள் ஆகிய இரண்டு தலைப்புகளைப் பற்றிப் பேசுவேன். ஏனென்றால், அவை மாணவர்களுக்கு மிகவும் பயன்படும் என நான் நினைத்தேன். மண்புழு வளர்த்தல் பற்றிப் பேசக் காரணம், அவர்கள் வீட்டில் குப்பைகளை உரமாக மாற்றும் பயிற்சியை அவர்களே செய்யமுடியும். மேலும், பாம்புகள் குறித்துப் பலவித பயங்கள் மக்களிடம் இருப்பதால் அவற்றைப்பற்றியும் பேசினேன்.

நான் மண்புழு வளர்த்தல் பற்றி, குறிப்பாக சாணத்தை மண்ணுடன் கலப்பதுபற்றிப் பேசும்போது, சில சமயம் மாணவர்களும் மாணவிகளும் அருவருப்பாக உணர்வார்கள், அதைப் பற்றிக் கேலியாகப் பேசுவார்கள், அல்லது சிரிப்பார்கள். இவர்கள் எல்லாம் நகரத்துக்குழந்தைகள், இவர்களுக்கு மாட்டுச்சாணத்தைப்பற்றி எதுவும் தெரியாது என நினைத்துக்கொள்வேன். இருந்தாலும், ஒரு மண்புழுக்குழியை அவர்கள் வீடுகளில் அமைப்பது எப்படி என்பதை நான் தொடர்ந்து விளக்குவேன்.

பாம்புகளைப்பற்றிப் பேசும்போது, முதலில் விஷமுள்ள மற்றும் விஷமற்ற பாம்புகளைப்பற்றிய பொதுவான தகவல்களையும், விஷப்பாம்புகளைக் கண்டறிவது எப்படி என்பதையும் கூறுவேன். பின்,

ஒருவரை பாம்பு கடித்துவிட்டால் என்ன செய்ய வேண்டும் என்பதைக் குறித்துப் பேசுவேன். பாம்புகள் குறித்து மக்களுக்கு இருக்கும் பல்வேறு நம்பிக்கைகள் குறித்தும் அவற்றில் எவையெல்லாம் கட்டுக்கதைகள் என்பது குறித்தும்கூட நான் கலந்துரையாடுவேன். மிச்சமிருக்கும் நேரத்தைப் பொருத்து, முதலைகள், ஆமைகள் மற்றும் சிலந்திகள் போன்ற மற்ற விசயங்களைப்பற்றியும் பேசுவேன்.

அமர்வின் முடிவில், முதலையின் பற்கள், பாம்புகள், முதலைகள் மற்றும் உடும்புகளுடன் நான் எடுத்துக்கொண்ட புகைப்படங்கள் மற்றும் நான் என் பையில் எப்போதுமே எடுத்துச்செல்லும் அந்த சிவப்புக்காது ஆமை ஆகியவற்றை அவர்களுக்குக் காட்டுவேன். இந்தச் சமயத்தில் அவர்களிடம் அதிகபட்ச உற்சாகத்தைப் பார்க்கலாம். எல்லோரும் என்னைச் சூழ்ந்துகொள்வார்கள். சிலர் ஆமையைப் பிடித்துப் பார்க்கலாமா என்று கேட்பார்கள், அதன் உணவுப்பழக்கத்தைக் குறித்துக் கேள்விகள் கேட்பார்கள். நான் அவர்களை அதன் மேல் ஓட்டைத் தொட்டுப்பார்க்க மட்டுமே அனுமதிப்பேன், அதைத்தவிர வேறெங்கும் தொடமுடியாது. ஏனென்றால், அந்த ஆமை மிக மோசமானது, கடித்துவிடும். இதைப்போலவே நேஷனல் இங்கிலீஷ் பள்ளி, சிந்தி பள்ளி, செயின்ட் மேரி பள்ளி, பொலிவியன் பெண்கள் பள்ளி, பெங்களூர் இன்டர் நேஷனல் பள்ளி போன்ற பல்வேறு மற்ற பள்ளிகளிலும் பயிற்சி முகாம்கள் நடத்தினேன். பொதுவாக நான் எட்டு முதல் பத்தாம் வகுப்பு வரையிலான மாணவர்களுடன் உரையாடினேன். ஆனால், பெங்களூர் இன்டர்நேஷனல் பள்ளியில் பயிற்சிமுகாம் மூன்று மற்றும் நான்காம் வகுப்பு மாணவர்களுக்காக நடந்தது.

சில மாதங்களுக்குப் பிறகு, நான் கோவாவிலிருந்த போது, பெங்களூரின் NIEயிலிருந்து வந்திருந்த ஒரு பதிவுத்தபாலை தபால்காரர் என்னிடம்

கொடுத்தபோது நான் மிக்க மகிழ்ச்சியடைந்தேன், அதில் 1075 ரூபாய்க்கு ஒரு காசோலை இருந்தது, விரிவுரைகள் கொடுத்ததற்காக எனக்குக் கிடைத்த மொத்த சம்பளம்தான் அது. பின்னாளில், ஹிந்துஸ்தான் டைம்ஸ் பத்திரிக்கைக்காக நான் எனது ஓராண்டு இடைவெளித் திட்டத்தைப்பற்றி ஒரு கட்டுரை எழுதியபோது NIEக்கும் ஒரு நகல் அனுப்பினேன், அவர்களும் தங்கள் செய்திமடலில் அதைப் பிரசுரம் செய்தார்கள். நான் பெங்களூர் வரும்போதெல்லாம் இதைப்போன்ற பல பயிற்சிமுகாம்களை நடத்தவேண்டும் என NIEயிலிருந்து எனக்கு அழைப்பு விடுத்திருந்தார்கள்.

பெங்களூர் இன்னும் பல விதங்களிலும் மிக மகிழ்ச்சியூட்டுவதாக இருந்தது. ஒருநாள் காலை, நான் காலியாவுடன் ஒரு நீச்சல் குளத்திற்குச் சென்றேன். தண்ணீரில் குதித்தபோது என் வாழ்க்கையின் மிகப்பெரிய அதிர்ச்சி காத்திருந்தது, அந்தத் தண்ணீர் உறைய வைக்கும் குளிரோடு இருந்தது. குளிர்காலத்தில் பெங்களூரில் நீச்சலடிக்க இனி ஒருபோதும் முயற்சிக்கக் கூடாது என நான் முடிவுசெய்தேன்.

நான் அடிக்கடி வெளியே சாப்பிட்டேன். குறிப்பாக பகல் பொழுதுகளில், பல்வேறு உணவகங்களில் (பெங்களூரில் நிறைய உணவகங்கள் இருக்கின்றன) சாப்பிட்டுப் பார்த்தேன். தென்னிந்திய உணவுகள், காய்கறி கட்லெட்டுகள், மில்க் ஷேக்குகள் போன்ற பலவற்றை ருசித்துப் பார்த்தேன். ஆனால், அடிக்கடி எனது பணப்பையையும் (*Purse*) பார்த்துக்கொள்ள வேண்டியிருந்தது, எனது வரவுசெலவுப் பட்டியலில் ஆடம்பரமான உணவுகளுக்கு இடமில்லை. சில சமயங்களில், ஒரு புத்தகக் கடைக்குச் செல்வேன், சில சமயங்களில் பிங் மற்றும் உஜ்வலாவிற்காக சிறுசிறு வேலைகளுக்காக வெளியே செல்வேன். குறைந்தபட்சம் இரண்டு தடவையாவது பிங்கிற்கு சமையலில்

உதவிசெய்ததும், அவ்வப்போது உஜ்வலாவிற்கு தோட்ட வேலையில் உதவி செய்ததும் ஞாபகம் வருகிறது.

நான் பிங், உஜ்வலா மற்றும் அவர்களது இரண்டு குழந்தைகளுடன் அவர்களது குடும்பச் சுற்றுலாக்களில் சேர்ந்துசெல்வது வழக்கம். ஒருமுறை நாங்கள் சங்கி டேங்க் என்ற ஏரிக்குச் சென்றோம், அங்கு நான் இயந்திரப்படகு சவாரிகள் செய்து மகிழ்ந்தேன். அதன்பின், ஜூரி மற்றும் சயீருடன் சிறு குழந்தைகளுக்கான ஒரு பூங்காவில் விளையாடினேன். மற்றொரு சமயம், நாங்கள் எல்லாரும் ஒரு நாட்டிய நிகழ்ச்சிக்குச் சென்றோம், அது எனக்குப் பெரிதாகப் புரியவில்லை. சில சமயங்களில் நாங்கள் வெறுமெனே வண்டியில் ஊர்சுற்றச் செல்வோம் (எனக்கு மிகவும் பிடித்தவை இந்தச் சிறு பயணங்கள்தான்), வீட்டிற்குத் திரும்பும் வழியில் நாங்கள் கோன் ஐஸ் கிரீம் சாப்பிடுவோம்.

நான் எப்படிக் காய்கறிகள் சாப்பிடக் கற்றுக்கொண்டேன் என்பதைச் சொல்லியாக வேண்டும். என் ஞாபகத்தின்படி, எனக்குப் பொதுவாகவே காய்கறிகளைப் பிடிக்கவில்லை. ஒரு குழந்தையாக எனக்கு வழக்கமாகவே காய்கறிகளை ஊட்டியதாக என் அம்மா என்னிடம் சொல்வதுண்டு. எங்கள் வீட்டில் ஒவ்வொரு சாப்பாட்டின்போதும் ஒன்று அல்லது இரண்டு காய்கறிகள் மேஜையில் இருக்கும். இருந்தாலும் பொதுவாக நான் காய்கறிகள் வேண்டாம் என்று மறுப்பேன், கோவாவின் பிரதான உணவான மீன் குழம்பு மற்றும் சோறு சாப்பிடுவதையே எப்போதும் விரும்பினேன்.


நான் என்னுடைய பயணங்களைத் தொடங்கியபோது, பல இடங்களில் சைவ உணவுதான் கிடைக்கும் என என் பெற்றோர் எச்சரித்தார்கள், அப்படியேதான் நடந்தது. அந்த ஒருவருட காலத்தில் வெவ்வேறு நபர்களின் வீடுகளில் எல்லா வகை உணவுகளையும் எப்படிச் சாப்பிடுவது என கற்றுக்கொண்டேன். ஆனால், நான் ஓரளவு சமாளிக்கமுடிந்த முட்டைக்கோஸ் மற்றும் உருளைக்கிழங்கு போன்ற காய்களோடு நிறுத்திக்கொள்வேன், அல்லது பருப்பு மற்றும் சோற்றை ஊறுகாயோடு சாப்பிடுவேன். இன்னும் நான் வெண்டைக்காய் மற்றும் கத்திரிக்காய் போன்ற காய்களை சாப்பிடத் தொடங்கியிருக்கவில்லை. என்னுடன் பேசிக்கொண்டிருக்கும்போது பிங் இதைக் கண்டுபிடித்துவிட்டார், உணவை இப்படி வீணாக்குபவர்களை அவருக்குப் பிடிக்காது என்றார். அதனால், தினமும் சாப்பிடும்போது எனது தட்டில் அவர் அதிகளவு காய்கறிகளை வைத்துவிடுவார். குறிப்பாக, எனக்குப் பிடிக்காதவையான தக்காளி, கத்திரிக்காய் மற்றும் வெண்டைக்காயை அள்ளி வைப்பார்.

முதலில் நான் காய்கறிகளை முடித்துவிடுவேன், அப்போதுதான் காய்கறிகளைப்பற்றிக் கவலைப்படாமல் சாப்பாட்டின் நல்ல பகுதியை ருசித்துச் சாப்பிட முடியும், அதாவது இறைச்சி அல்லது மீனை. ஆனால், நான் காய்கறிகளை முடித்த உடனேயே, அவர் சொல்லுவார், "ஓ! அருமை, உனக்கு இந்தக் காய் பிடிக்குமா? இன்னும் கொஞ்சம் எடுத்துக்கொள்!'', நான் எவ்வளவு போராடினாலும் எனக்கு இன்னும் அதிக காய்களை வைத்துவிடுவார். இப்படியாக, இறுதியில் நான் சாப்பிட்டு முடிக்கும் போது, முதல்முறை எவ்வளவு காய்கறிகள் எடுத்துக்கொண்டேனோ அதைப்போல மூன்றுமடங்கு சாப்பிட்டிருப்பேன்.

நான் பெங்களூரில் மூன்று வாரங்கள் தங்கினேன், ஜனவரி 30ம் தேதிதான் வீட்டிற்குத் திரும்பினேன். நான் என் பெற்றோரையும் சகோதரர்களையும் கிட்டத்தட்ட மூன்று மாதங்களாக சந்தித்திருக்கவில்லை, எனது அனுபவங்களை அவர்களுடன் பகிர்ந்துகொள்ள ஆவலாக இருந்தேன். துரதிருஷ்டவசமாக, நான் வந்து சேர்ந்தபோது என் பெற்றோருடன்

பேசுவதற்கு எனக்கு சுமார் ஒருமணி நேரம்தான் கிடைத்தது. ஏனென்றால், டெல்லியில் நடைபெறும் உலகப் புத்தகக் கண்காட்சிக்காக பத்துநாள் தங்கியிருப்பதற்காக 'அதர் இந்தியா புத்தகக் கடை'யின் (*Other India Bookstore*) சில பணியாட்களுடன் என் பெற்றோர்களும் அன்று கிளம்பிக் கொண்டிருந்தார்கள். அதனால், என்னுடைய கதைகளைச் சொல்லி அவர்களைக் கவர நான் அவர்கள் திரும்பி வரும்வரை காத்திருக்க வேண்டியிருந்தது.

இருந்தாலும், எனது பயணங்களைப்பற்றித் தெரிந்துகொள்ள ஆவலாக இருந்த எனது இரு சகோதரர்களும், ஐந்து மாதங்களாக என்னைப் பார்த்திராத எனது பக்கத்து வீட்டுக்காரர்களும் என்னுடன் இருந்தனர். மேலும், அசோக் போன்ற எனது பழைய நண்பர்கள் அவர்களுடைய கூட்டத்திற்கு என்னைமீண்டும் வரவேற்பதில் மிகுந்த மகிழ்ச்சியடைந்தனர்.



உங்களுக்குப் பார்வை இருக்கிறது,
எனக்கு தரிசனம் இருக்கிறது!

பிப்ரவரி மாதம் முழுதும் நான் வீட்டில்தான் இருந்தேன், கிட்டத்தட்ட பாதி மாத காலம் என் பெற்றோர் வெளியூரில் இருந்ததும், அந்த நேரத்தில் என்னை வீட்டைப் பார்த்துக்கொள்ளுமாறு சொல்லியிருந்ததும் ஒரு காரணம். மேலும்,எனது ஓராண்டு இடைவெளித் திட்டத்தின் கடைசி சில மாதங்களை நான் மறுதிட்டமிட வேண்டியிருந்தது. எப்போதுமே நாம் கடிதம் எழுதியிருந்தவர்களிடமிருந்து பதில் வருவதற்காகக் காத்திருப்பதற்கும் கொஞ்ச காலம் தேவைப்படும் இல்லையா?

எனது ஓராண்டு இடைவெளித் திட்டத்தில் நான் செய்ய நினைத்திருந்த பெரும்பாலான விசயங்களை நான் முடித்துவிட்டேன் என்பது எனக்குத் தெரிந்தது, இருந்தாலும் சில மிச்சமிருந்தன. உதாரணமாக, தேனீக்கள் பற்றி அறிந்துகொள்வதற்கு முறையாக இன்னும் திட்டமிட்டிருக்க வில்லை.

இந்த நேரத்தில், நான் முடிக்காமல் வைத்திருந்த கடந்த இரண்டு மாதங்களைப்பற்றிய சிறப்புக் கட்டுரைகளை எழுதி முடிப்பதில் நான் ஈடுபட்டேன் (இருந்தாலும், எனது தினசரி நாட்குறிப்புகள் முழுமையாகவும் சரியான ஒழுங்கிலும் இருந்தன).

நான் எங்கள் வீட்டுக் கொல்லைப்புறத்தில் மண்புழு உரக்குழியையும் அமைத்தேன். நான் கற்றுக்கொண்ட மண்புழு வளர்த்தலை உடனடியாகப் பயிற்சிசெய்து பார்க்க வேண்டும் என்பது எனது தந்தையின் யோசனை தான், ஏனென்றால், குப்பைகளைக் கையாளுவது பெரும்பாலும் எல்லா வீடுகளிலும் ஒரு பிரச்சினையாக மாறிவருகிறது. அவருடைய யோசனை என்னவென்றால், சோதனை முயற்சியாக வீட்டில் மண்புழுக்குழி அமைக்கும் நுட்பத்தில் நான் தேர்ச்சி அடைந்ததும், தேவைப்பட்டால் எங்கள் நண்பர்களின் வீடுகளில் அதேவகை குழிகளைச் சிறு மாற்றங்களுடன் அமைக்கலாம். பிறகு, குப்பைகளைக் கையாளும் இந்தப் பயனுள்ளமுறை தேவைப்படும் எவருக்கும் நான் உதவலாம்.

எங்கள் வீட்டைப்போல மிகப்பெரிய இடமிருக்கும் குடும்பங்களுக்குப் பொருந்தும் வகையில் ஒரு மிகப்பெரிய மண்புழுக் குழியையும், சொந்தமாக நிறைய இடமில்லாத அடுக்குமாடிக் குடியிருப்புகளில் இருக்கும் நபர்களுக்குப் பயன்படும் வகையில் ஒன்று அல்லது இரண்டு சிறிய மண்புழுப் படுக்கைகளையும் நான் உருவாக்க வேண்டும் என்று என் தந்தை ஆலோசனை கூறினார். அவ்வப்போது குப்பைகளைப்

போடுவதன்மூலம் எல்லா குழிகளையும் தொடர்ந்து செயல்பட வைத்தோம். இதனால், பெரிய மற்றும் சிறிய குழிகள் எப்படிச் செயல்படும் என்பதை நான் அனுபவப்பூர்வமாகப் பார்க்க முடிந்தது. அதைப்பற்றி யாரும் தகவல்கேட்டால் எங்களிடம் தயாராக இருக்கும்.

முதலில், நான் ஒரு மண்புழுப் படுக்கை அமைக்க வேண்டியிருந்தது. நான் அதற்கான தொட்டியை அமைப்பதில் ஆரம்பித்தேன், அது செங்கல்லால் ஆனதாக இருக்க வேண்டியிருந்தது. அந்த சமயத்தில் ஒரு தொழிலாளி எங்கள் வீட்டில் சில சில்லறை வேலைகளைச் செய்துகொண்டிருந்தார். செங்கல்லை எப்படி சிமெண்ட் போட்டுக் கட்டுவது என்பதைப்பற்றி அவருக்குச் சிறிது தெரியும் என்றார். எனவே அவரும் நானும் 3'X 2'X4' அளவில் ஒரு செங்கல் தொட்டியைக் கட்டினோம். சிமெண்டையும் மணலையும் தண்ணீருடன் ஒரு தோராயமான விகிதத்தில் கலந்தோம். ஒரு நாளிலேயே, செங்கற்களை ஒன்றன்மேல் ஒன்றாக அடுக்கி விட்டோம், அந்த சிமெண்ட் கலவை அவற்றை சேர்த்துப் பிடித்துக் கொண்டது. இது மிக எளிதான வேலை என நான் நினைத்தேன். அந்தப் படுக்கையை அமைக்க நாங்கள் பயன்படுத்திய செங்கற்கள் எத்தனை, மணல் மற்றும் சிமெண்டின் அளவு எவ்வளவு ஆகியவற்றை நான் குறித்துக்கொண்டேன்.

அடுத்தநாள் மிகுந்த கடமையுணர்வுடன், எனக்குச் சொல்லப்பட்டபடி, சிமெண்ட் நன்றாகப் பொருந்துவதற்காக இரண்டுமுறை அந்தத் தொட்டியின்மீது தண்ணீர் விட்டேன். மூன்றாம் நாள் எங்கள் முழுத்தொட்டியும் ஆடிக்கொண்டு உடைந்துவிழத் தயாராக இருந்ததைப் பார்த்தபோது நான் எவ்வளவு அதிர்ச்சி அடைந்திருப்பேன் என கற்பனை பண்ணிப் பாருங்கள். நான் என் பக்கத்துவீட்டுக்காரரான குருவின் வீட்டிற்கு ஓடிப்போனேன். அவர் அந்தத் தொட்டியைப் பார்த்து விட்டு

அந்தத் தொட்டியை முழுதும் இடித்துவிட்டு மறுபடியும் முதலில் இருந்து கட்டத் தொடங்கவேண்டும் என்றார். நாங்கள் சரியான விகிதத்தில் சிமெண்ட் மற்றும் மணலைக் கலந்திருக்கவில்லை, மேலும் செங்கற்களைச் சரியாகக் கட்டவுமில்லை என்பது வெளிப்படையாகத் தெரிந்தது. அந்தத் தொட்டிக்கு நாங்கள் அஸ்திவாரமும் போட்டிருக்கவில்லை. கட்டிட வேலையொன்றும் அவ்வளவு சுலபமானதில்லை என்று நான் அன்று உணர்ந்தேன்.

நான் உடனடியாக அந்தத் தொட்டியிலிருந்து ஒவ்வொரு செங்கல்லாக சேதமில்லாமல் அகற்ற ஆரம்பித்தேன், ஏனென்றால் அந்த செங்கற்களை மறுபடியும் உபயோகப்படுத்த வேண்டியிருந்தது. பின், கட்டிட வேலை நிபுணரான குரு தொட்டியைக் கட்டுவதற்காக வந்தார், நான் அதற்கு உதவினேன். அன்று நாங்கள் இரண்டு தொட்டிகள் கட்டினோம், ஒன்று பெரிய்து, ஒன்று நடுத்தரமானது. பின், நான் மண்புழுக் குழிகளைத் தயாரித்தேன். எங்கள் வீட்டுப் பணியாளரான ஏசுவிடம், அதற்குப்பிறகு வீட்டிலுள்ள எல்லா குப்பைகளையும் (காகிதம் மற்றும் பிளாஸ்டிக் தவிர) அந்தக் குழிகள் ஒவ்வொன்றிலும் மாறிமாறிப் போடுமாறு சொன்னேன்.

நாங்கள் ஒரு மரக்கூடையிலும் மண்புழு வளர்த்தலை ஆரம்பித்தோம். அந்தக் கூடை ஒரு விதைப் படுக்கையாக பயன்படுத்தப்பட்டது, நல்ல தரமான பலா மர நாற்றுகள் அந்தப் பெட்டியில் வளர்க்கப்பட்டன. மற்ற இரண்டு மண்புழுக் குழிகளும் (செங்கல்லால் ஆனவை) நன்றாகச் செயல்பட்டன; எங்கள் வீட்டுக்கழிவுகள் எல்லாம் மண்புழுக்களால் நன்றாகப் பதப்படுத்தப் பட்டன. பிப்ரவரி மாதக் கடைசியில், மீண்டும் என் பயணத்தைத் துவங்க நான் ஆவலாகவும் தயாராகவும் இருந்தேன். தேனீ வளர்ப்பு குறித்துக் கற்றுக்கொள்வதற்காக என் தந்தை சில ஏற்பாடுகளை செய்திருந்தாலும், தனிப்பட்ட முறையில் எனக்கு அந்தத்

துறையில் பெரிய ஆர்வமில்லை. முதலைகள், பாம்புகள் மற்றும் காடுகள் என்னை மிகக் கவர்ந்துவிட்டிருந்தன. மீண்டும் அந்த முதலைப் பண்ணைக்குச் செல்ல நான் ஏங்கிக் கொண்டிருந்தேன்.

எனக்கு முற்றிலும் தொடர்பில்லாத, சம்பந்தமில்லாத, நான் முடிக்க விரும்பிய இன்னொரு திட்டம் இருந்தது. 'கண் பாதுகாப்பு' குறித்த ஒரு பயிற்சியில் இணைந்து என் கண்பார்வையை மேம்படுத்திக் கொள்வதும், பாண்டிச்சேரியில் இருந்த அரவிந்தர் ஆஸ்ரமத்தின் கண் மருத்துவமனையில் கண்களுக்கான பயிற்சிகளைக் கற்றுக்கொள்வதும் தான் அது.

முதலைப் பண்ணையில் தங்கியிருந்த பணியாளார்களில் ஒருவரான ஃபரிடா மூலம் அந்தக் கண் மருத்துவமனையைப்பற்றி நான் தெரிந்து கொண்டேன். எனது நான்காம் வகுப்பிலிருந்தே நான் கண்ணாடி அணிந்துகொண்டிருக்கிறேன். கரும்பலகையிலிருந்து நான் பாடங்களைச் சரியாகப் பார்த்து எழுதாமல் இருந்ததற்கான காரணம் நான் கவனமில்லாதவனாகவோ, பணிவற்றவனாகவோ இருந்ததால் இல்லை. கரும்பலகையில் உள்ளதை கொஞ்சம்கூட என்னால் தெளிவாக வாசிக்க முடியாததால்தான் என்று என் அம்மா கண்டுபிடித்தார். அதன்பிறகு கண் மருத்துவரைப் பார்க்கச் சென்றோம், கட்டாயக் கண்ணாடியும் வந்துசேர்ந்தது.

கண் பயிற்சிகள் செய்வதன்மூலம் ஒருவர் கண்பார்வையை மேம்படுத்த முடியும் என்று நான் கேள்விபட்டது முதல், இந்தக் கண்ணாடிகளிலிருந்து விடுதலை அடையத் தீவிரமாக விரும்பினேன். சொல்லப்போனால், என் பெற்றோரின் வேலையுடன் சம்பந்தப்பட்ட மருத்துவ சேவை கன்னியாஸ்திரியான சகோதரி கெம்மா அவர்களுடன் கண் பயிற்சிகள் செய்வதை நான் தொடங்கியிருந்தேன். நான் முதலைப் பண்ணையில் இருந்தபோதும் அந்தப் பயிற்சிகளைத் தொடர்ந்தேன். அதைப் பார்த்த ஃபரிடா,

அரவிந்தர் ஆஸ்ரமத்திலிருந்த கண்மருத்துவமனையைப் பற்றிக் குறிப்பிட்டார், அங்கே எனக்கு முறையான பயிற்சி கிடைக்கும் எனவும் கூறினார்.

நானும் எனக்குப் பிடித்தமான முதலைப் பண்ணைக்குத் திரும்பிவர விரும்பியதாலும், பாண்டிச்சேரி மாமல்லபுரத்திலிருந்து அவ்வளவொன்றும் தொலைவில்லை என்பதாலும், பெங்களூர் வழியாக பாண்டிச்சேரிக்குச் சென்று கண் பயிற்சியை அங்கே முடித்துவிட்டு, பின்பு முதலைப் பண்ணைக்குச் சென்று ஒரு இரண்டு வாரங்கள் தங்கிவிட்டு கோவாவிற்குத் திரும்ப அனுமதிக்குமாறு என் பெற்றோரிடம் கேட்டேன். இந்தத்திட்டம் மார்ச் மாதத்தில், என் சகோதரர்கள் அவர்களது ஆண்டிறுதித் தேர்வுக்குப் படித்துக்கொண்டிருக்கும்போது நான் தொந்தரவில்லாமல் தள்ளியிருக்க உதவும். மேலும் ஏப்ரல்-மே மாத விடுமுறைக்காலத்தை மகிழ்ச்சியாகக் கழிக்க நான் சரியான நேரத்தில் திரும்பிவருவேன். பெல்காமிலிருந்து எனது சகோதரர்களான லுகானோவும் ரிக்கார்டோவும் வருவார்கள். மாம்பழங்கள், பலாப்பழங்கள் மற்றும் எண்ணற்ற கடற்கரை சுற்றுலாக்கள் இவற்றுடன் ஒரு முழு கோடைக்காலத்தையும் நாங்கள் மகிழ்ச்சியாகக் கழிப்போம்.

என் பெற்றோர் என் திட்டத்தை ஏற்றுக்கொண்டனர், பிப்ரவரி 26ம் தேதி, நான் பாண்டிச்சேரிக்குக் கிளம்பினேன். இப்போது எனக்கு வழிகள் நன்றாகத் தெரிந்திருந்ததால், நான் சென்று சேர்ந்தபோது என்னைப் பேருந்து நிலையத்திலிருந்து யாரும் அழைத்துச்செல்ல வேண்டிய அவசியம் இருக்கவில்லை. இருந்தாலும், ஆரோவில்லில் இருந்த பெர்னார்டிற்கு நான் முன்னரே தொலைபேசியில் அழைத்து எனது பயிற்சிக்காலம் முழுவதும் நான் அவருடன் ஆரோவில்லில் தங்க ஏற்பாடு செய்திருந்தேன்.

நான் கோவாவிலிருந்து பெங்களூருக்கு ஓர் இரவுப்பேருந்தில் சென்றேன், ஹார்ட்மேனின் வீட்டில் பகல்பொழுதில் கொஞ்சம் ஓய்வெடுத்துக்கொண்டு, மீண்டும் பெங்களூர் பேருந்து நிலையத்தில் ஓர் இரவுப்பேருந்தைப் பிடித்து, காலை 4 மணிக்கு பாண்டிச்சேரியை அடைந்தேன். அங்கே ஒரு சைக்கிள் ரிக்ஷாக்காரர் என்னை ஆரோவில்லில் கொண்டுபோய் விடுவதாக உறுதிகூறி அதற்குப் பதிலாக என்னை பேருந்து நிறுத்தத்திற்குப் பக்கத்திலேயே இருந்த அரவிந்தர் ஆஸ்ரமத்தில் இறக்கி விட்டுவிட்டு 40 ரூபாய் ஏமாற்றிவிட்டார்.

கிட்டத்தட்ட 10 கி.மீக்கும் அதிகமான தொலைவில் இருந்த ஆரோவில்லிற்கு நான் இன்னொரு உள்ளூர் பேருந்து பிடித்துச்செல்ல வேண்டியிருந்தது. அதன்பின், கொஞ்ச தூரம் நடந்துசென்ற பிறகு, பெர்னார்ட் என்னை வரவேற்றார். அவரை எனக்கு ஏற்கெனவே தெரியும், சில மாதங்களுக்கு முன் ஆரோவில்லிற்கு நான் முதல்முறை வந்திருந்தபோது அவரைச் சந்தித்திருந்தேன். ஆரோவில்லில் பெர்னார்டின் வீட்டில் ஓர் அறையில் நான் இலவசமாக தங்கினேன், அவர் தயாரித்த உணவையும் பகிர்ந்து கொண்டேன்.

நான் பெர்னார்டின் வீட்டிலிருந்து ஆஸ்ரமத்திற்கு ஓர் நாளில் இரண்டு முறை சைக்கிளில் சென்றேன். ஆஸ்ரமத்தில் எனது கண் பயிற்சிகளைச் செய்துவிட்டு வீட்டிற்குத் திரும்புவேன். ஒரு நாளைக்கு மொத்தம் 45 கி.மீக்கு சைக்கிள் மிதித்தேன். அதாவது, நான் அங்கிருந்த ஒன்பது நாட்களில் 360 கி.மீக்கு சைக்கிள் மிதித்தேன்.

அந்த ஆஸ்ரமம் ஒரு பழைய கட்டிடம் தான். நீங்கள் உள்ளே நுழையும் முன் காலணிகளை வெளியே விட்டுவிட வேண்டும், அவற்றின்மேல் ஓர் எண்ணுடன் கூடிய பிளாஸ்டிக் சீட்டை வைக்க வேண்டும், அதே எண்ணுடைய இன்னொரு சீட்டை நீங்கள் உங்கள் சட்டைப்பையில்

வைத்துக் கொண்டு ஆஸ்ரமத்தின் படிக்கட்டுகளில் வெறும் காலோடு நடக்க வேண்டும். தியான மனநிலையில் இருக்கும் மக்களும், தொடர்ந்து ஒலித்துக்கொண்டிருக்கும் மெல்லிய இந்தியப் பாரம்பரிய இசையும் கொண்ட அந்த இடம் எனக்கு ஒரு புத்துணர்வு மையத்தை நினைவூட்டியது.

முதல் பயிற்சிதான் மிகவும் பயங்கரமான ஒன்று. வெயிலில் சைக்கிள் மிதித்து நான் ஆஸ்ரமத்திற்கு வந்துசேர்ந்ததும், என் கண்களில் தேன் துளிகளை விடுவார்கள். தேனால் எரியும் கண்களுடன் நான் வெயிலில் வியர்க்கும்படி நிற்கவேண்டியிருந்தது. (தேன் நாக்கிற்கு இனிமையானது, ஆனால் கண்களில் எரியும்).

அடுத்த பயிற்சி இருளில் வெறும் மெழுகுவர்த்தி வெளிச்சத்தில் மிக நுண்ணிய எழுத்துகளைப் படிக்கப் போராடுவதுதான். அடுத்து, அதே பயிற்சியை வெளியே சாதாரண சூரிய வெளிச்சத்தில் செய்யவேண்டும். ஒரு சிறிய ரப்பர் பந்தை உபயோகிப்பதன் மூலம் கண்களை அசைக்கும் ஒரு பயிற்சியும் இருந்தது. பிறகு பல்வேறு விகிதங்களில் அளவில் குறைந்துகொண்டே போகும் எழுத்துகள் மற்றும் வார்த்தைகள் அடங்கிய ஓர் அட்டையை வாசிக்க வேண்டும். மூச்சிழுப்பதைப் போன்ற முறையிலேயே கண்களுக்கு நீராவிக்குளியல், குளிர்ந்த பஞ்சுப் பொட்டலங்களை வைத்துக் கண்களைக் குளிர்வித்தல் ஆகியவற்றையும் செய்யவேண்டும். இறுதியாக, நிறச்சிகிச்சை இருந்தது. ஓர் இருண்ட அறையில் ஒரு விளக்கிலிருந்து பிரதிபலிக்கும் பிரகாசமான நிறங்களை நாம் உற்றுப்பார்க்க வேண்டும்.

ஒவ்வொரு பயிற்சியையும் ஒரு குறிப்பிட்ட எண்ணிக்கையில், கண்களைத் திறத்தல், மூடுதல், சிமிட்டுதல் போன்ற சிறுகுறிப்புகளின் அடிப்படையில் மிக நுணுக்கமாகக் கட்டுப்படுத்திச் செய்ய வேண்டியிருந்தது. சிகிச்சை முடிந்ததும் ஆரோவில்லிற்குத் திரும்பிச்செல்லும் வழியில் நான்

ஒரு வாக்மேனில் அதிரடி இசை (*Rock Music*) கேட்பதைத் தொடர்வேன்.

ஆஸ்ரமத்தில் அந்த 10 நாள் பயிற்சிக்குக் கட்டணம் ஏதுமில்லை. ஆனால் அதன் முடிவில், நான் எனது பயிற்சிகளைத் தொடர்ந்து செய்வதற்குத் தேவையான பொருட்களான 4 குப்பி கண் சொட்டு மருந்து, 2 சிறிய தேன் ஜாடிகள், ஒரு ரப்பர் பந்து, நுண்ணிய எழுத்துகள் அச்சிடப்பட்ட இரண்டு அட்டைகள் மற்றும் கையேடுகளை வாங்குவதற்காக 77 ரூபாய் செலுத்தினேன்.

இந்தப் பயிற்சியினால் நான் நல்ல பலனடைந்தேன். தொடர்ந்து பயிற்சிகளைச் செய்தபிறகு, சுமார் ஒரு மாதத்திலேயே என்னால் கண்ணாடியின்றி வாசிக்க முடிந்தது. வழக்கமாக இல்லாவிட்டாலும் இன்னும் நான் அந்த பயிற்சிகளைச் செய்கிறேன். இதில் சிறந்த விசயம் என்னவென்றால், நான் தொடர்ந்து கண்ணாடி போட்டுக்கொண்டிருந்த ஒருவனாக இருந்தாலும், இப்போது சில சமயங்களில்தான் கண்ணாடி அணிய வேண்டியிருக்கிறது. உதாரணமாக, தொலைக்காட்சி அல்லது திரைப்படங்கள் பார்க்கும்போது மட்டும். எங்கள் வீட்டில் தொலைக் காட்சி இல்லாததால் அதையும் நான் மிக அரிதாகத்தான் செய்வேன்.

பயிற்சி முடிந்ததும் முதலைப் பண்ணையை மற்றொருமுறை பார்க்க நான் ஆவலாக இருந்தேன். தொலைபேசியின் மூலமாக ஏற்கெனவே செய்யப்பட்டிருந்த ஏற்பாடுகளின்படி, மார்ச் 7ஆம் தேதி நான் மீண்டும் மாமல்லபுரத்திற்குக் கிளம்பினேன்.

செல்லும் வழியில் ஒரு வேடிக்கையான, ஆனால் அதிக விலைமதிப்பு மிக்க ஒரு சம்பவம் நடந்தது.

அன்று அதிகாலையில், மாநிலங்களுக்கு இடையே ஓடும் பேருந்துகளுக்கான நிலையத்திற்கு நான் சென்றேன். மாமல்லபுரத்திற்குச் செல்லும் பேருந்து வருவதற்காக 8 அல்லது 9 மணிவரை காத்திருந்தேன். நான் அக்கம்


பக்கத்தில் விசாரிக்க ஆரம்பித்தேன். கடைசியில், ஒரு பேருந்து ஓட்டுனர் எனக்கு மாமல்லபுரத்திற்குச் செல்லும் பேருந்திற்கு வழிகாட்டினார்.

நான் பேருந்தை சென்று அடைவதற்குள், நடத்துனர் சீருடையில் இருந்த ஒரு நபர் என்னை நோக்கி நடந்துவந்தார். "நீ எங்கே போகிறாய்?" என்று கேட்டார். "மாமல்லபுரத்திற்கு" என்று நான் பதில் சொன்னேன். "வா, என்கூட வா" என்று அந்த மனிதர் கூறினார். நாங்கள் இருவரும் ஒரு பேருந்தில் ஏறினோம், நான் ஓர் இருக்கையில் அமர்ந்தேன். அவர் என் பயணச் சாமான்களைத் தலைக்கு மேலிருந்த உலோகச்சட்டத்தில் வைத்தார். "சீட்டு, சீட்டு" என்று அவர் தோரணையாகக் கேட்டார். "எவ்வளவு?" என்று கேட்டேன் நான். "25 ரூபாய்" என்று பதில் சொன்னார் அவர். நான் பணத்தை அவரிடம் கொடுத்தேன்.

பேருந்து கிளம்பிய சிறிதுநேரத்தில், நான் அதிர்ச்சியடையும் விதமாக, இன்னொரு நடத்துனர் வந்து பயணிகளுக்குச் சீட்டு கொடுக்க ஆரம்பித்தார். மற்றொரு நடத்துனரிடம் நான் ஏற்கெனவே 25 ரூபாய் செலுத்திவிட்டேன் என நான் விளக்கினேன். அப்போதுதான் எனக்குத் தெரிந்தது, அந்த ஆள் ஒரு நடத்துனரே இல்லை, பேருந்து ஓடாமல் நின்றபோதே என்னை ஏமாற்றிய ஒரு புத்திசாலி ஏமாற்றுக்காரன்தான் அவர். முதலைப் பண்ணைக்கான பயணத்திற்காக நான் இன்னுமொரு 18 ரூபாய் செலுத்தவேண்டி வந்தது. பேருந்தில் இருந்த எல்லா பயணிகளின் கண் முன்னாலேயே அந்த மனிதனால் என்னை ஏமாற்றமுடிந்தது என்பதைத்தான் என்னால் ஏற்றுக்கொள்ள முடியவேயில்லை. அவன் நிஜமான நடத்துனர் இல்லை எனக்கூற ஒருவரும் முன்வரவில்லை.

இந்தமுறை நான் முதலைப் பண்ணையில் ஒரு வாரம்தான் தங்கினேன். ஏனென்றால் ரோம், ஹேரி மற்றும் பண்ணையிலிருந்த மற்ற எல்லோரும்

நேஷனல் ஜியோகிராபிக் திரைப்பட நிகழ்ச்சியைத் தொடர்வதற்காக கேரளாவிற்குக் கிளம்பிக்கொண்டிருந்தனர். மேலும், எல்லோரும் வெளியூரில் இருக்கும்போது அந்த முதலைப் பண்ணையில் நான் செய்வதற்குப் பெரிதாக ஒன்றுமில்லை.



காட்டில் கணக்கெடுத்தல்

அந்த ஆண்டின் கோடைக்கால விடுமுறை மிக வேடிக்கையாக இருந்தது. திட்டமிட்டபடி பெல்காமிலிருந்து என் சகோதரர்கள் வந்தனர். அந்த வருடம் ஒருவருக்கும் பொதுத்தேர்வு இல்லாததால், ஏப்ரல் முதல் வாரத்திலேயே விடுமுறைக்காலம் ஆரம்பித்துவிட்டது. இரண்டு மாதங்கள் முழுவதும் நாங்கள் கடலில் மகிழ்ச்சியாக இருப்போம். பாகாவில் கடலில் கலக்கும் ஆற்றில் முடிந்த அளவு நீந்துவோம்.

மே மாதத்தில் ஒருநாள் காலை என் தந்தை என்னிடம், ஒரு சுற்றுச்சூழல் நிறுவனமான கோவா பவுண்டேஷன் கல்லூரி மாணவர்களுக்காக ஒருங்கிணைத்த ஒரு திட்டத்தில் நான் பங்கேற்க விரும்புகிறேனா என்று கேட்டார். என் தந்தை அந்த நிறுவனத்தின் நிர்வாகச் செயலாளராக இருந்தார். பேட்டிமில் இருந்த காடுகளுக்கு களப்பணிக்குச் சென்று, எந்தெந்தப் பகுதிகள் இன்னும் காடுகளாக இருக்கின்றன, எந்தப் பகுதிகளில் காடுகள் வெட்டப்பட்டிருக்கின்றன, யாரால் வெட்டப் பட்டிருக்கின்றன, எந்தத் திட்டங்கள்/கட்டிடங்கள் புதிதாக வந்திருக்கின்றன போன்ற விசயங்களைக் கண்டறிவதுதான் அந்தத் திட்டம். இந்தத் திட்டத்தைத் தேர்ந்தெடுத்திருந்த இரண்டு மாணவர்களான ஸ்டீபன் மற்றும் ஜெர்ரி இருவரும் மபுசாவின் செயின்ட் சேவியர் கல்லூரியில் இளங்கலைப் பட்டப்படிப்பு படித்துக்கொண்டிருந்தார்கள். அந்த அணியில் ஒரு கூடுதல் ஆளாக நான் சேர்ந்துகொண்டேன்.

மே 20ம் தேதி காலையில் நானும் என் தந்தையும் காரில் பேட்டிமிற்குக் கிளம்பினோம். வழியில், நாங்கள் ஸ்டீபன் மற்றும் ஜெர்ரியை ஏற்றிக் கொண்டோம். அந்தப்பகுதியில் இருந்த, நாங்கள் வேலை செய்ய வேண்டியிருந்த வெவ்வேறு இடங்களை என் தந்தை எங்களுக்குக் காட்டினார், அதன்பின் அவர் சென்றுவிட்டார்.

ஸ்டீபன்தான் அணியின் தலைவன். என் தந்தை அவனிடம் ஏற்கெனவே நாங்கள் எப்படி எங்கள் வேலையைத் தொடங்கவேண்டும் என சொல்லியிருப்பார் போல, அதனால் அவன் உடனே ஒரு கையேட்டை எடுத்து குறிப்புகளை எழுதத் தொடங்கினான். நான் என் கையேட்டை எடுத்துச் சில பறவைகளின் பெயர்களை எழுதினேன். ஒருவேளை யாராவது எங்களை விசாரித்தால், நாங்கள் பறவை கண்காணிப்பாளர்கள் என்று சொல்லவேண்டும் என ஸ்டீபன் கூறினான்.

காட்டின் மத்தியில் நாங்கள் இரண்டு சட்டவிரோதமான வீடுகளையும், பல பெரிய மரங்களை வெட்டி ஏற்படுத்தப்பட்ட, சமன்செய்யப்பட்ட ஒரு பெரிய இடத்தையும் கண்டுபிடித்தோம். அந்த மரங்கள் ஒரு மின்சார அறுவை இயந்திரத்தால் வெட்டப்பட்டவை போலத் தோன்றின. மேலும் வளர்வதைத் தடுக்க அவற்றின்மீது தாரைப் பூசியிருந்தார்கள். அருகிலேயே நிறைய மரக்கட்டைகள் வீசப்பட்டிருந்தன. அந்த வேலை மிகவும் சோர்வளிப்பதாக இருந்தது, மே மாதமாக இருந்ததால் மிகவும் உஷ்ணமாக இருந்தது. என் பாவப்பட்ட பாதங்களை என் காலணிகள் சமைக்க ஆரம்பித்துவிட்டன. ஒரு சிறுபாதையைப் பார்த்தாலும், அதன் முடிவுவரை நாங்கள் சென்றுபார்க்க வேண்டும் என ஸ்டீபன் வலியுறுத்துவான். ஜெர்ரி சிலசமயம் புலம்புவான், ''ஸ்டீபன், யாரும் போகமுடியாத பள்ளத்தாக்கின் உள்ளே மரம் வெட்ட யார் போவார்கள் என்று நீ நினைக்கிறாய்?'' ஆனால் ஸ்டீபன் பிடிவாதமாக எதிர்த்துப் பேசுவான், ''ஜெர்ரி, நாம் அங்கு போகாவிட்டால், 'அங்கே ஒரு பாதையிருந்தது, அதை நாம் சோதித்திருக்க முடியும், ஆனால் நாம் செய்யவில்லை' என்பது நமது மனசாட்சியை உறுத்தும்.'' அதனால் நாங்கள் பார்த்த ஒவ்வொரு பாதை வழியாகவும், அது குறுகலாக, உபயோகப்படுத்தப் படாததாகத் தோன்றினாலும், நாங்கள் கஷ்டப்பட்டு நடந்துபோனோம்.


இரண்டாவது நாள் நான் பேட்டிமிற்கு சைக்கிளில் சென்றேன். எங்கள் வேலையைத் தொடர்ந்தோம், அந்த மலையில் இன்னும் இரண்டு சட்டவிரோதமான வீடுகளையும், ஒரு பெரிய மரம் வெட்டப் பட்டிருந்ததையும் கண்டுபிடித்தோம். இந்த மரமும் தார் பூசப்பட்டிருந்தது. இந்த வேலை எங்கள் முழு காலைப்பொழுதையும் பிடித்துக்கொள்ளும், மதியம் இரண்டு மணிவாக்கில் அந்த நாள் வேலையை நாங்கள் முடித்துக்கொள்வோம்.

மூன்றாவது நாள், என் தந்தையும் எனது சகோதரன் லூக்கும் எங்களோடு சேர்ந்துகொண்டார்கள். நாங்கள் சென்றிருந்த வெவ்வேறு இடங்களை என் தந்தைக்குக் காட்டினோம். மரங்கள் வெட்டப்பட்ட இடங்களையும், சட்டவிரோதமான வீடுகளையும் காட்டினோம். என் தந்தை ஒரு புகைப்படக்கருவியைக் கொண்டுவந்திருந்தார். அதை ஸ்டீபனிடம் கொடுத்து காட்டின் பல்வேறு பகுதிகளையும், மரங்கள் வெட்டப் பட்டிருந்ததையும், கட்டுமானங்களையும் புகைப்படம் எடுக்கச் சொன்னார். சில பகுதிகளில், மரங்கள் வெட்டப்பட்ட பிறகு அந்தப் பகுதிக்குத் தீ வைக்கப்பட்டிருந்ததைக் கண்டுபிடித்தோம். அதனால், அங்கிருந்த புதர்களும்கூட அழிக்கப்பட்டுவிட்டன.

நான்காம் நாள் கடைசி நாளென்பதால் நான் மகிழ்ச்சியாக இருந்தேன். ஏனென்றால், அதற்குள் நான் அந்தப் பணியினால் மிகவும் சோர்வடைந்து விட்டேன். என்னுடைய உடல் முழுவதும் நிறைய இடங்களில் முட்கள் குத்தியிருந்தன, அவை சிறிது அரிப்புடன் கூடிய வீக்கங்களாகியிருந்தன. என் பாதங்களும் புண்ணாகிவிட்டன, உஷ்ணம் வேறு கொல்லுவது போல இருந்தது. ஆனால், அந்தத் திட்டம் முடிவடையும் நிலையில் இருந்ததால் நான் அந்த வேலையைத் தொடர்ந்தேன். அந்த மலையில் நாங்கள் பல வீடுகளைக் கண்டுபிடித்தோம், அவற்றில் பலவும் காட்டில் சட்டவிரோதமாகக் கட்டப்பட்டுக் கொண்டிருந்தன. முள்கம்பிகளால் வேலியிடப்பட்ட, மரங்கள் வெட்டப்பட்டு சமன்செய்யப்பட்ட துண்டு நிலங்களையும் நாங்கள் கண்டுபிடித்தோம்.

அந்தத் திட்டத்தில் எனது பங்கு அன்றோடு முடிந்தது, எனது பணிக்காக கோவா பவுண்டேஷனில் இருந்து எனக்கு ஒரு சிறிய உதவித்தொகை வழங்கினார்கள். பின்னர், ஸ்டீபனும் ஜெர்ரியும் புகைப்படங்கள் மற்றும் விளக்கங்களுடன் திட்ட அறிக்கையைத் தயாரித்தார்கள். அந்த அறிக்கை

பவுண்டேஷனால் வனத்துறைக்கு சமர்ப்பிக்கப்பட்டது. வனத்துறை இந்த விசயத்தை விசாரிக்க ஓர் அதிகாரியை அனுப்பியது. அந்தப்பகுதியில் மரம் வெட்டுவதையும், கட்டுமானங்களையும் அனுமதிக்கக்கூடாது என உத்தரவும் வெளியிட்டது.



பெல்காமில் சிறப்பு விருந்தினராக...

நான் பள்ளிப்படிப்பை முடித்து ஒரு வருடம் ஆகிவிட்டது, என்ன ஒரு உற்சாகமான வருடம்! அதனுடன் ஒப்பிட்டுப் பார்த்தால், இப்போது கல்லூரிக்குப் போகவிருப்பது ஒன்றும் அவ்வளவு உற்சாகமானதாகத் தோன்றவில்லை. ஆனால், சேர்க்கைப் படிவங்களைப் பூர்த்திசெய்வதிலும் அடையாள அட்டை புகைப்படங்களைத் தயார்செய்வதிலும் நான் மும்முரமாக இருந்து கொண்டிருந்தபொழுது, எனக்கு இன்னொரு ஆச்சரியம் காத்திருந்தது. மேலும், அது சற்றும் எதிர்பாராத ஓர் இடத்திலிருந்து வந்தது.

ஜுன் 5ம் தேதி பெல்காமில் நடக்கவிருந்த ஒரு சுற்றுச்சூழல் தின விழாவில் சிறப்பு விருந்தினராக நான் அழைக்கப்பட்டேன். எனது கடந்த ஒருவருட அனுபவங்களைப்பற்றி நான் அங்கே பேச வேண்டியிருந்தது. நிச்சயமாக என் ஓராண்டு இடைவெளித் திட்டத்தின் மணிமுடி போன்ற நிகழ்ச்சி இதுதான்.

அந்த அழைப்பு ஒரு சுற்றுச்சூழல் விழிப்புணர்வுத் திட்டத்தின் ஒருங்கிணைப்பாளர்களில் ஒருவரான திரு. திலீப் காமத்திடமிருந்து வந்தது, அத்திட்டத்தை பள்ளிக் குழந்தைகளுக்காக அவரும் பெல்காமிலிருந்த மற்றவர்களும் கடந்த மாதம் முழுவதும் நடத்தியிருந்தனர். அத்திட்டம் ஓவியம் மற்றும் கட்டுரைப் போட்டிகளை உள்ளடக்கியது. அத்திட்டத்தின் நிறைவுவிழா ஜுன் 5ம் தேதி நடப்பதாயிருந்தது, அங்கே இறுதிப் போட்டியாளர்கள் தங்கள் சொற்பொழிவுகளை நிகழ்த்துவார்கள். போட்டிகளில் வெற்றி பெற்றவர்களுக்கு அவர்களுக்கான பரிசுகள் வழங்கப்படும்.

திலீப், அவரது மனைவி நீலிமா மற்றும் அவர்களது மகன் பார்த்தா ஆகியோர் எங்கள் நீண்டநாள் குடும்ப நண்பர்கள், திலீப் மாமா எப்போது கோவா வந்தாலும் எங்கள் வீட்டில்தான் தங்குவார். அவர் விளக்கியது போல, அந்த சுற்றுச்சூழல் நிகழ்ச்சியின் நோக்கம் ஒவ்வொருத்தரும் தாமாகவே தம் விசயங்களைச் செய்யமுடியும். அதற்கான வழிகள் மற்றும் வழிமுறைகளை நாம்தான் திட்டமிட வேண்டும் என்கிற கருத்தை மாணவர்கள் மனதில் பதிய வைப்பதுதான். அதனால்தான், மாணவர்களால் தங்களுடன் தொடர்புபடுத்திப் பார்க்கத்தக்க ஓர் இளைய நபரை விழாவில் பேச அழைக்கும் யோசனையை அவர் ஒத்துக்கொண்டதாகக் கூறினார்.

கடந்த ஒருவருடத்தில் மிகவும் தனித்துவமான விசயங்களை நான் செய்திருந்ததால், என் பெயரை அவர் முன்மொழிந்தபோது அந்தக் குழுவினர் முழுமனதாக ஏற்றுக்கொண்டார்களாம். திலீப் மாமாவைப் பொருத்தவரை, எனது விருப்பமும் சூழலியல் துறையில் இருந்ததால் தான் நான் ஒரு பொருத்தமான தேர்வாக இருந்தேனாம்.

நான் மிக மகிழ்ச்சியடைந்து அந்த அழைப்பை ஏற்றுக்கொண்டேன். யார்தான் ஏற்றுக்கொள்ள மாட்டார்கள்? என்னுடைய எல்லா செலவுகளையும் அவர்கள் பார்த்துக்கொள்வதாக திலீப் மாமா கூறினார். எனது ஒரு சித்தப்பா பெல்காமில் இருந்தார் (என் தந்தையின் இளைய தம்பி, பெஞ்சமின்), அவரது வீட்டில் நான் தங்க முடியும். எனது பேருந்துச் சீட்டிற்கு மட்டுமே அந்த ஒருங்கிணைப்பாளர்கள் செலவுசெய்ய வேண்டியிருந்தது.

நிகழ்ச்சிக்கு இன்னும் ஒரு வாரமே இருந்ததால், நான் உடனடியாக எனது உரையைத் தயாரிக்க ஆரம்பித்துவிட்டேன். இது எனக்கு ஒரு மிகப்பெரிய தருணமாதலால் நான் மிக நன்றாகச் செய்யவேண்டும் என்பது எனக்குத் தெரிந்தது. வழக்கம்போல, உதவிக்கு என் அம்மாவிடம் சென்றேன். நான் பேசவேண்டிய விசயங்களைத் தேர்வுசெய்வதில் அவர் உதவினார். பின்பு நான் என் முழு உரையையும் எழுதினேன், அதை அவர் திருத்திக் கொடுத்தார். நான் அதை மனப்பாடம் செய்ய ஆரம்பித்தேன்.

என் பள்ளியில் பல போட்டிகளில் நான் பங்குபெற்றிருந்ததாலும், பள்ளிகளுக்கிடையேயான விவாத நிகழ்சிகளில் என் பள்ளியின் பிரதிநிதியாக நான் சென்றிருந்ததாலும், மேடைப்பேச்சு ஒன்றும் எனக்குப் பெரிய பிரச்சினையாக இருக்கவில்லை. மேடை பயத்தால் நான் பாதிக்கப்படவுமில்லை. சொல்லப்போனால், என் பள்ளி இறுதி ஆண்டில்

சிறந்த பேச்சாளருக்கான பரிசு எனக்குத்தான் கொடுக்கப்பட்டது. இருந்தாலும், ஒரு போட்டியில் பேசுவதென்பது வேறு, அன்றைய தினத்தின் பிரதானப் பேச்சாளராக இருப்பதென்பது முற்றிலும் வேறு.

கூட்டத்தில் எப்படிப் பேச வேண்டும், அடுத்த வரி ஞாபகத்திற்கு வரவில்லையெனில் என்ன செய்யவேண்டும், போன்ற பல்வேறு யோசனைகளை என் அம்மா கொடுத்தார். நான் என் உரையை வீட்டில் வைத்துப் பலமுறை ஒத்திகை பார்த்துக்கொண்டேன். ஜூன் 3ம் தேதி நான் பெல்காமிற்குக் கிளம்பியபோது உரையை நன்கு தயாரித்துக் கொண்டும் மிகுந்த நம்பிக்கையுடனும் இருந்தேன்.

அணிவதற்கான ஆடைகள் போன்ற அத்தியாவசியப் பொருட்களுடன், நான் எனது ஹேவர்சேக்கில் (பயணப்பை), என் சிவப்புக்காது ஆமை, கோவாவில் உள்ளூரிலேயே கண்டறிந்த மற்றொரு சிறிய ஆமை, ஒரு முதலைப் பல், பாம்புப் பூங்கா, முதலைப் பண்ணை போன்ற இடங்களில் எடுத்த எனது புகைப்படங்கள் ஆகியவற்றையும் எடுத்துக் கொண்டேன்.

ஜூன் 4ம் தேதி நான் பெல்காமை அடைந்தேன். பேருந்து நிலையத்தில் எனது சகோதரன் லுகானோவை சந்தித்தேன், அவன் என்னை நேராக அவனது வீட்டிற்கு அழைத்துச் சென்றான். அன்று மாலை, திலீப் மாமா எங்கள் வீட்டிற்கு வந்தார், அடுத்தநாள் நிகழ்வைப்பற்றி சுருக்கமாகக் கூறினார். அவர் போகும்போது எனது புகைப்படங்களை அவரோடு எடுத்துச்சென்றார், விழா மண்டபத்தில் அவற்றைக் கண்காட்சியாக வைப்பதாகக் கூறினார்.

அடுத்தநாள், மதியம் 3 மணிக்கு லுகானோ என்னை அந்த இடத்திற்கு அழைத்துச்சென்றான். ஒரு பள்ளியிலிருந்த அரங்கில் விழா நடைபெற்றது. ஏற்கெனவே பல்வேறு பள்ளிகளைச் சார்ந்த குழந்தைகள் தங்கள்

பெற்றோருடன் அங்கு வந்திருந்தனர். அந்த அரங்கின் ஒருபக்கம் எனது புகைப்படங்களை ஒரு அட்டையில் ஒட்டி காட்சிக்கு வைத்திருந்ததைப் பார்த்தேன். விழா 4 மணிக்குத் துவங்கியது, எனது சித்தப்பா பெஞ்சமினும், சித்தி கிரேசும் மற்ற சகோதரர்களும் வந்திருந்தனர். நான் அங்கே நுழைந்தபோது அரங்கம் முழுதும் நிறைந்திருந்தது. என்னை முன்வரிசையில் உட்கார வைத்தனர், அருகில் என் சகோதரன் லுகானோ இருந்தான்.

அந்த நிகழ்ச்சி மாணவர்களில் ஒருவரால் தொகுத்து வழங்கப்பட்டது. பேச்சுப்போட்டியில் வெற்றி பெற்றவர்கள் முதலில் உரையாற்றினார்கள். ஆங்கிலத்தில் ஒன்றும், மற்றவை மராத்தியிலும் கன்னடத்திலும் இருந்தன. பின்பு, மாணவர்களில் ஒருவர் என்னை பார்வையாளர் களுக்கு அறிமுகப்படுத்தினார், சிறப்புரையாற்றுவதற்காக என்னை மேடைக்கு அழைத்தார்கள். நான் ஆங்கிலத்தில் உரையாற்றினேன், திலீப் மாமா நான் பேசியதை கன்னடத்தில் மொழிபெயர்த்துச் சொல்வதற்காக தொடக்கத்தில் அடிக்கடி நான் நிறுத்தவேண்டியிருந்தது. அதிருஷ்டவசமாக, ஒருசில முறைகள் இந்த ஆங்கில-கன்னட உரை செய்தபிறகு, பார்வையாளர் களுக்கு கன்னட மொழிபெயர்ப்பு தேவையில்லை என்பது தெளிவாகத் தெரிந்தது. ஏனென்றால், அவர்கள் எல்லோரும் ஆங்கிலத்தை மிக நன்றாகப் புரிந்து கொண்டார்கள். அதன்பிறகு தொடர்ந்து பேசுவது எனக்கு எளிதாயிற்று, மிக்க நம்பிக்கையோடு பேசி முடித்தேன். அனைவரும் மிக நன்றாகப் பாராட்டினார்கள்.

முன்னதாக, பெங்களூர் பள்ளிகளில் நான் நடத்திய பயிற்சி முகாம்களில் செய்திருந்ததைப் போல, பார்வையாளர்கள் அருகில் பார்ப்பதற்காக நான் கொண்டுசெல்லும் அந்த சிவப்புக்காது ஆமையை வெளியே எடுத்தேன். அதே நேரத்தில், என் சகோதரன் இன்னொரு உள்ளூர் ஆமையை விருப்பப்படுபவர்கள் அதை கையில் பிடித்துப் பார்ப்பதற்காகச் சுற்றிலும்

எடுத்துச்சென்றான். நிறைய மாணவர்களும் பெற்றோர்களும் ஆமையைக் கையில் பிடித்தபடி புகைப்படம் எடுத்துக்கொள்ள விரும்பினர். முதலையின் பல்லைப் பார்க்க ஆர்வமிருந்தவர்களுக்கு நான் அதைக் காட்டினேன்.

பின்பு, 'மீதமிருந்த நிகழ்ச்சிகள் தொடரும்' என தொகுப்பாளர் அறிவித்தார். ஆனால் நிறைய மாணவர்கள் என்னிடம் கேள்வி கேட்க விரும்பியதன் காரணமாக, நாடக நிகழ்ச்சி முடிந்ததும் ஒரு கேள்வி-பதில் அமர்வு நடக்கும் என அறிவித்தார். நான் எனது இருக்கைக்குத் திரும்பி, சூழலியல்பற்றி நிகழ்த்தப்பட்ட நாடகங்களைப் பார்த்தேன்.

அதன்பிறகு பரிசு வழங்கும் விழா நடைபெற்றது. பல போட்டிகளின் வெற்றியாளர்களுக்குப் பரிசு வழங்குவதற்காக என்னை மேடைக்கு அழைத்தார்கள். (முன்னதாக நடத்தப்பட்ட பேச்சுப்போட்டி, நாடகங்கள் மற்றும் ஓவியப்போட்டி).

அடுத்து, ஒருங்கிணைப்பாளர்கள் பார்வையாளர்களைக் கேள்வி கேட்க அனுமதித்தனர், நான் உடனேயே பதில் சொன்னேன். என் உரையைப் பார்வையாளர்கள் கவனமாகக் கேட்டிருந்தனர் என்பதை அறிந்து நான் மகிழ்ந்தேன். எப்படிச் சொல்கிறேன் என்றால், மாணவர்கள் மற்றும் பெரியவர்களிடம் இருந்து நிறைய கேள்விகள் வந்ததால்தான். இக்கேள்விகளில் பெரும்பாலானவை பாம்புகள் பற்றிய தகவல்கள் குறித்தனவாக இருந்தன. இதிலிருந்து பாம்புகள் மக்களைப் பயமுறுத்துவது மட்டுமல்ல, அவர்களைக் கவரவும் செய்கின்றன என்று புரிந்துகொண்டேன். விழா மாலை சுமார் 6.30க்கு முடிந்தது. கிளம்பும் முன்பாக, ஒருங்கிணப்பாளர்கள் 300 ரூபாய் இருந்த ஓர் உறையை என்னிடம் கொடுத்தனர். நான் அந்தப் பயணத்திற்காகச் செலவு செய்ததைவிட அது மிக அதிகமாகவே இருந்தது.


திலீப் மாமா என்னையும் லுகானோவையும் அன்று இரவு உணவிற்கு அழைத்தார். அவர் அந்தச் சிறிய ஆமையை வைத்திருக்க விரும்பியதால், நான் மகிழ்ச்சியாக அதை அவருக்காக அங்கேயே விட்டுவிட்டு வந்தேன். அடுத்தநாள் காலை, ஒரு உள்ளூர் கன்னட செய்தித்தாள் முந்தையநாளின் நிகழ்ச்சியைப்பற்றி செய்தி வெளியிட்டிருந்தார்கள் என்பதை அறிந்து நான் மிக ஆச்சரியப்பட்டேன். அதில், விழாவில் நான் இருந்த புகைப்படம் வந்திருந்தது, அந்த விழாவைப்பற்றிய ஒரு குறிப்பும் இருந்தது. வார்த்தைகளில் சொல்லமுடியாத அளவிற்கு சிலிர்த்துப் போனேன் நான்.


பின்னர், எனது ஓராண்டு இடைவெளித் திட்டம்பற்றி நான் ஹிந்துஸ்தான் டைம்ஸ் பத்திரிக்கைக்காக ஒரு கட்டுரை எழுதினேன். அது இரண்டு புகைப்படங்களுடன் இளைஞர் களுக்கான பக்கத்தில் வந்தது. என் பெற்றோர் அவர்களது பல நண்பர்கள் அதைப் படித்ததாகச் சொன்னபோது மிக மகிழ்ச்சியாக இருந்தது. படிப்பிலிருந்து இடைவெளி எடுக்கும் இந்தத் துணிவான, வழக்கத்திற்கு மாறான இந்த முடிவிற்காக அவர்கள் என்னையும் என் பெற்றோரையும் பாராட்டியதாகவும் கூறினர். பிறகு, அதே கட்டுரை பல்வேறு மற்ற பத்திரிக்கைகளிலும் செய்தித்தாள்களிலும் கூட வந்தது, மலேசியாவின் 'தி உத்துசான் கொன்சூமர்' (*The Utusan Konsumer*) உட்பட.

பெல்காமில் எனது உரையிலும், பள்ளி மாணவர்களுக்காக பெங்களூரில் நான் நடத்திய பயிற்சிமுகாம்களிலும், நான் எழுதிய கட்டுரையிலும், எல்லாவற்றிலும் இறுதியில், ஒவ்வொரு மாணவரும் தனது பெற்றோரிடம், பள்ளிப்படிப்பை முடித்ததும், வழக்கமான படிப்பிலிருந்து ஓர் இடைவெளி எடுப்பதைக்குறித்து அனுமதி கேட்கவேண்டும் என்று நான் பரிந்துரைத்தேன். ஏனென்றால், அந்த முடிவிற்காக அவர்கள் ஒருபோதும் வருத்தப்படப் போவதில்லை!

மேலும், இங்கே எனது புத்தகத்தின் இறுதியில் நான் மீண்டும் சொல்ல விரும்புகிறேன், ஜுன் 1995 - ஜுன் 1996 தான் எப்போதும் என் நினைவிலிருக்கும் மிக அற்புதமான வருடம். நான் நிறைய கற்றுக் கொண்டேன், நான் கற்றுக்கொள்ள விரும்பிய விசயங்களைப் பற்றி மட்டுமில்லாமல், மற்ற பல விசயங்களைப்பற்றியும்தான். இதிலெல்லாம் சிறந்த விசயம் என்னவென்றால், நான் எப்போதும் செய்யவிரும்பிய விசயங்களைச் செய்துபார்க்க எனக்கு முழுச் சுதந்திரம் இருந்தது, கூடவே நிறைய கேளிக்கைகளும் இருந்தன. நிச்சயமாக நான் மற்றுமொரு ஓராண்டு இடைவெளியை எதிர்நோக்குகிறேன். நீங்களும்கூட, இல்லையா?







குக்கூ காட்டுப்பள்ளி

ஒரு பட்டாம்பூச்சியாக, சிட்டுக்குருவியாக, மெல்ல ஊர்ந்துபோகும் குட்டி நத்தையாக, தத்தித்தாவி நடக்கப்பழகும் மான்குட்டி போல, கடலையே குடிக்க நினைக்கும் சின்னஞ்சிறு மீன்குஞ்சு போல... இயற்கையோடு கலந்த ஒரு கல்வி, மனிதர்களான நமக்கும் கிடைத்தால் எப்படி இருக்கும்? ஒருவேளை, அப்படியொரு பள்ளிக்கூடம் எல்லா கிராமங்களிலும் இருந்தால்?! இயற்கை, கடவுள், மனம், கனவு, விளையாட்டு, நிம்மதி, புரட்சி, மகிழ்ச்சி, அன்பு... என எல்லாமும் அதில் அமைந்துவிடும்.

தேர்வுகள் இல்லாமல், பிரம்படி இல்லாமல், போட்டி மனப்பான்மை ஏதுமில்லாமல் ஆசிரியரும் மாணவரும் ஒன்றுசேர்ந்து இயற்கையிடம் கற்றுக் கொள்ளும் ஒரு பள்ளிக்கூடம், அடர்ந்த காட்டுக்கு உள்ளே இருந்தால், நம் மனது எவ்வளவு மகிழ்ச்சி அடையும்! இந்தக் கனவை நினைவாக்கும் முயற்சியில், ஜவ்வாதுமலை அடிவாரம் புளியானூர் கிராமத்தில் கட்டப்படுகிற ஒரு தர்மப்பள்ளிக் கூடம் தான் 'குக்கூ காட்டுப்பள்ளி'. காளான் பூப்பது மாதிரி கல்வி பூக்கும் குழந்தைகள் வெளி.

பேச:+918270222007 ,
cuckoochildren@gmail.com

தன்னறம் நூல்வெளி

~~~~~~


தன் உள்ளார்ந்த இயல்பால் ஒரு மனம் தெரிவுசெய்யும் செயலே தன்னறம். உயிரொன்றின் சுயவிடுதலையைச் சுடர்படுத்தும் எச்சிறு படைப்பாயினும் அதை அச்சில் கொண்டுவந்து பொதுவெளிப்படுத்தலே தன்னறம் நூல் வெளியின் அடிப்படை நோக்கமாக உருவகித்துக் கொள்கிறோம்.

காலந்தோய்ந்த அறமரபு துவங்கி, காந்தி ஏந்திய அறவழி வரை... சாட்சி மனிதர்களாகவும், அவர்தம் செயல்வழிப் பாதைகளாகவும் நீள்கிற இவ்வரலாற்றின், முடியாத மனசாட்சிப் பக்கங்களுக்குள் பொத்தி வைக்கப் படும் ஓர் மயிலிறகாக இதன் செயலமைவு அழகுற பிரார்த்திக்கிறோம்.

9843870059
thannarame@gmail.com
www.thannaram.in

ஒரு கல்வியின் முன்
நாம் பெற்ற முந்தைய கல்வி
அழியுமென்றால் அந்த முந்தைய
கல்வி எல்லாம் வீணா?
அல்ல, அவை படிகள். அப்படிகள்
வழியாக ஏறித்தான் இந்தப் படியை
நாம் அடைந்திருக்கிறோம்.
முந்தைய படிகளை நிராகரித்தே
புதிய படியை அடைந்தோம்.
ஒரு கல்வியழிதலுக்கு
நாம் தயாராவதே,
அக்கல்வி நமக்களிக்கும்
விவேகம் மூலம்தான்.

ஜெயமோகன்


~~~~~~